# The Young Hindu

# 1968 இந்து இளைஞன் 1968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE JAFFNA CO-OPERATIVE STORES LTD.

are STOCKISTS of

- NEWSPRINT
- TYPEWRITING PAPER
- BRISTOL BOARD
- DUPLICATING PAPER
- OIL PAPER
- TISSUES
- DRAWING PAPER etc.

&

Exercise Books

of

all varieties

of

**EASTERN PAPER MILLS CORPORATION**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE YOUNG HINDU

THE JAFFNA HINDU COLLEGE STUDENTS' ANNUAL

**For Internal and Private Circulation only**

# 1968

# இந்து இளைஞன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர் வருடாந்த வெளியீடு

மலர் 28
இதழ் 103

Vol. xxviii
No. 103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDITORIAL ADVISORY BOARD

Mr. N. Sabaratnam (Principal)

" M. Karthigesan

" V. Erambamoorthy

" T. Senathirajah

" E. Mahadevan

" K. Sivaramalingam

" V. Mahadevan

" V. Sivasupramaniam (Convenor)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பகுதி

# இந்து இளைஞன்

இதழாசிரியர்: க. விஷ்ணுமோகன்
உதவி ,, : இ. ஸ்ரீதரன்

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| இதழாசிரியரின் பேனாவிலிருந்து | ... | 1 |
| பாரம்பரியம் | ... | 4 |
| பழியும் பாவமும் | ... | 7 |
| புட்போல் 'கி'றள் | ... | 11 |
| மனிதனைக் கட்டுப்படுத்துவது எது | ... | 13 |
| ஊர் வாய் | ... | 15 |
| சுயெஸ் கால்வாய் | ... | 20 |
| இதயத்திலிருந்து ... ... ... | ... | 22 |
| கோல்புறாக் விசாரணைக் குழுவின் சிபார்சுகள் | ... | 26 |
| கதை எழுத எண்ணினேன் ... ... ... | ... | 28 |
| வெறிக்குப் பின் ... ... ... | ... | 31 |
| மாணவனுக்கு அரசியல் | ... | 36 |
| நடந்ததையே நினைத்திருந்தால் ... ... ... | ... | 38 |
| பற்றீரியாக்கள் | ... | 41 |
| கவிஞர் காதல் | ... | 44 |
| திருக்குறள் காட்டும் நெறிதான் என்னே! | ... | 47 |
| சொந்தம் | ... | 50 |
| உயரத்தில் ஒரு கோபுரம் | ... | 53 |
| விடிவு காண்போம் | ... | 56 |
| உலகச் சுற்றுலா அநுபவங்கள் | ... | 57 |
| தீர்ப்பு | ... | 64 |
| காந்திய வாழ்க்கை நெறி | ... | 66 |
| மனிதனின் அன்றைய நிலையும் இன்றைய நிலையும் | ... | 67 |
| மேனாட்டுக் குப்பை வேண்டாம் | ... | 69 |
| தீண்டக்கூடாதவன் | ... | 71 |
| கிழக்கு வெளிக்கிறது | ... | 72 |
| ரயிலோ ரயில் | ... | 74 |
| ஒரு பிச்சைக்காரனின் சுயசரிதை | ... | 76 |
| விஞ்ஞானத்தால் நாம் அடையும் பயன் | ... | 77 |
| சைவமும் தமிழும் வளர்த்த நாவலர் | ... | 78 |
| அன்பு — கல்வி | ... | 79 |
| எமது நன்றி | ... | 80 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக்கல் லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழிய)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே — பல
கலைமலி கழகமும் இதுவே — தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே !

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவேம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள்கொடு நன்றே

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே !
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே !
ஒளிமிகு கழகமும் இதுவே !
உயர்வுறு கழகமும் இதுவே !
உயிரன கழகமும் இதுவே !

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப்பெருங் கலையகம் வாழ்க
வாழ்க! வாழ்க!! வாழ்க
தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காந்தி எனும் பேரொளியே!
மாந்தருக்குள் மாமணியே!

சி. ரவீந்திரா
பல்கலைக்கழக புகுமுகவகுப்பு
மருத்துவப்பகுதி - 2-ம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இந்து இளைஞன்

(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர் வருடாந்த வெளியீடு)

மலர் 28 | மார்கழி 1968 | இதழ் 103

## இதழாசிரியரின் பேனாவிலிருந்து ......

தனியார் பாடசாலைகளாக நடாத்தப்பட்டுவந்த பாடசாலைகளை அரசாங்கம் தனதாக்கிக்கொண்ட பின்பு கல்வித்திட்டங்களில் நாளாந்தம் ஏற்பட்ட மாற்றங்கள் பல.

இப்பொழுது பாடசாலைகள் யாவும் கனிஷ்ட பாடசாலைகள், சிரேஷ்ட பாடசாலைகள் என வகுக்கப்படுகின்றன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1969ல் ஆறும் வகுப்பும், 1970ல் ஏழாம் வகுப்பும் எடுக்கப்பட்டு வருங்காலத்தில் எட்டாம் வகுப்புமுதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை வகுப்புகள் உள்ள சிரேஷ்ட பாடசாலையாக இது இயங்கும்.

பல வருடங்களாகப் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியுற்று வந்த எமது கல்லூரி சிரேஷ்டவகுப்புகளைப் பொறுத்தளவில் விசேட இடத்தை வகித்து வருவது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். 1970-ம் ஆண்டு முதல் சிரேஷ்ட பாடசாலையாக எமது கல்லூரி இயங்கும்போது சிரேஷ்ட வகுப்புகளில் இடம்பெறுவதற்கு நமது நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து மாணவர்கள் பலத்த போட்டியிடுவார்கள். இவ்வளவு காலமும் எமது கனிஷ்ட பிரிவில் சேர்ந்து தமது பாடசாலைக் கல்வியை முற்றாக இப்பாடசாலையில் முடித்த எமது சுற்றாடலில் உள்ள மாணவர்கள் இழக்கும் வாய்ப்பைத் தீர்ப்பதற்குப் பல வசதிகளுடன் கூடிய சிறந்த கனிஷ்ட பாடசாலைகள் எமது கல்லூரியின் சுற்றாடலில் அமையவேண்டியது மிக அவசியமாகும்.

இந்நெருக்கடியைத் தவிர்க்கச் சரியான வழி கோலாவிடின் இச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட பாடசாலை, அயல் மாணவருக்குப் பயனற்றதாகிவிடும். பாடசாலையின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும், கல்வியமைப்பிலும் அக்கறைகொண்டவர்கள் அரசாங்கத்துடன் ஆலோசித்து ஏற்ற முயற்சியெடுத்து சிறந்த வசதிகளுடன்கூடிய கனிஷ்டபாடசாலையின் அவசியத்தை வலியுறுத்தி இருப்பனவற்றை புனரமைப்புச் செய்வது எல்லோராலும் வரவேற்கப்படக்கூடிய நற்செயலாகும்.

இற்றைக்கு முக்கால்நூற்றுண்டுகட்குமுன் சைவசமயப் பற்றுப் பெரிதும் கொண்ட சமயப் பெரியார்களால் சமய அடிப்படையில் சிறந்த முறையில் மாணவர்கட்கென ஸ்தாபிக்கப்பட்ட நமது பாடசாலை தரம் பிரிக்கப்படுவதால் அப் பெரியார்களின் இலட்சியங்கட்குப் பங்கம் ஏற்படுமா என நாம் ஆராயுமிடத்து, புதிய திட்டத்தின்படி நாட்டின் பல பாகங்களிலும் இருந்து விண்ணப்பம் கோரும் மாணவர்களில் உயர்தரக் கல்வியைக் கற்பதற்கு வல்லமைமிக்கவர்களே தேர்ந்தெடுக்கப்படுவாராதலின், அம்மாணவர்களிடம் சமயப்பற்று குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருக்கும் என நாம் அஞ்சுவதற்கில்லை. எனவே அப்பெரியார்கள் கொண்டிருந்த பெருநோக்கு சிறிதளவும் தவறுது என நம்புகின்றேம்.

ஆனுல் நம் கவனம் முழுவதையும் வகுப்பறைக் கல்வியில் மாத்திரம் செலவிட்டால் போதுமா? சிரேஷ்ட பாடசாலையமைத்து மேற்கல்வி போதித்து பல்கலைக்கழகத்தில் உயர் கல்விக்காக மாணவர்கள் அனுப்பப்படுகின்றுர்கள். அன்று ஒரு பட்டம் பெற்றவனை அறிவாளி என மதித்த அதே உலகம் இன்று அவன் வேலையில்லாமல் திண்டாடும் போது அவனைப் பார்த்து என்ன கூறுகின்றது? பல்கலைக் கழகக் கல்வியின் நிலைதான் என்ன? இலங்கையைப் பொறுத்தவரையில் இலங்கைப் பல்கலைக் கழகங்களின் கல்வியமைப்பும், போதனுமுறையும் சிறப்பானவை எனக் கருதப்பட்டாலும், வேலையில்லாத் திண்டாட்டம் அச்சிறப்புக்கு இழுக்கா யிருக்கின்றது. அகில இந்திய சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஜயப்பிரகாஷ் நாராயணன் அண்மையில் எமது கல்லூரிக்கு விஜயஞ் செய்தபோது படித்த வாலிபர் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம் கல்வித்திட்டத்திலுள்ள குறைபாடுகளே என்று சுட்டிக் காட்டினுர். இது ஒருபுறமிருக்க இலங்கையின் பொருளாதார நிலையும், தொழில்வளர்ச்சியின் மந்தவேகமும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு மறு காரணங்களாக இருக்கின்றன.

விவசாயம் என்றவுடன் மனத்தால் வெறுப்பைக் காட்டியும், எவ்வளவு படித்திருந்தாலுஞ்சரி, அலுவலகத்தின் மேசையிலிருந்துகொண்டு பேனுவை ஓட்டுவதே இன்றைய இளைஞரில் அநேகரின் நாட்டமாகக் காணப்படுகின்றது. இயற்கையானது நல்ல வளத்தைக் கொடுத்து மனிதனைத் தன்பால் ஈர்க்கும்போது நாம் எப்படி விவசாயத்தைக் கைவிட முடியும்? அதுவும் இயந்திர வசதிகள் கூடிய யுகமாக இவ்யுகம் காணப்படும்போது விவசாயமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விதத்திலும் உதறித்தள்ளிவிடக் கூடிய தொன்ருக இன்று அமைய வில்லை. சிறந்த முறையில் விவசாயக் கல்வி கற்பிக்க இன்று பாடசாலைகள் போதாதாகும். எனவே நவீன வசதிகளுடன் கூடிய சிறந்த பாடசாலைகளை யமைத்து விவசாயத்தில் நாட்டமும், திறமையும் உடைய மாணவர்களைத் தெரிந்து அவர்களுக்கு இவ்விவசாயக் கல்வியைக் கற்பிக்கவேண்டும். அரசாங்கம் இன்று அதிக உணவு உற்பத்தி செய்வதில் அதி சிரத்தை காட்டும்போது நாட்டின் நலம்பேணியும் மாணவர் திறன் கருதியும் புதிய விவசாயக் கல்வித் திட்டமுறை யொன்றை அமைக்க வேண்டும்.

நாட்டின் வளமானது மனிதனது ஆரோக்கிய வாழ்விலும் தங்கியிருப்பதால் நமது நாட்டில் சுகாதார வசதிகள் அவசியம் கவனிக்கப்படவேண்டியவையாகும். உலக சுகாதார நிறுவனம் எங்கள் ஆரோக்கிய நிலையை C. 3 எனக் கணித்துள்ளது. கண்ட கண்ட இடங்களில் துப்புதல், தெருக்களில் குப்பை கூளங்களையும், உடைந்த கண்ணுடி போன்றவற்றையும் போடுதல் போன்ற அஜாக்கிரதையான செயல்களின்மூலம் மக்கள் தமக்குத் தாமே துன்பம் விளைவித்துக்கொள்கின்ருர்கள். இதனுல் மனிதனின் ஆரோக்கிய வாழ்வு குன்றுகின்றதல்லவா? எனவே அந்நியர் எமது நாட்டிற்கு வந்து நமது நாடு சுத்தமாகப் பாதுகாக்கப்பட்டு வருவதையும், நாட்டுமக்களெல்லோரும் சுகதேகிகளாக வாழ்வதையுங் கண்டு அதிசயிக்கக்கூடிய வகையில் நாம் வாழக்கூடிய வழிகளை மாணவர்கட்குப் போதித்தல் வேண்டும்.

எங்கும் இயந்திரமயமாகக் காணப்படும் இன்றைய உலகில் எண்ணற்ற காரியங்கட்குப் பலவாருன வகைகளிலும் உபயோகிக்கப்படும் பலவகையான யந்திரங்களைப்பற்றிய தொழிற்பாடுகளையும், அவற்றில் ஏற்படும் கோளாறுகளை நிவிர்த்தி செய்யக்கூடிய முறைகளையும், பொதுவாக இத்தகைய யந்திர இயக்கத்தில் நாட்டம் காட்டும் மாணவருக்குப் போதிக்கவேண்டும். இதனுல் படித்தும் வேலையற்றுத் திரியும் ஒரு வாலிபன் கூட தன் காலத்தை வீணுக்காமல் இத்தகைய யந்திரத் துறையில் தன் கருத்தைச் செலுத்த முடியும். இங்கே மாணவன் கண்ணுலே மாத்திரம் பார்த்துக் கற்காமல் தனது செயற்திறனையும் காட்டக்கூடியதாக இருக்கின்றபடியால் பிற்காலத்தில் அவன் தானுகவே தொழில்விருத்திக்கும், தன் சுயவாழ்க்கைத் தேவைக்கும் வழி தேட முடியும். ஆகவே இத்தகைய தொழில்நுட்பக் கல்வியிலும் மாணவர் அதிக சிரத்தை காட்டக்கூடிய வழிகள் பாடசாலைகளில் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

மக்கள் வாழ்வு மகிழ்ச்சியுற வோங்க உழைத்த மகாத்மா காந்தியின் நூற்றுண்டுவிழா கொண்டாடப்படும் இந்நேரத்தில் இக்கருத்துக்கள் எமது சிந்தனைகளை ஊக்குவிக்கும் என்று நம்புகின்ருேம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரியம்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் ''ஒத்தவை ஒத்தவையையே தோற்றுவிக்கும்'' என்ற பரம்பரை உண்மையை அறிந்திருந்தனர். அவர்கள் தொல்காலம் தொட்டே குதிரைகள், நாய்கள், மரக்கறிவகைகள் முதலியவைகளில் நல்ல வர்க்கங்களை விருத்திசெய்ய முயன்று வந்தனர். சிறந்த பெண் விலங்குகளைத் தேர்ந்தெடுத்த ஆண் விலங்குகளுடன் சேர்த்து தோற்றுவிக்கும் தன்மையால் ஒரு விலங்கின் தரத்தை உயர்த்தலாம் என அறிந்திருந்தனர். ஆனால் இதற்குரிய காரணங்களை ஆராய முற்படவில்லை. எனினும் 1900-ம் ஆண்டுவரை தலைமுறை யுரிமைக்குரிய விஞ்ஞான அடிப்படை பெருமளவில் அறியப்படாமலேயே இருந்தது. ஓரினம் சில குறிப்பிட்ட இயல்புகளை மாறுமல் சந்ததிகளுக்குக் கடத்தப்படுவதாலேயே ஓரினம் நிலை நிறுத்தப்படுகிறது. தாவரங்களும் விலங்குகளும் ஒரு சந்ததி தன் முந்திய சந்ததியுடன் சேதனவடி வொப்புமையுடைவாய்க் காணப்படுகிறது எனக் கூறலாம். இவ்வொப்புமைகளே பாரம்பரியம் அல்லது பரம்பரை எனப்படும்.

ஒரு சந்ததிக்கும் அடுத்த சந்ததிக்கும் தொடர்பிருப்பினும் ஒரு சந்ததியிலுள்ள இனங்களெல்லாம் எல்லா அம்சங்களிலும் ஒத்தவையாயிருப்பதில்லை. உதாரணமாக ஒரு குடும்பத்திலே பிறந்த பிள்ளைகள் எல்லாம் ஒரேமாதிரியானவர்களாகக் காணமுடிவதில்லை. நல்ல நிறமுள்ள பெற்றோர்க்கு கன்னங்கரேல் என்று குழந்தைகள் பிறப்பதுண்டு. சகோதரர்களில் மூத்தவன் உயரம், இரண்டாமவன் குட்டை, மூன்றுமவன் ஒல்லி, கடைக்குட்டி இரட்டை நாடி என்றிருக்கலாம். அக்காவிற்குப் படிப்பிலார்வம்; அதிகம் பேச மாட்டாள். தங்கை வாயாடி; நாட்டியம் தான் படிக்கும். இவ்வாறு உருவம், நிறம், மனஇயல்பு, நடத்தை முறை எல்லாவற்றிலுமே வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகளை மாறல்கள் (Variation) என்கிறோம்.

மாறல்கள் எப்படித் தோன்றுகின்றன? இது பாரம்பரியத்தில் ஒரு புதிராகும். இதுபோன்ற புதிர்கள் பலவுள. ஆண் பெண் குழந்தைகள் எப்படி உற்பவிக்கின்றன? இரட்டைக் குழந்தைகளிற் சிலர் ஒரேவடிவொப்புமையுடையவர்களாயிருக்கின்றனர். சிலர் அப்படி யிருப்பதில்லை. ஓரங்கியினியல்பை மாற்ற முடியுமா? விவேகமுள்ள பெற்றோர்க்கு விவேகமற்ற பிள்ளைகள் பிறப்பதேன்? இதுபோன்ற ஏன்? எதனால்? எப்படி? என்று பலகேள்விகளுக்கு விளக்கம் தரும் இயல்பிறப்புரிமையியல் (Genetics) ஆகும்.

ஓரங்கியினுடைய எல்லாவியல்புகளும் பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்படமாட்டா. சில இயல்புகள்மட்டுமே கடத்தப்படும். உதாரணமாகக் கைகளினுலிரும்பை அடித்து வேலைசெய்துவரும் ஒரு மனிதனின் கைத்தசை வலிமையுடையதாயிருக்கும். இவ்வியல்பு அவன் தன் கையைத் தொடர்பாகப் பிரயோகித்ததால் ஏற்பட்டதாகும். ஒரு மனிதன் நீரிலிறங்கி நீந்தப் பழகிக்கொண்டாலன்றி அவனால் நீந்தமுடியாது. இதுபோன்ற இயல்புகள் அங்கு தோன்றிய பின்னர் வாழ்க்கை முறையால் அல்லது சூழற் காரணிகளால் பெற்றுக்கொண்ட இயல்புகளாகும். இது பெற்ற இயல்பு எனப்படும். ஆனால் சில இயல்புகள் ஒருவன் எவ்வளவு முயற்சி எடுப்பினும் பெற்றுக்கொள்ள முடியாது. ''காகம் முக்காலமும் மூழ்கிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காகுமா'' நீக்ரோக்கள் சுருண்ட கருமையான தலைமயிரைக் கொண்டவர்கள். சீனர்களின் தலைமயிர் நீண்டு செம் மஞ்சள் நிறமாகக் காணப்படுகிறது. பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்படுகின்ற இயல்புகள் பரம்பரை இயல்புகள் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18-ம் 19-ம் நூற்றுண்டுகளிலே பல ஆராய்ச்சியாளர்கள் இயல்புகள் எவ்வாறு சந்ததி சந்ததியாகக் கடத்தப்படுகின்றன என்பதைக் கண்டறிய முயன்றனர். 1760-1770 இல் தாவரவியலறிஞரான கோல்ரெடர் (Koltoder) என்னும் ஜெர்மனியர் ஓரினத்தைச் சேர்ந்த புகையிலைச் செடியின் மகரந்தமணிகளை இன்னுமொரு இனத்தின் குறியிலிட்டுச் சோதித்தார். அதன் பயனாகத் தோன்றிய புகையிலைத் தாவரச் சந்ததி பெற்றோரிருவரினதும் இயல்புகளுக்கு இடைப்பட்டதாக இருந்தது. மகரந்தம், சூல் வித்து ஆகிய இரண்டினூடாகவுமே பெற்றோரின் குணங்கள் கடத்தப்படுகின்றன என்பதைக் காட்டினூர். கிரகர் மெண்டல் (Gregor Mendel) என்னும் அவுஸ்திரியச் சமய குரு புரும் என்னுமிடத்திலே [இது இப்பொழுது செக்கோசிலவாக்கியாவிலுள்ள புரன் (Brunn) என்னுமிடத்தைக் குறிக்கிறது] பட்டாணிச்செடியிலே பல பரிசோதனைகளைச் செய்து வெற்றிபெற்றூர். தமது ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை 1866 இல் சிறிய உள்ளூர் இயற்கைச் சரித்திரச் சங்கத்தின் சஞ்சிகையிலே வெளிப்படுத்தினூர். அவை அப்பொழுது விஞ்ஞானவுலகிலே எவ்வித பரபரப்பையும் ஏற்படுத்தவில்லை. 30 ஆண்டுகளுக்கு மேலாக அம் முடிவுகள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. மெண்டலின் காலத்தவர்கள் அவரின் கண்டுபிடிப்பின் முக்கியத்துவத்தைக் கண்டு போற்றுந் திறனற்றவராயிருந்தனர். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள அநேக ஆராய்ச்சியாளர்களாலும் பேற்சன் (Bateson) புனற்று (Punnett) டொர்ன்காத்தர் (Doncaster) என்போராலும் இப்பரிசோதனைகள் மீண்டும் செய்யப்பட்டன. மெண்டல் முதலாவதாக முழுத் தாவரத்திற்குமே யுரித்தான ஒரு சோடி எதிர்மாறுன இயல்புகளையும் [உயர்ந்ததும் குறளானதுமான தன்மை] இரண்டாவதாக இரண்டு சோடி இயல்புகளுக்கு வித்துக்களின் மழ மழப்பான சுருங்கிய தன்மை, [மஞ்சள் - பச்சை நிறம்] செய்த பரிசோதனைக்காகப் புகழடைந்தார். பரிசோதனைகளிலிருந்து மெண்டல் ஒவ்வொரு பெற்றோரின் புணரிகள் ஒவ்வொன்றும் குறிக்கப்பட்ட ஓரியல்பு எச்சத் தாவரத்தில் தோன்றுவதற்குக் காரணமாகிய ஒரு காரணியைக் கொண்டுசெல்கிறதென உய்த்தறிந்தார். ஆனல், அவர் புணரிக்கலத்தில் எங்கே இருக்கின்றதெனச் சொல்லவில்லை. ஒருசோடி இயல்புகளில் எக்குணம் வெளிப்படுத்துகிறதோ அது ஆட்சியுள்ளது (Dominant), என்றும் மறைந்து நிற்பது, பின்னிடைவுடையது (Recessive) எனவும் கூறினூர்.

1900 ஆம் ஆண்டளவில் சட்டன் மோகன் (Morgan) பேற்சன் (Bateson) என்பவர்கள் மெண்டல் கூறிய காரணி என்னும் உறுப்பைச் சீன் அல்லது பரம்பரை அலகு என்றும் அது நிறமூர்த்தத்தில் காவப்படுவதாகவும் கூறினூர்கள், மகரந்தமணி சூல்வித்து என்பன கலங்களாலானவை. விலங்குகளில் புணரிகளும் கலங்களாலானவை. ஒவ்வொரு கலத்துள்ளும் கருவுண்டு. கருவினுள் பிரிதலியக்கத்தின் போது நிறவுருக்கள் (Chromosomes) தோன்றுகின்றன. இந்நிறவுருக்கள் அமைப்பொத்த சோடியாகக் கருவிலே காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு நிறமூர்த்தங்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடையதாகவிருக்கும் [மனிதன் 23 சோடி. பழ ஈ 4 சோடி] ஒவ்வொரு நிற மூர்த்தச் சோடியும் வெவ்வேறு வடிவமுடையவை. ஒரு நிற மூர்த்தத்தில் முறுக்குண்டமாலையில் முத்துக்கள் அடுக்கப்பட்டது போல இயல்புகளுக்குரிய அலகுகள் அடுக்கப்பட்டுள்ளன. இவை சந்ததிச் சுவடுகள் ஆகும். இவை தற்காலத்தில் D. N. A. [நியூக்கிளிக் கமிலத்] தாலானது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது அங்கியினியல்புகளை D. N. A. மாத்திரமின்றிக் குழியவுருவிலுள்ள சிலபொருள்களும் சில தன்மைகளை ஆளுகின்றன என்று கண்டுபிடித்திருக்கிறூர்கள். மோகன், டீவரிஸ் என்போர் வெப்பநிலை, எக்ஸ்ரே (x–Ray) கோல்சிசைன் (Colchicine) நச்சுக் கதிரியக்கம் ஆகியவை நிறவுருக்களின் தன்மையையும் சிலசமயங்களில் தொகையையும் மாறுதல்பெறச் செய்யும் என்று கூறினூர்கள். இதனல் இயல்புகளும் மாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடையும். சூழற் காரணிகளாலும் நிற மூர்த்தங்களில் மாற்றமேற்படலாம். இப்படியாக நிற மூர்த்தங்களில் ஏற்படும் மாற்றங்களால் அங்கி புதிய இயல்பைப் பெறுகிறது. இவ்வியல்பு சேய் அங்கிக்கும் கடத்தப்பட முடியுமாதலால் புதிய இயல்புடைய புதிய அங்கி உருவாகின்றது, இதுவும் கூர்ப்பிற்கு அடிப்படையாகும்.

மனித இனம் அறிவு வளர்ச்சியில் முன்னேறிக்கொண்டே வருகின்றது. அணுவைப் பெயர்த்துச் சக்தியைப் பெறும் வழியை அவன் கண்டு பிடித்துவிட்டான். தற்காலத்திலே அணுக்குண்டுகள் பரிசோதனைக்காக வெடிக்கப்படும்பொழுது உலகில் கதிரியக்கம் அதிகரிக்கிறது. கதிரியக்கம் உடற் பகுதிகளைப் பாதிக்கும். உதாரணமாக அணுக்குண்டு வெடிக்கப்படும் பொழுது கதிர் தொழிற்பாடுள்ள சோரோன்ரியம் (Strontium) எனப்படும் பொருள் வீழ்கின்றது, இது எலும்புகளின் உட் கிரகிக்கப்படும்பொழுது உடலில் சோரோன்ரியத்தினளவு அதிகமானால் உடற் பிரிவுகளையும் கலப் பிரிவுகளையும் தாக்கி அபாயத்தை உண்டுபண்ணும். தவிர, கதிரியக்கத்தினல் உடற் கலங்கள் பாதிக்கப்படுகின்றன. இத் தன்மையினலேயே இவை புற்றுநோயினல் பாதிக்கப்பட்ட கலங்களைக் கொல்ல உபயோகிக்கப்படுகின்றன. கதிரியக்கம் உணர்ச்சிப் பருவத்திலேயே உடற் கோளாறுகளை ஏற்படுத்தும் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கதிரியக்கம் பிறப்புரிமையியலுக்குரிய கெடுதியான மாற்றங்களைத் தோற்றுவிக்கக் கூடும். மனிதனில் இவை மலட்டுத் தன்மையை அல்லது கொடூரமான மாறுதல்களை விகாரங்களாகத் தோற்றுவிக்கலாம். இவற்றின் கெடுதல்களை அறிந்த பின்னர் மனித இனம் வாழத் தேவையான முறையில் தனது இயக்கங்களை வகுத்துக் கொள்வது மனித சமுதாயத்தின் கடமையாகும். பெறும அறிவைத் தக்க முறையில உபயோகித்து மனித குலம் முன்னேற வகை தேடிக்கொள்வது அவன் கடமை.

**எம். எம். ஷாஜஹான்**
பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு
(விஞ்ஞானப் பிரிவு) 2-ஆம் வருடம்

பிறருடைய துன்பங்களை நினைத்துப் பார்ப்பதால்
நம்முடைய துன்பங்களைச் சகிக்கக் கற்றுக்கொள்ளுகின்றோம்.

— மார்க்ட்வயின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழியும் பாவமும்

(சிறு கதை)

அன்று ஞாயிற்றுக்கிழமை. வழக்கத்திற்கு மாறாக ஜனத்திரள் அதிகமாகவே காணப்பட்டது. கடலை, சிற்றுண்டி முதலியன விற்கும் பையன்களுக்கும் அன்று நல்ல கொண்டாட்டம். அவர்களுக்கு மட்டுமல்ல இப்படியான நாட்களை 'பிக்பொக்கட்' காரர்களும் தங்கள் தொழிலை நடாத்த உதவுகின்றன.

தொலைவில் மரக்கலமொன்று அலைகளின் ஏற்றத் தாழ்வால் ஆடி அசைந்து வருவதையும், கட்டு மரங்களில் சிறுவர்கள் உல்லாசமாக அங்கு மிங்குமாகச் செல்வதையும் இரசித்தபடி இடையிடையே கைக்கடியாரத்தையும் பார்த்துக் கொண்டேன்.

மெய்ம்மறந்து போயிருந்த வேளையில் எனது தோளொன்றில் முரட்டுக் கரமொன்று அழுத்துவதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

பின்னல்,

நண்பன் ராஜா ராம் நின்று கொண்டிருந்தான். அவனைக் கண்டவுடன் என்னுள் ஒரு நெகிழ்ச்சி ஏற்பட்டது. "என்னப்பா ராம்! இன்று என்ன விசேஷம்? ஏன் இவ்வளவு நேரம்?" என்று கேட்டபடி என்னருகில் அவனிருப்பதற்கு வசதியாகச் சற்று நகர்ந்திருந்தேன், "ஒன்றுமில்லை காந்தன்! சற்றுமுன்னர் வீட்டிற்கு உறவினர் ஒருவர் வந்திருந்தார். அவருடன் சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருக்கும் படியாகிவிட்டது. அவ்வளவு தான்" என்றான்.

"அதுசரியப்பா உனது அப்புக்காத்து என்ன சொன்னர்?" என்று வினவினேன். எனது குரலிலிருந்த உருக்கம் அவனை அதிகமாக உருக்கிவிட்டது போலும். அவன் உடனே "காந்தன் சிறிது நேரமாவது அந்த விஷயத்தை மறந்து சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்போமென்று உன்னை நாடி வந்தால், நீயும் அவ்விஷயத்திற்கே சுற்றிச் சுற்றி வருகின்றயே! நான் அதைப்பற்றி உன்னிடம் கூறியதே தப்பாகி விட்டதல்லவா? என்னுடைய துயரங்களை உன்னிடம் கூறி உன்னையும் ஏனப்பா நான் வேதனைப்படுத்த வேண்டும்?"

"ராம்! நீ இவ்வாறு பேசுவது எனக்கு எவ்வளவு வருத்தத்தை உண்டு பண்ணும் என்பது உனக்குத் தெரிந்திருந்தும் ஏனப்பா இவ்வாறு பேசுகின்றாய்? உண்மை நண்பனென்றல் இன்பத்தில் மட்டுமன்றித் துன்பத்திலுந்தான் பங்கு கொள்ள வேண்டும். நீ மட்டும் துயரில் வாட நான் பார்த்துக்கொண்டிருப்பதா? இதை எப்படியப்பா மனம் வந்து கூறினாய்? நீ சிரித்துப் பேசி மகிழ்வதைக் காண எனக்கு மட்டும் விருப்பமில்லையா? நீ, நீர்மேற் குமிழிபோற் கொள்ளும் மகிழ்ச்சியை மாற்றி நிரந்தர மகிழ்ச்சியோடிருக்க வேண்டும் என்னும் எண்ணத்துடனேயே உன் துயரில் பங்கு கேட்கின்றேன். அதுமட்டுமின்றி உன் துயரில் பங்கு கொள்ள வேண்டுமென்பதே எனது கடமை, உரிமை என்பது மன்றி தீர்க்கமான முடிவுமாகும்," என்றேன்.

காந்தன், "எனக்காக நீ ஏன் வாட வேண்டும், கஷ்டப்பட வேண்டும், என்பதற்காகவே நான் உன்னிடம் கூறிக் கொள்ளாமல் தப்பப்பார்த்தேன். ஆனல் நீயோ விடுவதாக இல்லையாகையால் கூறுகின்றேன்."

"களவு நடந்த அன்று எங்கள் பிரிவில் என்னுடன் வேறு மூவரே வேலைக்கு வந்திருந்தார்கள். நானும் அன்று தலைவலி காரணமாக மத்தியானத்திற்குப்பின் "லீவு" எடுத்துக்கொண்டு வந்துவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேன். ஆகவே, பணம் எங்கள் பிரிவிலிருந்து களவாடப்பட்டிருப்பதாலும், களவு சென்றதினமும் அடுத்த இருதினமும் வேலைக்குப் போகாது விட்டபடியாலும் நான் சந்தேக நபராகிவிட்டேன். அதுமட்டுமல்லாமல் பணமிருக்கும் பெட்டிக்குரிய சாவி எனது மேசையிலேயேயிருக்கும். மாலை மூன்று மணிக்கிடையில் களவு நடந்திருப்பது அறியப்பட்டுவிட்டதால் அறியப்பட்டவேளை நான் அங்கு இல்லாது போகவே மேலதிகாரிகளுக்கும் என்மேல் ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டது. எனவே அவர்களும் என்னைப் பற்றிச் சாடைமாடையாகப் ''பொலிசா'' ருக்குத் தெரிவித்திருக்கின்றார்கள்.

இவற்றிற் கெல்லாம் சிகரம் வைத்ததுபோல எனது கோட்டுப் பொத்தானொன்றும் பணப்பெட்டிக்கு அருகே கிடந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் உண்மையில் அன்று பணப்பெட்டிக்கு அண்மையில் நான் செல்லவேயில்லை. ஆகவே முதலில் ''பொலிசார்'' என்னைக்கேட்டதும் நான் அன்று பணப்பெட்டிக்கு அண்மையிற் கூடச் செல்லவில்லை யென்று கூறினேன். ஆனால் அவர்கள் கண்டெடுத்த பொத்தான் எனது கோட்டிலிருந்து விழுந்ததாகவே இருப்பதால் என்மேல் கொண்ட சந்தேகம் வலுப்பெறுகின்றது. எனவே என்னைக் குற்றவாளியாக்க ஒரு சூழ்ச்சியே நடந்திருக்கிறதென்று அப்புக்காத்து கூறுகின்றார்.''

அவன் கூறியதைக் கேட்கக் கேட்க என்னுள் நெகிழ்ச்சி அதிகரித்துக் கொண்டேயிருந்தது. ராம் எனக்கு இன்று நேற்றுத் தெரிந்தவனல்ல. நானும் அவனும் சிறுவயது முதற்கொண்டு ஒன்றாகப் படிக்க ஆரம்பித்துக் கடைசியில் பல்கலைக் கழகத்திலிருந்து பட்டதாரிகளாக ஒன்றாகவே வெளிவந்தோம். அதன் பின்னர் வேலைபார்க்கத் தொடங்கியதிலிருந்து இருவரும் சிறிது பிரியவேண்டி நேரிட்டது. ஆனால் பொதுவாக மாலை வேளைகளில், ஒவ்வொருநாளும் இக் கடற்கரையில் இதே இடத்தில் சந்திக்கத் தவறமாட்டோம். இக்காலத்தில் நான் அவனைப் பற்றி அறிந்தவைகள், ''அவன் நேர்மை நியாயம் என்பவற்றிற்குக் கட்டுப்பட்டவன். யாவரோடும் அன்பாகப் பழகக் கூடியவன். பிறர்பொருளை விரும்பாதவன். பிறர் இன்னல் கண்டு பொறுக்காத இரக்க சிந்தையுடையவன். சிறு எறும்புக்குத்தானும் தீங்கிழைக்கமாட்டாதவன்'' முதலிய பலவாகும். ஆகவே அவன் மீது சுமத்தப்பட்டிருப்பது அபாண்டமான பழி யென்பதை நான் நன்கு அறிந்து கொண்டேன்.

என்னைப்போலவே எனது தங்கை ஆனந்தியும் அவனைப்பற்றி நன்கு அறிந்தவள் தான். எனவே தான் முதலில் அவள் விஷயத்தைக் கேள்விப்பட்டதும் என்னிடம்வந்து, ''யாரோ களவெடுத்த பழியை ராம்மீது சுமத்தி விட்டார்கள். பழியோரிடம், பாவமோரிடமாகச் செய்துவிட்டார்கள்'' என்று கலங்கினாள். அவளும், ராமும் ஒருவரை ஒருவர் நேசிப்பதே அவள் கலங்குவதற்குக் காரணமாக இருந்தது. எனது வீட்டில் அன்னையும் ராமிற்காக மனம் வருந்தினார். எனது அண்ணர் பாண்டியன், ராமிற்கு மேலதிகாரியாக இருந்த போதிலும் வீட்டில் அவனைப்பற்றியோ அல்லது அக்களவு பற்றியோ ஒன்றும் பேசுவதில்லை. அவருக்கு அதற்கு நேரமும் இல்லை. அலுவலகம் முடிந்ததும் நேரே வீட்டிற்கு வராமல் ''கிளப்'' அது, இது என்று சுற்றி விட்டு, சூதாடிய தோல்வியுடன் மது மணம் கமழ இரவு பத்து அல்லது பத்தரை மணியின் பின்னரே வீடு திரும்புவார். அது பற்றி அவரிடம் பேசுவதற்கு வீட்டில் யாவருக்கும் பயம்.

ஒரு நாள் விடுமுறையாகையால் அண்ணர் அலுவலகம் செல்லாமல் வீட்டிலேயேயிருந்தார். நானும் தக்க சமயம் பார்த்து ராமைப்பற்றிக் கதைத்து அவன் நிரபராதி என்று ஆறுதலாக அவருடன் உரையாடத் தொடங்கி இறுதியில் ஆவேசத்துடன் முடித்தேன். இதற்கு அண்ணர், ''நீ வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பவள். அது தவறு. இக்காலத்தில் யாரையும் எளிதில் நம்பிவிடலாகாது''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று உபதேசம் பண்ணினர். தினமும் குடித்து, சூதாடி பணத்தைத் தொலைத்து விட்டு வருபவர் அன்று உபதேசம் வைத்தது எனக்குமட்டுமின்றி வீட்டிலுள்ள அனைவருக்கும் ஆச்சரியத்தையும், திகைப்பையும் அளித்தது.

ஆனந்தி, ராமை விரும்புவதும் அண்ணருக்குத் தெரியும். ஆனால் அவர் அதை அடியோடு வெறுத்தார். ஆனந்தியிற்கு ஒரு பணக்கார மாப்பிள்ளையை அவர் தேடிக்கொண்டிருந்தார். அவரது இவ் வெண்ணத்திற்கு ஆனந்தி ஒருப்படவில்லை. இதனால் அவருக்கு ராமைக் கண்டால் அடியோடு பிடிப்பதில்லை. எனவே தான் ராமைப்பற்றிய விஷயத்தை எடுத்ததும் அவரும் அவனுக்கு எதிராக இருக்கின்றாரென நினைத்துக் கொண்டேன்.

ஆனந்தியைப் பொறுத்த அளவில் ராம் மணாளனாகக் கிடைப்பது அவளது பாக்கியம் என்றே சொல்லலாம். ஆகவே ஆனந்தியின் மனம் நிறைந்த கணவனாக ராம் இருப்பதையே நானும் விரும்பினேன். அதுவே ஆரம்பத்தில் என்னுள் எழுந்த எண்ணமுமாகும். அம்மாவும் ராமையே தனது மருமகனாகக் கொள்ள மனம் உவந்தார். தந்தையாரும் ஆனந்தியின் விருப்பத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கா விட்டாலும் ராம் பணம் படைத்தவனாக இல்லாததை ஒரு குறையாகவே கருதினர். எனவே ராமை வீட்டிற்கு அழைத்துவந்து ராம் — ஆனந்தி ஆகியோர் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பையும் நான் ஏற்படுத்திக் கொடுத்தேன்.

"என்ன காந்தன்! நானொருவன் இருப்பதே தெரியாது அப்படி எந்தக் கோட்டையைப் பிடிக்க முயல்கின்றாய்?" என்ற ராமின் கேள்வி என்னை இவ்வுலகிற்கு அழைத்து வந்தது. "ஆமாம் இதோ இருக்கும் கோட்டையைக் கைப்பற்றவே இவ்வளவு நேரமும் சிந்தித்துப் பார்த்தேன்" என்று அவனையே காட்டிச் சிரித்தபடி கூறினேன். ராமும் அதை உணர்ந்துகொண்டு கவனத்தை வேறு திசைக்குத் திருப்ப வெண்ணி, "கடலை விற்கும் பையனொருவனிடம் வேர்க்கடலையை வாங்கிக் கொறித்துக் கொண்டு வீட்டிற்குச் செல்வோமா?" என வினவினான். வீடு திரும்புகையில், நண்பன் ராமின் மேல் பழியேற்படக் காரணமாயிருந்த உருத்தெரியாதவனைப் பலவாறாக வைது கொண்டே சென்றேன்.

வீட்டினுள் நுழையப்போன என்னை உள்ளேயிருந்துவந்த பேச்சுக்குரல் தடை செய்தது. வீட்டினுள் பெற்றோரிருவரும் இருப்பதாகத் தெரியவில்லை. அண்ணரின் குரலே ஒலித்தது. "இதோ பார் ஆனந்தி, நான் உனது நன்மைக்காகவே கூறுகின்றேன். நீ அந்த ராமை மறந்து விடு."

"அண்ணா! நீங்கள் எனது நன்மையை விரும்புவதானால் என்னை ராம் அத்தானிடமிருந்து பிரிக்காதீர்கள்" என்று ஆனந்தி அண்ணரிடம் இரந்து மன்றாடினாள். "என்னை யாரென்று நினைத்து விட்டாய்? ராம், ராம் என்று அந்தச் சோதாப்பயலையே நாடுகின்றாயே! உனக்காக நான்படும் பாட்டை எண்ணிப்பார். இன்று காந்தனில்லா வேளையில் உன்னை வழிக்குக் கொண்டு வரலாமென முயன்றால் நீயோ ராம், ராம் என்று ராமபஜனையையே நடத்துகின்றாய். ஆனால் உன் ராமுவை நீயே வெறுத்து ஒதுக்கக் கூடிய வழிகளையும் நான் செய்துவிட்டேன். எனது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மூவாயிரம் ரூபாவைக் கையாடிவிட்டு அவன்மேல் பழியைப் போட்டு ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க நினைத்திருந்தேன்" — இவ்வாறு அவர் பேசிமுடிக்கும் போது நச்சுச்சிரிப் பொன்று அவரது நாவிலே நெளிந்து கொண்டிருந்தது.

அவ்வளவு தான்,

"நீங்கள் தானா பணத்தை திருடிவிட்டு ஒன்றும் அறியாத அப்பாவி மீது அநியாயப் பழியைச் சுமத்தப்பார்க்கின்றீர்கள்" என்று அண்ணரை மேலே பேசவிடாது தங்கை ஆனந்தி எரிமலையாகக் கனன்றாள். அண்ணரின் கூற்று என்னுள்ளும் ஒரு புயலை ஏற்படுத்தி விட்டது. ஒரு வேளை அண்ணரே திட்டமிட்டுச் செய்த செயலாகவுமிருக்கலாமல்லவா? உடனே நானும் என் வசமிழந்து, "உங்கள் கயமைக் குணத்தை ஏன் ஒன்றுமறியாத அப்பாவி ராமின் மேலும், தங்கை ஆனந்தி மேலும் காட்டுகின்றீர்கள்? நீங்கள் செய்த காரியத்திற்கு நீங்களே தண்டனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சதிக்கு நான் ஒருபோதும் இடங் கொடேன். இப்பொழுதே சென்று ''பொலீசா'' ருக்கு விஷயத்தைத் தெரியப்படுத்துகின்றேன்'' என மூச்சுவிடாமல் கூறி முடித்தேன்.

எனது திடீர்ப் பிரவேசத்தால் அண்ணருக்கு ஏற்பட்ட திகைப்பு அடங்க வெகு நேரம் எடுத்தது. ''காந்தன் ஆனந்தியின் மனத்தை மாற்றுவதற்காக ஒரு பொய்யைச் சொன்னேன். அவ்வளவுதான். இதை நீ நம்பிவிட்டாயா?'' எனக் கேட்டார். ஆனால் நானோ அவர் கூறிய தொன்றையும் காதிற் போட்டுக் கொள்ளாது நேரே ''பொலிஸ்'' நிலையத்தை நோக்கி விரைந்தேன்.

வழி முழுவதும் மனத்தில் எழுந்த போராட்டத்தில் ஒருபக்கம் அண்ணரும், மற்றைய பக்கத்தில் தங்கையும், ராமும் நின்றார்கள். ராமையும், தங்கையையும் பார்க்கப் பரிதாபகரமாக இருந்தது. அண்ணரைக் காட்டிக் கொடுக்காவிட்டால் ராமின் மேல் குற்றம் சுமத்தப்பட்டு அவன் சிறை செல்லவேண்டி நேரிடும். ராம் சிறைசென்றால் தங்கையின் எதிர்காலம் சிதைந்துவிடும். அண்ணரின் செய்கையை நினைக்க நினைக்க ஆத்திரமே மேலோங்கியது. தான் பணத்தைத் திருடியதோடமையாது அப்பழியை ராமின் மேற்சுமத்தி அதன்மூலம் தங்கையின் வாழ்வையுமல்லவா சிதற அடிக்கப் பார்த்தார்? வினை விதைத்தவன் வினை அறுக்கத்தானே வேண்டும்? ஆகவே 'பொலிஸ்' நிலையத்தை நெருங்க நெருங்க நான் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டேன்.

'மிஸ்டர்' பாண்டியன்! உங்கள் அலுவலகத்தில் நடந்த கையாடலில் நீரும் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருவதால் உமது அறையைச் சோதனை இட விரும்புகின்றேன் என்ற 'இன்ஸ்பெக்டர்' ரின் முன்னிலையில் தான் களவு எடுத்ததை ஒப்புக்கொண்டு செலவு செய்தது போக மீதமுள்ள எண்ணூறு ரூபாயைத் தனது பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுத்து, ''நான் சூதாட்டத்தினால் அடைந்த கடன்களை அடைக்கமுடியாது திண்டாடுகையில் ஒரு நாள் அலுவலகத்தில், ராம் என்னைக் காண வருகையில் அவனது கோட்டுப் பொத்தானொன்று எனது அறையில் விழுந்து விட்டது. இதை எடுத்துக்கொண்ட நான் எனக்குத் தேவையான பணத்தைக் கையாடிக் கொண்டு அவன் மேல் பழியேற்படக் கூடியமாதிரி நடந்து கொண்டுவிட்டேன்'' எனக் காரணத்தையும் கூறினார். இவரது செய்கையையும், காரணத்தையும் இவர் வாயிலாகவே அறிந்த பெற்றோர்களுக்கும் அவர்மேல் ஒரு வெறுப்பு ஏற்பட்டது. ஆனால் பாசத்தின் காரணமாக அவர்கள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

விஷயம் அறிந்து ராமும் வந்து என்னை மிகவும் கடிந்துகொண்டான். அண்ணரும் ராமிடம் மன்னிப்புக் கோரினார். ''ராம்! களவெடுத்ததோடமையாது உங்களிருவரின் வாழ்வையும் சிதைக்க முற்பட்ட எனக்குத் தகுதியான பரிசை தம்பி அளித்து விட்டான். பழியோரிடம் பாவம் ஓரிடமாக இருந்துவிடும் என எண்ணினேன். அதற்கும் காந்தன் தக்கபாடம் கற்பித்து விட்டான். உன்னைச் சிறைக்கனுப்பித் தங்கையின் வாழ்க்கையைச் சிதைக்க முற்பட்ட நான் இப்பொழுது நீதியின் கரங்களில் அகப்பட்டுச் சிறை செல்லுமுன் உங்கள் வாழ்க்கையை மலரவைக்க விரும்புகின்றேன்.'' எனக் கூறி, ராம் — ஆனந்தி இவர்களின் கரங்களை இணைத்தார். பின் 'இன்ஸ்பெக்டர்' ரை நோக்கித் தனது இருகரங்களையும் நீட்டினார். அவரும் தமது கடமையைச் செய்யும் பொருட்டு நீட்டிய கரங்களில் விலங்கை மாட்டினார். புன்னகை பூத்த முகத்துடன் விடைபெற்றுக் கொண்டு கம்பீரமாக 'ஜீப்' பை நோக்கி முன்னே நடந்தார். அக்காட்சியைக் காணமுடியாது எல்லோர் கண்களிலும் கண்ணீர் திரையிட்டது.

கு. குகானந்தன்
பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு
(மருத்துவப்பகுதி) இறுதியாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புட்போல் 'கீ'றள்

ச. முருகானந்தன்
A / L II "D"

கரையிரண்டும் கோல்போஸ்ட்டும் நடுவினில் வெளியும்
உள்ளவே புட்போல் கிரவுண்ட் (1)

உரத்த கவரும் காற்றுள்ள பிளாடரும்
சேர்ந்ததுவாம் நற் பந்து (2)

வல்லஒரு காப்டனும் மல்லன்ஒரு கோலியும்
நல்லநவ வீரரும் சேர்ந்ததே ரீம் (3)

நீதி நடுவர் நடுநிலையாய் நிற்பர் — அஃதேபோல்
தாமதுவாய் நிற்பர் ரெப்றீ (4)

எப்பந்து யார்யார் அடித்திடினும் — அப்பந்தைப்
பாய்ந்து பிடிப்பவரே கோலி (5)

தன்காலைக் காக்கப் பூட்ஸ் அணிக — அணியாக்கால்
வெறுங்காலை மிதிக்கும் வேறொரு பூட்ஸ் (6)

கொடுக்குக பந்தைஒரு நண்பனிடம் — கொடுத்தபின்
ஓடுக மீண்டும்அதைப் பெற (7)

புட்போலில் வெற்றி நிச்சயம் — பாசிங்கைக்
கடைப் பிடித்து அடிப்பின் (8)

எப்பந்தை அடிக்காராயினும் கோலுக்குள் பந்தடித்தார்
தப்பாமற் புகழ்பெறுவர் தாம் (9)

அனைவரையும் வெட்டியெடுத்த பந்தைக் கோலுக்குள்
செலுத்துவதே புட்போல் (10)

எத்தவற்றைச் செய்தவர்க்கும் உய்வுண்டாம் — உய்வில்லை
நல்லகோல் விட்ட வீரர்க்கு (11)

எல்லா அடியும் அடியல்ல — வீரருக்கு
கோல் அடியே அடி (12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல் அடிப்பார் எல்லாம் அடிப்பார் — மற்றெல்லாம்
அவுட் அடித்தே தோற்பார் (13)

பெனல்ட்டி அடிப்பின் கோல்அடிக்க — அல்லாக்கால்
அடியாமை கோடி பெறும் (14)

பௌல் விடுவார் எல்லாம் கால்முறிப்பர் — மற்றெல்லாம்
கால் முறிந்தே வெளிச் செல்வர் (15)

கோலின்மிசை நோக்கி அடித்தான் பந்து — எதிர்த்தான்
வீடுமிசை ஏகுவான் விரைந்து (16)

வெற்றியும் தோல்வியும் இல்லை இருவருஞ் சமமாய்க்
கோல் போட்டு விடின் (17)

சமமாய் முடிவதில் என்பயன், விறுவிறுப்புண்டாம்
ஒருவரை யொருவர் வெல்லின் (18)

வெற்றியினுல் கிடைக்கும் புகழ் யாவும்
அக்கோஸ் டிக்கே யுரித்து (19)

புட்போல்போல் ஆங் (கு) ஊக்கமும் இல்லை — அதனை
மறத்தலின் ஆங்கில்லைக் கேடு (20)

படித்ததனுல் ஆயபயன் என்கொல் — யாழ்இந்து
புட்போல்மாச் பார்க்கா விடின் (21)

நல்ல காலம் நம் காலிலே வந்து விழாது;
அதை நோக்கி நாம்தான் கால் கடுக்க நடக்கவேண்டும்.

— மு. கருணுநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனைக் கட்டுப்படுத்துவது எது?

மனிதன் புவியிலே 250 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் கயினோசோயி (Cainozoic) யுகத்தின் பிற்கூற்றில், பிளேயோசீன்கால ஆரம்பப்பகுதியில் தோன்றியவனாகக் கணிக்கப்படுகின்றான். அங்ஙனம் தோன்றிய மனிதனுக்கும், புவியின் இயற்கைத் தன்மைகளுக்கும் இடையே இருந்துவந்த இணைப்பும் பிணைப்பும் காலத்திற்கேற்ப மாற்றமடைந்து வந்திருக்கின்றன. ஆதிமனிதன் மலையையும், மழையையும், நதியையும், கடலையும் கண்டு பீதியுடன் உண்பதற்கோ உணவும், வாழ்வதற்கோ இடமும்பெற வழி தெரியாது அவலப்பட்டு வாழ்ந்தான். அடுத்து வந்த மனித சமூகம் இயற்கைச்சூழலை உணர்ந்து, அதில் தனக்குச் சாதகமானவை யெவை பாதகமானவை யெவை எனவகுத்து, சாதகமான சூழலைத்தேடிப் பெற்று அதற்கிணங்க வாழ்ந்தான். இன்றைய மனிதனும் வருங்கால மனிதனுமோ வளமான வாழ்க்கை விரும்பினாலும், தேவையதிகரிப்பினாலும், ஏற்பட்ட விஞ்ஞானத்தின் வளர்ச்சி மூலம் இயற்கைச் சூழலைப் பெருமளவிற்கு வெற்றிகொண்டு, தன்னுடைய முன்னேற்றத்திற்குச் சேவகஞ் செய்யும் கருவியாகச் சூழலை மாற்றியுள்ளான். இவ்வாறு ஆரம்பத்தில் இயற்கைச் சூழலுக்குப் பயந்த மனிதன் இன்று அதனை வெற்றி கொள்கின்ற போதிலும், அவன் பிறந்த சூழலிலிருந்து நீங்கி வாழவோ, அன்றேல் சூழலில் இல்லாத ஒன்றை உருவாக்கவோ முடியாது. உதாரணமாக விண்வெளிக்குச் செல்லும் விஞ்ஞான மனிதன் கூடத் தன் வாழ்க்கைக்கு அத்தியாவசியச் சூழலான பிராணவாயு, (Oxygen) உணவு வகை என்பனவற்றைத் தன்னுடன் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. புவியிற் காணப்படும் இருப்புப் பாதைகள், கட்டிடங்கள், பாலங்கள் முதலியன மனிதனால் நிர்மாணிக்கப்பட்டவையே! ஆனால் அவற்றிற்குந் தேவையான மூலப்பொருட்களெல்லாம் சூழலிலிருந்துதான் பெறப்படுகின்றதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. எனவே மனிதன் இயற்கைச் சூழலுடன் ஒன்றிவாழ வேண்டியவனாயுள்ளான்.

பிரதேசங்களின் நிலையம் மனிதனைக் கட்டுப்படுத்துகிறது என ஒரு சாரார் கூறுகின்றார்கள். அதற்கு ஆதாரமாக அவர்கள் இலங்கைத்தீவின் வளர்ச்சியடைந்த நிலையையும், பாலித்தீவின் வளர்ச்சிகுன்றிய நிலையையும் ஒப்புநோக்குகின்றார்கள். முன்னேற்றமடைந்த நாடுகளுக்கு மத்தியில் இலங்கை அமைந்திருப்பதனால் நாகரிகம், தொழில் முயற்சிகள் முதலியவற்றில் முன்னேறியுள்ளதென்றும், உலகத்திலிருந்து பாலித்தீவு துண்டிக்கப்பட்டு ஒதுங்கியிருப்பதனால் அநாகரிகமான புராதன தொழில்களைக் கொண்டு காணப்படுகின்றதென்றும் கூறப்படுகின்றது. ஆதலால் இயற்கைச் சூழல் மனிதனைக் கட்டுப்படுத்துகின்றதென்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் இக்கட்டுப்பாடு விஞ்ஞான அரசியல் நிலைமைகளினாலேயே ஏற்படுகின்றதென்றும் இதை மாற்றியமைக்க முடியுமென்றுங் கருதுகின்றனர்.

புவியினுள்ளே இயங்கிக்கொண்டிருக்கும் செயற்பாடுகளுக்கமைய, புவியின் மேற்புறத்தில் தோன்றும் புவிநடுக்கங்கள், எரிமலைகள், மேடுகள், மலைகள், பள்ளத்தாக்குகள், கனிப்பொருட்கள், மண்வளம், கடல்கள், ஆறுகள், காற்று என்பனவும், ஞாயிற்றின் கதிர்வீச்சால் ஏற்படும் கால நிலைத்தன்மையும், மிருகங்கள், பறவைகள், தாவரங்கள் ஆகியனயாவும் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தோ தனித்தோ மனிதனுடைய வாழ்க்கைமுறை, தொழில்கள், குடிசனப் பரம்பல் என்பனவற்றுடன் தொடர்பு பட்டுள்ளன. யப்பானின் சில பகுதிகளில் குடித்தொகை குறைவாக இருப்பதற்குக் காரணம் அங்கு எரிமலைகள், பூகம்பங்கள் அடிக்கடி ஏற்படுவதனாலாகும். அங்குள்ள வீடுகள். கடதாசி, மட்டைகள், மூங்கில் போன்ற அழியுங் கருவிகளாற் கட்டப் பட்டிருப்பதிலிருந்து இயற்கையின் கட்டுப் பாட்டுத்தன்மை புலப்படுகின்றது. 1883 ஆம் ஆண்டில் சண்டாத்தொடுகடலில் ஏற்பட்ட கிருக்கற்ருேவா (Krakatau) எரிமலை மனிதனுடைய வாழ்க்கையையே மாற்றிவைத்ததோடன்றி அழிவுக்கும் காரணமாயிற்று. ''மத்தியதரைக்கடலின் கலங்கரைவிளக்கம்'' எனப் போற்றப் படுகின்ற ஸ்ருேம்போலி (Stromboli) எரிமலை விஞ்ஞானிகளின் அவதானிப்புக் கும், ஆராய்ச்சிக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

மேடுகள், மலைத்தொடர்கள், பள்ளத் தாக்குகள் போக்குவரத்திற்குத் தடையா கவும், விவசாயம் கைத்தொழில் செய்ய முடியாத பகுதிகளாகவும் விளங்கியமை யினல் சனவடர்த்தி குறைந்த பகுதிகளாக விளங்கின. உதாரணமாகத் திபேத் போன்ற நாடுகள் துண்டிக்கப்பட்டிருந்த மையால் புராதன வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தன. ஆனல் தொழிற்புரட் சிக்குப் பின் மலைகள் நொருக்கப்பட்டும், குடையப்பட்டும் பாதைகள் அமைக்கப் பட்டன. இதனல் கைத்தொழில், பயிர்ச் செய்கை என்பவற்றில் விருத்தியடைந்த பிரதேசங்களாக மாற்றப்பட்டு அடர்த்தி யான சனப்பரம்பலும் ஏற்பட்டுள்ளது. படிமுறைப் பயிர்ச்செய்கை தொடங்கி யுள்ளது. உதாரணமாக இலங்கை, சீன போன்ற நாடுகளிலுள்ள மலைநாடுகளில் அபிவிருத்தியடைந்த பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையைக் கூறலாம். இயற்கை யின்மேல் மனிதன் கொண்ட வெற்றிக்கு இவை சான்ருயினும் சுவிற்ஸலாந்தில் நுண்ணிய கைக்கடிகாரம் போன்ற சிறிய பொருட்கள் செய்யப்படுவதற்கு இயற் கைச் சூழலின் கட்டுப்பாடே காரண மாகும்.

எத்தகைய இயற்கைச் சூழல் மனித னுக்கு ஆரம்பத்தில் பயத்தை உண்டாக் கிற்ருே, அத்தகைய சூழலை மனிதன் இன்று தனது முன்னேற்றத்திற்குப் பயன் படுத்துவதைக் காணுகின்ருேம். மனித னுக்குப் பீதியை ஊட்டிப் பெருந் தடைக ளாக விளங்கிய சமுத்திரங்களும், பேராறு களும் இன்று அவனுக்குப் பாரிய பொருட் களை இடம்பெயரச் செய்வதற்கு உதவிபுரி யும் சாதனங்களாக மாற்றப்பட்டுள்ளன. இலங்கையிலுள்ள மகாவலி கங்கையின் இயற்கைப்போக்கில்ஒருமாற்றத்தை ஏற்ப டுத்திச் செயற்கைப் போக்கில் இலங்கை யின் வடபகுதிக்கு நீர்ப்பாசனம் செய்ய மனிதன் விழைந்திருப்பது விரும்பத்தக்க தாயுள்ளது. இயற்கைத் துறைமுகங்கள் தவிர்ந்த செயற்கைத் துறைமுகங்களை மனிதன் கொழும்பு போன்ற நகரங்களில் அமைத்துத் தனது திட்டங்களுக்குத்தக்க முறையில் கடற்கரைகளையே மாற்றிய மைக்கின்ருன். இயற்கையால் விதிக்கப் பட்ட பெருந்தடையை உடைத்தெறிந்து பனமாக் கால்வாயையும், சுயஸ்கால்வா யையும் பிரயாணத்திற்குப் பயன்படுத்து கின்ருன். சென் லோறன்ஸ் கடற் பாதையை ஐம்பெரும்வாவியுடன் இணைத்து வட அமெரிக்காவின் பொரு ளாதாரத்தையே மாற்றியுள்ளான். உப்பு நீரை நன்நீராக மாற்றியும், கடல்நீரை மின்சாரம் பெறுவதற்கும் பெருந்துணை யாக்கியுள்ளான். இவற்றின்மூலம் இயற் கைச் சூழலை மனிதன் எவ்வாறு தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளுகிருன் என்ப தனை அறிய முடிகின்றது.

மனித வாழ்க்கைக்குப் பயன்படாத பாலைவனங்களிற் காணப்படுகின்ற கனிப் பொருட்களை ஏதுவாகக் கொண்டு அவ் விடங்களைச் சூழ்ந்து குடியேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவுஸ்திரேலியாவில் கூல்காடி, கால் கூளி பொன் வயல்கள் சான்ருகவுள்ளன. சனச்செறிவற்றிருந்த ஜம்செட்பூரில் இரும்புருக்கு ஆலைகள் அமைக்கப்பட்டபின் செறிவான குடிய டர்த்தி ஏற்பட்டுள்ளது. எனினும் மனிதன் தான் விரும்பிய இடத்தில் தொழிற்சாலைகளை அமைக்கமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை மூலப் பொருட்களை அளிக்கும் இடங்களிலேயே அவை பெரும்பாலும் நிறுவப்படுகின்றன. யாழ்ப்பாணத்தி லுள்ள சீமெந்துத் தொழிற்சாலை இந் நோக்கத்தினுலேயே நிறுவப்பட்டது.

ஞாயிற்றிலிருந்து பூமிபெறும் வெப்ப வேறுபாடு சம்பந்தமாக மனிதன் எவ்வித வெற்றிகளையும் பெற முடியவில்லை என்பதை வெப்பவலயம், இடைவெப்ப வலயம், துந்திரப்பிரதேசங்களில் வாழும் மக்களுடைய வாழ்க்கைமுறை, தொழில் முறை, சனப் பரம்பல் ஆகியவற்றுக்கிடை யேயுள்ள வேறுபாடுகள் புலப்படுத்துகின் றன. இடை வெப்பவலயம் போன்று பனிபரந்த துந்திரப் பிரதேசத்தில் பயி ரிடமுடியாது. வெப்பவலயத்தைப் போல உடையணிய முடியாது. அடர்த்தியான குடிப்பரம்பலையும் காணமுடியாது. அணு சக்திமூலம் இந் நிலைமைமையை மாற்றி யமைக்க முடியுமென்று கூறப்படினும் பூமிபெறும் பெற்ற வெய்யிலைப் (Insolation) பொறுத்த வரையில் இயற்கையின் ஆதிக்கம் அதிகமானதாகவே இருக்கி றது. வருடந்தோறும் ஏறக்குறைய 500 தொன் காபன்டை ஒக்சைடு உற்பத்தி யாகின்றது. அணுகுண்டுப் பரிசோதனை களாலும், தொழிற்சாலைகளாலும் வாயு மண்டலத்தின் மூலக்கூறுகள் தூசிகளின் விகிதம் மாற்ற மடைந்து வருகின்றது. இவற்றிலிருந்து இயற்கைச் சூழலின் ஆதிக்கம் மனிதனின் மேல் சிறிதளவு காணப்படினும், இயற்கைச் சூழலை வெற்றி கொள்ளாமல் மனித வாழ்வில் முன்னேற்றமில்லை யென்றே கருதவேண் டும். சந்திரமண்டலம் சென்று வந்த ''அப்பலோ – 8'' விஞ்ஞானிகள் இயற் கைச் சூழலைச் சேவகஞ் செய்யுங் கருவியா கப் பயன்படுத்திக் கொண்டமை மனித முன்னேற்றத்திற்கும் ஆராய்ச்சியறிவுக் கும் எடுத்துக்காட்டு என்பதை ஒருவரும் மறத்தலன்று.

**த. சர்வானந்தன்**
பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு
(கலைப் பிரிவு 2-ஆம் வருடம்)

# ஊர் வாய்......

''வாசு! இந்த வருடம் யார் சீனியர் சாம்பியன் சொல் பார்க்கலாம். நான் சொல்கிறேன் சபேசன் தான் சீனியர் சாம்பியன். நீ என்ன சொல்கிருய்?''

''இதிலென்னடா சந்தேகம்! நிச்சய மாக சபேசன் தான் சாம்பியன்; அவனை யாராவது வெல்வதென்பது இந்தக் கல்லூரியில் நினைத்துப் பார்க்கக் கூடிய காரியமா என்ன? ஏற்கனவே அவன் எடுத்த மூன்று நிகழ்ச்சிகளிலும் முத லாவது அவன் தான். அடுத்தது என்ன? நூறு மீற்றர் ஓட்டந்தானே! அதிலும் சபேசன் தான் வெல்லுவான். நிச்சயம் அவன்தான் சாம்பியன்.'' அது சரி விமலன்! இம்முறை பெண்கள் பிரிவில் யார் சாம்பியனுக வரக் கூடும் என்று நீ நினைக்கிருய்?''

''அது தான் இருக்கிருளே அந்தக் கர்வம் படைத்த கௌரி! கௌரியாம் கௌரி!! பெயரைப்பாரு பெயரை. ரௌடி என்று வைத்திருக்கலாம். எனக் கென்னவோ அவள் சாம்பியனுகவருவது கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.''

''அட, நீ ஒரு பக்கம். அவள் சாம்பியனுக வருவது யாருக்குத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கிறது, சொல்பார்க்கலாம். ஓடும் போது அவள் தடுக்கி விழுந்தால் அதைப் பார்த்து ரசிப்பதற்கு மட்டும் ஆயிரம்பேர் உண்டு. சனியன்! பெண்ணாகப்பிறந்து அதுவும் இந்தப் பள்ளியில் நாங்கள் படிக்கும் போதா வந்து சேர வேண்டும்?''

''சரி சரி அதோ நிகழ்ச்சி ஆரம்பமாகிறது கவனி.''

பொதுவாக கல்லூரியில் விளையாட்டுப் போட்டியென்றால் அனைவருக்குமே உற்சாகமாகத்தான் இருக்கும். அதிலும் அப்பாடசாலை கலவன் பாடசாலையாக அமைந்து விட்டால் மாணவர்கள் அடையும் உற்சாகத்தைப் பற்றிக்கூற வேண்டிய தேவையே இல்லை. கலவன் பாடசாலையான மீனாட்சி கலைக்கல்லூரியில் அன்று இல்ல விளையாட்டுப்போட்டி. மாணவர்களின் உற்சாகத்தைக் கேட்கவா வேண்டும்? ஒவ்வொரு மாணவ மாணவியும் தத்தம் இல்லத்தைச் சார்ந்தவர்களே முதலிடத்தைப் பெறவேண்டும், தமது இல்லமே முதலிடத்தைப் பெற வேண்டும் என்ற ஆவலினாலுந் தப்பட்டவர்களாக விருந்தாலும் இந்த இல்லப் போட்டி பூசல்களுக்கப்பால் அனைவரையும் ஒருங்கே கவர்ந்து தமக்கென ஒருதனிமையான இடத்தை ஏற்படுத்திக் கொண்ட இருவர்; அவர்கள் தான் சபேசன், கௌரி. ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களான இருவரும் விளையாட்டுத்துறையிலும் சரி, கல்வித் துறையிலும் சரி வேறெந்தத் துறையினுஞ் சரி ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்லர். பணவசதியைப் பொறுத்தளவிலுங் கூட ஒருவருக்கொருவர் குறைந்தவர்களல்லர். இருவருமே பெருஞ் செல்வச்சீமான்களின் புத்திர பாக்கியங்கள். ஆனால் அவர்களது குணத்தை, நடத்தையை, மற்றைய நண்பர்களோடு பழகுந் தன்மையைப் பொறுத்த வரையில் இருவருமே இருதுருவங்கள். சபேசனுக்குத் தான் பணக்காரன் என்பதில் பெருமையோ. படித்தவன் என்பதனால் அகம்பாவமோ, விளையாட்டில் திறமைசாலி என்பதனால் இறுமாப்போ எள்ளளவுங் கிடையாது. தன்னிடமுள்ள பணத்தையோ அன்றி தான் பெற்ற அறிவையோ அவன் தனது மற்றைய நண்பர்களோடு பங்கிடுவதற்கு என்றுமே தயங்குவதில்லை. இத்தகைய நற்பண்பு வாய்ந்த சுந்தருக்கு அனேக கல்லூரி மாணவர்கள் நண்பர்களானதில் வியப்பொன்றுமில்லையே! ஆனால் கௌரியோ இவையெல்லாவற்றிற்கும் நேர்மாறானவள்: மமதையின் பிறப்பிடம், கர்வத்தின் இருப்பிடம் என்று கூடக் கூறலாம். அவளிடம் வாய்த்திருந்த கொள்ளை அழகு அவளை மேலும் அகம்பாவம் பிடித்தவளாக மாற்றியமைத்தது. தான் பெற்ற அறிவைத் தனது நலனுக்காகவேனும் சரிவரப்பயன் படுத்தத் தெரியாத அந்த அறிவிலி தன்னிலும் குறைந்த அந்தஸ்துள்ளவர்களோடு பேசத் தயங்கினாள். ஏன்? அவர்களைக் காணவே கூசினாள். ஆனாலும் அவளது பணத்திற்கும் பகட்டிற்குமாக அவளைச் சதா வால் பிடித்து, அவளது ஒவ்வொரு சொல்லுக்கும், செயலுக்கும் 'ஆமா' போடும் கூட்டமொன்று எப்போதும் அவளருகே இருக்கத்தான் செய்தது.

''பெண்கள் பிரிவு சீனியர் சாம்பியன் எஸ். கௌரி'' என்று அறிவிப்பாளர் அறிவித்ததும், ஒயிலாக நடந்து சென்று பரிசை வாங்கினாள் கௌரி.

''ஆண்கள் பிரிவு சீனியர் சாம்பியன் எம். சபேசன்'' பலத்த கரகோஷத்தினிடையே சபேசன் பரிசுபெறுவதற்காகச் செல்லவும் பரிசை வாங்கிய அதே வேகத்துடன் கௌரி திரும்பவும் சரியாக இருந்தது. பரிசுக் கிண்ணம் புறக்கண்ணை மறைத்ததோ, அன்றி வெற்றி வாகை சூடியவள் என்ற எண்ணம் அகக்கண்ணை மறைத்ததோ திரும்பிய வேகத்தில் மோதுண்டாள் சபேசனுடன். விழுந்தது சபேசனுமல்ல, அவளுமல்ல, பரிசுக் கிண்ணந் தான். தவறென்னவோ அவள்மீது தான். ஆனால் தான்செய்த தவற்றைத் தெரிந்துகொள்ளவோ, தெரிந்தாலும் அதை ஒப்புக்கொள்ளவோ கூடிய மனமல்லவே அது. சுட்டெரிக்கும் பார்வையொன்றை சபேசன் மீது வீசினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் பார்க்கத்தான் செய்தான். ஆனல் இருவர் பார்வைகளிலுந்தான் எவ்வளவு வித்தியாசம்! அனைவர் கண்களும் தம்மையே நோக்குவதுணர்ந்த சபேசன் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு தனது பரிசுக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பினன்.

''ஏன்டி றூபா, அந்தச் சபேசன்ரை அகம்பாவத்தைப் பார்த்தியா? என்னுடைய கிண்ணத்தைத் தட்டிவிட்டதுதான் பரவாயில்லை. அதை எடுத்துத் தரவாவது கூடாதா? சே! திமிர் பிடித்தவன்.''

''எடுத்துத் தராவிட்டாலும் பரவாயில்லையே கௌரி. அவன் பார்த்த அலட்சியப் பார்வையை நீ கவனிக்க வில்லையா? தான் ஏதோ பெரிய ஆள் என்ற நினைப்பு.''

''அவன் தான் நினைத்து என்னடி செய்துவிட முடியும்? மற்ற எல்லாப் பெண்களைப் போலவே இந்தக் கௌரியையும் மயக்கி விடலாம் என்று கனவு காண்கிறன் சபேசன். ஆனல் ஒருபோதும் நடக்காது. இந்தக் கௌரி அவனுக்கு எந்த விதத்திலுங் குறைந்தவளல்ல.''

அடுத்த நாள் கல்லூரி ஆரம்பமாயிற்று. அன்று கௌரிக்குப் படிப்பில் நாட்டம் செல்லவேயில்லை. அவளது எண்ண அலைகள் நேற்று மாலை விளையாட்டுப் போட்டியில் நடந்த சம்பவத்தைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

''இன்று நாம் பரிநாமக் கொள்கை பற்றிப்படிக்கத் தொடங்கப் போகிறேம். தொடங்குமுன், இக் கொள்கை பற்றிய வியாக்கியானத்தை முதன் முதல் வெளியிட்டவர் யார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். எங்கே உஷா! நீ சொல் பார்க்கலாம்?''

''வந்து சேர்......வந்து.........வந்து''

''வந்தாவது, போயாவது. நீ படிப்பதேயில்லை. இந்த வகுப்பிலே படிக்கக் கூடிய பெண் என்ருல் கௌரி ஒருத்திதான். கௌரி! நீ சொல்லம்மா?''

''சாள்ஸ் வில்சன் சேர்''

'கொல்' என்ற சிரிப்பொலி எழுந்து வகுப்பறை முழுவதும் பரந்தது. கௌரியின் முகத்தில் அசடு வழிந்தது. கூடவே அவளது திறமைக்குச் சான்று பகர்ந்த ஆசிரியரது முகத்திலும் அசடு வழிந்தோடியது. அவர் அதைச் சமாளிப்பதற்காக ''சபேசன்! எங்கே நீ சொல் பார்க்கலாம்? '' என்ருர்.

''ரூபேட் சாள்ஸ் டார்வின் சேர்''

''கரெக்ட், றியலி யூ ஆர் எ க்ளெவர் போய்.'' கௌரிக்கோ அவமானம் பிடுங்கித் தின்றது. சபேசனல் தான் நன்ருக அவமானப் படுத்தப்பட்டுவிட்டதாகவே அவள் நினைத்தாள். வீட்டிற்குச் சென்று நன்ருக அழவேண்டும் போலிருந்தது அவளுக்கு. வகுப்பு முடிந்ததும் அவசர அவசரமாக எழுந்து வந்த அவளால் அதே வேகத்தில் வெளியே சென்றுவிட முடியவில்லை. 'சோ' என்ற இரைச்சலுடன் பெருமழைபெய்து கொண்டிருந்தது.

''நாமும் இவர்களைப் போலவே மழைக்குப் பயந்துகொண்டு இங்கேயே நிற்க வேண்டுமா என்ன? றூபா! உஷா!! வாங்கடி போவோம் என்ரை கார்தான் அதோ நிற்கிறதே! அதிலேயே போய விடலாம்.''

பாவம் கௌரி! அவள் போனவேகத்தில் வெள்ளத்தில் சறுக்கித் 'தடார்' என்று வீழ்ந்தாள். மாணவர்களின் 'ஹோ' என்ற ஏளனவொலி மழையின் இரைச்சலையும் வென்றெலித்தது. அவளது முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடித்தது. நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போலிருந்தது. கோபத்துடன் மாணவர்கள் நின்ற பக்கமாகத் திரும்பினள். சேலை முழுவதும் வெள்ளத்தில் நனைந்து அவளைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது.

''டேய் சபேசன்! பாவம் கௌரி! உன்னுடைய சேட்டைக் கழற்றிக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடேன்டா கௌரிக்கு. டௌரியில் பின்பு கழித்துக்கொள்ளலாம்'' என்றான் நன்பனொருவன் கிண்டலாக. சபேசனை ஒருமுறை முறைத்துப் பார்த்துவிட்டு காரில்சென்று அமர்ந்தாள் கௌரி. அந்த நிலையில் அதைத் தவிர அவளால் வேறு என்னதான் செய்து விடமுடியும்? 'உர்ர்' என்ற இரைச்சலுடன் கார் புறப்பட்டது.

''இந்த ஏளனத்திற்கெல்லாம் காரணம் அந்தச் சபேசன் தான். அவன் தான் அவர்களையெல்லாம் சத்தம்போடுவதற்குத் தூண்டிவிட்டான். இல்லையா உஷா''?

''ஆமாம் கௌரி அந்தச் சபேசனுடைய ஏளனச் சிரிப்பைப் பார்த்தாயா நீ? அவன் ஒரு கர்வம் பிடித்தவன். தனக்கு அதிகம் பேர் நண்பர்கள் என்ற காரணத்தை வைத்துக் கொண்டு, தான் எதை வேண்டுமானாலும் சாதித்து விடலாம் என்று நினைக்கிறான் அந்த மடையன். கௌரி! நீ அவனுக்கு விட்டுக் கொடுக்காதே''

''இரு இரு! அவனுக்குச் சரியான பாடம் படிப்பிக்கிறேனா இல்லையா பார். சபேசன்! இந்தக் கௌரியை நீ சுலபமாக அடைந்து விடலாமென்று மனக் கோட்டை கட்டாதே. அது ஒருபோதும் நடக்காது. உன்னை நன்றாக அவமானப் படுத்தி அழ வைக்கிறேனா இல்லையா பார்! எனக்கு ஒரு சந்தர்ப்பம் வராமலா போய்விடப்போகிறது. அப்போது பார்த்துக் கொள்கிறேன்.''

கல்லூரிப் பொது அறையில் ஆழ்ந்த சிந்தனையுடன் அமர்ந்திருந்தான் சபேசன். தன்னைப் பற்றி, தன் வாழ்வைப் பற்றி, அவ்வாழ்வின் இன்ப துன்பங்களைப் பற்றியெல்லாம் அவனது சிந்தனை படர்ந்து சென்றது. தன்னைச் சபேசன் காதலிப்பதாக நினைத்துத் தம்பட்டமடிக்கும் கௌரியைப் பற்றி எண்ணியபோது அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''சபேசனண்ணா''

சிந்தனைத் தொடரறுந்தது. கற்பனை உலகிலிருந்து இவ்வுலகுக்கு மீண்டான் சபேசன்.

''யாரப்பா அது? ஓ! பாமாவா! இன்று உன்னை ப்ரின்சிபால் கூப்பிட்டு ஏன் பீஸ் கட்டவில்லை என்று கேட்டாராமே. நீ ஏன் நேற்று என்னிடம் வரவில்லை. நான் தான் நேற்றே கொண்டு வந்திருந்தேனே.''

மௌனமாகக் கட்டை விரலால் தரையில் கிறியவண்ணம் நின்று கொண்டிருந்தாள் பாமா என்ற அந்தப் பெண். தொடர்ந்தான் சபேசன்.

''இதோ பார் பாமா! நீ என்னிடம் வந்து பணங் கேட்பதற்கு வெட்கப்படவோ, தயங்கவோ கூடாது. உனது அண்ணனை எனது நண்பன் இறக்குந் தறுவாயில் கூறிய அந்தக் கடைசி வார்த்தையைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகத் தான் உன்னை நான் படிக்கவைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீயோ என்னிடம் வந்து பணங் கேட்பதற்குத் தயங்குவதென்றால்.........'' இதைக் கூறும்போது சபேசனின் நா தழுதழுத்தது. சேட் பாக்கெட்டிலிருந்த பணத்தையெடுத்து நீட்டினான். அவள் பெற்றுக் கொண்டாள்.

''கௌரி, கௌரி! அதோ அந்தப் பொதுவறையில் நிற்பது யார் யாரென்று பார்த்தாயா? இது தான் சரியான சந்தர்ப்பம். வா, ஒரு கை பார்த்து விடலாம்''

''ஐயா பெரிய கொடை வள்ளல், எம். ஜி ஆருக்குப் பிறந்திருக்க வேண்டியவர். ஆனால் இப்போதேபிறந்துவிட்டார்.''

''இவர் சாதாரண கொடை வள்ளல் என்று நினைத்து விடாதே கௌரி! பொதுவாக நாம் பொன் கொடை, மண் கொடை வழங்கியவர்களைப் பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இவர் பெரிய பெண் கொடை, அதாவது பெண்களுக்கு கொடை வழங்குபவர்.''

''பெண்களுக்குக் கொடுப்பதில் தவறில்லையே உஷா, ஆனால் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு அதற்குப் பலனையும் எதிர்பார்த்தால்............?''

''நிறுத்து'' - பாமா என்ற பெண் புலி சீறிப் பாய்ந்தது. விக்கித்து நின்றனர் அனைவரும். ஆனால் சபேசனிடம் எவ்வித மாறுதலும் இல்லை. அமைதியாக அவதானித்துக் கொண்டிருந்தான் அவன்.

''நானுந்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னவோ உன் போக்கில் பேசிக் கொண்டே போகிறாய். நீ நினைப்பதையெல்லாம் பேசி விடலாம் என்ற நினைப்போ? அகங்காரம் பிடித்தவளே! வார்த்தைகளை அளந்து பேசு! சபேசனைப் பற்றி இவ்வாறெல்லாம் பேசுவதற்கு உனக்கு என்ன அருகதையுண்டு? சபேசனைப் பற்றி நீ சரிவர அறியவில்லை. இவ்வளவு காலமாக நான் அவரிடம் உதவி பெற்று வந்த போதும் அவர் எனது வீட்டிற்கு வந்ததுமில்லை. என்னைத் தனது வீட்டிற்கு வருமாறு நிர்ப்பந்தித்ததுமில்லை. எனக்குத் தேவையானதை நான் வாங்கிக்கொள்வது கூட இந்தப் பொது வறையில் தான். எனது அண்ணனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகவே அவர் எனக்கு உதவி வருகிறார். அவரது அன்பான செயலை, சொற்களை மீற முடியாத நிலையிலேயே நானும் அவரிடம் உதவிபெற்று வருகிறேன். அவர் எனக்கும் என்போன்ற பலர்க்கும் உதவுவதைக் கண்டு நீ உனது நிலையில், உனது மனக்கண்ணூடாக உன்னைப் போலவே அவரையும் நினைக்கிறாய். ஆனால் இது உன் தவறல்ல. உனது வர்க்கத்தின் சுபாவமே இப்படித்தான். அதிஷ்டவசமாக ஓரிருவர் மாத்திரமே அந்த வர்க்கத்தின் கறை படிந்த கரங்களினின்றுந் தப்பித்துக் கொள்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் சபேசன். ஆனால் அவர் சாதாரணமாக எல்லா ஆண்களுடனும் பெண்களுடனும் பழகுவது போலவே உன்னுடனும் பழகுவதைப் பார்த்து நீ அவர் உன்னைக் காதலிப்பதாக எண்ணி அதனால் கர்வமும் தற்பெருமையும் மீதூரப்பெற்று என்ன பேசுகிறோம் என்பதே தெரியாமல் பிதற்றுகிறாய். உன்னைப் பார்த்து நான் அனுதாபப்படுகிறேன் கௌரி, பரிதாபப்படுகிறேன்.

இடி இடித்து ஓய்ந்தது. ஆனால் மழை பெய்யவில்லை. குற்றஞ் செய்து விட்ட உணர்ச்சியால் உடம்பு கூனிக் குறுக, அமைதியாக நடந்து செல்லும் அந்த இருவரையும் பரிதாபமாகப் பார்த்தபடி பரிதவித்து நின்றாள் அந்தப் பேதைப் பெண்.

து. கணேஸ்வரன்
பல்கலைக்கழக புகுமுக வகுப்பு
( கலைப்பிரிவு 2 ஆம் வருடம் )

---

சூதாடலானது ஒன்றினை முன் பெற்று இன்னும் பெறுவேன் என்னும் கருத்தால் நூறினை இழந்து வறியன் ஆதற்கு ஏதுவாம். ஆதலால் அதனை ஒருபொழுதும் நினைத்தலும் செய்யாதொழி.

— ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயெஸ் கால்வாய்

வர்த்தகம் தற்காலத்தில் முன்னெப் பொழுதுமில்லாத வகையில் வளர்ச்சிய டைந்துள்ளது. அதிக நிறையினையுடைய பொருட்களை கடல் மார்க்கமாகக் கொண்டு செல்வது இலகுவானது மட்டு மன்றிச் செலவுச் சிக்கனமுடையதுமொன் ருகும். எனவே மேற்கத்திய நாடுகளில் இருந்து கீழைத் தேசங்களுக்குச் செல்லும் கப்பல்கள் யாவும் மத்தியதரைக் கடலினூ டாகச் செங்கடலை அடைவதற்கு ஓர் கால் வாய் அவசியம் வேண்டியிருந்தது. 15-ம் நூற்ருண்டில் போர்த்துக்கேய மாலுமி யான வஸ்கொடகாமா என்பவன் நன்னம்பிக்கை முனையைச் சுற்றியே கீழைத் தேசங்களில் ஒன்ருன இந்தியாவை அடைந்தான். 19ம் நூற்ருண்டின் நடுக் கூற்றிலும் கூட அனேக நாடுகளால் முன் கூறப்பட்ட பாதையே கீழைத் தேசங்க ளுக்குச் செல்வதற்குப் பயன்பட்டது. ஆனுல், இப் பாதையானது அதிக காலதா மதத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் செலவுகூடியனவாயும் இருக்கின்றபடியி ஞல் வெகுசீக்கரம் கீழைத் தேசங்களை யடைவதற்கு மத்தியதரைக் கடல் வழியா கச் செங்கடல் வரையும் ஓர் கால்வாய் அமைக்க வேண்டியது நிச்சயமானதுடன் அவ்வேலை 1869-ம் ஆண்டு பெரும் வெற்றி யும் அளித்தது.

சுயேஸ்கால்வாய் மத்திய தரைக்கடலை யும் செங்கடலையும் இணைக்கும் ஒன்ருகும். இடையில் டிம்சா, கிறேற்பிட்டர் என் னும் இரு ஏரிகள் உண்டு. கப்பல்கள் இவ்வேரிகளில் தங்கிச் செல்லுகின்றன. பஞமாக் கால்வாயைப் போன்று இதுவும் பல கப்பல் வழிகள் ஒருங்கு சேரும் இடமாயமைந்துள்ளது. சுயேஸ் பூசந்தி யின் குறுக்கே வெட்டப்பட்ட இக்கால் வாய் போட் செட்டையும் செங்கடலில் வடமுனையில் அமைந்துள்ள சுயெசையும் இணைக்கின்றது. சுயேஸ்கால்வாய் சம்பந் தமாகப் போட்செட் துறைமுகம் மிகவும் முக்கியம் வாய்ந்த வொன்ருகும். இத் துறைமுகம் செங்கடலையடையும் சுயெஸ் கால்வாய்க்கு மத்தியதரைக் கடலிலுள்ள ஓர் திறவுகோலாய் இருப்பதோடு எகிப் தினதும் கெய்ரோவினதும் முக்கிய துறைப் பட்டினமாகவும் விளங்குகின்றது. சுயேஸ் கால்வாயை நிர்வகிப்பவர்களினுடைய அலுவலகமும், கலங்கரை விளக்கமொன் றும், இக்கால்வாயை வெட்டிமுடித்த பேடினந்து டீ லெசெப்ஸ் என்பவரினு டைய உருவச் சிலையும் இந் நகரிலேயே அமைக்கப்பட்டுள்ளது. எனினும் இச் சிலை 1956-ல் அழிக்கப்பட்டது.

இக்கால்வாய் பூர்த்தியானதால் பல ஞய் ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கு மிடையேயுள்ள கடலின் தூரம் குறை வானது மட்டுமன்றி, கொழும்புக்கு இலி வர் பூலிலிருந்து நன்னம்பிக்கை வழியி னூடு செல்வதிலும் ஏறக்குறைய 3,500 மைல்கள் குறைந்தன எனவும் கணக்கிடப் பட்டுள்ளது. ஆயினும், அவுத்திரேலியா விற்கு இலிவர்பூலிலிருந்து செல்ல வேண் டுமாயின் சுயெஸ்பாதையைவிட நன்னம் பிக்கைவழியே ஏற்றதொன்ருகும்.

மத்தியதரைக் கடலினூடாக வாணி கத் தொடர்பும் கப்பல் போக்குவரத்தும் ஆதிகாலம் தொடக்கம் கீழைத் தேசங்க ளுடன் நடைபெற்றனவென்பதை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்திய சரித்திரத்தின் வாயிலாக அறியக்கிடக்கின்றது. அக் காலத்தில் செங்கடலையும் நைல்நதியையும் இணைக்கும் பரோக்கள்கால்வாய் (Canal of Pharoohs) ஒன்று இருந்தது. ஆனால் இது கலிலியால் அழிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அகாபாக் குடாவழியாகவும் ஓர் கால்வாய் அமைக்கத் திட்டமிட்டனர். ஆனால், அது நிறைவேறவில்லை. அதன் பின்பு முகமது அலி என்பவர் எகிப்தின் வைசிராயாக இருந்த காலத்தில் பிரான்சிய தூதுவரான லெசெப்ஸ் என்பவர், செங்கடலையும் மத்திய தரைக் கடலையும் இணைக்கும் சுயெஸ்கால்வாயை அமைக்கும் திட்டத்தை வெளியிட்டார். அதற்கு எவரும் ஆதரவளிக்கவில்லையாதலால் அவரது நண்பன் முகமது சாயீது பதவிக்கு வந்ததும் அவரிடம் இத் திட்டத்தைச் செயல்படுத்த அங்கீகாரம்பெற்றார். இத் திட்டத்தை பிரித்தானிய பிரபுவாயிருந்தவரும், வெளிநாட்டுக்காரிய தரிசியுமாயிருந்தவருமான பாம்ஸ்ரன் எதிர்த்த போதிலும் அதிக பலன் இத் திட்டத்தினால் பெற்றது பிரித்தானியா வென்றால் மிகையாகாது.

சுயெஸ்கால்வாய் அமைக்கும் வேலையை 1859ல் டீ லெசெப்ஸ் தொடங்கினார். 103 மைல் நீளமுள்ள இக்கால்வாய் 1869-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம்திகதி போக்குவரவுக்காகத் திறந்து விடப்பட்டது. இக்கால்வாயை சமாதான காலத்திலும், யுத்த காலங்களிலும் எல்லா நாடுகளும் சுதந்திரமான முறையில் உபயோகிக்கக் கூடிய வகையில் 1888-ல் சர்வதேச உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்து. 1956-ம் ஆண்டு அது எகிப்தினது உடமையாக்கப்பட்டபொழுது பிரான்சும், இங்கிலாந்தும் மத்திய தரைக் கடலில் தமது செல்வாக்குக் குன்றிப் போய்விடும் என அஞ்சியமையால் படைவலிகொண்டு கைப்பற்றவும், ஐக்கியநாடுகள் தாபனம் தலையிட்டு யுத்தத்தின்போது ஆழ்த்தப்பட்ட கப்பல்களைமீட்டு 1957-ல் திரும்பவும் போக்குவரவுக்காகத் திறந்து வைத்தது.

இக்கால்வாய் தோண்டிய காலத்தில் சிறு கப்பல்கள்தான் செல்லக்கூடியதாயிருந்தது. அப்பொழுது கால்வாயின் ஆழம் 26 அடிவரை இருந்தது. இரண்டுமுறை இக் கால்வாய் மண்வாரி (Dredger) கொண்டு ஆழமாக்கப்பட்டது. 1887-ல் இரவிலும் கப்பல்கள் இக்கால்வாயினூடாகச் சென்றன. 36 மணித்தியாலங்கள் பிரயாணத்திற்கு எடுத்தபோதிலும் தற்பொழுது 18 மணித்தியாலங்கள் பிடிக்கின்றது. அதை நிர்வகிப்பதற்கென ஓர் சபை நியமிக்கப்பட்டு இக் கால்வாயினூடு செல்லும் கப்பல்களை வழிப்படுத்தும் (Convoy System) முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்பொழுது இக்கால்வாயை வரலாற்று ரீதியில் நோக்கும்பொழுது பெரும் பிரச்சினைக்குரிய தொன்றாயுள்ளது. இஸ்ரேல் அரபுநாடுகளுக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் காரணமாக 1967-ம் ஆண்டு ஜூலை முதல், கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களாக இக்கால்வாய் மூடப்பட்டுள்ளது. சில வியாபாரக்கப்பல்கள் நொருங்கி இக்கால்வாயினுள் அமிழ்ந்துள்ளதெனவும் பிரித்தானியாவின் சில வியாபாரக் கப்பல்கள் வெளியே வரமுடியாத நிலையில் உள்ளது எனவும் அறியக்கிடக்கின்றது. இக் கால்வாய் மூடப்பட்டு இருக்கின்றபடியினால் வியாபாரத்திலே பெரும்பாலும் தங்கியிருக்கும் மேற்கத்திய நாடுகளுக்கு, முக்கியமாகப் பிரித்தானியாவுக்கு அவற்றின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கம் ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அதைவிடக் கீழைத்தேசத்தின் வாசனைச் சரக்குகளோ, ஏனைய உப உணவுப் பொருள்களோ ஐரோப்பிய சந்தையில் அதிக விலையுடையனவாயும் இருக்கும். இவைகளுக்குப் பெரும்பாலும் நன்னம்பிக்கை வழியினூடு தற்பொழுது கப்பல்கள் செல்லுகின்றமை காரணமாயிருக்கலாம். அதாவது இக்கால்வாய் மூடப்பட்டதனால் 1869-ம் ஆண்டுக்குமுன் எங்ஙனம் கீழைத்தேச நாடுகளுடன் வியாபாரப் போக்குவரவு நடைபெற்றனவோ அங்ஙனமே தற்பொழுது நடைபெற்றுவரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இவ்வழியினுல் அதிக காலதாமதமும் செலவு மேற்படுமென்பதில் ஐயமில்லை. ஐக்கிய நாடுகள் தாபனம் இதில் தலையிட்டு நிலையைச் சமாளிக்க முற்பட்ட பொழுதிலும் நிலைமை சீரடையவில்லை.

இக்கால்வாய் கட்டப்பட்ட பின்பு இரு பெரிய உலக யுத்தங்கள் நடைபெற்றன. தற்பொழுது அது மூடப்பட்டிருப்பினும் இக்கொடிய இரு யுத்தங்களிலும் அது அழிவடையாது இருக்கின்றமை வியப்பிற்குரிய தொன்ருகும்.

இ. பத்மநாதன்
பல்கலைக்கழக புகுமுகவகுப்பு
(கலைப்பிரிவு - 2-ம் வருடம்)

# இதயத்திலிருந்து.........

சங்கரன் ஆபீசுக்குச் சென்றுவிட்டான். சுஜாவும் பாடசாலைக்குச் சென்றுவிட்டாள். காலைப்பொழுது நடக்கவேண்டிய வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன. மதிய உணவு எப்படித் தயாரிக்கவேண்டும் என்று வேலைக்காரிக்குச் சொல்லிவிட்டு மாடிக்குப் போய் கட்டிலிற் சாய்ந்தாள் மாலா. படுத்தவள் கை தற்செயலாகத் தலையணையின்கீழ்ச் சென்றது. கையில் ஏதோ படுவதுபோல் தோன்றவே அதை வெளியே எடுத்தாள் மாலா. அது இரவு அரைவாசிக்குமேல் பார்த்து விட்டு வைத்த மாலாவின் பழைய டயரிதான். அந்த டயரி பழையதாகி ஐந்து ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆனுலும் ஏனே மாலா அதைவீச மனமில்லாமல் வைத்திருந்தாள்.

இரவு விட்ட இடத்திலிருந்து டயரியைப் புரட்டிப் படிக்கத் தொடங்கினுள். பக்கத்துக்குப் பக்கம் அவள் மனப் பேழையில் இரகசியமாகப் போற்றி வைத்த நினைவுகள் விரிந்து கொண்டிருந்தன. பழைய நினைவுகள் அலைபுரள விரல் டயரியைப் புரட்டிக் கொண்டிருந்தது. திடீரென ஏதோ நினைவு வந்தவளாக டயரியின்மேல் போடப்பட்டிருந்த மேலுறையைக் கழற்றினுள். கூட்டிலிருந்து பறவை பறப்பது போல சுழன்று கவிழ்ந்து வீழ்ந்தது ஒரு புகைப்படம். அதில் இரண்டு வரிகள் கொண்ட ஒரு வாசகம். "என் இதயங் கலந்த மாலாவுக்கு குமரனின் அன்பளிப்பு." படத்தைத் திருப்பினுள் மாலா. பெயருக்கேற்ற உடலமைப்புடன் புன்சிரிப்புத் தவழக் காட்சி கொடுத்தான் குமரன்; அவன் சிரித்துக் கொண்டுதான் இருந்தான். ஆனுல் மாலாவின் முகமோ நிழற் படத்தில் ஆழப் பதிந்த பார்வையில் புதிதாகக் காண்பதே போன்று உருவெடுத்தன நினைவுகள்.

அன்று திங்கட்கிழமை. வழக்கம்போல் அன்று வேலை அதிகம் இருந்தது. அதனுல் வேலைக்களைப்பில் சிறிது தூங்கிவிட்டாள். அதை மனேஜர் கண்டுவிட்டார். வாய்க்கு வந்தபடி ஏதோ தாறுமாருகப் பேசிவிட்டுப் போய்விட்டார். அதனுல் ஏற்பட்ட வெட்கத்தில் தலையைக் கவிழ்த்து வைத்துக் கொண்டாள். எவ்வளவு நேரம் அப்படி இருந்தாளோ அவளுக்கே தெரியாது.

"மிஸ் மாலா!"

திடுக்கிட்டவளாய் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அவன்—அவளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு சீற் தள்ளி வேலை செய்யும் குமரன் தான் — அவளைக் கூப்பிட்டது. இனிமை நிரப்பிய அவனது அழைப்பு அவளை மெய் சிலிர்க்க வைத்தது. சுற்று முற்றும் அப்போது தான் பார்த்தாள். அனைவரும் பிற்பகல் உணவுக்கு எழுந்து போயிருந்தனர். ''மிஸ்மாலா'' வருத்தப்படாதீர்கள். மனேஜர் குணம் தெரிந்தது தானே? அவர் கிடக்கின்றார் நீங்கள் வருத்தப்படாதீர்கள். எல்லாம் சரியாகிவிடும் மாலா'' என்று இனிக்க இனிக்கப் பேசினான் குமரன். மாலாவுக்கு மனேஜர் பேசியதைப் பற்றி இப்போது சிந்தனை இல்லை. தான் வேலைக்குச் சென்று மூன்று மாதங்களாகின்றது. குமரனின் நட்புக்காகத் தான் ஏங்கித்தவித்தும் பலமுறை பேசமுயன்றும் பேசமுடியாமல் போன குமரன் தனக்கு ஆறுதல் கூறியதே சிந்தனையாகவிருந்தது. அவன் பேசப் பேச இன்பத்துடன் கேட்டுக் கொண்டிருக்கலாம் போல அவளுடைய உணர்வு தொழிற்பட்டது. அவனது பேச்சின் அத்தனை இனிமை கண்களை மட்டுமல்ல இதயத்தையும் தடவிச் சுகம் தந்தது.

திரும்பவும் ''நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? எழுந்து முகத்தைத் துடைத்துவிட்டு சாப்பிடுங்கள் மாலா''. என்று தேன் சொட்டும் மொழிகளை அவள் மேற் கொட்டினான் குமரன். அவன் சொல்வதையெல்லாஞ் செய்ய வேண்டும் போலிருந்தது. யந்திரம் போலச் செய்தாள். அன்றிரவு அவள் நித்திரையை விரும்பவும் இல்லை. நித்திரை அவளைத் தொந்தரவு செய்யவும இல்லை.

மறுநாள் ஆபிசில்............

''மிஸ்மாலா இப்போது எல்லாம் சரியாகி விட்டதா? இனிமையாகப் பதிலளிக்க வேண்டுமென்று தான் நினைத்தாள். அவன் பேச்சைத் தொடர்ந்து கேட்கவேண்டும்போல் இருந்தது. வாளாவிருந்தாள். ''ஏன் மிஸ்மாலா, என்னுடன் பேசப்பிடிக்க வில்லையா?'' என்றான். இனியும் பேசாமல் இருப்பது கூடாது என்று தோன்றவே ''இல்லை உங்கள் பேச்சைக் கேட்கவேண்டும் போலிருந்தது. அதனால் பேசாமல் இருந்தேன்'' என்றாள். இப்படி ஆரம்பித்த பேச்சு மெல்ல மெல்ல வளர்ந்தது. காலச் சக்கரம் சுழன்று கொண்டே இருந்தது.

தாய் தந்தையை இழந்த மாலாவுக்கு மாமாதான் எல்லாம். மாமாவின் ஓய்வுக்காலச் சம்பளம் மாலாவுக்கு டைப்பிஸ்ட் வேலை கிடைக்கும் வரைக்கும் உதவியது. மாலா டைப்பிஸ்ட்டாக சேர்ந்ததும் மாலாவுக்கு மாமாவினால் செலவு இருக்கவில்லை.

மாலா குமரனுடன் மனம்விட்டுப் பலதும் கலந்துபேசி வந்தாள். ஒருவரிடம் அளவிலா அன்பு ஏற்பட்டு விட்டால் அவர்கள் மேல் அதிக அக்கறை ஏற்படுவது சகஜந்தானே! அதேபோல மாலாவும் குமரனின் அன்பைப் பெற்றுவிட்டாள். இதயத்தைக் கொடுத்து விட்டாள். ஆனால் ஏனோ அவள் குமரனுடன் பழகியதில் ஒருகுறையைக் கண்டாள். குமரன், தன் குடும்ப விஷயங்களை மாலா அக்கறையாக விசாரிப்பதை விரும்பாதவனாக இருந்தான். இதுவே மாலாவின் குறை. ஆபீஸிலும் பூங்காவிலும் சந்தித்த மாலாவும் குமரனும் பின்னர் மாலாவின் வீட்டிலும் சந்தித்தனர். மாலாவின் மாமா அந்தக்காலத்து மனுஷர் என்றாலும் மாலாவின் மீதுள்ள அளவற்ற வாஞ்சையால் எதையும் தவறாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அக்கம் பக்கத்து வீட்டாரும் மாமாவின் கோணத்தில் இருந்து தானா பார்ப்பார்கள்? கதைகள் பலவிதமாக உருவெடுத்தன. வெள்ளம் பெருக்கெடுக்கு முன்னர் அதற்கு அணைபோட முனைந்தார் மாமனார். முதன் நாள் குமரன் பூங்காவில் வைத்துத் தனக்கு அளித்த புகைப்படத்தைப் பல கோணங்களிலும் இருந்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் மாலா. அவளை மெல்ல அணுகினார் மாமனார்.

''அம்மா மாலா''

''கூப்பிட்டீர்களா மாமா''?

''உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியாது என்று சொல்லுவார்கள். குமரன் இங்குவந்து போவதைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கம் பக்கத்திலுள்ளோர் கதைப்பது உனக்கும் தெரிந்திருக்கும். இனியும் இதை இப்படியே விடுவது அழகல்ல. எனக்குப் பிள்ளையைப் போல இருப்பவள் நீதான். உன் ஆசையையும் நான் நிராகரிக்கவில்லை. குமரனை நாளை பெற்றோருடன் என்னை வந்து பார்க்கச் சொல்லம்மா'' என்று ஒரே மூச்சில் கூறிவிட்டார்.

மாலாவுக்கு இருப்புக்கொள்ளவில்லை. எங்கே தன் எண்ணக் கோட்டைகளைத் தகர்த்து எறிந்து விடுவாரோ எனப் பயந்த மாலா எப்போ விடியும் விடியும் என ஏங்கிக் கொண்டிருந்தாள். இரவு சாப்பாட்டு மேசையில் ஒரு நோக்கமில்லாமலே போயிருந்தாள். ஆனால் அவளுக்கு உண்ணப் பிடிக்கவில்லை. தனிமையாய் உண்ணப் பிடிக்காதது மட்டுமல்ல, இன்னும் என்ன என்னவோ உணர்வுக் கலவைகளின் வண்ண ஜாலங்கள் இதயத்தை அடைத்து நிரப்பிக் கொண்டிருந்தபோது உணவு எங்கே இறங்க முடியும்? சாப்பாட்டு மேசையில் இருந்தவள் கட்டிலுக்கு மாறினாள். கண்ணை மூடினாள். உடனே அடுத்த நாள் காலை, தான் குமரனுக்கு மகிழ்ச்சி பொங்கத் திருமண சமாச்சாரத்தைச் சொல்வதும் குமரன் உதடுவிரியச் சிரித்து அவற்றைக் கேட்டுக் கொண்டிருப்பதும் மனக்கண்ணில் தோன்றின. கண்ணைத் திறந்தாள் கட்டிலில் கிடந்த குமரனின் புகைப்படம் ஆமோதிப்போல் சிரித்தது. அன்று இராப்பொழுது ஒருவழியாகக் கழிந்து விட்டது. ஆனால் மாலா வழக்கத்துக்கு மாறாக ஐந்துமணிக்கே எழுந்து விட்டாள். அதே வேகத்தில் ஆபிஸ் திறப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முந்தியே சென்று விட்டாள்.

நேரம் பத்து மணியாகிவிட்டது. ஆனால் மாலாவால் குமரன் அன்று வேலைக்கு வராததற்கான காரணத்தைத் தெரிந்துகொள்ளவே முடியவில்லை. ஆபீசில் விசாரித்தபோது அவசர அலுவலாக லீவ் போட்டுச் சென்றதாகச் சொன்னார்கள். வாடிய முகத்துடன் வீடு திரும்பினாள். முன்தினம் இரவு மகிழ்ச்சியால் சாப்பிடப் பிடிக்கவில்லை. ஆனால் இன்றோ சாப்பாட்டைப் பற்றி நினைக்கவும் தோன்றவில்லை. மறு நாள் ஆபீசுக்கு ஆவலுடன் சென்றாள். அன்றும் குமரன் வரவில்லை.

மறுநாள்.

அன்றும் வரவில்லை.

இல்லாத எண்ணங்களையும் கனவுகளையும் கற்பனை பண்ணத் தொடங்கினாள் மாலா. அப்போதுதான் தான் குமரனிடம் பல விஷயங்கள் பற்றிக் கேட்காமல் விட்டதன் பலன் புரிந்தது.

அவர்கள் இருவரும் இணைந்து இதயத்தோடு இதயம் பேசிய சந்தர்ப்பங்கள் பல. அதில் ஒரு சந்தர்ப்பத்தில் கூட குமரன் தன்னைப்பற்றி அதிகம் மறந்தும் சொன்னதில்லை. அவளும் கேட்கவில்லைத்தான். ஆனாலும் அவன் கூறியிருக்கலாமே என்கிற நினைப்பு அவளுக்கு. அதுவுமல்லாமல் குமரனிடம் அவனது சொந்த இடத்தைப்பற்றி விசாரிக்காமல் போனது அவளது தவறாகவேபட்டது. குமரன் ஆபீசுக்கு வராமல்விட்டு இன்றுடன் மூன்று நாட்களாகிவிட்டன. மாலாவும் தன்னாலானதைச் செய்து பார்த்துவிட்டாள். அன்று பின்னேரம் ஆபீஸ் விட்டு பஸ்சுக்காகக் காத்து நின்றபொழுது அவளது தோழி சசீ ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள். சசிக்கு ஓரளவு குமரன் மாலாவின் காதல் தெரிந்திருந்தது. குமரனுக்குத் திருமண ஏற்பாடு நடப்பதாயும் குமரன் தலைமைக் காரியாலயத்துக்கு மாற்றலாகிப் போகப்போவதாயும் சொன்னாள்.

இந்தச் செய்தி மாலாவுக்கு பேரிடியாக விழுந்தாலும் குமரனை எப்படியும் ஒரு முறை சந்திக்க வேண்டுமெனத் திடமாக இருந்தாள்.

மறுநாள் ஆபிசுக்கு மாலா வந்தபொழுது அவளுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. குமரன் பழைய புன்சிரிப்புத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவழும் முகத்துடன் அவனை வரவேற்ருள். சுழல்காற்றினுல் உந்தப்பட்ட அவளது எண்ண அலை பொங்கி எழுந்தது. அன்று பத்து மணிக்குள் சொல்லவேண்டிய எல்லாவற்றையும் சொல்லி முடித்துவிட்டாள். குமரனும் சம்மதம் தெரிவித்து விட்டான். அந்த மாதம் பதினெட்டாம் திகதி பகல் பன்னிரண்டு மணிக்குத் தன் பெற்றேருடன் வருவதாக வாக்களித்துச் சென்ருன்.

அன்று பதினெட்டாம் திகதி. மாலா மாமாவிடம் சொல்லி எல்லா ஏற்பாடும் செய்து வைத்திருந்தாள். சகலவிதமான ஆயத்தங்களும் செய்தாகிவிட்டது. நேரம் பத்தரை மணியாகிவிட்டது. மாலா தன்னை அலங்கரிக்கத் தொடங்கினுள். மாலாவின் வாய் சினிமாப் பாட்டுக்களை முணுமுணுத்தபடியே இருந்தது. அலங்காரத்தை ஒருவழியாக முடித்துக் கொண்டாள். நேரம் பதினென்றரை. இனி மாப்பிளை வீட்டார் வரவேண்டியதுதான் பாக்கி. மாலா இருப்புக் கொள்ளாமல் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தாள்.

நேரம் பன்னிரண்டு மணியாயிற்று.

குமரன் வரவில்லை. அவன் பெற்றேரும் வரவில்லை. பன்னிரண்டேகால். மாலா நம்பிக்கை இழந்தவளாக மாடிக்குச் சென்றுவிட்டாள்.

நேரம் பன்னிரண்டரை.

வாசலில் கார் சத்தம்; மாலா பரக்கப் பரக்க மாடிப்படிகளில் துள்ளிக் குதித் தோடி வந்தாள். வந்தவள்.........

''அம்மா! அம்மா! உங்களைப் பெற்ரேர் தினவிழாவுக்கு வரச் சொல்லி இந்தக் காட்டை மிஸ் தந்தா, அம்மா'' என்று சொல்லிக்கொண்டே தனது ஐந்து வயது மகள் சுஜா காரில் இறங்கி ஓடி வருவதைக் கண்டாள்.

காட்டை வாங்கிப் பார்த்தாள் அதில் ......

''திருமதி மாலா சங்கரனுக்கு என்று விலாசமிடப்பட்டிருந்தது.''

**எஸ். செந்தில்நாதன்**
பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு
கலைப்பிரிவு 2-ம் வருடம்

---

பிறர் உனக்குச் செய்த குற்றங்களினுலே
உனக்குக் கோபம் தோன்றும்பொழுது,
நீ பிறருக்குச் செய்த குற்றங்களை நினைப்பாயாகில்
அது அடங்கிவிடும்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோல்புறூக் விசாரணைக் குழுவின் சிபார்சுகள்

இலங்கையின் நவீனகாலம் 1832ஆம் ஆண்டிலேயே ஏற்பட்டதென கலாநிதி G. C. மெண்டிஸ் கூறுகிறார். ஏனெனில் ஐரோப்பாவில் உதயமாகிய புத்துலகின் பிரதான அம்சங்கள் 1832ஆம் ஆண்டுக்குப் பின்னரே இலங்கையில் ஏற்பட்டன. இலங்கையில் மானியமுறை ஒழிந்ததும், ஆங்கிலக் கல்வி ஏற்பட்டதும், அரசியல் மாற்றம் ஏற்பட்டதும், வர்த்தகம் ஆரம்பித்ததும் இவ்வாண்டிலேயே. இவ்வளவு மாற்றங்களுக்கும் 1829ம் ஆண்டில் பிரித்தானிய அரசாங்கத்தினரால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட கோல்புறூக் விசாரணைக் குழுவினரே காரணமாவர்.

ஆண்டுதோறும் பெருகிவரும் இலங்கை அரசாங்கத்தின் செலவினங்களைக் குறைத்து அதற்கமைய அரசியல், பொருளாதார மாற்றங்களைச் செய்யும் நோக்கத்துடன் இலங்கைக்கு அனுப்பப்பட்ட வில்லியம் கோல்புறூக் என்பவருடன் கமறன் என்பவரும் வந்தார். கமறன் என்பவர் நீதிபரிபாலன சீர்திருத்தங்களுக்காக இலங்கை வந்தார். இவர்கள் 19 ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் இங்கிலாந்தில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூகக் கருத்துக்களையும், அனுபவங்களையும் தம்முடன் கொண்டு வந்தனர். இவை இவர்கள் செய்த சிபார்சுகளில் பிரதிபலிப்பதைக் காணலாம். கோல்புறூக என்பவரும் தேசாதிபதி நோர்த் எண்ணியதைப் போலவே 19ஆம் நூற்றுண்டு இங்கிலாந்திற்குப் பொருத்தமானவை அக்கால இலங்கைக்கும் பொருந்தும் எனக் கருதினார்.

பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியிருந்த பெரிய பிரித்தானியா ஒரே நிர்வாகத்தின் கீழிருந்தது. ஆனல் இலங்கையைப் பொறுத்தமட்டிலோ கண்டிப் பிரதேசத்தில் ஒருவித நிர்வாகமும், கரையோரப் பிரதேசங்களில் வேறுவித நிர்வாகமும் நிலவியதைக் கண்ட கோல்புறூக் இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் பரிபாலிக்கவேண்டுமென்று சிபார்சு செய்தார்.

மேலும் அக்காலத்தில் இலங்கை பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது அதிக செலவுக்கிடமாய் இருந்ததை அறிந்த கோல்புறூக் அவற்றை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தார். இவ்வாறு செய்தமை தேசிய இன ஒற்றுமைக்கு வழிவகுத்ததெனினும், பின்தங்கிய கண்டி விவசாயிகள் கண்டியரல்லாதாரின் பொருளாதாரச் சுரண்டலுக்குப் பலியாக நேரிட்டது. கண்டியரல்லாதோர் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு கண்டிப் பகுதியில் குடியேறத் தொடங்கியமையால், பல தலைமுறைகளாகத் தாங்கள் வைத்திருந்த நிலங்களையும் கண்டி விவசாயிகள் இழக்க நேரிட்டது.

பல பிரிவுகளாக இருந்த இலங்கை ஐந்து மகாணங்களாகக் குறைக்கப்பட்டதும், ஒவ்வொரு மாகாணமும் பரந்த விஸ்தீரணமுள்ள மாகாணங்களாக மாறின. இதனல் மாகாண அதிபர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மாகாண மக்களுடன் கிரமமாக நேரடித் தொடர்பு கொள்ள முடியாது போயிற்று. அன்றியும் முன்னர் கண்டிப் பிரதேசத்துடன் இணைந்திருந்த பிரதேசங்கள் பிற மாகாணங்களுடன் இணைக்கப்பட்டன. உதாரணமாக நுவரகலாவியா, தம்பன் கடவைப் பகுதிகள் யாழ்ப்பாண மாகாணத்துடன் இணைக்கப்பட்டன. இதனால் கண்டிப் பகுதி விவசாயிகள் சமூக பொருளாதார நிலைமை மோசமடைய ஆரம்பித்தது.

இக்காலத்தில் பாராளுமன்ற அரசியல் இங்கிலாந்தில் வளர்ந்து வந்ததுடன் சர்வசன வாக்குரிமைக் கிளர்ச்சியும் நடைபெற்றது. ஆனால் இலங்கையில் தனியொரு தேசாதிபதிக்குப் பல அதிகாரங்கள் இருந்தன. எனவே கோல்புறூக் அவரது அதிகாரங்களைக் குறைத்தார். அத்துடன் தேசாதிபதியும் தேசத்தின் சட்டத்திற்கு உட்பட்டவராக்கப்பட்டார்.

மேலும் இலங்கைக்கு ஒரு சட்ட நிரூபண சபையையும், நிர்வாக சபையையும் சிபார்சு செய்தார். சட்ட நிரூபண சபை ஒன்பது உத்தியோகப் பற்றுள்ளவரையும், ஆறு நியமன உத்தியோகப் பற்றற்றவர்களையும் கொண்டிருந்தது. ஆறு நியமன அங்கத்தவர்களுள் மூன்று ஐரோப்பியரும், ஒரு தமிழரும், ஒரு சிங்களவரும், ஒரு பறங்கியரும் அங்கம் வகித்தனர். சட்ட நிருவாக சபை தேசாதிபதியின் தலைமையில் ஐந்து உறுப்பினரைக் கொண்டதாயமைந்தது. இச்சபை தேசாதிபதிக்கு ஆலோசனை கூறும் சபையாக இருந்தது. முரண்படுமிடத்தில் குடியேற்றநாட்டு மந்திரிக்கு விபரமாக அறிவித்துவிட்டு நிருவாகசபையின் ஆலோசனைகளை நிராகரிக்கவும் தேசாதிபதிக்கு உரிமையிருந்தது. இச்சபைகள் நிறுவப்பட்டமை ஒரு புரட்சிகரமான மாற்றம் அல்லவெனினும், பிற்காலத்தில் ஒரு பாராளுமன்றம் இலங்கையில் உருவாவதற்கு இவை விதைகளாக அமைந்தன என்பது மறுப்பதற்கில்லை.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பித்து செலவினங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் வந்த கோல்புறூக் விசாரணைக் குழுவினர் சிவில் உத்தியோகப் பகுதியில் சிலவற்றை ஒழித்துச் சிலவற்றைச் சேர்த்து ஒன்றாக்கினர். அன்றியும் சிவில் உத்தியோகத்தரின் சம்பளம் குறைக்கப்பட்டதுடன் அவர்களின் ஓய்வுகால வேதனமும் ஒழிக்கப்பட்டது. இதனால் தகுதிவாய்ந்த பல ஊழியர்கள் சிவில் சேவையை நீங்கிச் சென்றனர். இந்நிலைமையைத் தீர்க்க தரிசனத்துடன் எதிர்பார்த்த கோல்புறூக் இலங்கையரை இப்பதவிகளில் நியமிக்கலாம் என்ற நோக்கத்துடன் ஆங்கிலக் கல்வி ஊட்டுவதற்குப் பாடசாலைகள் அமைக்கப்படல் வேண்டுமென்று சிபார்சு செய்தார். சம்பளக் குறையை ஈடுசெய்யும் நோக்கத்துடன் சிவில் உத்தியோகத்தர்கள் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டது. இதன் பயனாகச் சிவில் உத்தியோகத்தர்கள் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனரேயன்றி தமது கடமைகளில் அதிக சிரத்தை எடுக்கவில்லை.

சுதந்திர வர்த்தகக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்ட கோல்புறூக் அரசாங்கத்திற்குக் கறுவாவிலும், சாராயத்திலும் இருந்த ஏகபோக உரிமையை நீக்கினர். 1807 இல் இங்கிலாந்தில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டது. இராஜகாரிய முறையும் ஏறக்குறைய அடிமை முறையாக இருந்ததால் அதை ஒழிக்கச் சிபார்சு செய்தார். மானியமுறை ஆட்சியும், சாதிக்கட்டுப்பாடும் தொடர்ந்து நடைபெறுவதற்குச் சட்டபூர்வமான அனுமதி கொடுத்தது இம்முறையே. அரசாங்க ஏகபோக உரிமையும், இராஜகாரிய முறையும் ஒழிக்கப்பட்டதால் இலங்கையில் தனியார்துறைத் தோட்டப் பயிர்ச்செய்கையும், வர்த்தகமும் அபிவிருத்தி அடைந்து நாட்டின் பொருளாதார வளத்திற்கு அடிகோலியது.

கிராம மக்களின் தகராறுகளை நீக்கி, அவர்களிடம் வரி வசூலித்து, சிறு குற்றவாளிகளைத் தண்டித்து, பல நூற்றாண்டுகளாகக் கிராம மக்களின் நல்வாழ்விற்கு ஆதாரமாக இருந்துவந்த கிராமச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் நீதிபரிபாலன அதிகாரங்களைக் கமறன் நீக்கிவிட்டார். கிராமச் சபைகள் இராஜகாரிய முறையிலே மக்களிடம் வேலைவாங்கியமை கமறனுக்குத் தவருகப் பட்டது.

இப் பல்வேறு தரப்பட்ட மாற்றங்களினுல் கிராமப்புற விவசாயிகளும், பொதுவாகப் பொதுமக்களும் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டனர். இதன் எதிரொலியே 1848 ஆம் ஆண்டுக் கலவரமாகும். கோல்புறூக்கின் மாற்றங்கள் சிறந்தவையாக நிறைவுபெருவிட்டாலும், பின்னேற்பட்ட மாற்றங்கட் கெல்லாம் முன்னேடியாக இருந்ததென்பது மறுக்க இயலாததாகும். ஆங்கிலக் கல்வி இலங்கையில் புகுத்தப்பட்ட காரணத்தினுல் மத்திய வகுப்பினர் உருவாகி நாட்டின் சுதந்திரத்திற்கு வழி கோலினர். தேசாதிபதியிடமிருந்து நீதி சம்பந்தமான அதிகாரங்கள் நீக்கப்பட்டமையால் இலங்கையில் முதன்முதலாக சட்டவாட்சி, வலுவேருக்கம், மக்களது தனியுரிமைகள் ஆகியன நிலைநாட்டப்பட்டன. ஆகவே கோல்புறூக் விசாரணைக் குழுவின் சிபார்சுகள் இலங்கையில் பல துறைகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தினவென்று கூறுதல் மிகையான கூற்றன்று.

ச. சத்தியசீலன்
பல்கலைக்கழக புகுமுகவகுப்பு
கலைப்பிரிவு - இறுதிவருடம்

---

# கதை எழுத எண்ணினேன்.........!

இந்து இளைஞன்—'68 இற்கு ஒரு கதை எழுதவேண்டும் என்று எனக்கு அவா ஏற்பட்டது. பலர் "கதை எழுதுகிறேன்" என்று கண்டதையெல்லாம் -தவறு தவறு- மனத்தில் தோன்றியதை யெல்லாம் கிறுக்கும்போது நாமும் எழுதினுல் என்ன என்ற யோசனையே இவ் அவாவிற்குக் காரணம். எப்படிப்பட்ட கதை எழுதலாம் என்று யோசித்தேன். கற்பனை ஓடாததால் "ஒரு படம் பார்த்துவிட்டு வருவோம்" என்றெண்ணிப் படமாளிகைக்கு - சட்! பிழை வந்துவிட்டதே. யாழ்ப்பாணத்திலாவது படமாளிகையாவது - படக்கொட்டிலுக்குச் சென்றேன். அங்கு "வெகு விரைவில் திரும்பிப் பார்" என்றிருந்தது. சடாரென்று திரும்பினேன்; தேங்காய் துருவும் துருவுபலகையின் பல் இருக்கிறதே! அவ்வாறு வெளியே நீண்டிருந்த பற்களை உடைய ஒரு பாவி என் பின்பே வாயைத் திறந்துகொண்டு நின்றிருந்தான். இ. போ. ச. வின் கியூவரிசை இடிகூட இவ்வளவு வலிக்காது! அவ்வளவு வலி. அந்தப் பாவியின் பல் பட்டதால் எனக்கு ஏற்பட்டது! அப்புறமும் அங்கு நின்ருல் எனது உடலில் ஒரு சொட்டு இரத்தமும் மிஞ்சியிராது!

சினிமாக் கொட்டிலில் அடைபட்டதாலோ என்னவோ கற்பனைக்குதிரை திடீரென ஓட ஆரம்பித்தது. காதல் கதை, சரித்திரக் கதை, நகைச்சுவைக் கதை, மர்மக் கதை, வருங்காலக் கதை என்று பல ரகமான கதைகள் உள்ளன. நான் முதலில் தேர்ந்தெடுத்தது மர்மக் கதை. மர்மக் கதை என்ருல் நிச்சயம் ஒரு கொலை நிகழவேண்டும். (கொலையில்லாமல் மர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக் கதையா என்பது புதுமொழி) கொலை நிகழ்வதாயின் ஒரு சண்டை வர வேண்டும். சும்மா வாய்ச்சண்டை வந்து அது கொலையாக மாறினால் அது நவீனமாயிராமல் பத்தாம் பசலிக் கதையாகி விடும். நவீனமாக வேண்டுமாயின் ஒரு கொள்ளை நிகழ்ந்து அதில் சண்டை உருவாகவேண்டும். (இதுமட்டும் நவீனமா என்று கேளாதீர்கள். நவீனமாக எழுத நான் என்ன பெரிய எழுத்தாளனா?) சரி! கொள்ளை நிகழ்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். கொள்ளை என்றால் என்ன சாக்கடையிலா நடைபெறும்? ஒரு வங்கியிலேயோ அல்லது கடையிலேயோ அல்லது மாளிகையிலேயோ அல்லவா நிகழவேண்டும்! கடையென்றால் வெறும் சோற்றுக்கடையல்ல. நகை முதலிய விலை உயர்ந்த பொருட்கள் விற்கப்படும் கடையாகவும் இருக்கவேண்டும். முதலில் வங்கியை எடுத்துக்கொள்வோம். வங்கி என்றால் தெருவால் வருகிற போகிறவர்களை எல்லாம் வாய் நிறைய ''வாங்க வாங்க'' என்று அழைக்கும் சிப்பந்திகளா வாசலில் நிற்பவர்கள்? துப்பாக்கிபோன்ற ஆயுதங்களைத் தரித்த காவலாளிகளல்லவா நிற்பார்கள்! அவர்களும் சும்மா பல்லை இளித்துக்கொண்டு தூங்கி வழியாமல் விழிப்புடன் இருப்பார்களே! அவர்களையெல்லாம் சமாளித்துச் கொள்ளையடிக்கும் திறமை படைத்த கொள்ளைக்காரர்களைப் பாத்திரமாக (சமையற் பாத்திரமல்ல கதாபாத்திரம்) வைத்துக் கதையெழுத நானென்ன பெரிய எழுத்தாளனா? சரி! கொள்ளை கடையில் நிகழட்டும்! அக் கடையின் முகவரி இடம்பெறவில்லையே என்ற வாசகரின் அங்கலாய்ப்பைத் தீர்க்க ஒரு கற்பனை முகவரி எழுதினால் தாங்கமாட்டார்கள். சரி! உண்மையாக உள்ள ஒரு கடையின் முகவரியை எழுதினால் உடனே அக் கடைக்காரர் வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு வந்துவிடுவார். ''ஓய்! நீர் என்னங்காணும் கதையா எழுதுகிறீர்? எனது கடையில் திருட்டு நடந்ததாக எழுதி, இப்போது எனது கடையின் பங்குதாரர்களெல்லாம் வந்து 'பங்கைப் பிரித்துக் கொடு, பங்கைப் பிரித்துக் கொடு, பிரித்துக் கொடு, கொடு, கொடு' என்று என் உயிரை உடலிலிருந்துபிரிக்கிறார்களே'' என்பார் சரிதான்: கொள்ளை நடந்த ஒரு கடையின் முகவரியையே உபயோகித்தால் உடனே அக் கடையின் உரிமையாளர் வந்து ''ஓய் மிஸ்டர்! கதை எழுதும் பெரிய மனிதரே! கடையில் களவுபோன கவலையைச் சற்று மறந்திருக்கும் இவ்வேளையில் நீர் பழைய கதையைக் கிளறுகிறீரே! மேலும் இப்படிப் பண்ணினீரோ, அப்புறம் உமது உடம்பைக் கிளறினாலும் உமது எலும்புகள் கிடைக்காது, ஜாக்கிரதை'' என்பார்.

மாளிகைக் கொள்ளைச் சங்கதியும் இவ்வாறே. 'நமக்கேன் வீண் வம்பு' என்று மர்மக் கதை யோசனையை மெதுவாகக் கைவிட்டேன், (திடீரென விட்டால் அப்புறம் உடைந்து கிடைந்து மற்றவர்களுக்கு அந்த யோசனை தோன்றாது போய் விடுமே!)

அடுத்தபடியாக அடியேன் தேர்ந்தெடுத்தது நகைச்சுவைக் கதையாகும். என் சொந்தச் சரக்குகளை அலசினேன். வேறென்ன? எல்லாம் வாழைப்பழத் தோலில் சறுக்கும் ஹாஸ்யம்தான். வாழைப்பழத் தோலில் சறுக்குவதும் ஒரு ஹாஸ்யமா என்று நீங்கள் கேட்பீர்களென எனக்கா தெரியாது? நானும் ஒரு வாசகன்தானே! ஆதலால் அதற்குப் பதிலாக மாம்பழத் தோலில் சறுக்கி என்று எழுத எண்ணினேன். அப்புறம் தோலில் என்று தரித்திரம் பிடித்தது போல் எழுதுவானேன், முழுப் பலாப்பழத்தில் என்றெழுதுவோமே! என்றெண்ணினேன். ஆனால் பலாப்பழம் சறுக்குமா என்று ஒரு கேள்வி மனத்தில் எழுந்தது. பரீட்சிக்க எண்ணி ஒரு பலாப்பழத்தை நிலத்தில் வைத்துவிட்டுச் சிறிது தூரம் பின்சென்று ஓடிவந்து பலாப்பழத்தில் காலை வைத்தேன். பரிசோதனை பாதி வெற்றி!

ஆம்! விழுந்தேன். ஆனால் பலாப்பழம் சறுக்கியல்ல; உருண்டு! அத்துடன் நான் தனியே விழவில்லை; எனது பற்களில் மூன்று, நான்கும்தான். இதனால் நகைச் சுவைக் கதை எழுதுவது கைவிடவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற்று! ஏன் என்று கேட்கிறீர்களா? நான் என் நகைச்சுவைக் கதையைத் தனியே வாசிக்கும்போது சிரிக்கவேண்டிய தில்லே. ஆனுல் பலர் முன்னிலேயில் வாசிக்கும்போது சிரித்துத் தொலேக்க வேண்டி இருக்கிறதே, சுய கௌரவத்திற் காக! அப்படிச் சிரித்தால் எனது மானம் அப்போலோ - எட்டிலோ ஒன்பதிலோ சவாரி செய்துவிடும். ஏனெனில் முன் வரிசைப் பற்கள் அபேஸ்!

அடுத்தபடியாக உள்ளது சோகக் கதை. நான் ஏதாவது சோகக் கதையை வாசித்தாலே இரு தினங்களுக்குச் சிவராத் திரி. அப்படியானவன் சோகத்தை எழு தினுல்! சரி, அப்படித்தான் இரு இரவுக ளுக்குச் சிவராத்திரி கொண்டாடிப் படிக்க லாமே என்றெண்ணிச் சோகத்தை எழுதி ஞல் அதை வாசிப்பவர்கள் கண்ணீர் வடிப்பார்கள். சோக ரஸத்திஞல் அழ மாட்டார்கள்!

ஐயகோ! பாவம். இக் கதையைச் சோகக் கதை என்று நினேத்து எழுதியவ னுக்குப் பைத்தியமாக்கும். இவ் வயதில் இப்படியாகிவிட்டானே'' என் றெண்ணி அநுதாபக் கண்ணீர் வடிப்பார்கள். அல் லது ''இதையும் ஒரு சோகக் கதை என்று நாங்கள் படிக்க வேண்டியிருக்கிறதே. நம் தலே யெழுத்து'' என்ற சுயஅநுதாபமாக இருக்கும். இவற்றை யெல்லாம் தூக்கி யடிக்கும் காரணம் இதோ. ''அழுதால் தான் கண்ணீர் வரும் என்பதில்லே சிரித் தாலும் வரும்'' என்பதே அது. ஆத லால் சோகக் கதைக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

அடுத்தது சரித்திரக் கதை. இதற்கு ஒரு பெரிய பிரச்னேயாக இருப்பது ஆதா ரம் என்பதுதான். அதன் காலே அதற்கு ஆதாரம் என்று எழுதிஞல் அப்புறம் எனக்கு ஒரு ஆதாரமும் இருக்காது என் பதால் சரித்திரக் கதை யோசனே அதி கம் யோசிக்காமல் கைவிடப்பட்டது. அடுத்தது வருங்காலக்கதை. வருங்காலத் தைப்பற்றி அது இது என்று கற்பனே செய்துதானே எழுத வேண்டும்? சரி, நான் அப்படி எழுதிய காகிதம் எனது கதை நடைபெறும் காலத்தில் கூடக் கெடாமல் இருந்து, அந்தக் காலத்தில் நான் கற்பனே செய்தது நடக்காமல் இருந்து, அக்காலத்துப் பயல் எவனுவது அதை வாசித்துத் தொலேத்தால், அப் புறம் வேறுலகில் இருக்கும் எனக்குப் பல வசவுகளும் திட்டுகளுமே கிடைக்குமே. அதிலும் வருங்காலத் திட்டுகள் எவ்வளவு கர்ண கடூரமாக இருக்குமோ யாரறிவார். (வருங்கால வாசிகளுக்கு ஒரு வார்த்தை. உங்கள் காலத்தில் திட்டுகள் மிகவும் சாந்தமாயிருந்தால் தயவு செய்து என்னே மன்னிக்கவும்) ஆகவே வருங்காலக் கதைக்கும் அரோஹரா!

இனி எஞ்சியுள்ளது காதல் கதை. இதற்கு ஒரு கதாநாயகனும், நாயகியும் வேண்டும். இவர்களில் ஒருவர் இல்லா விட்டாலும் பரவாயில்லே. ஆனுல் ஒரு வில்லன் கண்டிப்பாக இருந்தாகவேண்டும். இல்லேயேல் அக்கதையை ஒருவரும் படிக்க மாட்டார்கள். (வில்லனில்லாக் காதல் கதை படிக்க வேண்டாம் — என்று புலவர் ஔவையார் பாடினதாகக் கேள்வி. கேள்வியே ஒழிய உறுதியல்ல) நாயகன், நாயகி, வில்லன் ஆகியோர் இருந்து விட்டால் மட்டும் கதை எழுத முடியாது. அவர்களுக்குத் திருநாமங்கள் சூட்ட வேண்டுமே! கதாநாயகனுக்கும், நாயகிக் கும் சுலபமாகப் பெயர்கள் வைக்கலாம். வில்லனுக்கும் பெயர் வைக்கவேண்டும். அவனுக்கு (அவள் என்று எழுதுவதற்காக வில்லன்மார் தம் குறிக்கு என்னே இலக் காக்க மாட்டார்கள் என நினேக்கிறேன்) ஒரு பெயர் சூட்டியதும் அப்பெயரைக் கொண்டோர் தம்மைத்தான் வில்லனுக்குவ தாகக் கூறி ஆட்சேபிப்பார்கள். யாரா வது வைத்துக்கொள்ள முடியாத பெயர் களாக — உதாரணமாக '' சோம்பேறி நாதன், பல்லிளித்தேவன், குரங்குச்சாமி'' என்று பெயர் வைத்தால் வாசகர்கள் ''இப்படி யாராவது பெயர் சூட்டுவார் களா?'' என்று ஆட்சேபக் குரல் எழுப்பு வார்கள் ஆதலால் காதல்கதை முயற்சி யும் கைவிடப்பட்டது. (கால் விடப்பட வில்லே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்சி நின்று என்னைப் பார்த்து இளித்தது. நான் கதை எழுத எடுத்த காகிதம். எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ''இம்முறை ஏதாவது கட்டுரை, கவிதை (அதிலும் உதையோ?) எழுத வேண்டியது தான் என்று எண்ணியபடி நான் தட்டி விட்ட காகிதத்தைத் தொடர்ந்தது சோம்பேறியான ஊற்றுப்பேனு! (ஏய்! ஏய்! ஊற்றுப்பேனு! எங்கே போகிருய்! நில்! உன்னை வைத்துக் கதை எழுதாவிட்டால் என்ன கல்விகூடவா கற்கக்கூடாது! அப்படித்தான்! பல் உடைந்ததா! சொன்னல் கேட்காமல் கீழே விழுந்தாயல்லவா? எனக்கு உதவி செய்யாத சோம்பேறிப் பேனு!)

என். எஸ் கௌரிசங்கர்
பல்கலைக்கழகப் புகுமுகவகுப்பு
முதல் வருடம் - கணிதப்பிரிவு

— — —

# வெறிக்குப்பின் ... ... ... ...

விடியற் காலை நேரம்.

அர்ச் அந்தோனியார் தேவாலயத்தின் நுழைவாயிற் கதவுகள் அகலத் திறந்து கிடக்கின்றன. ''துன்பத்திலே உழன்று கொண்டிருக்கும் மனிதர்களே! உள்ளே வந்து இன்பத்தைக் காணுங்கள்'' என்று அந்தக் கதவுகள் கூறுகின்றனவோ? அவற்றிற்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும் மரியானுக்கும் யோசேப்பிற்கும் அக் கதவுகளைப் பார்க்கையில் இப்படித் தான் நினைக்கத் தோன்றுகிறது.

அவற்றிற்கு மேலே தெரிகின்ற திரு மாதாவின் சிலை. அந்தச் சிலையின் முகத்திலேதான் எவ்வளவு கருணை, அன்பு, இரக்கம். உலகத்தவர்கள் படும் துன்பத்தைப் பார்த்து இவ்வுணர்வுகள் ஏற்பட்டனவோ? அல்லது உலகத்தை இரட்சிக்க வந்த தேவனைக் கையிலே ஏந்தி வைத்திருக்கின்ற பெருமையினுல் இவ்வுணர்வுகள் ஏற்பட்டனவோ?. அது அச் சிலையை வடித்த சிற்பிக்குத்தான் தெரியும்.

பக்தியுடன் நின்று மாதாவின் சிலையை நோக்கும் அவர்களுக்கு இவ்விதமாகப் பல நினைவுகள் எழுகின்றன. ஒரே நினைவு இருவர் உள்ளங்களில் எப்படி எழ முடியும்? மரியான் யோசேப் என்னும் இரு வெவ்வேறு பிரதிநிதிகளின் மனதில் எப்படி ஒரே நினைவு எழ முடியும்? என்று நினைக்கலாம். ஆம், அவர்கள் இருவரும் மனதால் மிகவும் ஒருமைப்பாடு உடையவர்கள். கடற்றெழில் செய்யும் அவ்விரு கட்டுடல் இளைஞரும் மிகமிக நெருங்கிய நண்பர்கள். மரியானுக்கு எது பிடிக்குமோ அதுதான் யோசேப்பிற்கும் பிடிக்கும். அவர்கள் தொழிலுக்குச் செல்வதும் ஒன்ருகத்தான். வசிப்பதும் அயலயல் வீடுகளிற்ருன்.

முதல்நாள் மாலையிலேயே கடல்வலித்துத் தொழில் செய்ய - மீன்பிடிக்க கடல் செல்லும் அவ்விருவரும் திரும்பி வருகையில் அவர்களை வரவேற்பதும் அவர்களின் கிழத் தாய்மார்கள்தான். தாய்மாரைத் தவிர அவர்களுக்குத் தந்தையரோ சகோதரரோ கிடையாது. இந்தவிதத்திலும் கூட அவர்கள் ஒற்றுமை யுடையவர்கள். ஆனல்!.........மரியான் முரடன், யோசேப் இளகிய மனமுடையவன். யோசேப்புடைய அந்த 'விட்டுக்கொடுக்கும்' மனப்பான்மையினுல்தான் அவர்கள் நட்பு இவ்வளவு தூரம் இறுக்கமாகப் பின்னிக்கொண்டது என்று உறுதியாகச் சொல்லலாம்.

× × ×



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைச் சுழலிலிருந்து விடுபட்ட இருவரும் வீட்டுக்குத் திரும்பக் காலடி எடுத்து வைக்கின்றனர். அந்த நேரத்திலும் கூட அந்த மேரிமாதாவின் சிலையைப் படைத்த சிற்பியின் கைவண்ணம் அவர்களைப் பரவசப் படுத்துகின்றது. அந்த முகத்தில்தான் எவ்வளவு அழகு. அழகு என்றால் சாதாரண அழகல்ல. கும்பிடத் தோன்றுகிற தெய்வீக அழகு.

வீட்டுக்குத் திரும்புகின்றனர் இருவரும். அங்கே! மரியானின் வீட்டு வாசலில்! அது என்ன? மேரிமாதாதான் உயிர் பெற்று எழுந்து வந்துவிட்டாளோ? மரியானும் யோசேப்பாலும் ஒருகணம் தங்கள் கண்களையே நம்ப முடியவில்லை. மரியானின் அத்தை மகள் 'எல்லியா' தான் தங்களை அப்படித் திகைக்கவைத்தவள் என்பதைக் கிட்ட நெருங்கியபின்தான் அவர்களால் உணர முடிந்தது. ஊரிலிருந்து தன் மாமியைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறாளோ? இவர்களைக் கண்டதும் அந்த 'அழகு' நழுவிவிட்டது.

× × ×

எல்லியாவுடன் பேச்சுக் கொடுக்க வேண்டும் என்று மரியானுக்கு மிகவும் ஆசையாக இருந்தாலும் அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தானாகச் சென்று அச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்வதுதான் சரி என்று அதற்காகக் காத்திருந்தான். சந்தர்ப்பமும் கிடைத்தது. அவ்வழியாற் போன எல்லியாவை "எல்லியா" என்று கனிவாக அழைத்தான் மரியான்.

தன்னை அவன் பெயர்சொல்லி அழைக்கிறானே என்பதில் எல்லியாவுக்குச் சிறிது தயக்க முண்டாகிறது. தயங்கி நிற்கிறாள்.

"குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும். ஒரு செம்பு தண்ணீர் கொண்டுவா."

அவள் மௌனமாகச் சென்று தண்ணீர் கொண்டுவருகிறாள். அவளுடன் பேச்சுக் கொடுக்கக் காத்திருந்தவனல்லவா? கேட்கிறான்.

"அம்மா எங்கே இருக்கிறாள்?"

"யார் மாமியா அடுக்களையுள் இருக்கிறார்கள்."

அவளுடைய பதில் முடிந்துவிடுகிறது. மரியான் கையை நீட்டியும்கூட அவள் செம்பைக் கீழே வைத்துவிடுகிறாள். தொடர்ந்து அவள் போகும் காலடியோசை கேட்கிறது.

மரியானுக்கு ஏமாற்றமாக இருக்கிறது. "இவளுக்கு ஏன்தான் இத்தனை வெட்கமோ?"

அன்று காலை மரியான் பரிசல்துறைக்குப் போவதற்காகத் தாயிடம் விடைபெற்றபின் எல்லியாவைப் பார்க்கிறான். அவள் கண்களை அகற்றிக்கொள்கிறாள். ஏன்தான் மரியான் அந்த 'அவளை' இவ்வளவு உற்று உற்றுப் பார்க்கிறான்? அவள் மனதை ஆழம்காண முனைகிறானே? பாவம் தோற்றுவிடப்போகிறான்.

இப்படியாக அவள் வந்து நான்கு நாட்களாகிவிட்டன. மரியான் அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ளவேண்டும் என்று எல்லையற்ற ஆவல்கொண்டிருந்தான். ஆனால், அவளோ, அவனுடன் ஒருமுறையேனும் பேச்சுக் கொடுக்கிறாளில்லையே!

அன்றிரவு மரியான் தொழிலுக்குச் செல்லவில்லை. வழமையாகத் தொழிலுக்குச் செல்லாத நாட்களில் அவன் மிகவும் குதூகலமாகக் காணப்படுவான். அன்று அதுவும் எல்லியாவின் முன்னிலையில் அவனுடைய மனநிலையைச் சொல்லவா வேண்டும்! ஆனால் அன்று அவனுக்குத் தூக்கத்தைக் கெடுத்துத் துக்கத்தைத் தந்து அவனை மிருகமாக்கிவிடக்கூடிய செயல் நிகழுமென்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

தற்செயலாக அன்று எல்லியாவின் அறைப்பக்கம் சென்ற மரியான் உள்ளே எட்டிப் பார்த்தான். உள்ளே எல்லியா இருக்கவில்லை. பதிலாக மேசைமீது ஒரு புத்தகம் கிடந்தது. அது என்ன புத்தகமாக இருக்கலாம்? என்று நினைத்த மரியான் உள்ளே சென்று அதைப் புரட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞன். அங்கே!......... அதன் பல பக்கங்களிலும் 'யோசப், யோசப்' என்று கிறுக்கலாக எழுதப்பட்டிருந்தது. அது எல்லியாவின் எழுத்தென்பது அவனுக்கு நன்ருகத் தெரியும். அப்படியானுல் ஏன் எழுதிஞள்?

''எல்லியா எதைப்பற்றியாவது தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தால் அதைப்பற்றித் தன்னையறியாமலே எழுதிவிடுவாள்'' என்று அவன் தாயார் எப்போதோ அவனுக்குச் சொன்னது அவன் ஞாபகத்துக்கு வந்தது.

''அப்படியானுல்''?.........

தான் எந்நேரமும் நினைத்துக்கொண்டிருக்கும் எல்லியா எந்நேரமும் யோசப்பையா நினைத்துக்கொண்டிருக்கிருள்.

மரியானுக்குத் தலை சுற்றியது. யோசேப்பும் அவளிடம் தன் மனதைப் பறிகொடுத்திருப்பானே? அப்படித்தான் இருக்கவேண்டும் இல்லாவிட்டால் இவள் இப்படி நினைத்திருந்தாலும் இவ்வளவு தூரம் வந்திருக்கமாட்டாள்.

நினைத்துக் கொண்டே புத்தகத்தைப் புரட்டிய மரியானின் கண்ணில் ஒரு துண்டுக் காகிதம் தென்பட்டது. அதனை எடுத்துப் படித்தான். படிக்கப் படிக்க அவனுடைய அறிவு மங்கியது. மிருக உணர்வு தலை தூக்கியது. 'மனிதனுடைய அறிவு மங்குகிற வேளையிற்தான் அவனுடைய மிருக உணர்வு தலை தூக்கி நின்ருடும்.' திரும்பவும் கடிதத்தைப் பின்வருமாறு படித்தான்.

> ''இன்றிரவு வீட்டிற்குப் பின்னுலுள்ள தென்னந் தோப்பின் மத்தியிலுள்ள வெளியில் உனக்காகக் காத்திருப்பேன்.''
>
> யோசேப்

வீடுமுழுவதும் எல்லியாவைத் தேடிப் பார்த்தான் மரியான். ஆனுல் தேடிக் களைத்ததுதான் மிச்சம். ஒரு வேளை! ...... அவனையறியாமலே அவனுடைய கால்கள் வீட்டுக்குப் பின்னுலுள்ள தென்னந் தோப்பை நோக்கி விரைந்தன. அங்கே! ......... தென்னந் தோப்பின் மத்தியிலே, பரந்த வெளியிலே, நிலவின் ஒளியிலே, எல்லியாவின் மடியிலே, யோசப்.........

மரியானுடைய கண்கள் தீப் பந்தங்களெனச் சிவந்தன, பற்கள் நெருமின, கைகள் துடித்தன, ரத்தம் கொதித்து முகம் சிவந்தது. அந்த உறவை எப்படியாவது 'முறித்து' விடவேண்டும். தன்னுடைய நெஞ்சத்திலிருந்த ஏதோ ஒன்று அதை விட்டுப் போய் அந்த இடம் வெற்றிடமாகி விட்டதென மரியானுக்குத் தோன்றியது. அவனுடைய தலை சுற்றியது. கிறு கிறு வென்று பலமாகச் சுற்றியது. அவனை விழுத்திவிடுமோ என்னும் அளவுக்குப் பலமாகச் சுற்றியது. மரியான் இப்பொழுது மரியானுகவே இல்லை. அசல் மிருகமாகிவிட்டான்! அவன் கைகள் விறு விறுத்தன. உதடுகள் முணு முணுத்தன. ''எல்லியாவைத் தொட்ட அவன் கைகளைப் பிடுங்கி விடவேண்டும், அவளைப் பார்த்த அந்தக் கண்களை......... அப்படியே தோண்டி விடவேண்டும், அந்த முகத்தை அப்படியே நசித்து ... ... ... நசித்து... ... ... ... மரியானுல் சிந்திக்கவே முடியவில்லை. யோசேப்பை ... ... ... ... யோசேப்பை ... ... ... யோசேப்பை.........

அர்ச் அந்தோனியர் கோயில் மணி டாண் ... ... ... டாண் ... ... ... என்று பன்முறை ஒலித்தது. அவன் எண்ணம் தவருனது என்பதைக் கருணை பொங்கி வழியும் முகத்தினையுடைய மேரிமாதா அவ்வோசைமூலம் உணர்த்துகிருளோ? அவன் அதை உணரவில்லை. அல்லது ''உனக்குப் பிடித்ததுதான் யோசேப்பிற்கும் பிடிக்கும் என்ருல் உனக்குப் பிடித்த எல்லியாவை ஏன் அவனுக்குப் பிடிக்கக் கூடாது?'' என்று கேட்கிருளோ? அவன் அதனையும் உணரவில்லை. ஆனுல் ஒன்றை மட்டும் உணர்ந்தான். அந்த ஓசைமூலம் அவளும் அதை ஆமோதிக்கிருள் என்பதை உணர்ந்தான்.

மனிதன் தான் எவ்வளவு சாதுரியமாகச் சந்தர்ப்பத்துக்கிணங்கத் தான் நடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமல் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதக மாக்கிக்கொள்ள நினைக்கிறான். யோசேப் பைக் கொன்று விடுவது என்ற எண்ணம் மரியானுள்ளத்திற் புகுந்து அவனைப் பிடித்து ஆட்டுகிறது. மனித நினைவுகளும் கூட சிறிய வித்தைப் போன்றவகையின தான். அவற்றிற்குத் தண்ணீர் ஊற்றி மனதில் முளைக்கச் செய்வது கடினம். ஆனால் முளைத்துவிட்டாலோ? அவை வளர்ந்து மனித மனம் முழுவதும் வியாபித்து மனதையே ஆட்கொண்டுவிடும். மரியானின் நினைவுகளும் இதற்கு விலக்கல்லவே. யோசேப்பை எப்படிக் கொல்வது? என்று சிந்தித்து அதற்கு முடிவு காணும் அளவுக்கு அவை வளர்ந்து விட்டன. படித்துறைக்குச் செல்லும் வழியிலே புதர் நிறைய உண்டு. யோசப் அவ்வழியே தனிமையிற் செல்கையில் ... ... அவனை ஒளித்திருந்து அடித்து ... ... அப்படித்தான் செய்யவேண்டும். யோசப் தொழிலுக்குப் போகாத நாட்களில் ஒவ்வொருநாளும் இரவுச் சாப்பாட்டுக்குப்பின் தோணித் துறைவரை காலாற நடந்து வருவது வழக்கம். சில தடவைகள் மரியானும் அவனுடன் சென்றிருக்கிறான். இன்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் ஒருவருமே தொழிலுக்குப் போகமாட்டார்கள். பாதையில் ஜன சந்தடியே இருக்காது.

தன் எண்ணத்தை அன்றிரவே செயற்படுத்த மரியான் முனைகிறான். சாப்பிட்டு விட்டுப் பின்பக்கம் சென்று இரகசியமாகப் பழைய மண்டாவை — கடற்றொழிலாளரின் ஓர் உபகரணம் — எடுத்துவந்து ஒருவருக்கும் தெரியாமல் வீட்டுப் படலையடியில் வைக்கிறான். பக்கத்து வீட்டுக் கிணற்றடியில் யோசப் சாப்பிட்டுவிட்டுக் கைகழுவும் சப்தம் கேட்கிறது. மண்டாவைத்தூக்கி இயன்றவரை மறைத்துக் கொண்டு படித்துறைக்குச் செல்லும் பாதையில் விரைகிறான். அதோ! அங்கே தெரிகிறதே பெரிய புதர், அதுதான் அவன் மறைவிடம், அங்கிருந்துதான் யோசேப்புக்கு அவன் 'மரண அடி' கொடுக்கப் போகிறான்.

யாரோ வரும் காலடியோசை கேட்கிறது. மெதுவாக எட்டிப் பார்க்கிறான். யோசப்தான் பாவம் இறக்கப்போகும் இந்த நேரத்தில் எதைப்பற்றி அப்படித் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டு வருகிறானோ? ஒருவேளை எல்லியாவைப் பற்றியோ? ... ... ... மரியானின் இரத்தம் கொதிக்கிறது.

அதோ யோசப் மரியான் இருந்த புதரைத் தாண்டிவிட்டான். மரியான் எழுகிறான் டமார் ... ... ''ஐயோ அம்மா'' யோசேப் கீழே விழுகிறான். டமார் ... ... டமார் ... ... டமார் ... ... உணர்ச்சிக்கு அறிவைப் பறிகொடுத்த மிருகம் அடித்துக் கொண்டேயிருக்கிறது. மரியான் கை ஓய்கிறது. அடிப்பதை நிறுத்துகிறான். போர்க்களத்திலே தன் எதிரியைச் சுட்டு வீழ்த்திவிட்ட பெருமை அவனுக்கு. யோசேப் முனகுகிறான் ''எல்லியா'' என்ற இறுதி முனகலுடன் அவனுயிர் ஓய்கிறது. அவன் எல்லியாவின் பெயரைச் சொல்லிக் கொண்டு பிரிந்தமைக்காக அவனுக்கு இன்னுமோர் அடி டமார் ... ... தாய்ப் பறவை தன் சிறகை நீட்டிக் குஞ்சை அணைக்குமாம் அதுபோல, குருதி என்னும் பறவை தன் சிவந்த சிறகை நீட்டி யோசேப் என்னும் குஞ்சை அணைத்துக் கொண்டுவிட்டது.

* * *

மரியான் வீடு திரும்புகிறான், அவனுடலில் ஒரு இனந்தெரியாத நடுக்கம், உள்ளத்தில் ஒரு பயம். அங்கே மரியான் வீட்டு வாசலில் அது என்ன கூட்டம்? ஒரே இரைச்சலாக இருக்கிறதே! மரியானின் நெஞ்சு திக், திக் என்று அடித்துக்கொள்ளுகிறது. உண்மையிலேயே கைகால்கள் உதறலெடுக்க ஆரம்பித்துவிடுகின்றன.

அவனைக் கண்டதும் ஒருவர் ''ஐயோ தம்பி நீ எங்கே போனாய், உன்னுடைய மச்சாள் கிணற்றுள் விழுந்து தவறிப் போய் விட்டாளே'' என்று கதறினார்.

''நீ போனது பத்தாதென்று பக்கத்து வீட்டு யோசேப்கூட எங்கேயோ போனானே! அவன் இருந்திருந்தால் உடனே சத்தம்கேட்டு ஓடி வந்திருப்பானே!'' என்றார் மற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைக் கண்டதும் அவன் தாய் ''ஐயோ அண்ணுவுக்கும் அண்ணிக்கும் நான் என்னபதில் சொல்லுவேன்? அவர் களை எப்படித் தேற்றுவேன் தவறுதலாகப் போய்க் கிணற்றுள் விழுந்து விட்டாளே'' என்று கதறினள்.

''தங்கச்சி! நீ ஏன் உன் உடம்பை வீணுக அலட்டிக் கொள்கிருய், நடந்தது நடந்துவிட்டது. அதற்காக வருத்தப் பட்டு என்ன பயன். போகிற உயிரைத் தடுக்க முடியுமா? அல்லது போன உயி ரைத்தான் திருப்பி எடுக்க முடியுமா? என்ன? இது ஒரு முதியவரின் அறிவுரை.

''உந்தக் கிழடு கட்டைகள் எல்லாம் இப்படித்தான். அவர்களும் முன்பு இப் படித்தான் இருந்திருப்பார்கள். வாழ்வே அலுப்புற்றபின் வேதாந்தம் பேசுவார் கள்,'' இது ஒரு இளைஞனின் முணு முணுப்பு.

''அட பாவி! அந்த நேரம்பார்த்து யோசேப்பும் எங்கேயோ போனுனே! இவன் போனது பத்தாதென்று'' இது ஒருவரின் சலிப்பு.

யோசேப் போய்விட்டான், போயே விட்டான் திரும்பி வரமுடியாத ஒரு இடத் துக்கே போய்விட்டானே! போய்விட் டானு? இல்லை. இல்லை மரியானல்லவோ அவனைப் போகப்பண்ணினுன். ஆனல் எல்லியாவுமல்லவோ அந்த இடத்தை எப்படியோ தெரிந்துகொண்டு அவனிடம் போய்விட்டாள்! மரியானுல் இதை எப் படிச் சகிக்கமு யும்? அவள் பிரிவை எப் படித் தாங்கமுடியும்? அவன் அவளின்றி எப்படி வாழ்நாளைக் கழிப்பான்?

மரியான் கதறினுன், ஓ வென்று கதறி னுன். வீடே அதிரும்படியாகக் கதறினுன். நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்? ... ... மனிதன் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைக்கிறதே!

மரியானுல் இப்பொழுதுதான் தான் செய்த மாபெரும் தவறை உணர முடிந் தது. அவன் அக் காதலரைப் பிரிக்க முனைந்தான். ஆனல் தாமிருவரும் ஒன்ருக வாழ முடியாதென்பதை உணர்ந்தோ என்னவோ அவர்கள் இருவரும் மரியான் எட்டிப் பிடிக்கமுடியாத இடத்தை அடைந்து விட்டனரே! இப்படி நடக்கு மென்று மரியான் கனவிலும் நினைத் திருந்தானு?

மரியானுல் தன் கண்களைக் கட்டுப் படுத்த முடியவில்லை. அவன் கண்கள் குளமாயின, அவன் ஓடினுன், தன்னை யறியாமலே ஓடினுன். எங்கே ஓடினுன்?

தவறு செய்வது மனித இயல்பு, செய்த தவற்றைத் திரும்பச் செய்யவிடாமற் தடுப்பது மனித அறிவு, ஒருவன் செய்த தவறைப் பெரிதென மதியாமல் அவனை மன்னிப்பது மனிதப் பண்பு, இது மூன்றை யும் அறியாதது மிருக உணர்வு.

மரியான் தான் செய்த தவற்றை உணர்ந்து திருந்திவிட்டான். ஆனல், உல கம் அவனை மன்னித்து ஏற்றுக்கொள்ளுமா!

தவறு செய்பவர்கள் என்றைக்காவது ஒருநாள் அத் தவற்றுக்காக வருந்தித் தான் ஆகவேண்டும். இது இயற்கை நியதி. ஆனல் அதற்காகத் தவறு செய் தவன் உலகத்தால் தண்டனையடைய வேண்டும் என்பதில்லை. உலகம் அவனுக் குத் தண்டனை கொடுக்காவிட்டாலும் அவனுடைய மனச்சாட்சி அவனுக்குத் தண்டனை கொடுத்தேதீரும்.

ஓடும் வழியிலே அர்ச் அந்தோனியர் தேவாலயம் வருகிறது. மாதாவின் திரு வுருவச் சிலையைப் பார்க்கிருன் மரியான். அது இப்போது அழுவதுபோன்றிருந்தது அவனுக்கு. தேவனுகிய இயேசுவைக் கை யிலேந்தியுள்ள அம் மாதா.

கேவலம் ஒரு வலைஞனுக இருந்து, கொலைஞனுக மாறிய, அந்த இளைஞனு டைய நிலையை எண்ணிக் கண்ணீர் வடிக் கிருளோ? அல்லது சிற்றுணர்வையும், சிற்றறிவையும் உடைய அந்த மானிடன் தன் சிற்றுணர்வை வெளிக்காட்டி விட் டானே என்பதற்காகக் கண்ணீர் வடிக் கிருளோ? ... ... யாருக்குத் தெரியும்.

அந்த இளைஞனுடைய 'வெறி' அடங்கிவிட்டது. அப்படி அடங்காவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாலும் காலம்போக்கில் அது அடங்கி விடலாம். ஆனால், அது எடுத்துக் கொண்ட 'பலி' திரும்ப உயிர்பெற்று எழுந்து விடுமோ?

'வெறி' உள்ளவன் 'பலி' எடுத்துத் தன் நிலையை மனித நிலையிலிருந்து மிருக நிலைக்குத் தாழ்த்திக் கொள்கிறான். ஆனால் அதற்குப் பலியாகும் உயிர் மிருகமாவ தில்லை அது மனித நிலையிலிருந்து மேலும் உயர்ந்து சொர்க்கத்தை நோக்கிச் சென்று விடுகிறது.

துன்பத்துக்குப்பின் ... ... இன்பம், இருளுக்குப்பின் ... ஒளி, தோற்றத்துக்குப் பின் ... ... மறைவு, வெறிக்குப்பின் ... ... பலியோ ?

த. ஆறுமுகநாதன்
பல்கலைக்கழக புகுமுக வகுப்பு
வைத்தியப்பிரிவு - முதலாம்வருடம்

---

# மாணவனுக்கு அரசியல்

இன்றைய உலகிலே மனிதனுக்குக் காற்று, நீர், உணவு எவ்வளவு முக்கிய மாகின்றனவோ அவ்வளவு தூரம் அரசி யலும் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. இதைவிட மாணவ சமுதாயத்துக்கு அர சியல் அறிவு மிக மிக முக்கியம். ஆனால் மாணவர்கள் எதையுமே நுணுக்கமாக ஆராய்வதே சிறப்பும், இயல்பானதுமா கும். அப்படியானால் அரசியல் எந்த முறை யில் விதிவிலக்காக முடியும்? முதலில் மாணவர்கள் தம்மை எதிலுமே வெறியர்க ளாக்கிக் கொள்ளக்கூடாது. இரசிகர்க ளாகவும் ஆதரவாளர்களாகவுமே தம்மை ஆக்கிக் கொள்ளவேண்டும்.

மாணவனது நேரம் அவனது படிப் பிற்கும், விளையாட்டிற்கும் ஓய்விற்குமே போதுமானது. எனவே பொது, சமூக விடயங்களில் அவன் தன்னை ஈடுபடுத்த வேண்டுமாயின் ஓய்வு நேரத்தைச் சுருக்க வேண்டும். அரசியலில் மாணவன் பங்கு கொள்வதானால் அதனை அறிவுக்காக கற்பதனைத் தவிர்த்துத் தம்மை வெறியர் களாக மாற்றும் வகையில் பயன்படுத்தக் கூடாது. அதாவது உலகிலே தோன்றிய உயிரினங்களெல்லாம் படிப்படியாக உரு மாறி நாளடைவில் இப்போதுள்ள உருவ மும், உறுப்புக்களும் பெற்றன என்பது உயிர் நூல்வல்லுனர் துணிபு. அதே போல் மனித இயல்பிலே பிறந்த அர சினது உறுப்பாகிய அரசாங்கமும் கருவா கத் தோன்றி காலப்போக்கிலே உரு மலர்ச்சியடைந்து முழுவளர்ச்சி பெற்றுள் ளது. இந்த சுவையான அறிவைக் கற்ப தோடு நின்று விட வேண்டும். அதை விடுத்து கட்சிகளுட் பிரவேசித்து அதன் வளர்ச்சிக்கு அலைவது மாணவனுக்கு உகந் ததல்ல. எந்த ஓர் மனிதனுக்கோ அல் லது இயந்திரம் போன்ற சாதனங் களுக்கோ ஓய்வு அவசியம். எனவே மாணவனானவன் தனது ஓய்வு நேரத்தை வேறு வழியில் செலவிடும்போது, தக்க முறையில் சரியான பொருளில் செலவிட வேண்டியது இன்றியமையாததாகும்.

மாணவன் அரசியலை நன்கு அலசி ஆராய வேண்டும். இன்றைய நமது நாட் டுச் சமூக சமய நிலையென்ன? பொரு ளாதாரம் எப்படி இருக்கின்றது? கல்வி கலாசாரம் எப்படி அமைந்திருக்கின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இனங்களின் ஒற்றுமை வேற்றுமை எவை? எமது நாட்டு அரசியற் கட்சிக ளின் கொள்கைகள் யாவை? இவை எவ் வளவு தூரம் நமது நாட்டுக்கு உகந்தது, காலப் போக்கில் இவற்றுல் என்னென்ன நன்மை தீமைகள் ஏற்படும் என்பதனை நுணுக்கமாக அவதானித்தல் முக்கியம். இத்தகைய அவதானிப்பின் பின் எமது மத, மொழி, இனத்துக்கு ஏற்ற கொள் கைகளை அந்த அரசியல் குழு கொண்டிருக் கிறதோ அதை ஆதரிப்பதே சிறந்தது. ஆனுல் எவ் விஷயத்திலும் நூற்றுக்கு நூறு சரியாக அமைவது மிக மிகக் கஷ்டம். எனவே நாம் சரியென நம்பும் கொள்கை களைக் கூடுதலாகக் கொண்டிருக்கும் குழு வையே ஆதரிப்பது முக்கியம்.

தன்னை ஓர் குழுவுக்கு ஆதரவாள ஞக்கி விட்டால் அதில் உள்ள தவறுகளை புரிந்து கொள்ளும் நிலைமை அடைய மனித மனம் தவறிவிடுகின்றது. இத்தகைய நிலை ஏற்படின் அரசியல் சூதாட்டமாகி விடுகின்றது. எனவே மாணவ உள்ளம் மாசுபடத்தொடங்கிவிடும். மாணவ உள் ளம் மாசுபடுவதை மாணவ சமுதாயம் விரும்புமா? வேறு யார்தான் விரும்புவார் கள்? எனவே மாணவர்கள் அரசியலைப் பொறுத்தவரை நாகரிகமானவர்களாக இருக்க விரும்பின் தமது கல்விக்காலம் முடி யும்வரை தம்மை முற்றுக அரசியலில் ஈடு படுத்தாமல் தமது கடமையிலே கண்ணுக இருக்கவேண்டும். அதற்காக மாணவ சமூ கம் அரசியலிலிருந்து முற்றுக விலகிச் செல்லவேண்டும் என்பதல்ல. ஆகவே மாணவர்கள் தம்மை அரசியலில் இரசிகர் களாகவே எப்போதும் பாவிக்கவேண்டும். அதைவிடுத்துத் தம்மை அரசியலாளர் ஆக்க முற்படின் அதுஅவர்களது சொந்த வாழ்க்கைக்கும் ஏன் பிற்காலத்தில் இந்த நாட்டிற்குமே நஷ்டமாக முடியும்.

உலகில் எந்த ஒரு நாட்டிலும் அந் நாட்டின் அரசியற் தலைவர்களது சரித் திரத்தை நாம் எடுத்துப் பார்ப்போமா ஞல் குறிப்பாக மாணவர்களாக இருந்த எந்த அரசியல் தலைவர்களும் அரசியலில் ஈடுபட்டதாகக் கூறப்படவில்லை. அவர் களது சரித்திரத்தின் இளமைப்பருவத் தைப்பற்றிக் குறிப்பிடும்போதும் அவர்க ளது படிப்பைப்பற்றியோ அன்றி அவர்க ளது குடும்ப பொருளாதார நிலைபற்றியோ தான் அதிகம் குறிப்பிடப்பட் டிருப்பது புலனுகின்றது.

மாணவர்களாயில்லாத இளமையில் வறுமையில் சிக்குண்டு தவித்துப் பின் அந் நாட்டின் சிறந்த அரசியற் தலைவர் களானவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போதுகூட அவர்கள் இளமையிற்பட்ட கஷ்டங்கள் துன்பங்கள் வேதனைகள் சோதனைகள் என்பனவற்றைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறுர்களே யொழிய அவர் களது அரசியலைப் பற்றிக் குறிப்பிட வில்லை. எனவே பிற்கால அரசியல் தலை வர்கள் இளமையிலேயே தம்மை அரசியல் வாதிகள் ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற நியதி இல்லை. குறிப்பாகக் கூறின் மாணவர் தமது கல்வியுடன் அரசியலைப் பற்றிய அறிவையும் வளர்த்து வருவ தோடு மட்டும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதே சிறப்பும் நன்மையுமாகும். அரசியல் ஓரளவு பொதுநலம் என்றே கூறினும் சுயநலமும் கலந்திருப்பது வெள்ளிடைமலை.

எந்த விஷயத்திலும் மக்கள் சுய நலத்தின்பின் பொது நலத்தில் ஈடுபடு வதே சிறந்ததாகும். தன் விஷயத்தைச் சரிவரச்செய்து முடிக்காத ஒருவன் எப் படிப் பொதுநலத்தைச் செவ்வனே முடிக்க முடியும்? எனவே பொதுநலத் தில் தம்மை ஆக்கிக்கொள்ள விரும் புகிறவர்கள் சுயநலத்தில் தமது கட மைகளிற் செவ்வனே செயற்பட்ட வர்களாகவும், தேர்ச்சிப்பட்டவர் களாகவும் இருப்பது அவசியம். சுயநலம் என்பது தன்னுடைய கடமைகளைச் சரி வரச் செய்து உரிமைகளைப் பெறுவதே யாகும். அதை விடுத்து பிறருக்குத் தீமை செய்து தமக்கு நன்மை பெறுவ தல்ல.

மாணவர்களது சுயநலம் தமது படிப் பில் கூடிய கவனம் செலுத்திக் கல்வியில் ஓர் நிலையான சிறந்த இடத்தைப் பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக் கொண்டபின் தம்மைச் சார்ந்தவர்களது நன்மையில் நாட்டங்காட்டுதலே யாகும். இந்தக் கடமையைச் சரிவரச் செய்து முடித்ததன் பின்தான் அவன் பொது நலத்துக்குச் சேவை செய்யத் தகுதியுடையவனுகின்ருன். எனவே மாணவர்கள் தமது கல்விக்குப்பின்தான் அரசியலில் ஈடுபட உரிமை யுடையவர்கள் ஆகின்ருர்கள். ஆதலால் மாணவர்கள் தமது கல்விக் காலத்தை அரசியலில் ஈடுபடுத்துவது சரியல்ல. எனவே அரசியலுக்காக மாணவன் அல்ல, மாணவனுக்காக அரசியல் என்ற முறையில் செயல் படுதலே சிறப்புடைத்து.

தி. கிருஷ்ணகுமார்
பல்கலைக்கழக புகுமுக வகுப்பு
கலைப்பிரிவு - முதலாம்வருடம்

---

# நடந்ததையே நினைத்திருந்தால் ...........

என்னதான் பார்ப்பதற்கு அப்பாவியாகத் தோன்றினுலும் நான் அவ்வளவாக உலக விஷயம் தெரியாதவனல்லன். மனிதனுகப் பிறந்தவனின் உள்ளத்தில் உணர்ச்சிகள் தோன்றுவதில் ஆச்சரியமெதுவுமில்லையே! நானும் சாதாரணமானவன்தான். ஆனுல் மற்றவர்கள் கூறுவதுபோல் ஒன்றுமேயறியாத அப்பாவியல்லன். ஆனல் ஏமாற்றம் அடைந்தவன். சொல்லப்போனுல் அடிக்குமேல் அடியடிக்கப்பட்டு மனமுடைந்து நிற்கும் வாலிபன் இல்லை, கூனிக் குறுகி நிற்கும் ஒருவன். மொத்தமாகச் சொல்லப்போனுல் வாழ்க்கையில் ஏற்படும் புயல்களை எதிர்த்து நின்று வெற்றிகாண மனத் துணிவில்லாத கோழை!

செல்வனும் மோகனும் எடுத்ததற்கெல்லாம் உணர்ச்சி வசப்படும் எனது சக மாணவர்கள். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அது அவர்கள் சுபாவம். அவர்கள் சொல்வதுபோல் நான் உணர்ச்சியே யற்ற ஜடமா? மனித ஆசாபாசங்களற்ற இயந்திரமா? இல்லவே இல்லை! மனிதனுகப் பிறந்தவனுக்கு உணர்ச்சியில்லாமல் போகுமா? உணர்ச்சி வழி கொண்டு வாழ்க்கை நடத்துபவன்தானே மனிதன்! நானும் மனிதன்தானே! அவர்களுக்குத்தான் மோகமா! எனக்குந்தான், ஏன் உங்களுக்குந்தான். ஆனுல் எங்களுக்கு மரியாதை, மானம், வெட்கம் என்பவை குறுக்கிட்டுத் தடை செய்கின்றன; அவர்களுக்கு அவை இல்லையோ, அன்றேல் விலை போய்விட்டனவோ எனக்குத் தெரியாது. இப்படி நான் எல்லாம் வெறுத்து ஞானநிலையில் நின்று பேசுவதற்குக் காரணம் ஓர் பெண். யாரவள்? எப்படி என் வாழ்வில் குறிக்கிட்டாள்? நடந்ததுதான் என்ன? என்றே ஒரு நாள் சொல்லித்தான் ஆகவேண்டும். சொல்லுகிறேன் கேளுங்கள்!

அப்பொழுது பல்கலைக்கழகம் புகுந்து ஒருவருடம் முடிவடைந்தது. நான் அவ்வருடம் முழுவதும் பல்கலைக்கழக மண்டபத்தில் இருந்தேன். இப்பொழுது வெளியில் இடம் தேடவேண்டிய பிரச்சனை. அப்பிரச்சனையைத் தீர்த்து வைத்தான் என் நண்பன் பாஸ்கர்.

அவன் தந்தை கண்டியைச் சேர்ந்தவர். அங்கு சொந்த வீடும் உண்டு. பாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடைய தாய் சொற்ப காலத்திற்கு முன்தான் காலமானுர். அவர்களுடைய வீட்டில் அவனும் அவன் தந்தையும்தான் இருக்கின்ருர்கள். அவன், எனக்கு விருப்பமானல் தங்களுடன் வந்திருக்கலாமென்றும், தங்க ஓர் அறை தருவதாயும் சாப்பாட்டைக் கடையில் வைத்துக் கொள்ளச் சொல்லியும் சொன்ஞன். நானிருந்த சங்கட நிலையில் சம்மதித்தேன், குடியேறினேன்!

நான் அங்கு குடியேறி ஓரிரு நாட்கள் சென்றன. ஒரு நாள், என் வாழ்வில் பெரியதொரு திருப்பத்தை ஏற்படுத்திய நாள், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நடுங்கும் குளிரில் வாயில் பாட்டொன்றை முணுமுணுத்துக்கொண்டுவந்த நான், வாசலில் அதிர்ச்சியடைந்து நின்றேன். நானும் வாசலில் நுழைய பக்கத்தில் உள்ள அறையொன்றின் கதவைத் திறந்துகொண்டு. அங்குப் பார்த்தபடி ஒரு பெண் வந்து என்னில் மோதி நின்ருள். ஒருகணம் இருவருடைய கண்களும் சந்தித்தன. மறுகணம் இவ்வுலகிற்கு வந்த நான் ஒரு புன்சிரிப்புடன் விலகி நின்றேன். அவளும் ஒரு புன்சிரிப்புடன் விலகிச் சென்ருள்.

அங்கு வந்து இரண்டு மூன்று நாட்களாகக் காணுதவளை இன்றுதான் கண்டேன். மிகவும் அடக்க ஒடுக்கமானவள் போலும். யார் அவள்? பாஸ்கரிடம் கேட்டபோது, தன்னுடைய மாமியின் மகள் என்றும் தங்களுக்குச் சமைத்துப் போட அவனுடைய மாமி அனுப்பியிருந்ததாகவும் சொல்லிவிட்டு வேறெதுவும் பேசாமல் நகர்ந்துவிட்டான். பின்பு அடிக்கடி சந்தித்தேன். நான் சிரித்தால் அவள் சிரிப்பாள். அதுவும் ஒரு புன்சிரிப்பு. பெண்களுக்குச் சிறந்த நகை புன்னகையல்லவா? அவள் அதைத் தெரிந்து வைத்திருக்கிருள் போலும். நாட்கள் கழிந்தன. எங்கள் கண்களே சந்தித்தன. அவளைப் பேரழகியென்று சொல்ல முடியாவிட்டாலும் கண்டவர்களைக் கவர்ந்திழுக்கும் காந்தக் கண்கள். தன் தூயமனதைத் திறந்து காட்டும் புன்னகை. ஆனுல் அதில் ஏதோ ஒரு வரட்சி! ஏனே தெரியவில்லை. இவையெல்லாம் என் மனதைக் கொஞ்சம் கொஞ்சமாக அவளிடம் பறிகொடுக்கச் செய்தன. ஜீவா, ஆம் அதுதான் அப்பதுமையின் பெயர். அவள் சிரிக்கும் ஒவ்வொரு சிரிப்பும் ஒவ்வொரு விதையாக என் மனதில் விழுந்து முளைத்தது. அவ்வன்புச் செடி விரைவிலேயே வேர்விட்டுத் துளிர்த்து செழித்து வளர்ந்து வந்தது. நாட்கள் மாதங்களாக, மாதங்கள் வருஷங்களாகிப் பறந்தோடின.

அடிக்கடி சுப்பிரமணியம், பாஸ்கரின் தந்தை என் அறைக்கு வந்து சிறிது நேரம் கதைத்துவிட்டுப் போவதுண்டு. அவருக்கு அதில் மன ஆறுதல். நானும் அவருடன் நன்ருக மனம்விட்டுக் கதைப்பதுண்டு. அதுபோல் அன்றைக்கும் ஏதோ ஒரு பிரச்சனையைத் தீர்த்துவிட்டு வருவது போன்ற முகக்குறிப்புடன் வந்தார். நான் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடிவிட்டு அவரை வரவேற்றேன். அவர் பேசத் தொடங்கினுர். ''தம்பி, நீ கண்டிருப்பாய், ஜீவா. அதுதான் என் மருமகள், அவளைத்தான் சொல்லுறன்,'' என்ருர். நானும் தெரியும் என்று தலையை ஆட்டுகின்றேன். அவர் தொடர்கிருர். ''என் மனம் ஒரு மாதிரியாக இருக்குது நான் செய்தது சரியா? அன்றிப் பெற்ற மகனுக்குத் துரோகமா? என்று என் மனம் குமைச்சலடைகின்றது. அதனுற்ருன் யாரிடமாவது கூறிஞல் மனம் ஆறுதல் அடையுமென்று வந்தனுன்'' என்ருர். ''சொல்லுங்கோ'' என்றேன். ''ஜீவா, என் மனைவி இறந்தது முதல் இங்கிருந்து எங்களுக்குச் சமைத்துப் போடுகின்ருள். அவள் தகப்பனுர் அவ்வளவு வசதியில்லாதவர். மொத்தமாகச் சொல்லப்போனுல் இவள் அவளுக்கு ஒரு சுமைபோல. அதனுற்ருன், அவள் எங்களுக்குச் செய்த உதவிக்கு நன்றியாக அவளைக் கரைசேர்க்கும் பொறுப்பை நான் ஏற்றேன். அவளும் எத்தனை நாளைக்குத்தான் சமைத்துப் போடுவாள்? பாவம் அவளால் பேசவும் முடியாது'' என்கிருர்.

எனக்கு உலகமே சுழல்வதுபோல் தோன்றுகின்றது. ''ஐயோ! என் நெஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங் கவர்ந்த ஜீவா பேசமுடியாத ஊமையா? ஜீவா! ஜீவா! என் ஜீவா! நீ ஊமையா.........? நீ ஊமையாயிருந்தாலென்ன? என் உள்ளங் கவர்ந்த உன்னை நான் கைவிடமாட்டேன் ஜீவா! கைவிடமாட்டேன்! உனக்கெதற்கு ஜீவா வாய்? உன் கண்கள் போதுமே பேசுவதற்கு'' என்றெல்லாம் என்மனம் ஓலமிடுகிறது.

அவர் பேசிக்கொண்டே போகிறார் அவர் மன ஆறுதலுக்காக. ''ஊமையான அவளை யார் மணந்து கொள்வார்கள்? அப்படிப்பட்ட பெண்ணை நானும் வருத்த விரும்பவில்லை'', இது அவர். ''ஏன் மாட்டார்கள்? ஊமையென்றால் என்ன? அழகியாகிய அவளை மணக்க என்னைப் போன்ற எத்தனை எத்தனை படித்த வாலிபர்கள் போட்டியிடுவார்கள்'' இது நான் கதைக்குள் என்னையும் இழுத்துப் போட்டுக்கொண்டு.

''அதுதான் தம்பி நான் கடைசியாகக் கஷ்டப்பட்டு பாஸ்கருக்கு எவ்வளவோ சொல்லி அவனைச் சம்மதிக்கப் பண்ணியாச்சு, அவனுக்குச் சோதனை நாளைக்குத் தொடங்கி அடுத்த கிழமை முடியுதாம். உன்னோடை தானே. அடுத்த மாதம் கல்யாணம். ஏதோ எல்லாம் கடவுள் சித்தம். இந்தா தம்பி, அழைப்பிதழ். மறந்திடாமல் வந்திடு. நீயும் எனக்கொரு மகன் மாதிரி. உன்னோடை கதைத்ததில் எனக்கு ஒரு பாதிச் சுமை இறங்கின மாதிரி இருக்கு,'' என்றபடி அழைப்பிதழை நீட்டுகிறார். அதிர்ச்சியுடன் வாங்கிப் படிக்கிறேன். ஜீவாவுக்கும் பாஸ்கருக்கும் கல்யாணமாம். அதிர்ச்சியில் விருட்டென எழுகின்றேன். அவரும் எழுந்து வணக்கம் சொல்லிவிட்டு, ''நாளைக்கெல்லாம் சோதினை நல்லாப்படி, மறந்திடாமல் கல்யாண வீட்டிற்கு வந்துவிடு,'' என்றபடி போகிறார்.

ஜீவாவை நான் அடைந்து விடலாம் என்றிருந்த நம்பிக்கை தூள் தூளாகப் பறக்கிறது. இதற்கிடையில் நாளைக்குப் பரீட்சையாம்! நடக்கட்டுமே!

சிரிக்கிறேன்! அந்தச் சிரிப்பிலே உயிரில்லை! உணர்ச்சியில்லை! விரக்தி நிரம்பி வழிகிறது.

இதுதான் நடந்தது. அம்முறை பரீட்சை எடுக்காத படியால் இம்முறை மறுபடியும் எடுக்கிறேன். என்றாலும் ஜீவாவை என்னால் மறக்க முடியவில்லை. ஓர் அண்ணன் தங்கையை மறப்பது நடக்கக் கூடியதா என்ன? எங்கிருந்தாலும் அவள் இன்பமாக வாழ்ந்தால் சரி என்று வாழ்த்திக் கொண்டிருக்கிறேன், அவளின் கூடப்பிறவா அன்பு அண்ணனாக!

ஆ. நகுலேந்திரன்
பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு
கணிதப் பிரிவு—இரண்டாம் வருடம்.

---

அழியுந் தன்மைவாய்ந்த இல்வுலகில்
என்றும் அழியாது நிற்பது அறம் ஒன்றேயாகும்.
அறநெறிக்கு மாறாக ஒருவன் தேடும் பொருளும்,
அதனால் அவன் பெறும் இன்பமும்
பொருந்தி வளர்வனபோற் றோன்றினும்
பின்னாளிற் பொன்றி ஒழிந்தே போகும்.

—திருவள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR DEPUTY PRINCIPAL



Mr. K. Suppiah B. A. (Hons.) Lond.
Secondary Trained (First Class), Teacher Counsellor

## PROMOTIONS



Capt. S. Parameswaran



Mr. S. Muttucumaran
Asst. District Commissioner of Scouts

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR OLD BOYS



Mr. P. Kanagasabapathy
Professor of Mathematics
University of Ceylon
Peradeniya



Mr. C. Rajalingam
B. Sc. Eng'g 1st Class



Mr. R. Mahalinga Iyer
B. Sc. Eng'g 1st Class



Mr. V. Gopal Sangarapillai
B Sc. Eng'g 1st Class

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றீரியாக்கள்

பற்றீரியாக்கள் ஒரு கலமுடைய மிகச் சிறிய உயிரிகளாகும். நுணுக்குக் காட்டியை முதலில் உபயோகித்த மாமேதை அந்தோனி. வொன். லியூவென் கூக் என்பவரினால் இவை 1683ஆம் ஆண்டு முதன் முதலாக உற்றுநோக்கப் கப்பட்டன. பற்றீரியாக்கள் சாதாரண கண்ணிற்குப் புலப்படாதவை. இவற்றுள் மிகச் சிறியவை $\frac{1}{1000}$ மி. மீ. இலும் சற்றுக் குறைந்த விட்டத்தையுடையவை. இத்தகைய சிறிய அங்கிகளில் ஏறத்தாழ 250 ஐ ஒன்று சேர்த்தால், இந்த வசனம் முடிய இருக்கும் முற்றுத் தரிப்பு அளவினையுடையதாகவே இருக்கும். மேலும் ஒரு கிறாம் தோட்ட மண்ணில் 50-100 மில்லியனிற்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய பற்றீரியாக்களைக் காணலாம். நீர், மண், மற்றும் உயிருள்ள உடல்கள் ஆகிய அனைத்திலும் இவை வாழும் ஆற்றல் படைத்தவை. வளி மண்டலத்தில் மிதக்கும் தூசிகளில் இவ்வங்கிகள் பரந்து காணப்படுகின்றன. இவ்வாறு பற்றீரியாக்கள் அதிகம் இருப்பதற்குக் காரணங்கள் பல உண்டு. அவற்றின் துரித இனப் பெருக்கப் பழக்கம், தகாத காலத்தைக் கழிக்கும் வித்திகள், எதிர்ப்புச் சக்தியுள்ள பதியக் கலங்களைக் கொண்டிருத்தல் ஆகியவை சில காரணங்களாகும். அன்றியும் பற்றீரிய வகைகள் பல திறப்பட்ட உணவுகளையும் உட்கொள்ளக் கூடிய ஆற்றல் படைத்தவை.

பற்றீரியாக்களை விஞ்ஞானிகள் நன்கு ஆராய்ந்து தாவரப் பாகுபாட்டில் ஸ்கிசோ மிக்கோபீற்றா எனப்படும் விசேட பிரிவில் சேர்த்துள்ளார்கள். ஜெர்மன் தேசத்தில் சில ஆதியான இனங்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அங்கு காணப்படும் சில நிலக்கரிச் சுரங்கங்களினூடாகத் துளைத்தெழும் சுரங்க ஊற்றுக்களைப் பிரிபேர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து பார்த்தபோது அங்கு வாழும் பற்றீரியாக்கள் 55 - 65 கோடி வருடங்கட்கு முந்திய இனமாக இருக்கவேண்டுமென அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். தற்போது 1500 இனங்கள் வரை பற்றீரியாக்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பற்றீரியாக்களை அவற்றின் வடிவங்களைக் கொண்டு மூன்றாகப் பகுத்துள்ளனர். உருண்டை வடிவான கொக்கசுக்களும், கோளவடிவான பசிலசுக்களும், சுருண்ட வடிவமான ஸ்பைரிலங்களுமே அவையாகும். பற்றீரியாக்களிற்குக் கரு கிடையாது. எனினும் பைற்றோமொனசு மல்வேசிறம் போன்ற சில பெரிய இனங்களில் கருவைப் போன்ற ஓர் உருவங் காணப்படுகின்றது. இவற்றைச் சாயமேற்றிப் பார்க்கும்போது கருவி நிறப்பொருள் எனப்படும் சாயமேற்கக் கூடிய ஒருபொருள் எல்லாவற்றிலுங் காணப்படுகின்றது. ஆகையால் பற்றீரியாக்களில் கருவி நிறப்பொருளே கருவின் தொழிலைச் செய்வதாகக் கருதப்படலாம். ஒரு சில பற்றீரியாக்களின் முனைகளில் சவுக்கு முளைகள் குஞ்சம்போன்று கொத்தாகக் காணப்படுகின்றன. அவற்றுள்ளும் சிலவற்றிற்கு இருபக்க முனைகளிலும், மற்றவற்றிற்கு ஒரு பக்க முனையில் மட்டும் காணப்படுகின்றன. இந்தச் சவுக்குமுளைகளின் உதவியைக்கொண்டு பற்றீரியாக்கள் இடப்பெயர்ச்சியடைகின்றன. சவுக்குமுளையற்றவை இடம்பெயரமாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றீரியாக்கள் தம்மை இரண்டு மூன்ருகப் பிளத்தலடையச் செய்வதன் மூலம் தம்மைப் பெருக்கிக்கொள்கின்றன. பிளத்லடையும் ஒவ்வொரு பற்றீரியாவின் கலத்திலும் முதலில் தவாளிப்பு ஒன்று உண்டாகின்றது. இத்தவாளிப்பு நன்ருக ஆழமாகி இரண்டு கலங்கள் உண்டாகின்றன. பற்றீரியாக்கள் 25-30 நிமிடத்திற்கொருமுறை இவ்வாருகப் பிளத்தலடையும். இத்தகைய கால அளவைக்கொண்டு நாம் கணிப்போமாளுல் அரை நாளில் ஒரு பற்றீரியா ஏறத்தாழ 160 லட்சம் பற்றீரியாக்களைக் கொடுக்கக்கூடியதாக இருக்குமென அறிந்து வியப்படையலாம். இவ்வளவு பற்றீரியாக்களும் 1000 தொன் நிறையுடையதாக இருக்கும். ஆனல், உணவுப் பொருள் போதாமை, தேவையான அளவு ஒட்சிசன் போதாமை போன்ற இயற்கைக் காரணிகளால் இத்துணைப் பெருந் தொகையான உயிரிகள் உண்டாகாமல் காப்பாற்றப்படுகின்றன. பொதுவாகப் பற்றீரியாக்கள் இம்முறையினுல் மட்டும் இனவிருத்தி செய்தாலும் சமீபத்தில் நடைபெற்ற சில ஆராய்ச்சிகளின் பேருக, பற்றீரியாக்கள் உயர் விலங்குகள் போன்று பாற்சேர்க்கை மூலமும் தம்மைப் பெருக்கிக்கொள்கின்றன என அறியப்படுகின்றது. பேராசிரியர்கள் பவல், நீமாக்கு, வோய்ச் பைறிக்சி ஆகிய மூவரும் கோலோ பக்ரர் எனப்படும் பற்றீரியாக்களைப் பரிசோதனைக்குட்படுத்திய போது இவை இம்முறை இனவிருத்தியைச் சிறப்பாகக் காட்டுவதாகக் காணப்பட்டது. இவ் அங்கிகள் தம்மிற் காணப்படும் வளைவு போன்றவொரு அமைப்பினுல் புணர்ச்சியடைவதாகக் கண்டுள்ளனர். இவற்றுட் சில, வேறு இனத்தவர்களுடன் இணைந்து அவற்றின் முதலுருவை உறிஞ்சிக் கொள்வதாகவுங் கண்டுள்ளனர். சொற்ப நேரத்திற்கு நடக்கும் இவ் இணைதலின்போது வளையின் நுனியில் இருக்கும் சிறு துணிக்கைகள் கரைந்து பின்னர் பரம்பரை அலகுகள் மாற்றிக் கொள்ளப்படுவதாகக் கருதப்படுகின்றது. கூர்ப்பு ஏணியில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கும் இவ்வுயிரிகள் இம்முறை இனப்பெருக்கப் பழகத்தினுல் முன்னேறி வர வாய்ப்புண்டு என அவ் விஞ்ஞானிகள் மேலும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமது வாழ்க்கைக்குத் தகாத காலம் வரும்போது பற்றீரியாக்கள் தமது முதலுருவைத் திரட்டித் தகாத காலத்தை எதிர்த்து இருக்கக்கூடிய ஒரு சுவரையுண்டாக்கி அகவித்திகள் என்னும் அமைப்பைத் தோற்றுவிக்கின்றன. ஒவ்வொரு பற்றீரியாவிலும் ஒவ்வொரு வித்திமட்டும் உண்டாகி இறுதியில் வித்தி முதிர்ச்சியுற்றதும் கலச்சுவர் சிதைக்கப்படுவதனுல் வெளியேற்றப்படுகின்றன. வாழ்க்கைக்கு உகந்த காலங்களில் அகவித்திகள் நீரையுறிஞ்சி முளைத்து மீண்டும் ஒரு பற்றீரியாவாகும்.

மண்ணில் காணப்படும் சூடோமொனசு றடிசிகோலா எனப்படும் ஒரு பற்றீரிய இனம் பயறு, அவரை போன்ற தாவரங்களை உள்ளடக்கும் அவரைக் குடும்பத்தைச் சேர்ந்த தாவரங்களின் வேர்களில் சிறு கணுக்களை உண்டாக்கியும் சில வேளைகளில் வாழ்கின்றன. வளியிலுள்ள நைதரசனைப் பொதுவாக ஒரு உயரிய தாவரத்தினுலோ, விலங்கினுலோ நேரடியாக உபயோகப்படுத்த முடியாது. ஆனல் மேற்கூறப்பட்ட பற்றீரிய இனம் வளியிலுள்ள நைதரசன வாயுவை நைத்திரேற்ருக்கித் தாவரத்திற்கு அளிப்பதன்மூலம், தாவரத்திற்கு நைதரசனைக் கொடுக்கின்றது. இதிலிருந்து வளிநைதரசன் விலங்குகளையுமடைகின்றது. இவ்வாருக இச் சிறிய நுண்தாவரங்களினுல் உலகோர்க்கு அளப்பரிய பல நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன. இவற்றைவிட மனிதர்களின் குடல்களிலும், சுவாசப் பைகளிலும் வாழும் சில பற்றீரியாக்கள், நோய்களையோ, அன்றி இடையூறுகளையோ உண்டாக்கும் உயிரினங்கள் உடலினுள் புகுந்தால் சில நச்சுப் பதார்த்தங்களை அவற்றின் மேற் சுரந்து அவற்றை அழிக்கின்றன. இத்தகைய கைங்கரியத்தைச் செய்யும் இப்பற்றீரியாக்களை மனிதனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அந்தரங்கக் காவலன்'' என்று சொன்னாலும் மிகையாகாது.

சித்திரிக்கமிலம், விற்றமின்கள் போன்ற சில மிக அத்தியாவசியமான பொருள்கள் பற்றீரியாக்களின் கழிவுப் பொருள்களேயாகும். கயிறு, தும்பு போன்ற உபயோகமான பொருள்கள் தயாரிப்பதில் பற்றீரியாக்கள் மகத்தான உதவியைச் செய்கின்றன. இம்முறைகளின் போது தென்னையின் இடைச்கனியத்திலுள்ள தும்பு, சேதனவுறுப்புப் பொருள்கள் கலக்கப்பட்ட நீரில் ஊறவைக்கப் படுகின்றன. கலங்களிடையேயுள்ள பெத்தின் என்னும் பொருளைப் பற்றீரியா நொதிக்கச் செய்கின்றது. இதன்பின் ஒட்டுப் பொருள் நீக்கப்பட்ட எஞ்சியிருக்கும் நாரிலிருந்தே கயிறு, தும்பு போன்றவை திரிக்கப்படுகின்றன.

நாம் வீசியெறியும் பொருள்கள் அழுகலடைவதற்குப் பற்றீரியாக்களே பயன் படுகின்றன. அழுகல் என்னும் செய்முறை இவ்வுலகிலே நடைபெருவிட்டால், தாவரத்தினதும், விலங்குகளினதும் சேதனப் பொருள்கள் உலகில் நிறைந்துவிடும். மேலும் எளிய சேர்வைகள், மூலகங்கள் போன்றவற்றைப் பச்சைத் தாவரங்கள் உபயோகிக்க முடியாமல் போய்விடும். ஆகவே பற்றீரியாக்கள் உலகத்திற்கு இன்றியமையாத ஒரு உயிரி என்று கூறினும் மிகையாகாது.

பட்டினியால் பல கோடி மக்கள் வாடும் இப்பூவுலகில் செயற்கையாக உணவுப் பதார்த்தங்களைத் தயாரித்தே பட்டினியைப் போக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. நிலக்கரியிலிருந்து புரதவுணவைப் பற்றீரியாக்களினுதவியைக் கொண்டு தயாரிக்கலாமெனத் தற்போது விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

உலகோர்க்கு உணவையளிக்க ஆயத்தமாகும் பற்றீரியாக்கள் அவர்கட்கே செய்யும் தீமைகளும் சொல்லிலடங்கா. மக்கள் நாள்தோறும் உபயோகிக்கும் பல தாவரங்களிற்குப் பற்றீரியாக்கள் எண்ணிலடங்காத தீமைகளைச் செய்கின்றன. முள்ளங்கித் தாவரத்திற்கு மெல்லழுகல் என்னும் நோயைக் கொடுத்து அதை அழிக்கின்றன. கெக்கரியில் வாடல் நோயைக் கொடுக்கின்றன. இதற்கு மேலாக மனிதனின் வளர்ப்பு விலங்குகட்குக்கூடப் பல நோய்களைக் கொடுத்துத் துன்புறுத்துகின்றன. கால் நடைகளில் கசநோய், அந்திராக்ஸ் போன்ற நோய்களைக்கொடுத்து விவசாயிகளின் வருமானத்தைக் குறைக்கின்றன. வளர்ப்பு விலங்குகட்கு மட்டுமல்ல மனிதருக்கே பற்றீரியாவால் பல பயங்கர நோய்களேற்படுகின்றன. ஏறத்தாழ 25-30 இனங்கள் மனிதருக்கு நோய்களைக் கொடுக்கின்றன. கசநோய், தைபோயிட்டுக் காய்ச்சல், வயிற்றுழைவு, வாந்திபேதி, தொண்டைக் கரப்பன் போன்ற பல பீதியைக் கொடுக்கும் நோய்களைப் பற்றீரியாக்களே கொடுத்து மனிதரைத் துன்பத்திலாழ்த்துகின்றன.

ஆறடி மனிதனின் அறிவுச்சக்தி பற்றீரியாக்களின் தீமைகளைவென்று நன்மைகளைப் பெற்றுக் கொள்ளச் செய்கின்றது. மேல் விபரிக்கப்பட்ட பல நோய்கள் தற்போது வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சில காலங்களாகப் பற்றீரியாக்களில் நடைபெறும் ஆராய்ச்சிகளின் வேகத்தை இவை புலப்படுத்துகின்றன.

பலகாலம் பத்திரமாகப் பதப்படுத்திப் பாதுகாப்பாக வைக்க வேண்டிய பொருள்கள் பெரும்பாலும் பற்றீரியாக்களாலேயே பழுதடையச் செய்யப்படுகின்றன. இதனாலே இவை அழிக்கப்பட்டே சேமிக்கப்படுகின்றன. ஜாம் போன்ற பழரசங்களிலுள்ள சீனி, உப்பு, போன்றவற்றினல் அங்கு வாழும் பற்றீரியாக்களின் கலத்தில் பிரசாரணம் மூலம் நீரகற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. இதனுல் பற்றீரியாக்கள் அழிக்கப்பட்டுப் பொருள்கள் பலகாலம் பாதுகாப்பாக இருக்கின்றன. தற்போது பால் பாச்சர் முறையால் நோய் விளை விக்கும் பற்றீரியாக்கள் அழிக்கப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன.

பற்றீரியாக்களில் ஆராய்ச்சிகள் தொடர்ந்து விடாமுயற்சியுடன் நடைபெற்று வருகின்றன. இன்னும் சில காலத்தில் அவற்றை மனிதன் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்து அதன் பயன் முழுவதையும் உறிஞ்சுவான் என்பதில் சற்றேனும் ஐயமில்லை.

கு. சிவகுமாரன்
பல்கலைக்கழக புகுமுக வகுப்பு
வைத்தியப்பிரிவு - முதலாம் வருடம்

# கவிஞர் காதல்

மனித இதயத்தின் தடுக்க முடியாத கபாடமான காதல் காலத்தாற் சாகாது; கருத்தால் மாருதது, பருவம் கடந்தாலும் கடவாமல் நின்று உருவம் மாறினும் மாருமல் உள்ளத்து உணர்ச்சிகளுக் கெல்லாம் தலைமை தாங்குவது. இவ் வுணர்ச்சி தட்ப வெப்ப கலாசாரப் பாரம்பரியங்களை யெல்லாம் தாண்டி மனித வர்க்கத்தையே அடிபணியச் செய்கின்றது.

வீர உணர்வானது திடீரென்று வருகின்றது, வந்த வேகத்திலே சென்றுவிடுகின்றது இன்னும் கூட ஆத்திர உணர்வில் அறிவிழந்து அதனுல் கொலைகாரனுகிய ஒருவன் குற்றவாளிக் கூண்டில் கூனிக் குமுறுகின்முன். அவன் வீரம் இங்கே இறந்து விடுகின்றது. யாராவது அஞ்சாது நின்முர்களானுல் இதற்கு மார்க்கம் இல்லையென்ற வீர மனப்பான்மையேயாகும். ஆனுல் வீரம், மானம், சோகம், பாசம் மனிதனுடன் தொடர்ந்து பாடையேறுகின்றன.

இலக்கியத்திலே ஆராயப் புகுங்கால் சுத்தவீரன் நல்ல காதலனுக இல்லை. நல்ல காதலனே சுத்த வீரனுக இல்லை. பாரதத்திலும், பாகவதத்திலும் வரும் கன்னன் நல்ல காதலனுக இருக்கிமுன், சிறந்த வீரனுக இல்லை. ஆனுல் கவிஞனே அவனை ஒரு நல்ல வீரனுக்க வேண்டுமென்ற எண்ணத்தால் இருந்த இடத்தில் இருந்து கொண்டே தந்திர யுத்தம் நடத்துவதாகப் படம் பிடிக்கின்முன். இது கவிஞனின் ஒட்டவைத்த வீரம். மகாபாரதத்திலே வருகின்ற அருச்சுனனின் வீரத்தின் சாயல் பாரதப்போரில் தெரிகின்றது. மகன் இறந்தான் என்ற செய்தி கேட்டதும் தளராத புத்திர சோகத்தால் துடிக்கிமுன். அரசு வேண்டாம், யுத்தம் வேண்டாம் எனக் கோழையாகவே கூக்குரல் இடுகின்முன். அருச்சுனனின் சாரதியாகி அவ்வப் போது ஊட்டும் வீர உபதேசத்தால்தான் அருச்சுனனுல் தாக்கு கொடுக்க முடிகிறது. இவனே பெண்களின் உள்ளங்களைக் கொள்ளை இடுவதற்கு மகா சமர்த்தன். அருச்சுனனின் அண்ணனுன வீமனே ஒரு சுத்த வீரன். இவன் போர்க்களத்திலே வாருங்கள் வாருங்கள் என்று கர்ச்சனை செய்வதும் தன் பக்கத்துச் சேனைகள் பின் செல்ல உற்சாகமூட்டி வீறு கொண்டெழும்புவதும் அவன் வீரத்துக்குத்தக்க முத்திரையாகும். இதை விடத் துரியோதனன் அவையிலே துச்சாதனனுல் பஞ்சவர்க்குப் பத்தினியான திரௌபதியின் துயில் உரியப்படும்பொழுது அண்ணனையே மதிக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருபதன் மகளைத் திட்டத் துய்நன்
உடன் பிறப்பை
இருபகடை யென்றாய் - ஐயோ!
இவர்க்கடிமை யென்றாய்
இதுபொறுப்ப தில்லை - தம்பி
எரிதழல் கொண்டுவா
கதிரைவைத் திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடுவோம்.

என ஆர்த்தெழுந்தான் மான உணர்ச்சியால்; திரௌபதி மேல் கொண்ட காதலால் அல்ல, வீர உணர்வால்; இது எம்மைவிட திரௌபதிக்கு நன்கு தெரியும். அருச்சுனனிடம் இல்லாத குழைவை, காதல் இன்பத்தை, வீமனிடம் அவள் பெற்றிருக்கவே முடியாது.

குடும்ப வாழ்க்கையிலே சிக்காத முற்றும் துறந்த துறவியான இளங்கோவடிகள் கோவலன் வாயிலாக காதல் மொழியை மணி மணியாக அவிழ்த்து விடுவதைப் பார்க்கும்போது இவரா துறவி யென்று எம்மை ஏங்க வைக்கின்றது.

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே தேனே!
அரும்பெற்ற பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமடமகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!

என்று கோவலன் பாடி மகிழ்ந்ததாக பாடும்பொழுது யாருக்கும் கிளுகிளுப்பு ஏற்படத்தான் செய்கிறது. ஆனால் இளங்கோவோ உடலைத் தீண்டாத்துறவி உள்ளத்தால் சுவைத்த கவிஞன். இன்றைய யோகி சுத்தானந்தரும் ஒரு துறவியே. ஆனால் இவரைப் போல் இனிக்க இனிக்கக் காதல் கவிதை வடிப்பதில் சிறந்தவர் யாரும் இல்லை. தொட்டுச் சுவைக்காத இவர் இப்படியல்லவா இல்லறம் நடத்த வேண்டுமென்று ஏங்க வைக்கின்றார் என்றால் இவரின் கவிதை உள்ளம் என்பதே காரணமாகும். கவிஞனாக இருந்தால் அவனை ஒருபோதும் காதல் தொடாமல் விடாது.

இராமாயணத்திலே வருகின்ற இராமனை எடுத்தால் அவன் ஒரு காதல் மன்னனே. இதைத்தான் கம்பரால் படம் பிடித்துக் காட்ட முடிகிறது. இராமனுடைய வீரத்தைவிட அவன் விடும் பாணத்திற்கே அதிக மதிப்பைக் கம்பர் காட்டுவதன் மூலம் இவன் வீரத்திற்கு இங்கு இழுக்கு ஏற்படுகின்றது. இம்மட்டோ என்றால் இல்லை. வாலியை வதை செய்யும் இடம் இராமனிடம் வீரத்திற்கே வேலையில்லை யென்ற நிலையைக் கம்பர் காட்டுகின்றார். மிதிலைக் காட்சியிலே ஜானகியைக் கண்ணெடுத்து நோக்குமிடத்தில் இவனிடமிருந்த காதல் கனிவைப் பின் வருமாறு காட்டுகின்றார்.

''எண் அரு நலத்தினா
ளினைய னின்றுழிக்
கண்ணொடு கண்ணினைக்
கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா
துணர்வு மொன்றிட
வண்ணலு நோக்கினா
னவளு நோக்கினாள்''

என்கிறார். ஆனால் இக் கனிவைப் போர்க் களத்திற் காண முடியவில்லை. பரணி பாடிய சயங் கொண்டார் வீர நடைக் கவிதையிலும் காதலுக்கும் இடம் கொடுக்கின்றார்.

''சிமையவ ரைகனகத்
திரளுரு கப்பரவைத்
திரைசுவறிப் புகையைத்
திசைசுடுமப் பொழுத்தது
இமையவரைத் தகைதற்கு
இருளுமிடற் றிறைவற்கு
இனியத ரத்தமுதக்
கனிய ரத்தினரே''

என வீரத்தை விமரிசனம் செய்ய வந்த இவரும் காதல் உணர்வால் உந்தப்படுகிறார். இதுதான் கவிஞர் உள்ளத்தின் நிலை.

காமச் சுவை மிக்க இலக்கியங்களுட் திருத்தக்க தேவர் செய்த சீவகசிந்தாமணியும் ஒன்று. சமண முனிவரான இவர் தமது சமயத்தைப் பரப்ப இயற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலில் காமச் சுவை ததும்பும் செய்யுள்கள் பல செய்திருக்கின்றார்.

குறள் தந்த வள்ளுவர் மட்டுந்தான் இத் துறையில் ஒரு நிதான வழியைக் கடைப்பிடித்திருக்கின்றார். உலக நிலையை நிலைக்கண்ணாடியாகக் காட்டிய வள்ளுவன் தன்னை மட்டும் ஒன்றி உறவாடாது விட்டது விந்தையிலும் விந்தைதான்.

இனி ஆங்கில மகாகவியாகிய பைரனைப் பார்ப்போம். இவன் உள்ளத்தில் ஏற்படும் காதல் உணர்வு சொல்லுந்தாமன்று. ஒரு மனைவி தத்துவத்தில் இவனுக்கிருந்த வெறுப்பை நாம் அறிவதற்கு இவன் வாழ்நாளில் நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. இவன் மனைவி நமக்குக் குழந்தை பிறந்திருக்கிறது பார்த்தீர்களா என்றாள். அதற்கு கட்டிய மனைவியைப் பார்த்து, ஏன்? ஆடு மாடுகளுக்குக் கூடத்தான் குழந்தைகள் பிறந்திருக்கிறது என அலுத்துக்கொண்டு கூறினானும். கடைசி நேரத்தில் உரிமையோடு அழுவதற்கு யாருமற்ற அனாதையாக மடிந்தான் அந்த ஆங்கில மகாகவி.

தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வந்த தமிழ்க் கவிதை முறையிலே புதுமையூட்டிய புரட்சிக் கவிஞன் பாரதியோ கண்ணம்மா என் காதலி, குயில்பாட்டு, மூன்று காதல் முதலியவற்றில் தன் உள்ளத்தின் காதல் நெகிழ்ச்சியைக் காட்டுகின்றான். இம் மாத்திரமோ,

''காதல், காதல், காதல்—
காதல் போயிற் —
''சாதல், சாதல், சாதல்''

என்று சங்ககால மூதாதையரின் ''மடலேறு'' வழக்கத்தை மனித வாழ்வின் முடிவு என அறுதியாக உறுதியே எழுதி வைத்துவிட்டார் எங்கள் கவியரசு.

இன்றைய கவிதை உலகின் பேரொளியாகத் திகழும் சினிமாக் கவிஞன் கண்ணதாசனே

''ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு
ஒரு கோலமயில் என் துணையிருப்பு''

என உலகுக்கு அஞ்சாமலே தன் மன நிலையைக் காட்டிவிட்டான்.

கவிமணி தேசிகவினாயகம்பிள்ளை கம்பதாசனுடைய கவிதையின் சிறப்பைக் கூறுமிடத்து

''காதலின் கூத்தை யெல்லாம்—உன்றன்
கவியின் கண்டேனையா''

என்று பாராட்டும்போது அவர் பாடிய காதற் கவிதைகளின் தன்மை புலனாகின்றது.

கடைசியாக கவிஞர்கள் எல்லோரும் காதல் வசப்பட்டவர்கள். காதல் என்ற தென்றலில் தவழ்ந்ததன்மூலம்தான் இவர்களால் நல்ல இலக்கியங்களைப் படைக்க முடிந்தது.

பொ. ஸ்ரீகந்தராஜா
பல்கலைக் கழக புகுமுக வகுப்பு
கலைப்பிரிவு - முதலாம் வருடம்

---

உலக மக்களுக்காக உழைக்கும் பெரும் பெரும் உழைப்பாளர்கள்
''காலத்தால்'' தாக்கப்பட்டு மறைகிறார்களே
என்று எண்ணும்போது
உலகமே தன் அழுகுரலைக் கிளப்புகிறது

—அண்ணாத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் காட்டும் நெறிதான் என்னே!

காலம், மொழி, தேசஎல்லை முதலாம் வரம்புகள் கடந்து நின்று உலகுக்கு நெறி காட்டும் ஒரு சில செம்மை சான்ற நூல்களில் திருக்குறள் முதன்மையானது. கற்பவர் யாவரும் பெரும் பயன் எய்தி வாழ்வாங்கு வாழ நெறி காட்டும் தனிப் பண்பு சாலச் செறிந்த தெய்வப் பெருநூல் திருக்குறள். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழும் மேல்நாட்டார் பலரைத் தன்பால் ஈர்த்துத் தமிழ்வாழ்வின் திறங் காட்டி தமிழ்வாழ்வு வாழ வைத்த பெருமையும் கொண்டதால் அன்றோ, பாரதி

''வள்ளுவன் தன்னை உலகுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு''

என்று செம்மாந்து கூறமுடிந்தது. உலகம் வாழ - வாழவேண்டிய முறைப்படி வாழ - வள்ளுவன் காட்டும் நெறி அறிஞர் சிந்தனைக்கு உரியதாயினும், மாணவர்களாகிய நாமும் எம்மளவில் நின்று ஆய்வதில் தவறில்லை!

''கல்வி கரையில கற்பவர் நாள்சில''

என்றார் ஒருவர். புற்றீசல் போன்று நூல்கள் இலட்சக்கணக்கில் தோற்றுவிக்கப்படும் இந்நாளில் எதைக் கற்பது எப்படிக் கற்பது என்று மயங்காமல் இருக்க முடியாது. இந்த மயக்கம் தெளிந்து வழிகாண விழையும் மாணவர்கள் வள்ளுவரிடம்தான் ஓடவேண்டி யிருக்கின்றது. நெறிகாட்ட வேண்டும் என்று கேட்டபோதே ''கற்பவை கற்க கசடறக் கற்க'' என்கிறார். படிக்க வேண்டியதைப் படியுங்கள். படித்த பின் - படிப்புப் பயன் தந்திருக்கிறதா என்று அறியவும் வழி சொல்கிறார். எவர் படித்தபடி நடக்கிறார்களோ அவர்களுக்கே கல்வி பயன் தந்திருக்கிறது என்பதை, ''நிற்க அதற்குத் தக'' என்று சாற்றி வைக்கிறார்.

படித்துப் பட்டம்பெற்று விட்டோம், உயர்ந்த உத்தியோகமும் கிடைக்கப் பெற்றோம் என்று இறுமாந்திருக்கும் எம்மவர்க்கு நல்ல நெறிகாட்ட நின்ற வள்ளுவர், உண்மையான கல்வியின் பயன் பட்டமும் பதவியுமன்று, ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் ஒருவன் உளன் என்ற நினைவும், அவனைப் போற்றும் பண்பு வளர்ச்சியும்தான் என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வள்ளுவன் சிந்தையில் எழுந்த தெய்வச் சிந்தனை எத்தனை வலியுள்ள தென்பதைப் பின்வந்த பல அறிஞர்களின் இடித்துரைகளும் அறிவியலின் பெருக்கமும் காட்டக் காண்கிறோம்.

''கற்றதனாலாய பயன் என்கொல் வாலறி
நற்றாழ் தொழாரெனின்'' [வன்

எனும் திருக்குறள் அறிவியலாருக்கு அறநெறியும் அருள்நெறியும் காட்டும் கலங்கரை விளக்கமாகும்.

எப்படியும் வாழலாம் என்று கருதப்படும் இந்நாளில் திருக்குறள், இல்லை இப்படித்தான் வாழவேண்டும், இதுதான் பயனுடைய வாழ்வு என்று ஒவ்வொரு துறைக்கும் ஒழுக்கம் கற்பிக்கும் ஒரு தனி நூலாகும். திருக்குறள் மாணவர்களாகிய எமக்கு, ஒரு குறளிலேயே நெறிகாட்ட விரும்பிய ஆசிரியர்,

''மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்
தந்தை என்னோற்றான் எனும் சொல்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மட்டும் கூறி அமைகிறார். கற்க வேண்டிய கல்வியைக் கசடறக் கற்பித்தவர் தந்தை. இவருக்கு மகன் செய்யக் கூடிய கைம்மாறுதான் யாது? சின்னவோர் பொருள் தந்தாரைச் சீவன் உள்ளளவும் நினைத்தல் வேண்டும். எனவே தரணியில் வாழ்வைத் தந்த தந்தைக்கு மகன் செய்யக்கூடியது, இவனைப்பெற இவன் தந்தை என்னதவம் செய்தானோ என்று உயர்ந்தோர் பேசும் சிறப்பைத் தவிர வேறுயாதுதான் இருக்கமுடியும். தந்தைக்கு நன்றிக்கடன் இதுவெனக் காட்டிய புலவர் தாயை மறக்கவில்லை. தன்மகன் ''சான்றோன்'' எனக் கேட்டல் - உயர்ந்தோர் வாய்க் கேட்டல் - ஒன்றே தாய்க்கு நம் நன்றிக்கடன் என்பதையும்,

''ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்''

என்று குறள் வாயிலாகக் காட்டி மகிழ்விக்கின்றார்.

பயன்தரும் கல்வியும், அதனாற் பெறக் கூடிய நல்வாழ்வும் எய்தி வாழுங்கால் நம்மால் வளர்க்கப்படவேண்டியது அறம் என்கிறார்கள் அறிந்தவர்கள். இந்த அறம் தான் எது என்று ஆராய்ந்து களைத்தவர்கள் கணக்கிலர். அயர்ந்த நிலையில் வள்ளுவப் பெரியாரிடம் போந்து அறவொழுக்குக்கு நெறிகாட்டுக என்று கேட்டால், மிக எளிமையாக யாரும் பின்பற்றக் கூடியதாக ஒருகுறள் ஒலிக்கும்,

''மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்
ஆகுல நீர பிற'' [தும் அறம்

மாசிலா மனத்தனாக வாழ்தல் ஒன்றே போதும். திரிகரண சுத்திக்கு மூலம் மனம் எனும் உண்மையை இன்று உளவியலார் ஆய்ந்து கண்டிருக்கிறார்கள். மாசிலா மனத்தராகிய இராமன், தருமன், யேசு, நபி போன்ற அருளாளர் வாழ்வு குறள் வாழ்வாகும். சீரும் திருவும் பொலிய வாழுங்கள் என்று வாழ்த்திய புலவர், செல்வத்தின் அருமையையும் பெருமையையும்,

''அருளி லார்க்கு அவ்வுலக மில்லை
பொருளிலார்க்கு இவ்வுலகமில்லையாங்கு''

என்று கூறியதோடமையாது பொருள் படைத்த ஒருவன் எப்படிப் பயன்பட வாழவேண்டுமென்று கற்பிக்கும் சிறப்பு கற்றோர் உள்ளம் கவர்வதொன்றாகும் எனக் கூறுகின்றார். அருமையான உவமை நயத்தால் விளங்க வைக்கின்றார் செல்வப் பயனை. ஊர்நடுவே கேணி; நன்னீர்க்கேணி. வள்ளுவன்கண்ட நாட்டில் பிறப்பால் வேற்றுமை இருக்க நியாயம் இல்லை. வள்ளுவர் உள்ளத்தை உணர்ந்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இக்கருத்தை வள்ளுவன் குறள் நீதியை மறுவற நன்கு உணர்ந்தவர்கள் கொள்ளுவரோ மனுவாதி குலத்துக்கொரு நீதி? என்று கேட்கிறார். ஊர் நடுவே உள்ள நன்னீர்க்கேணி எவ்வாறு உயிர் இனம் அனைத்துக்கும் நற்பயன் தருகிறதோ அதே போன்று, அறிவுபடைத்த ஒருவன் செல்வம் பயன்படவேண்டும் என்ற பொது நிலைக் கருத்தை,

''ஊருணி நீர் நிறைந்தற்றே உலகலாம்
பேரறி வாளன் திரு''

என்று கூறிப் பணம் படைத்தவர்களுக்குச் செம்மைநெறி காட்டுகின்றார்.

இல்லறமாகிய நல்லறத்தின் பெருமையும் பயனும் வள்ளுவரால் வியந்து கூறப்படுகின்றது. இல்வாழ்வை ஒரு அறமாக்கி அதற்கு ஒழுக்கமும் - நெறி - கற்பித்த பெருமை வள்ளுவர்க்கே உரியதொன்றாகும். இயல்புடைய மூவரும் நல்லாற்றில் - வழியில் - நிற்க வைத்துக் காப்பவன் இல்வாழ்வானென்றும்,

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்
பண்பும் பயனும் அது'' [வாழ்க்கை

என்றும், தென்புலத்தார், தெய்வம், விருந்து, நக்கல் காத்தல் இல்வாழ்வான் கடமை யென்றும் காட்டி நிற்கிறார். அன்புருவாக இறைவனைக் கண்டவன் தமிழன். ஆகவே அன்பு அவன் வாழ்க்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டறக் கலந்த பண்பாக வேண்டும் என்றுதான் பெருமக்கள் போதிக்கின்றனர் கள். இப் பண்பாட்டை வளர்த்து, மனிதன் தெய்வமாக - அருள் நிறைந்த மனத்தனாக வாழ - வழிகாட்ட விரும்பிய வள்ளுவர் - அன்பை வளர்க்க வழிகாட்டுகிறார். பிறர்துயர் கண்டு இரங்கவும், ஏற்றது செய்யவும் தெரிந்து கொள்க. துயர் துடைக்க முடியாத காலத்துப் பசுவின் துயரைத் தானே அனுபவித்த மனுவின் வாழ்வு நமக்கு நெறி காட்டுகின்றது, மனித இனத்தின் சுபீட்சமும், வாழ்வும் காட்ட விழையும் பல்வேறு அரசியற் கோட்பாடுகள் தம்முள் முயங்கி மயங்கும் இந்த நூற்றாண்டில் குறள் நெறிவழிகாட்டுகிறது.

''அறிவினால் ஆவது உண்டோ? பிறிதின் நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை''

இக் கூற்றுத் தமிழ்ப் பண்பாட்டில் பண்பாடி நிற்கக் காணலாம்.

ஆட்சிப் பீடத்திலும் அரசியல் துறையிலும் முயலும் பொறுப்பாளர்க்கும் ஒழுக்கம் காட்ட மறந்துவிடவில்லை வள்ளுவர். வள்ளுவர் காட்டும் கருத்துக்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தியனவாயிருப்பினும் - இன்றும் புத்தம் புதியனவாகவும், அரசியற் சிந்தனையாளர் சிந்தையெல்லாம் நிறைவனவாயும் இருக்கக் காண்கிறோம். மன்னன்மாட்டுக் காணப்படவேண்டிய நெறியைத்தான் அன்று கூறினார் என்று எண்ண இடமின்றி, இன்றும் பொருந்துவதாக அமைந்தவை திருக்குறட் கருத்துக்கள்.

பதவிச் செருக்கும், அதிகார வெறியும் நல்லவர்களையும்கூட ஆட்டிப் படைத்து விடுகின்றன. ''செல்வம்வந் துற்றகாலை தெய்வமும் சிறிது பேணார், சொல்வன தெரிந்து சொல்லார், சுற்றமும் சிறிது நோக்கார்'' என்று கூறியிருக்கிறார்கள். செருக்கால் அழியாது தம்மைக் காத்துக் கொள்ள செயற்கரிய செய்த 'முசுகுந்தன்' போன்றோரா நாம்? இல்லையே! ஆகவே வள்ளுவர் குறள் வழிகாட்டியாகவேண்டியது அவசியந்தானே!

ஆட்சியாளரின் ஆணையை உலகம் - சான்றோர் - உயர்ந்தோர் கேட்கவேண்டுமானால், ஆட்சியாளர் மக்கள் மனம் களிக்க நாடாளவேண்டும் என்கிறார். ''தழுவி'' என்ற சொல்லை லாவகமாகக் கையாண்டு நினைக்க நினைக்க இனிக்கும் கருத்தைப் பெறவைத்து நெறிகாட்டுகிறார்.

''குடி தழீஇக் கோலோச்சும் மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு''

என்ற குறள் அரும் பெரும் பொக்கிஷம். காக்கும் மார்க்கம் கற்பித்த வள்ளுவர் தவறுவோரும் உளர் என்பதை உணர்ந்து போலும் அச்சுறுத்தலும் செய்கிறார்.

''அழக்கொண்ட வெல்லாம் அழப்போம்''

என்னும் நியதியை உணர்த்தி, மக்கள் மனம் கழிக்கக் கோலோச்சுக, தவிர்ந்து, அவர்கள் மனம் வருந்தி விழிநீர் சிந்தினால், கண்ணகி விட்ட கண்ணீர் முத்தமிழ் மதுரையை அழித்த கதையாகிவிடும் என்று இடித்துரைக்கின்றார்.

''அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை''

ஆட்சியாளர் அறிவுடையோராயின் இது ஒன்றே போதும் அவர்க்கு நெறிகாட்ட.

எழுத்தெல்லாம் நெறிகாட்டும் நூல் திருக்குறள் என்பதற்கு ஒருசில காட்டுகள் காட்டத் துணிகிறேன். யாவரும் தெரிந்த குறள்கள் வாயிலாக வள்ளுவர் நெறி காண முனைந்தேன் என்போன்றோர்க்குப் பயன்படவேண்டும் என்பதற்காக.

இ. ஸ்ரீதரன்
பல்கலைக் கழக புகுமுக வகுப்பு
கலைப்பிரிவு - முதலாம் வருடம்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தம்

மல்லிகாவுக்கு வயது இப்பொழுது பதினைந்து இருக்கும். பார்க்க மிகவும் அழகாக இருப்பாள், பேச்சில் இனிமை இழையும், எதைச் சொன்னாலும் அறிவொளி வீசும், வாழ்வின் வசதிகள் எல்லாம் இருந்தன. எல்லாவற்றையும் அனுபவித்தற்குத் தேவையான சொத்தும் நிறைய இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவளுக்கு ஏராளமான நண்பர்களும் இருந்தார்கள். வாழ்க்கையில் இத்தனை வசதிகள் இருந்தாலும் அவளை ஒரு கவலை வாட்டிக்கொண்டிருந்தது. ஆம், அதுதான் தாயில்லாக் கவலை. எத்தனை வசதிகள், செல்வங்கள் இருந்தாலும் அவை எல்லாம் ஒரு பெற்ற தாய்க்கு ஈடாகுமா? மல்லிகா தனது பத்தாவது வயதிலே தாயைப் பறிகொடுத்தாள். அதனால் கவலைப்பட்டுக்கொண்டிருந்தாள். இதனை மாற்றுவதற்கு தந்தையாகிய வேல்மணி செய்த முயற்சிகள் அநந்தம்.

தனது ஒரே மகளான மல்லிகாவைத் தாயற்ற பிள்ளை என்று மற்றவர்கள் சொல்ல முடியாத அளவுக்கு அவளைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்துவந்தார். இப்பொழுது பத்தாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். படிப்பில் மிகவும் கெட்டிக்காரியாக இருந்தபடியால் மேலும் மேலும் படித்துக் கொண்டிருந்தாள். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து பதினெட்டாவது வயதையும் தாண்டி விட்டாள். பாடசாலைக்குப் போய்க்கொண்டே வந்தாள்.

மல்லிகா பாடசாலைக்குச் சென்றதும் வீட்டிலே தனிமையில் இருந்து தனது மகளின் வருங்கால வாழ்வைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். தனக்கு மருமகனாக வருபவன் எப்படியானவனாக இருப்பான், திருமணத்தன்று என்னவெல்லாம் செய்யவேண்டுமென்பதையெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில் ஐயா என்ற ஒலி கேட்டுத் திரும்பினார். வாசலில் வந்தவன் உள்ளே வந்து ஐயா உங்க மகளை ... ... உங்க மகளை என்று பதறினான். என்ன என் மகளுக்கு, அவளுக்கு என்ன வந்தது? சொல்லு தம்பி சொல்லு என்று பதைபதைத்துக் கேட்டார். அவனோ என்னமாதிரிச் சொல்லுவது என்று ஒரு மாதிரியாகத் திடப்படுத்திக்கொண்டு உங்க மகளை மோட்டார் வாகனமொன்று மோதிவிட்டது என்று கூறினான். இதைக் கேட்ட அவருக்கு மயக்கமுண்டாயிற்று. ஆனால் அந்த மயக்கத்தை ஒருவாறு சமாளித்துக்கொண்டு சம்பவம் நடந்த இடத்திற்கு டாக்சி ஒன்று பிடித்துக்கொண்டு சென்றார். மல்லிகாவின் கால்களிலிருந்து இரத்தம் கதகத என்று பாய்ந்துகொண்டிருப்பதைப் பார்த்ததும் அவரது கண்கள் குளமாயின. கொண்டுவந்த டாக்சியிலேயே பெண்ணைக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர். அங்கே அவள் கால்களில் ஒன்றை இழக்க வேண்டி நேரிட்டது. இதனால் அவள் கவலை இரண்டு மடங்காயிற்று. தாயின்பாசம் கவலையை மேலும் அதிகரிக்கச் செய்தது. இதனால் அவள் கண்ணீரும் கம்பலையுமாக இருந்தாள். பூவிழந்த கருங்கூந்தல், பொட்டிழந்த பிறைநெற்றி, வெறுமையோடிய பாழ் சங்குக்கழுத்து, கலகலக்கும் வளையல் இல்லாத கைகள், மல்லிகைப் பூப்போலவே வெண்ணிற ஆடையால் மறைக்கப்பட்ட பருவ எழில் குலுங்கும் மேனி.

கடந்த சில தினங்களாக மகளின் இந்த வெறுமைக் கோலத்தைக் கண்டு அம்மா கவலைப்படாதே இவற்றுக்கெல்லாம் காரணம் என் பொல்லாத ஆசை தான் என்று அவள் கண்களினின்றும் பொல பொல வென அருவியாகப் பாய்ந்து கொண்டிருக்கும் கண்ணீரைத் துடைத்தார். அப்பா இது என் தலைவிதி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் என் அருமைத் தாயை இழந்தேன்; பின்பு என்காலை இழந்தேன்; இனியும் என்னென்னவற்றை யெல்லாம் இழக்க வேண்டி நேரிடுமோ? என் வாழ்க்கை பாலை வனத்தில் காயும் நிலவுதான். இதனால் யாருக்கும் பயனில்லை என்று கண்ணீரோடு கூறினாள். அம்மா கவலைப்படாதே எல்லாம் வல்ல இறைவன் நம்மைக் காப்பாற்றுவான். அவன் எங்களை எப்பொழுதும் கைவிடமாட்டான் என்று தேறுதல் கூறினார். அவளும் தந்தைக்குத் தனது கவலையைக் காட்டிப் புண்படுத்தாது ஒருவாறு மனத்தைத்திடப்படுத்திக் கொண்டாள்.

இந்த வயதில் இப்படியாகி விட்டதே இவளுக்கு என்று தனக்குள் நினைத்துக் கொண்டும் மனித வாழ்க்கை எவ்வளவு பாதுகாப்பில்லாததாகவும் அபாயங்கள் நிறைந்ததாகவும் இருக்கின்றனவே என்று நொந்துகொண்டும் நடந்தார் வெளியே. வருடங்கள் உருண்டோடின.

தனது மகளுக்கு ஏற்ற துணைவனைத் தேடி எங்கும் அலைந்தார். ஆனால் அகப்படவில்லை. எல்லோரும் ஒவ்வொரு சாக்குப்போக்குச் சொல்லி மறுத்து விட்டனர். தனக்குத் தெரிந்த நண்பர்களிடம் எல்லாம் போய்க் கேட்டார். அவர்களோ ஒரு நொண்டிக்கு நாங்கள் பிள்ளையைத் தர மாட்டோம் என்று முகத்தில் அடித்தாற் போற் கூறினார்கள். எல்லோரும் இப்படியே அவரின் முகத்திலே கரிபூசிவிட்டார்கள்.

என் பெண்ணுக்கு இனி வாழ்வே இல்லையா? நொண்டியானால் அவள் பெண் இல்லையா, அவளுக்கு உணர்வு கிடையாதா? அவளின் வாழ்வு மண்ணாவதுதானா? அவளுக்கு இந்தச் சமூகத்திலே இனி இடமில்லையா என்று அவர் மனம் குமுறிற்று. இதற்கெல்லாம் காரணம் என் பொல்லாத ஆசைதான், நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் ஒன்றை நினைக்கின்றது. எனக்கு எவ்வளவு சொத்து இருக்கின்றது, ஊரிலே பங்கு நிலங்கள் இருக்கின்றன, ஆனால் இவ்வளவு இருந்தும் என் மனம் பணம், பணம் என்று இன்னும் பணத்தையே நாடிக்கொண்டிருக்கின்றது. இதனால் என் பணப்பித்துக் கொண்ட மனம் தூரத்து உறவினனென்றாலும் நல்ல பணக்கார மாப்பிள்ளையைத் தேடி இவளுக்கு மணவாளனாக்க வேண்டுமென்று திட்டமிட்டது. ஆனால் இப்போது பணமிருந்தும் பணமில்லாதவன்கூட நொண்டி என்பதற்காக மறுக்கின்றானே என்று தன் மேலேயே குறைகளைப் போட்டுக் கொண்டு புலம்பினார்.

அப்பா ஏன் இப்படி அழுகின்றீர்கள், எனக்கே ஆறுதல் கூறவேண்டிய நீங்களா இப்படிக் கண்கலங்குகின்றீர்கள் என்று மல்லிகா குரல் கொடுத்தாள். ஒன்றுமில்லையம்மா ஏதோ நினைவுவந்தவுடன் என்னையறியாமலேயே நடந்துவிட்டது; போய் தூங்கம்மா என்று அவளை ஒருவாறு அனுப்பிவைத்தார். தந்தையின் சொல்லிலடங்காத சோகங்களை அவர் முகத்தில் இருந்தே தெரிந்துகொண்ட மல்லிகாவுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை.

மல்லிகா அழகிற்கு தனது உடல்வனப்பால் இலக்கணம் வகுத்தாள். அவளது உள்ளம் கொள்ளை கொள்ளும் கள்வெறி அழகிற்காகவே அவளை அடைய எண்ணி ஏங்கிய இளநெஞ்சங்கள் எத்தனை எத்தனை. ஆனால் இன்று சமூகத்தின் கண்மூடிப்பழக்க வழக்கத்தினால் நொண்டியாகி விட்டமையால் அவளை நினைக்கவே பயப்பட்டன அந்த இளநெஞ்சங்கள்.

வேல்மணியின் கவலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டேபோயிற்று. அப்பா நீங்கள் ஏன் இப்படி அலைகின்றீர்கள்? திருமணம் செய்யாமலே எத்தனையோ பெண்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். வாழ்கின்றார்கள். மணிமேகலை போன்றவர்கள் இப்படியானவர்கள் தானே. அவள் வாழவில்லையா? அதே போல நானும் இருந்துவிட்டுப் போகின்றேன். ஆனால் நான் துறவியாகச் செல்லாமல் வீட்டிலிருந்தே உங்கள் பணிவிடைகளைச் செய்தே என் காலத்தைக் கழிப்பேன். என்னால் வீண் சிரமம் எடுக்காதீர்கள். யாராவது முன்வந்து பிள்ளை கொடுத்தால் ஏற்றுக் கொள்வோம்; இல்லாவிடில் இப்படியே இருந்து வாழ்வோம் என்று தந்தைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அரிய உரையையே நிகழ்த்திவிட்டாள்.

பணமிருந்தும், நிலமிருந்தும், வசதி இருந்தும், அழகிருந்தும், படிப்பிருந்தும், குணமிருந்தும் இவைகள் எல்லாம் மண்ணுவதுதானு என்று ஏங்கிக்கொண்டிருந்த வேளையில் யாரோ கூப்பிடும் ஓசை கேட்டுத் திரும்பினுர். அவர் வாயினின்றும் அக்கா என்று தன்னையறியாமலே கூப்பிட்டார். அவர்களை வீட்டுக்கு அழைத்துச் சென்ருர். அவரது முகம் இப்பொழுது சூரியனைக் கண்ட தாமரைபோன்று காட்சியளித்தது.

அக்கா! என் பணத்திமிரினுல், இன்னும் பணம் சேர்க்கவேண்டும் என்ற பணப் பித்திஞல், வேறு பணக்கார மாப்பிள்ளைக்கு என் பெண்ணைக் கொடுக்க முன்வந்தேன். சொந்தத்திலே பணமில்லாமையால் உங்களை எல்லாம் வெறுத்தேன். நீங்கள் பணம் கேட்டபோது மறுத்தேன். தங்குவதற்கு இடங் கேட்டபோது மறுத்தேன். இவ்வளவுதானு? இன்னும் எத்தனையோ இந்தப் பணத்தால் என் சொந்தத்தையே அழிக்க முயன்றேன். என்னை மன்னித்துவிடுங்கள் அக்கா. சரி நடந்ததெல்லாம் போகட்டும்; உனது மகளின் காலில் ஊனம் ஏற்பட்டதை அறிந்தும் அவள் என்றும் கன்னியாகவே இருக்க விரும்பியதையும், நீ படும் துன்பத்தையும் கண்டு இங்கு நாம் வந்தோம். உனக்கு இரத்தம் துடிக்காவிட்டாலும் என் இரத்தம் துடிக்கிறதடா. என் மகனை உன் மகளுக்குக் கொடுக்கச் சம்மதமா என்று கேட்டாள்.

அக்கா, இதில் சம்மதம் கேட்கிறதில் என்ன இருக்கிறது. இப்போது என் மனம் திருந்திவிட்டது. என் மகளுக்கு, ஏன் என் வீட்டிற்கே நீங்கள்தான் விளக்கேற்றிவிட்டீர்கள். இருண்டுபோய்க் கிடந்த என் வீட்டிற்கு ஒளியுண்டாயிற்று என்ருன். குறைந்த கோலமாயிருந்த மல்லிகாவின் வாழ்வை நிறைகோலமாக்கிய உங்களுக்கு எப்படி அக்கா நன்றி சொல்வது. நீங்கள் தான் என் தெய்வம். தம்பி எவ்வளவு பணம் இருந்தாலும், நிலமிருந்தாலும், என்னதான் இருந்தாலும் சொந்தத்தை மறக்கலாகாது. அந்தச் சொந்தம் துன்பக்காலத்திற்ருன் தெரியும். எங்கள் காலத்திற்ருன் இந்தச் சொந்தம். கூடிய காலம் பிரிந்திருந்தாலும் இனியாவது எங்கள் சொந்தம் நீடூழி வாழட்டும் அக்கா. அப்பொழுது அவர் கண்களினின்றும் கண்ணீர் முத்து முத்தாகச் சொட்டிக்கொண்டிருந்தன. ஆனுல் அந்தக் கண்ணீர் முன்னைய கண்ணீராகவா இருக்கும். அப்படியிருக்க முடியாது. ஆனந்தக்கண்ணீராகத்தானே இருக்கும்.

வி. மாணிக்கம்
பல்கலைக்கழக புகுமுகவகுப்பு
கலைப்பிரிவு - இரண்டாம் வருடம்

---

சிறு சிறு தொந்தரவுகள் ஏற்படினும்
சிலர் அமைதி குலைந்து ஆத்திரப்படுகிருர்கள்,
ஆனுல் மனம் பரிசுத்தமடைந்து கட்டுப்படுத்தப்படின்
எந்த நிலைமையையும் எதிர்நின்று, அமைதியாக இருக்கலாம்.

— சுவாமி இராமதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரத்தில் ஒரு கோபுரம்

மனத்தை மயக்கும் மாலைப் பொழுதான அந்த நேரத்தில், நிர்மலமான வானத்தின் மேற்குத் திசையில் சூரியன் சாய்ந்து கொண்டிருந்தான். கடல் அலைகளின் இரைச்சல் ஒலி மெல்லக் கேட்டுக் கொண்டிருந்தது. புள்ளினங்களெல்லாம் தத்தம் கூடுகளை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. வீதியில், வேகமாகச் செல்லும் வண்டிகளையும், பரபரப்புடன் அசைந்து திரியும் மனிதர் கூட்டங்களையும் அமைதியில் ஒன்றிப்போய் வேடிக்கை பார்க்கும் குழந்தை ஒன்றின் ஆவலுடன் பார்த்துக் கொண்டேயிருந்த நாகராஜன் திரும்பிச் சற்றே நிமிர்ந்து பார்த்தான். தமிழரின் கலையின் சிறப்பிற்குக் கட்டியம் கூறுவது போல், விண்ணைநோக்கிக் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் கடற்கரைக் கோவிலின் கோபுரத்தில் வடிக்கப்பட்ட சிலைகளைச் சிறிது நேரம் வைத்தகண் வாங்காது உற்றுப் பார்த்தான். தமிழரின் கலைத்திறன் எவ்வளவு உயர்ந்தது என்று நினைத்தபோது அவன் நெஞ்சம் பூரிப்பால் விம்மியது. ஆனால் அந்தப் பூரிப்பினுள் ஒரு மனக்கவலையும் அவன் நெஞ்சத்தில் இருக்கத்தான் செய்தது. அவன் கவலை இதுதான். வெளியே நின்று கோபுரத்தைப் பார்த்து இரசிப்பதோடுதான் அவன் தன் உள்ளத்தை நிறைவு செய்து கொள்ள வேண்டும். உள்ளே சென்று எவர்க்கும் நல்லருள் புரியும் இறைவனைத் தரிசிக்க முடியாது. அதற்கு அவனுக்கு அனுமதி கிடைக்கவும் மாட்டாது காரணம் ... ... அவன் ஒரு சிறுபான்மைத் தமிழன்.

மூடநம்பிக்கைகளின் பிரதிநிதிகளாயுள்ள இன்றைய தமிழர் சமுதாயம் சிறுபான்மையோரைக் கோயிலுக்குட் செல்ல விடாது நந்திபோல் குறுக்கே நின்று மறிக்கிறது; ''ஆண்டவன் முன்னே அனைவரும் சமம்'' என்ற கொள்கையையும் குழிதோண்டிப் புதைக்கிறது. நாகராஜனின் மனம் வேதனையடைந்தது. கோயிலின் உள்ளே நுழைய அவனுக்கு அருகதை கிடையாது. அதற்குப் பாழும் சமுதாயம் கூறும் ஒரே ஒரு காரணம் ... ... ? அவன் ஒரு சிறுபான்மைத் தமிழன்.

யாழ்ப்பாணத்திலே பிறந்து யாழ்ப்பாணத்திலேயே குடிகொண்டிருக்கும் சிறுபான்மைத் தமிழருக்கு மக்களின் பொதுவிடமாக மதிக்கப்படும் கோயில்களினுள் நுழைய உரிமையில்லையா? நாகராஜன் மனம் குமைந்தான். ஏன் அவர்கட்கு உரிமை மறுக்கப்படுகிறது. அவன் சிறுபான்மையனாய்ப் பிறந்து விட்டது அவன் குற்றமா? மனிதனாகப் பிறந்து விட்ட ஒருவன் என்ற சகோதரத்துவத்துடன் பழகாமல், ''இவன் இன்னசாதி, இவன் இன்ன இனம்'' என்று பிரித்து வைத்து சாதிகளுக்கிடையே சண்டை மூளக்கூடிய வகைகளை வழிகோலிக் கொடுத்துவிட்ட சமூகத்தின் குற்றமா? இல்லை அவனைச் சிறுபான்மையோனாகப் படைத்து விட்ட இறைவனின் குற்றமா? நாகராஜனுக்கு விளங்கவில்லை.

''இப்பொழுதே கோயிலினுள்ளே தைரியமாகச் சென்று சுவாமிதரிசனம் செய்துவிட்டு வந்தால் என்ன?'' என்று அவனது இளம் வாலிப முறுக்கேறிய மனம் துடித்தது. ஆனால் உள்ளே நுழைவதென்பது அவனால் இயலக்கூடிய காரியமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கோயில் வாசற்படியில் நுழைய முயன்றுவிட்டாற்கூடச் சமூகம் அவனை நசுக்கிவிடாதா ?

''தீண்டாமை என்றும் வேண்டாமை'' என்பதைச் சமூகம் என்று உணரும்? தீண்டாமை தீமை என்பது எப்போது மக்களுக்கு விளங்கும்? தீண்டாமைக்கு என்று சாவுமணி அடிக்கப்படும்? விடை தெரியாக் கேள்விகள் இவை. மனிதனை மனிதனாக மதியாமல் சிறுபான்மையோரைத் தள்ளிவைத்து வாழும் இப்பாழும் சமூகத்தைச் சுட்டெரிக்க வேண்டுமென்று நாகராஜனது மனம் பரபரத்தது. அவனுக்கு மட்டும் நெற்றிக்கண் இருந்துவிட்டால் இப்பாழும் சமூகத்தைச் சுட்டுப் பொசுக்கிவிடமாட்டானா? அவன் மனத்திலே ஏதேதோ சஞ்சலங்கள், சஞ்சலங்கள் நிறைந்த மனத்துடன் அவன் கடற்கரைக் கோயிலிலிருந்து வீடுநோக்கிச் சென்றான்.

காலதேவன் தனது கடமையில் கடுகளவேனும் தவறாது, தனது வழியில் இராஜநடை போட்டுக்கொண்டு சென்றான். சில கோயில்கட்குள், சிறுபான்மையோர் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதன் காரணமாகச் சிறுபான்மை மக்கள் பொங்கியெழுந்தனர். இதுவரை காத்திருந்தும், ஆலயத்துட் பிரவேசிக்க அனுமதி கிடைக்குமென்ற நம்பிக்கைகளெல்லாம் நாசமாக்கப்பட்டபின்னர் அவர்கள் பொங்கியெழுந்தனர். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டல்லவா? என்ன செய்தாலும் என்றும் பொறுத்திருக்க அவர்களென்ன பூமாதேவியா? பொங்கியெழுந்து அவர்கள் அநீதிசெய்யும் சமூகத்தை எதிர்த்துப் போராடியது என்னவோ அகிம்சாதர்மத்தைப் பின்பற்றியே யிருந்தது. ஆனால் அநீதியை எதிர்த்துப் போரடும்போது சிலவேளைகளில் நீதி தோற்றுவிடுவதில்லையா? அதுபோல் இங்கும் நடக்கவேண்டுமென்று விதி இருந்தது போலும். சிறுபான்மையோர் உள்ளே செல்ல இப்போராட்டம் வழிவகுத்துக் கொடுக்கவில்லை.

இந்தியாவிலுள்ள மிகப் பிரசித்தி வாய்ந்த கோயில்கள் யாவுமே என்றோ சிறுபான்மையருக்காகத் தமது கதவுகளை அகலத் திறந்துவிட்டன. இலங்கையிலுள்ள பெரும் கோயில்களின் வாசற் கதவுகளும் சிறுபான்மையோருக்காகத் திறந்துவிடப்பட்டன. ஆனால் கடற்கரைக் கோயில் உட்படச் சில கோயில்களுக்கு மட்டும் தயக்கம் ஏன்?

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற பெரியோர் வாக்கையோ அல்லது ''சாதி இரண்டொழிய வேறில்லை'' என்ற ஒளவையாரின் அருள்மொழியையோ மக்கள் பரிபூரணமாக உணர்ந்திருந்தால், அக் கோயில்களின் கதவுகள் என்றோ சிறுபான்மையோருக்காகத் திறக்கப்பட்டிருக்குமே! அப்படி அவர்கள் உணராததன் காரணம் என்ன? மிகப் படித்த மனங்களால் பண்பட்ட சாஸ்திரங்களை அலசி ஆராய்ந்த மிகப்பெரிய மேதைகளாலெல்லாம் ஆலயம் என்பது பொதுவான, சாதி வேற்றுமை பராட்டப்படக் கூடாத இடம் என்று சொல்லப்பட்டிருக்கையில், அரை குறைப் படிப்புப் படித்து முடித்துவிட்டு வந்தவர்களெல்லாம் தாங்கள் மெத்தப் படித்தவர்கள் என்று கூறிக்கொண்டு தீண்டத்தகாதவர்களையெல்லாம் கோயிலினுள் விடக்கூடாது என்றால் அது எவ்வளவு நகைப்புக்கிடமானதா யுள்ளது. இவை உணரப்பட்டு சிறுபான்மையோரை உள்ளே விட ஆலயக் கதவுகள் திறக்கப்படுமா?

சிலநாட்கள் கழிந்தபின் ஒருநாள், நாகராஜன் கடற்கரைக் கோவிலின் முன்றிலில் நின்றபடி கோபுரத்தைப் பார்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கெண்டிருந்தான்: கோபுரத்தின் பின்னணியில் சரித்திரப் பிரசித்தி அடைந்ததும், சமய அற்புதங்கள் நிகழ்ந்த இடமுமாகிய கடற்கரைக் கோவில் தெரிந்தது. சிறுபான்மையோருக்காகப் பூட்டப்பட்டிருக்கும் கதவுகளையும் அவன் பார்க்கத் தவறவில்லை. கம்பீரமாக நெடிதுயர்ந்து நின்றது அக்கோபுரம். ஓ......... அது எவ்வளவு உயர்ந்த கோபுரம்! வானளாவி நிற்கின்றதே! உயர்ந்த கோபுரந்தான்! ஆனுல் தாழ்ந்த எண்ணங்கள். கோபுரம் நெடிதுயர்ந்து நின்று என்ன பயன்? அதைச் சுற்றி, சூழலில் வாழும் மனிதர்களின் மனங்களல்லவா உயர்ந்து நிற்க வேண்டும். நாகராஜனிடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது: உயர ஒரு கோபுரமிருந்தும், சிறுபான்மையோரை உள்ளே விடக்கூடாது என்ற எண்ணத்தால் தாழ்ந்திருக்கும் மனிதர்களின் மனம் கோபுரத்தைப் போல என்று உயர்ந்து நிற்கும்? அவர்களுடைய கண்களை மறைத்து நிற்கும் மாயத்திரை அகன்று கோயிலினுள்ளே இருக்கும் தேவனைக் காண எப்போ கோவிலின் வாயில்கள் திறந்து நிற்கும்? அவனுக்கே விடை தெரியாக் கேள்வி அது. காலம்தான் அதற்கு விடை கூறவேண்டும்.

அ. உமாசங்கர்
பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு
உயிரியற்பகுதி - 2-ம் வருடம்

அன்பு பல கிளைகளையும் விழுதுகளையும் கொண்ட ஆலமரம் போன்றது.
ஆசை, வாஞ்சை, பாசம், நேசம், தயை. தாட்சணை, புண்ணியம், விருப்பம், இரக்கம், காதல், கருணை, அருள், பத்தி ஆகிய பதங்களெல்லாம் அன்பின் வெவ் வேறு நிலைகளாகும்.

" ஆழ்ந்து கண்ட அறிவினுலும், ஓயாதுழைக்கும் உழைப்பினுலும், தேர்ந்து செய்யும் தியாகத்தாலும் மாந்தர் மண்ணகத்தில் மகிழ்வெய்தலாம் "

— புத்தர்பிரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவு காண்போம்

M. A. C. மகறூப்
பல்கலைக்கழக புகுமுகவகுப்பு
கலைப்பகுதி - 2-ம் வருடம்

பொறுத்தது போதும் போதும்
பொங்கிடு தோழா உன்னை
உறுத்திய கவலைப் பேயை
உதறிடு உண்மை காண
துடித்தெழு இளமை நெஞ்சின்
துயர்களைச் சமுதா யத்தில்
வெறுத்திடு மடமை நீக்கு
வீறுகொள் விடிவு காண்போம்.

வஞ்சனை சூது மோசம்
வறுமையின் வடிவம் என்றும்
துஞ்சிடா உள்ளத் தோடு
தூயநற் சேவை செய்ய
அஞ்சிடாச் சிங்க மேயுன்
ஆண்மையைச் சமுதா யத்தில்
எஞ்சிடும் ஏழ்மை போக்க
எழும்படா விடிவு காண்போம்.

நஞ்செனும் மதுவ ரக்கன்
நாட்டினை வாட்டி டாது
செஞ்சமர் செய்து மக்கள்
செகமெலாம் வெற்றி கொள்ளக்
கொஞ்சமும் பின்னி டாது
கொடுமையைப் போக்கு தற்கு
வஞ்சமில் துணிவு கொண்ட
மாணவ மணியே வாடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் சுற்றுலா அநுபவங்கள்

12-வது உலக சாரண ஜம்போரியில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் வகிப்ப தற்காகவும் உலகச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவும் 1967-ம் ஆண்டு ஆடி மாதம் 19-ந் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து B. O. A. C. Super V. C. 10 விமானத்தில் புறப்பட்ட 9 பேரில் நானும் ஒருவன். அவர்களுள் இரு வர் தலைவர்கள். அவர்கள் திருவாளர்கள் K. B. விஜேயசிங்கி, D. C. O. T. அமர சேகரா ஆகும். மற்றைய சாரணர்கள் இராஜேசுவரன், செரீப், ஜெயசேனு, சிவராஜா, ஹென்றி, வேலாயுதம் ஆகி யோர். நாம் எல்லோரும் எமது பிரியா விடைகளைக் கூறிவிட்டு விமானத்தின் படி களில் ஏறினேம். எம்மை அழகிய பணிப் பெண்ணும் உத்தியோகத்தர்களும் வர வேற்றனர். விமானம் புறப்பட ஆயத்த மானதும் ஆசனப் பட்டியைக் கட்டினேம். சிறிது நேரத்தில் குளிர்பானம் பரிமாறப் பட்டது. அத்துடன் V. C. 10 உருவம் ஒன்றும் ஞாபகார்த்தமாகக் கொடுக்கப் பட்டது. விமானம் கோலாலம்பூர் விமான நிலையத்தை அடைந்தது. நிலை யம் மிக நவீன முறையில் அமைக்கப்பட் டிருந்தது. சிறிது நேரத்தில் விமானம் சிங்கப்பூருக்குப் புறப்பட்டது. சிங்கப் பூரை 45 நிமிடத்தில் அடைந்தோம்.

அங்கே சாரண இயக்கத்தினர் எம்மை மரியாதைகளுடன் வரவேற்றுச் சாரண தலைமை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். பின்பு நான் திரு. கந்தையா என்பவரின் வீட்டில் தங்கினேன். அவரின் வீட்டிற்குச் செல்லும்பொழுது சில பகுதி களைப் பார்வையிட்டேன். புதிய அழகிய கட்டடங்களைக் காணக்கூடியதாக இருந் தது. அவரின் வீட்டில் முதன்முதலாக வர்த்தக தொலைக்காட்சியைப் பார்க்கும் சந்தர்ப்பங் கிடைத்தது. பின்பு போகும் இடமெல்லாம் பார்க்கும் சந்தர்ப்பங் கிடைத்தது. அன்றைய இரவை அவரின் வீட்டிலே கழித்தேன். காலையில் ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பினேம். தென் கிழக்காசியாவின் வியாபார கேந்திர தானத்தைக் கண்டேன். மற்றும் சாக்கிய முனி காயாகோவில், ஆயிரம் விளக்குகள் கொண்டது, 50 அடி உயரமான புத்த சிலை, ஸ்ரீ மாரியம்மன்கோவில் என்பனவற் றையும் பார்த்தேன். அன்று இரவு விருந் தளித்துக் கௌரவித்த இலங்கையர் விளையாட்டுக் கழகத்திற்கு நாம் என்றும் கடப்பாடுடையோம். அன்றைய இர வைச் சாரண தலைமை அலுவலகத்தில் கழித்தோம். சிங்கப்பூரின் இரவு வாழ்க்கை மிகப் பிரபல்யமானது. 21-7-67 காலை உணவை ஒரு சீன ஹோட்டலில் உண் டோம். சிங்கப்பூரில் சில பொருள்கள் வாங்கினேம் என்று கூறத் தேவையில்லை, அன்று ஒரு ஜப்பானிய ஜெட்மூலம் தாய் லாந்துக்குப் பயணமானேம்.

பாங்கொக்கை காலை 11-30 மணியள வில் அடைந்தோம். இங்கு எமரல்ட் புத்தகோவிலில் தாய்லாந்தின் மன்னனைக் காண முடிந்தது. நாம் ஒரு படகில் மிதக் கும் சந்தை நடைபெறும் இடத்தை அடைந்தோம். இது ஆற்றில் உளது. இங்கு பொருள்களை விற்பவரும் வாங்கு பவரும் படகிலேயே வருவார்கள். மக்கள் படகிலேயே வசிக்கிறுர்கள். வள்ளங்களில் இன்னிசை, நடனங்கள் அளிப்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ளவர்களை மகிழ்விக்கிறார்கள். அத்துடன் சனிக்கிழமைச் சந்தையையும் பார்த்தோம். அங்கு பொருள்களை விற்பதுடன் களியாட்டத்திற்குத் தேவையான வசதிகளும் உண்டு. நாம் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடக்கும் மைதானத்திற்கு அருகிலுள்ள சாரண தலைமை அலுவலக மாடிக் கட்டடத்திலேயே தங்கியிருந்தோம். 24-ம் திகதி தாய் இன்டர் நாஷனல் விமானமூலம் ஹொங்கொங்கை அடைந்தோம்.

ஹொங்கொங் உயரமான அழகிய புதிய கட்டடங்களை உடையது. நவீன ஹில்டன் [HILTON] ஹோட்டல்களையுடையது. எல்லா வகையான பொருள்களையும் எல்லா வகையான விலைகளிலும் பெறலாம். நல்ல வீதிகளில் பன்றிவாலும், உடலோடு ஒட்டிய நீள் காற்சட்டைகளும் அணிந்த அநேக பெண்களை எந் நேரத்திலும் காணலாம். விக்டோரியா பீக் என்ற மலை உச்சிக்கு மலையில் செங்குத்தாகச் செல்லும் டிரும் வண்டியில் சென்றோம். அங்கிருந்து ஹொங்கொங்கையும் செஞ்சீனாவின் ஒரு பகுதியையும் பார்க்கக் கூடியதாக இருந்தது. மாலையில் விளக்குகள் எரிவது அழகாக இருந்தது. "நியூ டெறொடெரீஸ்" என்ற பகுதிக்குச் சென்றோம். இங்கு இன்றும் சீனர்கள் பழைய கால முறையில் வசிக்கின்றனர். கம்யூனிஸ்டுக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் நடைபெறும் சண்டைகளைக் கண்டோம்; சத்தங்களைக் கேட்டோம். கடைக் கண்ணாடிகளில் மாஓவின் தத்துவங்களை எழுதுபவர்களையும், கண்ணாடிகளை உடைப்பவர்களையும் கண்டோம். 27-7-67 ஹொங்கொங் விமான நிலையத்தில் இருந்து ஒரு காதி பசிபிக் [Cathy Pacific] விமான மூலம் டோக்கியோவின் கனேடா விமான நிலையத்தை அடைந்தோம்.

உலகின் இரண்டாவது பெரிய நகரமும் சனத்தொகை கூடியதும் டோக்கியோ. விமான நிலையத்தில் இருந்து ஒரு தண்டவாளத்தில் ஓடும் மொனோறெயில் (Monorail) வண்டியில் கோமகாமி என்ற இடத்தை அடைந்தோம். மொனோறெயிலில் பிரயாணம் செய்தது மறக்கமுடியாததொன்று. அது மிக விரைவாகச் செல்லும். அது மின்சாரத்தில் ஓடுவது. அதிலிருந்து கீழேயுள்ள பட்டினங்களை பார்க்கலாம். உலகின் மிக வேகமான புகைவண்டியையும் கண்டோம். நான் கோமகாமியில் கோபாயாஷி [Kobayashi] குடும்பத்தினருடன் தங்கினேன். நான்கு பேர் கொண்ட குடும்பம் அது. 15 வயதுடைய மகள், 13 வயதுடைய சாரண மகன் ஆகியோரே பிள்ளைகள். அவர்கள் எமக்குத் தேவையான சகலவற்றையும் மனம் கூசாமல் செய்தனர். நான் பின்பு தங்கிய எல்லா வீடுகளிலும் எனக்குத் தேவையான சகலவற்றையும் மிக அன்பாக செய்தனர். இவர்களுக்கு ஆங்கிலம் அதிகம் தெரியாது. யப்பான் மின்சார உபகரணங்களுக்குப் புகழ்பெற்ற படியால் டிரான்சிஸ்டர் றேடியோ போன்றவை இருந்தால் பார்க்கக் கொண்டுவரும்படி மகனிடம் கேட்டோம். அவர் சிறிதுநேரம் யோசித்து விட்டுப் போய்த் தமக்கையாரை அழைத்து வந்து எமக்கு முன் இருத்தினார். நாம் அவருடன் சிறிது நேரம் கதைத்தோம். இவர்களின் வீட்டில் நானும் இன்னொருவருமே நின்றோம். மற்றையோர் வெவ்வேறு வீடுகளில் நின்றனர். நாம் மறந்துபோய் காலணிகளுடன் வீட்டுள் சென்றுவிட்டோம். அது வழக்கமில்லை. பின்புதான் நினைத்து வந்து காலணிகளைக் கழட்டினோம். உடன் அவர்கள் எங்களுக்கு வீட்டுள் போடுவதற்கு ஒரு காலணியும், வெளியில் போடுவதற்கு ஒன்றுமாக இரு புதிய காலணிகளைத் தந்தனர். காலணிகளைக் கழட்டியது அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. நிலத்திலிருந்து கொண்டே உணவு உண்டோம். உணவை 'Chop Sticks' என்னும் இரு தடிகளால் உண்டோம். வாணவேடிக்கை அங்குள்ள சிறுவர்களின் பிரியமானவற்றில் ஒன்று; நாமும் அதில் கலந்து கொண்டோம். ஒருநாளிரவு ஜப்பானிய கலாசார நடன நிகழ்ச்சி ஒன்றிற்குச் சென்றோம். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் தேசிய உடையான கிமோனு ஒன்றை எமக்கும் பரிசளித்தனர். நாம் அதை அணிந்து கொண்டே சென்ருேம். வாத்தியங்கள் ஒலிக்க மேடையில் நின்று சிலர் ஆடுவார்கள், நாம் அதைப்பார்த்து மேடையைச் சுற்றி ஆடவேண்டும். இரு பாலரும் சமமாகவே ஆடுவார்கள். மற்றும் தேசிய மியூசியம், யூனியோ பூங்கா, ராஜபூந்தோட்டம், மாளிகை, சோனி [Sony] ரேடியோ, தொலைக்காட்சி, ஒலிப்பதிவுப்பெட்டி என்பன உற்பத்தி செய்யுமிடம் என்பவற்றையும் பார்வையிட்டோம். கௌரவ நகரபிதா, இலங்கைத் தூதுவர் கௌரவ தென்னக்கூன் ஆகியோரை சந்தித்து அளவளாவும் சந்தர்ப்பமும் கிடைத்தது. ஜப்பானின் நவீன ஹோட்டலான ஹோட்டல் நியூ ஒட்டானி [Hotel New Otani] இல் சில மணிகளைக் கழித்தோம். இது கொழும்பு சிலிங்கோ ஹவுஸ்ஐப் போல் ஐம்பது மடங்கு பெரியது. அதன் உச்சியில் சுழலும் தேநீர்ச்சாலைத் தட்டு ஒன்று உளது. ஓரிடத்தில் ஒரு மேசையில் இருந்துகொண்டே டோக்கியோவைத் தேநீர் அருந்திக்கொண்டே பார்க்கலாம். இது ஒருமுறை சுற்றிவர கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ மணி நேரம் எடுக்கும். இங்கு நாம் செல்ல ஹோட்டல் நிர்வாகம் இலவசமாக அனுமதியளித்தது. ஆசியாவின் நவீன நகரத்தில் இருந்து அமெரிக்கக் கண்டம் நோக்கி 29-7-67 இரவு ஒரு [Pan AM] விமான மூலம் ஹவாய் பயணமானேம். 29-ம் திகதி இரவு புறப்பட்டு திகதிக் கோட்டைக் கடந்து மறுபடியும் 29-ம் திகதி காலை ஹோனலூலூவை அடைந்தோம். பிரயாணத்தின் போது கடிகாரத்தில் மாற்றம் செய்ய ஒவ்வொரு இடத்திலும் சில நேரம் செலவிட்டோம்.

ஹவாய் தீவின் நீச்சல் உடை அணிந்த ஆண்களும் பெண்களும் நிறைந்த வெண்வைக்கி கடற்கரை, முதல்தர சௌகரிய ஹோட்டல்கள், பூக்கள், பழங்கள், எரிமலையான மொவுண் லோசு, கூலா கன்னிகள் என்பனவற்றை ரசித்தோம். மற்றும் சர்வதேச சந்தை இடத்தில் புல் ஆடை அணிந்த கூலா கன்னிகளின் நடனத்தையும் கண்டோம். 29-ஆம் திகதி இரவை ஹொனலூலூ விமானத்தள அறைகளிற் கழித்தோம். 30-ஆம் திகதி இரவு ஒரு (Pan AM) விமான மூலம் புறப்பட்டு 31-ம் திகதி காலை சியற்றிலை (Seattle) அடைந்தோம். அங்கிருந்து ஸ்போக்கேன் (Spokane) விமான நிலையத்தை அடைந்தோம். அங்கிருந்து ஜம்போரி திடலை அடைந்ததும் சாரணவாழ்க்கையில் அடையக்கூடிய பெரும் பேற்றை அடைந்த மகிழ்ச்சி எம்மை மூடிக் கொண்டது.

12-வது உலக சாரண ஜம்போரி 1-8-67 தொடக்கம் 9-8-67 வரை பரகட் ஸ்டேட் பார்க் (Farragut State Park) என்னும் பெரிய திடலில் நடைபெற்றது. இதன் குறிக்கோள் சிநேகிதத்திற்காக (For Friendship) ஆகும். இளம் சந்ததியினருக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் சிநேகிதத்தை வளர்ப்பதே நோக்கம் ஆகும். ஜம்போரி நிகழ்ச்சி நிரலில், பல விறுவிறுப்பான கலாசார நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. உத்தியோக பூர்வத் திறப்புவிழா 1-ஆம் திகதி மாலை நடைபெற்றது. நாம் சாரணஇயக்க ஸ்தாபகரையும் இறைவனையும் முதலில் நினைவுகூர்ந்தோம். பின்பு திருவாட்டி பேடன்பவல், ஜம்போரிப் பிரதானி; ஐடாஹோ மாநிலத் தேசாதிபதி என்போர் 100க்கு மேற்பட்ட நாடுகளில் இருந்துவந்த 12500க்கு மேற்பட்ட சாரணர்களுக்கும் மற்றும் சாரண தலைவர், உத்தியோகத்தர், பொதுமக்கள் முன்னிலையில் உரையாற்றினர். பின்பு ஒவ்வொரு நாட்டு கலை, கலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாம் கண்டிய நடனத்தை அளித்தோம். முடிவில் வாணவேடிக்கை மனதைக் கவர்ந்தது.

ஜம்போரியில் முக்கலை நிகழ்ச்சிகளில் ஒன்று ஜம்போரி அட்வென்சர் பட்டி (Jamboree Adventure Award) ஆகும். அவர்கள் 13 விதமான தகைமைகளை விதித்திருந்தனர். அதில் 8 இல் தகுதி பெற்றவர்களுக்கு அது வழங்கப்பட்டது. இலங்கையில் இருந்து சென்ற எல்லோரும் இதற்கு தகுதி பெற்ருேம். தகுதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாவன (1) வேறு தேசத்தவருடன் பாசறையில் உணவு உண்ணல் (2) மீன் பிடித்தலும், அம்பு எய்தலும் (3) கை யெழுத்துக்களும் விலாசங்களும் ஆறு நாட்டுச் சாரணரிடமிருந்து பெறுதல் (4) வன பாதுகாப்பில் பங்கு கொள்ளு தல் (5) துணிகரச் சுவடு பற்றிச் செல் லல் (6) குறிக்கோளை மூன்று மொழி களில் அறிதல் (7) பிறவுண் சீ தீவு நடைப் பயணம் (8) நீந்துதல் (9) வள்ளம் ஓட்டுதல் (10) வைட் விளையாட்டு (Wide Game) மற்றும் வேறு மொழி களில் சாரணப் பாட்டுப் படித்தல், ஸ்கில் - ஓ - ருமாவில் ( Skill - O - Rama ) ஒரு நிகழ்ச்சி செய்தல், கண்காட்சிசாலைக் குச் சென்று அதைப்பற்றிய விளக்கம் கொடுத்தல் என்பன ஆகும்.

நான் ரெக்சாஸ் மாநிலைச் சாரண குழு ஒன்றுடன் உணவுண்டேன். அவர்க ளில் ஒருவன் எனது சூழலில் உண்டார். எமக்கு பெரிய அட்டை ஒன்றில் 'Friendship' என்ற வார்த்தையில் ஒரு எழுத்து அச்சடித்து தந்திருந்தனர். பத் துப்பேர் ஒன்றுசேர்ந்து அவ்வார்த்தையை ஏற்படுத்திவிட்டு அருகிலுள்ள அலுவ லகத்திற்குச் சென்றால் அங்கு எமது ஒற்றுமையை பரிசோதித்துவிட்டு எமக்கு பரிசளிப்பர். எம்மை ஜம்போரி உத்தியோகத்தர்கள் மாடு மேய்ப்பவர் களின் (Cow Boys) போட்டியான ரேரடியோ (Rodeo) விற்கு அழைத் துச் சென்றனர். அங்கு திமிர்பிடித்த காளைகளை அடக்குவது, குதிரையிற் சகா சங்கள் செய்வது, அழகிய சிவப்பிந்திய பெண்களின் குதிரைச் சகாசங்கள் என்பன வற்றைக் கண்டு களித்தோம். அதே வேளையில் எமக்குத் திரைப்பட, வானொலி தொலைக்காட்சிப் பாடகர் றெக்ஸ் அலென் இன்னிசை விருந்தளித்தார். அத்துடன் தான் பழக்கிய குதிரையில் சகாசங்கள் செய்து காண்பித்தார். மற்றும் நீந்துதல், படகு செலுத்துதல், நடைப்பயணம் என் பவற்றிலும் சந்தோஷமடைந்தோம். மலை உச்சியில் இருந்து ஜம்போரி திடல் மிக அழகிய தோற்றமளித்தது மற்றும் குரங்குப்பாலம் கடத்தல், செங்குத்தான மலையேறல், கயிற்றூற் கடத்தல், மரம் கொத்தும், அரியும் போட்டிகள், மீன் பிடித்தல், குறிபார்த்து அம்பெய்தல் என்பனவற்றை ரசித்தோம். நாம் நிலக் கரியில் எமது உணவை சமைத்து உண் டோம். ஓய்வு நேரத்தை மற்றைய சாரணர்களின் பழக்க வழக்கங்களை அறி தலிலும், சாரணப் பொருட்களை மாற்று வதிலும் கழித்தோம். உப ஜனாதிபதி ஹம்ப்றி, ஹோலிவூட் நடிகர் ஜேம்ஸ் ஸ்ருவர்ட், விண்வெளிவீரர் காபென்டர் ஆகியோரையும் சந்தித்தோம். 1962-ம் ஆண்டு மே மாதம் தான் வான வெளிக் குச் சென்று திரும்பிய கலத்தையும் அதைப்பற்றிய விளக்கத்தையும் காபென் டர் எமக்குக்காட்டி விவரித்தார். திரு. காபென்டரின் விண்வெளி அனுபவப் பேச்சு மிகவும் சுவைத்தது; கலம் 9 நாளும் அங்கிருந்தது. கடைசி நாளன்று காபென்டர் வான வெளியில் 60 அடி உயரத்தில் ஒரு மனிதனை பறக்கச் செய்தார். நாம் அதை மிக ரசித்தோம். கடைசி நாளன்று நாம் கண்டிய நட னத்தை ஆடினோம். சகல நாடுகளின் கொடிகளின் அணிவகுப்பு, எல்லோரும் மெழுகுதிரியுடன் நிற்பது, வாண வேடிக் கைகள் என்பனவும் இடம் பெற்றன. ஜம்போரியின் நினைவாக அமெரிக்க தபாற் பகுதி ஒரு தபால் அட்டையை வெளி யிட்டது. முதல் நாள் 200000 அட்டை கள் விற்பனையாயின. பகலில் 90 °F ஆகவும், இரவில் 40 °F ஆகவும் வெப்ப நிலை இருந்தது. ஜம்போரியைப் பார்வை யிட 85000 பேர் வந்திருந்தனர்.

10-8-67 விமான மூலம் சன்பிரான்சி ஸ்கோ அடைந்தோம். நான் அங்கு திரு. றட்டர் (Rutter) வீட்டில் தங்கினேன். அவர் ஒரு ஓநாய்க்குருளை ஆசிரியர். எமது கல்லூரிக் குருளையர் அளித்த பரிசை அவ ருக்குக் கொடுத்தேன். இருமலேசியரும் எம் முடன் தங்கினர். ஒரு நாள் நடைப் பய ணம், மீன் பிடியாளர்களின் கப்பற்றுறை, கொயிட் ஞாபகார்த்தகட்டடம், காலம் பசின் சிலை, உலகின் மிக வளைந்த வீதியில் பிரயாணம், மெழுகு சிலைகளுள்ள மியூ சியம், சைனா டவுன், கேபிள் கார்ப்பிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாணம், வள்ளத்தில் சென்று உலகின் பெரிய பாலமான கோல்டன் கேட்பாலம், காணிவல் என்பனவற்றைப் பார்வையிட்டோம். மியூசியத்தில் உலகப் புகழ்பெற்றோரின் மெழுகு உருவங்கள் உண்டு. ஐஸ் போலிஸ் என்னும் நடன நாடகத்தையும் பார்வையிட்டேன். ஒரு பெரிய மண்டபத்தின் நடுவில் ஐஸ்போடப்பட்டிருக்கும். அதைச்சுற்றி இருப்பிடங்கள் உளது. நடுவில் உள்ள பனியில் நாகரீக உடை அணிந்த பெண்களும், ஆண்களும் சறுக்கி நடனமாடி எம்மை மகிழ்வித்தனர். 15-8-67 அன்று விமான மூலம் லோஸ் ஏஞ்சலீஸ் ஐ அடைந்தோம். நோட்பெறிபாம், சங்கீத நிகழ்ச்சிகள் என்பவற்றிற்குச் சென்றோம். டிஸ்னி லான்ட்டுக்குச் செல்லத் தவறவில்லை. அங்கு சகலவிதமான அனுபவங்களையும் பெறலாம். கார், விமானம், நீர்மூழ்கி, வானவெளிக் கப்பல் என்பனவற்றில் செல்லும்போது ஏற்படும் அனுபவங்கள், மற்றும் சிறு உலகப்பகுதியில் உலகின் எல்லாவகை நடனங்களையும் சிறுபொம்மைகள் அவர்களின் சங்கீதத்திற்கேற்ப ஆடுவார்கள். மலைகளில் தண்டவாளத்தில் சிறுகார்களில்செல்லுதல், சுரங்க அமைப்புகளிற் செல்லல் என்பனவற்றையும் ரசித்தோம். ஏப்ரஹாம் லிங்கனின் உருவச்சிலை ஒன்று மின்சாரத்தால் இயங்குகிறது. இது எழும்பும், பேசும், கால் கைகள், விரல்கள் என்பன அசைக்கும், பார்வைக்கு உண்மையான லிங்கன் போன்றேயுளது. லோஸ் ஏஞ்சலீஸில் எமது ஜம் போரியின் திரைப்படத்தை தொலைக்காட்சியில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு நான் பரோஸ் (Barrows) குடும்பத்தினருடன் தங்கினேன்.

19-8-67 யூனைட்டட் விமான மூலம் பபலோ (Buffaloa) வை அடைந்தோம். அங்கு நயகாரா நீர்வீழ்ச்சியை அமெரிக்க பக்கத்திலிருந்தும், கனடியப் பக்கத்திலிருந்தும் இரவிலும் பகலிலும் பார்த்தோம். இரவில் வர்ண விளக்குகள் வீழ்ச்சியின் அழகிற்கு மெருகூட்டுகிறது. மற்றும் கோர்னல் விமான ஆராய்ச்சி நிலையத்தையும் பார்வையிட்டேன். அங்கு டாக்டருடன் குடும்பத்தினருடன் தங்கினேன். 21-ஆம் திகதி விமானமூலம் வாஷிங்டனை அடைந்தோம். அங்கு லிங்கன் ஞாபகார்த்த மண்டபம், வாஷிங்டன், ஜெபர்சன் ஞாபக மண்டபங்கள், சிமித் சோனியன் மியூசியங்கள், ஆர்லிங்டன் சுடுகாடு, வெள்ளை மாளிகை என்பனவற்றையும் பார்த்தோம். இலங்கை ஸ்தானிகர் கௌரவ திரு. வீரசிங்காவும் அவர் மனைவியாரும் எமக்கு இராப்போசன விருந்தளித்தனர். அங்கு நான் கொக்கார்ட் (Hog--gard) குடும்பத்துடன் தங்கினேன்.

23-ம் திகதி ஒரு பிறனிப் (Braniff) விமானம் எம்மை நியூயோர்க் நகருக்குக் கொண்டு சென்றது. வானளாவிய புதிய கட்டடங்கள், சாரண தலைமை அலுவலக நூதனசாலைகள், ஐக்கிய நாடுகள் தலைமை அலுவலகம், உலகின் உயரமான கட்டடமாகிய எம்பயர் ஸ்டெட் கட்டட உச்சி, றொக்பெல்லர் பாலர், விடுதலைச் சிலை என்பனவற்றையும் கண்டோம். இங்கு நான் கிரகாம் (Graham) குடும்பத்தினருடன் தங்கினேன். இலங்கையைச் சேர்ந்த மகாலிங்கம் தம்பதிகள் உதவினர். நாம் ஹிப்பீஸ் (Hippies) ஐயும் அமெரிக்காவில் காணத் தவறவில்லை.

25-ம் திகதி இரவு கென்னடி சர்வதேச விமான நிலயத்திலிருந்து ஒரு (Air Canada) விமானமூலம் மொன்றியோலையை அடைந்தோம். Expo சாரண பாசறைக்குச் சென்றோம். பின்பு Expo'67 சர்வதேச கண்காட்சிக்கு பாதளரெயில் மூலம் சென்றோம். Expo'67 குறிக்கோள் 'மனிதனும் அவனின் உலகமும்' ஆகும். கண்காட்சியை மொனோ றெயிலில் சுற்றிப் பார்த்தோம். அங்கு கலை, கலாசாரம் விவசாயப் பெறு பேறுகள், விஞ்ஞான கைத்தொழிற் கண்டுபிடிப்புகள், விண்வெளி ஆராய்ச்சி, அரசியல் வளர்ச்சி என்பன அவ்வவ் நாடுகளின் நிலையங்களிற் பிரதிபலித்தன. மற்றும் களியாட்ட, உணவு, விற்பனைப் பொருள்களும் கடைகளில் இருந்தன. 1967-ம் ஆண்டு வரையில் ஏற்பட்ட சகல முன்னேற்றங்களும் பிரதிபலித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27-ம் திகதி ஒரு (Air Canada) விமானம் எம்மை கனடாவில் இருந்து லண்டன் கீத்ரோ விமான நிலையத்தில் இறக்கியது. நாம் லண்டனில் ஒரு முக்கிய இடத்தையும் தவறவிடவில்லை. ஹைட்பார்க், ஒக்ஸ்போட் சேர்க்கஸ், பொன்ட் வீதி, மாபில் ஆர்ச், வெஸ்ட் மினிஸ்டர் அபே, பாராளுமன்றம், தேம்ஸ் நதி, பிக் பென், லண்டன் பிளனெட் டெரியம், லண்டன் கோபுரம், சென் போல்ஸ் தேவாலயம், கியூ தாவரத் தோட்டம், வக்சோல் கார்த்தொழிற்சாலை, வின்சர் மாளிகை, பிக்கடெலி சேர்க்கஸ், ரபல்கார் சதுரம், சாரண தலைமை அலுவலகம், கில்வெல்ட் பூங்கா, கன்ரபறி தேவாலயம், மியூசியங்கள். அரசியின் சிவப்புத் தொப்பி அணிந்த காவலர்கள் சங்கீதத்திற்கு ஏற்ப வேலை மாறுவது, பிரதமரின் உத்தியோக வாசஸ்தலம், லோட் மைதானம் என்பன பார்த்தோம். மற்றும் M. C. C. க்கும் உலக கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியை டெலிவிஷனில் பார்த்தோம். மற்றும் கென்ட் இல் சேர். ஜோன் கொத்தலாவலையின் தோட்டம், 'நீங்களே செய்க' கண்காட்சி என்பனவற்றையும் பார்த்தோம். நான் பார்னட், பென்சம் என்னும் இரு குடும்பத்தினருடன் தங்கினேன். முன்னைய இலங்கை சாரண ஆணையாளர் கிரீன், தேவராஜன் தம்பதிகள், திரு. R. M. மயில்வாகனம் என்போர் உதவினர். பேடன்பவல் நிலையம், ஞோலவண்ட் என்னும் சாரண நிலையங்களிலும் தங்கினோம். மடம் ரூசார்ட்டின் மெழுகு சிலைகள் என்பனவற்றையும் பார்த்தோம்; சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் சிலையும் அங்கு உண்டு. கடைகள், கந்தோர்கள், பஸ்கள், பாதள றெயில்கள் எல்லாவற்றிலும் மினிஉடை அணிந்த பெண்களையும், ஆண்களையும் நிறையக் காணலாம். 25-9-67 அன்று கட்விக் விமான நிலையத்தில் இருந்து ஒரு (B. E. A.) விமான மூலம் அமஸ்டர்டாமை அடைந்தோம்.

ஒல்லாந்தில் உலகப் புகழ்பெற்ற றெம்பரான்ட் ஓவியங்கள், பல்கலைக் கழகம், மியூசியங்கள், மதுரடாம் மினி மாதிரிநகரம், சமாதான மாளிகை, தலைநகரமான திஹேக் (The Hague), ஆறுகளில் வள்ளோட்டம், கடைகளில் பெரிய பெரிய சீஸ் (Cheese) துண்டுகள், பழைய காற்றுடி யந்திரங்கள் என்பனவற்றையும் பார்த்தோம்.

29-9-67 ஒரு சபீனு (Sabena) விமானமூலம் பெல்ஜியத்தின் தலைநகரான பிரசல்ஸ்சை அடைந்தோம். அங்கு அணுவின் அமைப்பில் பெரிதாக செய்யப்பட்டுள்ள அட்டோமியம் எனப்படும் கட்டடம், '58' உலக கண்காட்சியின் ஞாபகார்த்தமாக இருக்கிறது; பல்கலைக்கழகம் என்பனவற்றையும் பார்வையிட்டோம். அங்கு அப்பொழுது பிரித்தானிய வாரம் கொண்டாடப்பட்டது. எல்லாக் கடைகளிலும் பிரித்தானிய பொருள்கள் மலிவாக விற்கப்பட்டன. இங்கிருந்து விமான மூலம் பாரிஸை அடைந்தோம். அங்கு ஈபில் டவர், நோட்டர்டாம் தேவாலயம், பாரிஸ் பட்டணம் என்பனவற்றைப் பார்வையிட்டோம். நாகரீக ஆண்களும் பெண்களும் நிறைந்தது பாரீஸ் நகரம். பிரான்சிலுள்ள இலங்கைத் தூதுவரக முதற்காரியதரிசி திரு. பாலசுப்பிரமணியம் தம்பதிகள் எமக்கு விருந்தளித்தனர். நான் திரு. லூபினட் (Loppinet) உடன் தங்கினேன். இங்கிருந்து விமான மூலம் சுவிற்சிலாந்தை அடைந்தோம். அங்கு சர்வதேச சங்கம் (League of Nations), அழகிய நீரூற்றுகள், மலைக்காட்சிகள், நிலத்தில் புற்களையும் பூக்களையும் வளர்த்து வெட்டி ஏற்படுத்தப்பட்ட மணிக்கூடு என்பனவற்றையும் பார்த்தோம். நாம் கம்பியில் அசையும் கதிரைகளிற் சென்று மலைகளை அடைந்து, பனிபடர்ந்த மலைகளைக் கண்டு விளையாடிக் கழித்தோம். மொன்ற் பிளாங் (Mount Blanc), மட்டர்கோன் (Matarhon) மலைகளையும் கண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*10-10-67* - இல் அலிற்றலியா விமான மூலம் உரோமாபுரியை அடைந்தோம். அங்கு ஒரு தேவாலயத்தில் தங்கினோம். வத்திக்கான் தேவாலயங்கள், மைக்கல் ஏஞ்ஞலோ தனது முதுகிலிருந்து நாலு வருடம் செலவழித்து கூரையிற் கீறிய படங்களைக் கண்டோம். மற்றும் சகல பழைய கட்டடங்களையும் கண்டோம். நாம் இலங்கைத் தூதருடன் தேநீர் அருந்தினோம். பழையகாலக் கட்டடங்கள் இன்றும் உறுதியாக இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. *13-10-67*-ல் B. E. A. விமான மூலம் கிரீஸின் தலைநகரான அதென்ஸ் ஐ அடைந்தோம். அங்கு அரசனின் காவலர்களின் வேலை மாற்றம், மலை உச்சியிலிருந்து இரவில் அதென்ஸ் என்பனவற்றையும் கண்டு களித்தோம். பழைய காலக்கட்டடமான அக்கிற போலிசில் ஜெர்மனியர் கிரீசை விட்டுச் சென்ற நினைவுதின விழாவில் நாமும் பங்கு பற்றினோம்.

*15-10-67* அன்று ஒரு K. L. M. விமான மூலம் ஈரானின் தலைநகரான தெகிரான் ஐ அடைந்தோம். அவ்வூர்பட்டினம், பெற்ரோல்மலை அடிவாரங்கள், சா (Shah) வின் மாளிகை என்பனவற்றைப் பார்வையிட்டோம். *19-10-67* இல் ஒரு ஏயர் இந்திய விமானமூலம் பம்பாயை அடைந்தோம். நகரம், நுழைவாயில் மற்றும் முக்கிய இடங்களைப் பார்வையிட்டோம். *21-10-67* இல் ஏயர் சிலோன் விமான மூலம் இரத்மலானை விமான நிலையத்தை அடைந்தோம்.

விமான நிலையத்தில் எம்மைக் கண்டிய நடனத்துடன் சாரண உத்தியோகத்தர்கள், உற்றார், உறவினர் என்போர் வரவேற்றனர். திரும்பவும் தாய் நாட்டில் இருப்பது எமக்கு மகிழ்ச்சியை அளித்தது. கடைசியாக இப்பிரயாணத்தில் உதவிய சகலருக்கும், சாரணத்தலைமை நிலையத்தினருக்கும், கல்லூரி அதிபர், சாரண ஆசிரியர்கள், ஆசிரியர்கள், சாரணர்கள் எல்லோருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

**சி. செந்நார்ச் செல்வன்**
க. பொ. த. ப.
விஞ்ஞானம் - 6ம் பிரிவு

---

காட்சி, ஆராய்ச்சி என்ற வழிகளிற் சென்று
விஞ்ஞானம் காணும் உண்மையைத்தான் கலையும்,
வேறு வழிகளிற் காண முற்படுகிறது.
கலை, உணர்வின் மூலமாக உண்மையின் அருகே
நம்மைக் கொண்டு செல்கிறது.

சால்பென்று சொல்லப்படும் வலிமை
ஒருவரிடத்தில் உண்டாகப்பெற்றால், அவர்பால் தோன்றும் வறுமை
அவருக்குத் தாழ்வை உண்டாக்காது.

— வள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு

மழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. வேலப்பன் திண்ணையிலிருந்து வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான். பாயைச்சுருட்டி எடுத்துக்கொண்டு குடிசையுள் நுழைந்த அவன் அதைப் பரணில் வைத்துவிட்டு மண்வெட்டியை எடுத்துக் கொண்டான். கூர்மையாக இருந்த அதைத் தன் விரல்களால் வருடிவிட்டுக்கொண்டே மனைவி லட்சுமியிடம் ''நான் வயலுக்குப் போயிட்டு வருகின்றேன். அண்ணன் சோமுவோடை வரம்பைக் கட்டவேணும். கட்டாவிடில் வெள்ளம் நம்ம வயலுக்குள் பாய்ந்து விடும். பாய்ந்து விட்டால் நம்மகதி அதோகதிதான். இவ்வளவு காலமும் பிரயாசைப்பட்டு வளர்த்த நெற்பயிரெல்லாம் மண்ணோடு மண்ணாயிடும். நீ சமையலை முடிச்சிட்டுக் கொண்டுவா'' என்று சொல்லிவிட்டு குடிசையில் கிடந்த சாக்கொன்றை எடுத்துத் தலையில் போட்டுக் கொண்டு வெளியேறினான். அவன் வெளியேறிய உடனே அவனது எண்ணப்பறவையும் சிறகடித்துப் பறந்தது.

''பாழாய்ப்போன மழை வரும், வரும் என்று எதிர்பார்த்தால் வராது, ஆனால் வராது என்றால் வந்து விடும். இன்னிக்காப்பட்டு இந்தப் பாழும் மழை வந்து தொலைச்சிட்டுதே. நேற்றே மேட்டு வரம்பை அடைத்து வெள்ளத்தை மூங்கிற்காட்டுப் பக்கம் திருப்பியிருக்கணும். யாருக்குத்தெரியும்? இப்படி மழைவரும் என்று,'' என்ற எண்ணம் அவன் மனதில் எழுந்தது. எம்முறையுமில்லாமல் இம்முறை வேலப்பனின் வயலில் விளைச்சல் அதிகமாயிருந்தது. இந்த மழை வராவிடில் நிச்சயமாக வேலப்பன் தருமபுர விவசாய மன்னனாகி யிருப்பான். ஆனால் என்னசெய்வது ''நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறதே.''

வேலப்பன் மண்வெட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு தனது வயலை நோக்கிச் செல்லும் வரம்பில் இறங்கினான். மழைநீர் ஆறாகப் பாய்ந்து கொண்டிருந்தது. மழையின் பிரவாகமும் குறைந்த பாடில்லை. வேலப்பன் விரைவாக நடந்து கொண்டிருந்தான்.

வேலப்பன்.........நல்லவன். சுறுசுறுப்பானவன். சூதுவாது அறியாதவன். கடவுள் எவ்வளவு நல்லவனென்றாலும் ஒரு குறையையாவது கொடுத்துத்தானிருப்பார். ஆம்.........வேலப்பன் முன்கோபக்காரன். இவனுடைய முன்கோபத்தால் இவன் கெட்டவன் என்ற அபிப்பிராயம் சிலரிடையே இருந்து வந்தது. இவனுடைய தமையன் சோமு இவனுக்கு நேர்மாறான குணாதிசயங்களை உடையவன். ஆனால் இரண்டு பெண்பிள்ளைகளின் தந்தை. இவன் மனைவி மீனாட்சி நல்லவள். மீனாட்சியின் தங்கையே வேலப்பனின் மனைவி லட்சுமி. இருவரிடத்திலும் பணம் இல்லை யென்றாலும் போதுமான நிலம் இருந்தது. சோமுவின்வயல் மேட்டிலும் வேலப்பனின் வயல் பள்ளத்திலும் இருந்தது. சோமுவின்வயலில் வெள்ளம் வராது. வந்தாலும் மேடானதால் வடிந்துவிடும். வேலப்பனின் வயலோ அப்படிப்பட்டதல்ல. வரம்பை வெட்டித்தான் நீரை வெளியேற்ற வேண்டும். இதையிட்டு வேலப்பன் பொறாமை கொண்டது கிடையாது. ஆனால் வேலப்பன் வயலிலே அதிக விளைச்சலைக் கண்ட சோமுவின் மனதில் பொறாமைத்தீ சுடர்விட்டெரிந்தது.

மழையில் வேலப்பன் நன்றாக நனைந்து விட்டான். மழை மேலும் பலமாகப் பொழிந்து கொண்டிருந்தது. விரைவாகச்சென்று வயலை அடைந்த வேலப்பனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிகள் யாரோ வரம்பருகே கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது மண் வெட்டியும் கையுமாக நிற்பதைக் கண்டன. அது தன் அண்ணன் சோமு என்பதை அறிந்து கொள்ள அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. மழைவெள்ளத்தை மூங்கில் காட்டுப் பக்கமாகச் செலுத்துகிருன் என்று மகிழ்ந்த வேலப்பனுக்கு சோமுவின் செய்கை சினத்தையும் திகைப்பையும் வரவழைத்தது. சோமு வெள்ளத்தைப் பள்ளத்தில் இருந்த வேலப்பனின் வயலைநோக்கிச் செலுத்திக்கொண்டிருந்தான். பாய்ந்துசென்ற மழைநீர் தன் நாசவேலையைத் தொடங்கியது. பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்று பச்சைப் பசேலென்று செழித்து வளர்ந்திருந்த நெற்கதிர்கள் முரிந்து, மடிந்து அழியத்தொடங்கின. சோமு சிறிதும் அச்சப்படாமல் மழைநீரை மேலும் செலுத்திக் கொண்டிருந்தான். மகிழ்ச்சியால் பூரித்துப்போன அவன் வேலப்பனைக் காணவில்லை.

வேலப்பனின் சினம் எல்லை மீறியது. கோபாவேசம் பயங்கர வெறியாக மாறியது. மண்வெட்டியைக் கையில் ஏந்தியபடி சோமுவின் பக்கம் விரைந்தோடினுன். அவனை நெருங்கிப் பள்ளத்தில் வெள்ளத்திடையே தள்ளி வீழ்த்தினுன். எதிர்பாராத தாக்குதலால் சோமு திகிலடைந்தான். பயிர் அழிகிறதே என்ற கோபம் அண்ணன் தம்பி பாசத்தை திரைபோட்டு மறைத்தது. மண்வெட்டியை ஓங்கித் தமையன் தலையிற் போட்ட வேலப்பன் " ஐயோ அம்மா " என்று இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்த சோமுவைப் பார்த்ததும் தான் கோபத்தினுற் செய்த தவறைப் புரிந்து கொண்டான். அதிர்ச்சியால் பிரமித்து நின்ற வேலப்பன் சோமு அசைவற்றுக் கிடப்பதைக் கண்டு மண்வெட்டியைக் கையிலிருந்து நழுவ விட்டான். அதிலிருந்த இரத்தக்கறையை மழைநீர் கழுவியகற்றியது.

வேலப்பனுல் ஒன்றுமே செய்ய முடியவில்லை. மழை பெய்துகொண்டிருந்தது. ஒருவரையும் காணவில்லை. விரைவாக அவ்விடத்தை விட்டகன்றுன். தன் வீட்டிற்குச் செல்லாமல் நேராகத் தன் மாமன் வீட்டை நோக்கி நடந்தான்.

கந்தசாமி ... வேலப்பனினதும் சோமுவினதும் தாய்மாமன். வேலப்பன் கந்தசாமி வீட்டை அடைந்து கதவைத் தட்டினுன். கதவைத்திறந்த கந்தசாமி வேலப்பனின் நிலையைக்கண்டு அசம்பாவிதம் ஏதோ நடந்திருக்கிறதென ஊகித்துக் கொண்டான். அவனிடம் நடந்ததைக் கூறிய வேலப்பன் தன்னை எப்படியாவது காப்பாற்றும்படி அவன் வேண்டினுன். கந்தசாமி யோசித்தான். சோமு போய் விட்டான். இனி இருப்பது வேலப்பன் ஒருவன்தான். மறுநாள் அவனையும் போலிஸ் கொண்டுபோய் விட்டால் என்ன செய்வது. ஆகவே அவன் இந்தியாவில் சிறப்பாக வாழும் தனது தமையன் முத்துசாமியிடம் அனுப்பத் தீர்மானித்தான்.

பௌர்ணமி நிலவொளி தண்மையாக வீசிக்கொண்டிருந்தது. அந்தச்சுகம் வேலப்பனுக்குச் சுகமாகத் தோன்றவில்லை. எப்படித் தோன்றும்? ஆயத்தமாக இருந்த படகில் ஏறி அமர்ந்து கொண்டான். கந்தசாமி படகோட்டியிடம் ஏதேதோ கூறினுன். இதையெல்லாம் வேலப்பன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. படகு புறப்பட்டது. அலைகடலில் தனிமையாகப் படகு விரைந்து கொண்டிருந்தது. வெண்நுரைகள் எழும் பியவண்ணம் அலைகள் கிளம்பிக்கொண்டிருந்தன.

மறுநாள் போலிஸார் வேலப்பனைத் தேடிவந்தனர். அவனை அவர்களால் பிடிக்க முடியவில்லை. போலிஸாரிடமிருந்து தப்பிய வேலப்பனுல் புயலிடமிருந்துதப்ப முடியவில்லை. நடுக்கடலில் புயல்காற்றில் படகு சிக்கிக் கவிழ்ந்தது; வேலப்பன் உயிர்பிரிந்தது.

எவ்வளவோ நல்லவனுக வாழ்ந்தும் கூட வேலப்பன் தன் முன்கோபத்தால் சோமுவுக்குத் தண்டனை விதித்தான்.

நீதி மன்றத்தில் தீர்ப்பிலிருந்து தப்பிய வேலப்பனுல் ஆண்டவனின் தீர்ப்பிலிருந்து தப்ப முடியவில்லை.

கே. பராக்கிரமசிங்கம்
க. பொ. த. ப.
விஞ்ஞானம் - 6-ம் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ காந்தீய வாழ்க்கை நெறி ★

இந்தியாவிலே அறிவின்மை என்ற இருள் பரவியிருந்த காலத்தில் இருளில் பிரகாசமான ஓர் ஒளி தோன்றியது போலக் காந்தியடிகள் பிறந்தார். இவர் இந்தியாவிற்கு மட்டுமன்றி உலகத்திற்கும் ஓர் ஒளிவிளக்குப்போலத் திகழ்ந்தார்.

ஒவ்வொரு மனிதனும் தூய சிந்தை உடையவனுகவும் சத்தியநெறியிலே வாழ்பவனுகவும் இருக்கவேண்டும் என்பதையே விரும்பினுர். இவர் சமுதாயம் ஐம்புலன்களால் வருகின்ற ஆசைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென விரும்பவில்லை. ஆனுல் அவற்றைக் குறைத்து வேண்டிய அளவே பயன்படுத்திக்கொள்ள விரும்பினுர். அதாவது வாழ்வில் சுவைகளைக் குறைத்துக்கொள்வதே நோக்கமாகும். உதாரணமாக நமது நாக்கு நல்ல பண்டங்களையே விரும்புகிறது. எல்லாவற்றையும் சாப்பிட்டால் கேடு விளையும். ஆகையால் நாக்கை அதிகமாகச் சுவைத்து உண்ணுமலும், முற்ருகச் சுவையின்றி உண்ணுமலும் அளவாகச் சுவைக்கப் பழகுதல் வேண்டும் என்று கூறினுர்.

நாம் நன்மையைப் பெறவேண்டுமாயின் மது, மாமிசம் முதலிய பஞ்சமா பாதகங்களை ஒழித்தல் வேண்டும். மது நமது வாழ்வையே கெடுக்கிறது. மது அருந்துபவர்கள் தமது அறிவை அழித்து, உடலை எரித்து இறக்கிருர்கள். மது பானம் அருந்தி இறப்பவரின் தொகை அதிகமாகி வருகிறது. இதனுற்ருன்போலும் "நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்று தமிழ்மறையிலும் கூறப்பட்டுள்ளது. இதை ஒழிக்கக் காந்திமகான் இந்தியா முழுவதும் மதுவிலக்கைக் கொண்டு வந்தார். அத்துடன் ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். இயந்திரசாலைகளையும் நிறுவவேண்டும். பஞ்சமாபாதகங்கள் இல்லையாயின் நாட்டில் அமைதி நிலவும். குழப்பங்கள் பிரச்சினைகள் குறையும். இதனுல் அதிக உற்பத்திக்கு வசதியாயிருக்கும். மக்களும் ஊக்கமுடன் தொழில்களைச் செய்வார்கள். பல இடங்களிலிருந்தும் மக்கள் வந்து வேலைசெய்யும்போது கூட்டுறவு மனப்பான்மை வளரும். இதனுல் நாடு பொருளாதார முன்னேற்றம் பெற்று விளங்கும். இப்படியாகப் பல திட்டங்களைக் காந்தியடிகள் கூறினுர்.

காந்தியடிகள் சமயநெறிக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தார். அவருக்குக் கடவுள் என்ருல் ஒரு பெயரல்ல; ஒரு உருவம் அல்ல. உண்மைதான் கடவுள் என உணர்ந்தவர். சமயம் என்ருல் சில சடங்குகள் என்ருே, சில குறிக்கோள் என்ருே, சில நூல்கள் என்ருே கருதவில்லை. இன்னு செய்யாமை என்னும் அறத்தையே சமய நெறியாகக் கொண்டவர். இவர் உலகத்திற்குத் தொண்டு செய்யவேண்டும் எனவும், தனித்த வாழ்வைப் பிரிக்க முடியாதபடி வாழவேண்டும் எனவும் விரும்பியவர். தமது நாட்டுக்காகப் பாடுபட்டார். பிரித்தானியரின் ஆட்சியில் அடைபட்டிருந்த நாட்டை விடுவிக்கப் போராடினுர். இப்போராட்டங்களில் அகிம்சையையும் சத்தியத்தையும் கடைப்பிடித்தார். தியாகம் செய்வதெனத் துணிந்துவிட்ட கணவன் மனைவி குடும்பத்தில் இடையூறு வந்தால் அஞ்சாமல் மகிழ்ச்சியோடு அதற்குப் பலியாக இருப்பது போல காந்தியடிகளும் உலகவாழ்க்கையில் வந்த இடர்களைக் கண்டு ஒதுங்காமல் மகிழ்ச்சியோடு இருக்க விரும்பினுர். இடர்கள் கூடக் கூட, ஊக்கமிகுதியையே ஆதரித்தார். சத்தியத்தை எதிரில் இருப்பதாகக் கருதினுர். உலகம் புகழ்ந்தாலும் பழித்தாலும் வாழ்வதை விரும்பினுர். ஒருவருடைய உள்ளத்தில் உண்மையும் வாயில் வாய்மையும் செயலில் மெய்மையும் இருக்க வேண்டுமென்பது அவரின் சத்திய வழிபாடாகும்.

அதிக உற்பத்தியைப் பெறுதல் வேண்டும் என்றும், மக்கள் இருப்பதற்குச் சிறந்த இடங்களை அமைத்துக் கொடுத்தல், சச்சரவுகளை நீக்கி மக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிடையே ஒற்றுமையை வளர்த்தல் முதலானவை நாட்டில் பரவ வேண்டுமெனவும் எண்ணினார். அப்படியே ஒற்றுமையை வளர்த்தார். இதனால் சுதந்திரப் போராட்டத்தில் வெற்றியும் பெற்றார்.

இவர் பல மொழிகளையும் பயின்று தேர்ச்சி பெற்றார். பின் அதன் வழி தாமும் வாழ்ந்து மக்களையும் வாழ வழி காட்டினார். இவ்வருடம் அவரது நூற்றாண்டுவிழா நாடெங்கிலும் கொண்டாடப்படுகிறது அச்சமயத்தில் நாமும் அவரது சத்திய நெறியிலே வாழ்ந்து வாழ்வை வளம் பெறச் செய்வோமாக.

வாழ்க காந்திஜீ நாமம்.

ச. சிவகுமார்
க. பொ. த. ப.
விஞ்ஞானம் - 6 - ம் பிரிவு

---

# மனிதனின்
# அன்றைய நிலையும் இன்றைய நிலையும்

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் எனக் கூறப்படுகின்றது. அது உண்மையோ.........பொய்யோ.........எமக்குத் தெரியாது.

ஆனால் ஆதிகால மனிதன் தனது அங்கங்களை மறைக்க மரப்பட்டைகளையும் இலை, குழைகளையும்தான் உபயோகித்தான். கல்லாலும், தடியாலும், எலும்பாலும் எறிந்து மிருகங்களைக் கொன்று அவற்றின் ஊனை உண்டான். மிருகங்களோடு மிருகங்களாகக் குகைகளிலும், மரங்களின் கீழும் தனது இரவு நேரங்களைக் கழித்தான்.

காலம் என்றும் போல் இருக்குமா? அம்மனிதர்களிடத்துப் புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. காற்றிலே மரங்கள் ஒன்றோடொன்று உராய்வதாலும், கல்லோடு கல் உராய்வதாலும் ஏற்பட்ட தீயினால் உலர்ந்த மரப்பட்டைகளும், இலை, குழைகளும் எரிந்து கானகத்தையே நிலை தடுமாறச் செய்ததை அவர்கள் உணராமல் இருக்கவில்லை.

தீயின் ஒளிபோல் அவர்களது வாழ்க்கையிலும் ஒளி புகுந்தது. தீயினால் இறைச்சி வகைகளை எரித்து உண்டனர். இந்நிலையில் இருந்த ஆதிகால மனிதர் கூட்டம் கூட்டமாய்ச் சேர்ந்து குடித்தனம் நடத்தினர். காடு காடாய் அலைந்த மனிதர் கானகத்தில் பலவகைக் கனிகளையும் கிழங்குகளையும் கண்டனர். அவற்றைப் பறித்து உண்டனர். அவைகளில் சிலகனிகளும், கிழங்குகளும் நச்சுத் தன்மையாய் இருந்தமையால் அவைகளை உண்டோர் மாண்டனர். அந்த நச்சுக் கனிகளைப் பின் ஒருவரும் உண்ணவில்லை.

கால கெதியில் இக் கனிகள் அழிவதைக் கண்ட மனிதர் இவைகளைப்பறித்து எறிந்தனர். அவற்றில் சில, மிருகங்களின் கழிவுப் பொருள்களிலும், சேறுகளிலும், மிருகங்களின் காலடிபட்டுச் சிதறப்பட்ட இடங்களிலும் விழுந்தவை நன்கு செழித்து வளருவதை அம்மனிதர் உணர்ந்தனர். பின் மாடு, குதிரை போன்ற மிருகங்களைப் பிடித்து அவைகளின் உதவியால் நிலத்தைப் பண்படுத்தி விதைத்தனர்.

இப்படியே பல ஆண்டுகள் சென்றன. மனிதர்களிடையே புதுத்திருப்பங்கள் ஏற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. காற்றிலே பறவைகள் பறப் பதைக் கண்டனர். இலைகளாலும் தழை களாலும் தமது அங்கங்களை மறைத்து வந்த மனிதர் நூல்களால் நெய்து ஆடை களை ஆக்கி அழகுடன் திகழ்ந்தனர். காடுகளை வெட்டிக் கழனிகளாக்கினர். நதிக்கரைகளில் குடியேறி நாகரீக வாழ்வு வாழ்ந்தனர்.

அஞ்ஞானயுகம் அழிந்து விஞ்ஞான யுகம் அடியெடுத்து வைத்தது. மனிதர் கள் மத்தியில் பல விஞ்ஞானிகளும், அறி ஞர்களும் தோன்றினர். இம் மனித சமு தாயம் மகத்தான வெற்றியைத் தரும் செயல்களில் இறங்கியது. விஞ்ஞானிகள் புதுப்புதுச் சாதனைகளை நிலைநாட்டினர்.

ஆகாயத்தில் பறவைகள் சுதந்திர மாகப் பறப்பதைக் கண்ணுற்றனர் இரு சகோதரர்கள். அவைகளைப்போல் தாமும் பறக்க முடியாதா என்ற எண் ணம் அவர்களுக்குத் தோன்றியது போ லும். சகோதரர்கள் இருவரும் சேர்ந்து ஆகாயவிமானத்தைக் கண்டுபிடித்தனர். அந்தச் சகோதரர்களே "றைட் சகோ தரர்கள்" ஆவர்.

எதிரொலியைக் கேட்டார் "மாக் கோனி" என்னும் விஞ்ஞானி. அவரது சிந்தனையைத் தகர்த்தெறிந்து கொண்டு எம்முன் காட்சியளிக்கிறதே வானொலி. அது அவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

தேநீர் வைக்கும்போது நீர் கொதித்து மூடி மேலெழுவதைக் கண்டான் ஒரு சிறுவன். நீராவிக்குத் தள்ளும் சக்தி உள்ளது என உணர்ந்த அவன் வளர்ந்து பெரியவனாகி இம் முயற்சியில் வெற்றி பெற்றான். அவனால் கண்டுபிடிக்கப் பட்டதுதான் புகைரதம், நீராவிக்கப்பல் ஆகியன. அப்பெருமகனின் பெயர்தான் "ஜோச் ஸ்டீபன்சன்" ஆகும். ஆனால் எதனைக் கண்டுதான் விண்வெளிக் கப்ப லைக் கண்டுபிடித்தான் இந்த இருபதாம் நூற்றாண்டு மனிதன் என்பதுதான் தெரியவில்லை.

காடுகளில் அலைந்து திரிந்த அன்றைய மனிதனின் நிலையையும், விண்வெளியிலே பறந்து சந்திரனுக்குப் போகும் அளவுக்கு முன்னேறியிருக்கும் இன்றைய மனிதனின் நிலையையும் உற்று நோக்கினால் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் போல் தெரிகிறது.

அன்று அவனால் ஆக்கப்பட்ட சமு தாயம் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி ஏன் வதியவே இடமின்றித் திரிந்தது. ஆனால் இன்றோ கண்ணுக்கெட் டாத தூரம்வரை மாடமாளிகைகளும், காதினிக்கக் கேட்கும் வானொலியும், இனிய உணவுகளும், இலகுவாகப் பிரயா ணம் செய்வதற்கு மோட்டார் வாகனங் கள், புகையிரதங்கள், விமானங்கள், நீராவிக்கப்பல்கள் போன்றவையை மனி தன் கண்டுபிடித்துவிட்டான். இனி விடு தலை நாட்களை இனிது கழிக்க எம்மைக் குளிரொளி பரப்பிக் குதூகலத்தில் மிதக்க வைக்கும் குளிர் நிலவிலும் இன்றைய மனி தன் புகுவிடம்தேடி விடுவான் என்பதில் ஐயமில்லை.

அது மட்டுமா? மாற்ற முடியாத நோய்களை மாற்றுவதற்கு மருந்து வகை களை ஒரு கரத்திலும், ஆக்கப்பட்ட இவ் வழகான வையகத்தை அழிக்க அணுவா யுதத்தை மறு கரத்திலும் ஏந்திக்கொண்டு ஏப்பச் சிரிப்புச் சிரிக்கிறான் இன்றைய விஞ்ஞான மனிதன். இருதயம் பழுதடைந் தவர்களுக்கு வேறு மனிதனின் இருதயத் தைப் பொருத்தி வெற்றிகண்டிருக்கிறான் மனிதன்.

அந்த அளவுக்கு முன்னேறியிருக்கி றான் இன்றைய இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞான மனிதன். அன்றைய மனித னின் நிலையையும் இன்றைய மனிதனின் நிலையையும் வருணித்து வரையலாம். ஆகவே நாமும் நற்கல்வி கற்று நானிலத் தோர் போற்ற நம் ஈழத்திருநாட்டிலும் விஞ்ஞான முன்னேற்றத்திற்கு ஊன்று கோலாக முன்னேறுவோமாக.

பா. தணிகாசலம்
க. பொ. த. ப.
விஞ்ஞானம் - 2-ம் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேனாட்டுக் குப்பை வேண்டாம்

இ. ஓங்காரமூர்த்தி
க. பொ. த. ப.
கலைப்பகுதி 4-ம் பிரிவு

காலகாட்டி இடைகாட்டிக் கவர்ச்சி என்றே
கட்டுடலின் வண்ணத்தை எடுத்துக் காட்டி
மால்ஊட்டும் வஞ்சியர்கள் மலிந்து விட்டால்
வழிதெருவில் சந்திகளில் கூடி நின்றே
வாலாட்டி நையாண்டிச் சேட்டை காட்டி
வம்பளக்கும் வட்டங்கள் தொகையும் கூடும்!
மேல்நாட்டு நாகரிகக் குப்பை கூளம்
"மினிஸ்கேர்ட்" "ரைற்ஸ்கேர்ட்" டதுவும் வேண்டா மன்ப.

முன்னாளில் விலங்கெனவே மனிதன் முற்றும்
மூடாமல் மறைக்காமல் வாழ்ந்த காலம்
என்றிருந்த தென்றுவர லாற்றின் மூலம்
உணர்கின்றோம் அட இன்று போகும் போக்கில்
இன்றைக்கு மினிஸ்கேர்ட்டைப் போட்டுச் செல்வார்
இனிமேலோ துணியேதும் இன்றிச் செல்வார்!
பண்பாட்டைக் கொல்லுகின்ற மேலை நாட்டுப்
பரிதாப நாகரிகக் குப்பை வேண்டாம்!

வீட்டுக்குட் பெண்ணினத்தைப் பூட்டி வைத்து
விதவைக்கு மறுவாழ்வு மறுத்து ரைத்து
வாட்டறங்கள் கொலுவிருந்த நமது மண்ணில்
வாலாட்டும் நாகரிகக் "கவர்ச்சி" வேண்டாம்!
கேட்டிற்கு வழிதிறந்து இளைஞர் நெஞ்சைக்
கெடுக்கின்ற "மினிஸ்கேட்டை" உலவ விட்டால்
வீட்டிற்கு வீடெங்கும் விவாக ரத்தும்;
வீணான கலவரமும் பெருகல் திண்ணம்!

அணிமிகுந்த இசையிருக்க "பீட்டில்ஸ்" பாணி
அலறல்களும் ஏனிங்கே தவம் இயற்றும்
முனிவரைப்போல் தலைவளர்ப்பு மொட்டை தட்டல்
மூரணான முன்னேற்றம் ஏன்தான் சொல்லீர்
துணியின்றி நெளிவதுவும் ஒன்றாய்க் கூடித்
துள்ளுவதும் குதிப்பதுமே நடனந் தானோ?
பணிவோடு அறைகின்றேன் எங்கள் நாட்டில்
பண்பில்லாக் கலாசாரக் குப்பை வேண்டாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டக்கூடாதவன்

அது ஜனசஞ்சாரம் அற்ற ஒரு முற்சந்தி மூலையில் அழுக்கு நீர் செல்லும் ஓடையினுள் ஓர் றிக்ஷா வண்டி; மிகவும் பழையது; விழுந்து கிடந்தது. அதற்கு ஏறத்தாள ஐந்தடி தூரத்தில் ஓர் ஜீவன். அவ் றிக்ஷாவினுடைய சொந்தக்காரன் மயங்கிய நிலையில் கிடந்தான். அவனைச் சுற்றி ஓர் கும்பல். உதவி செய்யும் கும்பலல்ல வேடிக்கை பார்க்க வந்த கும்பல். அதில் ஒருவர், சிறிது குள்ளமானவர் அவ்விடத்தில் நடந்த விபத்தைப் பற்றி அழகாக விவரித்துக் கொண்டிருந்தார். தன்னுடைய பேச்சையே எல்லோரும் கேட்டுக் கொண்டு நிற்கிறார்கள் என்பதில் அளவற்ற பெருமை அவருக்கு.

கும்பலில் சிலர் அவ் றிக்ஷாக்காரனையும் இடித்து விட்டு ஓர் மின்சாரக்கம்பத்துடன் மோதிக்கொண்டு நின்று கொண்டிருந்த டாக்ஸியை நுணுக்கமாக ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

ஒருவருக்கும், தெருவிலே ஒரு ஜீவன் மூச்சற்ற நிலையில் கிடப்பதைப் பற்றிச் சிறிதும் கவலை ஏற்படவில்லை.

அப்போது அவ் வீதிவழியாக வந்த கார் ஒன்றை மறித்து நிற்பாட்டினவன், விபத்து ஏற்படக் காரணமாயிருந்த டாக்ஸியை ஓட்டிக்கொண்டு வந்த டாக்ஸி ஓட்டிதான். டாக்ஸி ஓட்டி அவ்றிக்ஷாக்காரனை அக்காரில் கொண்டுபோய் வைத்தியசாலையில் சேர்த்து விடும்படி கேட்க, அக்கார் ஓட்டியும் சம்மதித்தான்.

டாக்ஸி ஓட்டி விழுந்து கிடந்த றிக்ஷா ஓட்டியைத் தூக்கிக் கொண்டு வரும் பொழுது, வந்த காரை ஓட்டி வந்தவர் கார்க் கதவைத் திறந்து பிடித்தபடி, ''மனிதனுக்கு மனிதன் உதவாவிட்டால் இந்த உலகத்தில் இருந்து என்ன பயன்'' என்று பெருமையாகக் கூறினார்.

''நில், நில்! காரினுள் கிடத்தாதே இவனை!'' என்று காரோட்டி அலறி விட்டு கார்க் கதவைப் படீரென்று சாத்தினான். டாக்ஸி ஓட்டி உயிர்போகும் நிலையிலிருந்த றிக்ஷா ஓட்டியைப் பழையபடி வீதியில் கிடத்திவிட்டு, ''ஏன்?'' என்னும் வினாக்குறியுடன் காரோட்டியை நோக்கினான்.

''இவன் ஒரு குறைந்த ஜாதியைச் சேர்ந்தவன். இவன் அப்பன் முன்பு மரமேறியவன். இப்ப இவன் றிக்ஷா ஓட்டுகிறான். இவன் எங்களுடைய ஊர்தான். தீண்டக்கூடாத இவனை எப்படி என் காரில் ஏற்றிச் செல்வது?'' இச் சொற்கள் அச் சாதி வெறியனின் வாயிலிருந்து சிதறின. முதலில் வேதாந்தம் பேசிய அம்மனித மிருகம் காரைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டது.

''அம்மா!'' நிலத்தில் கிடந்த றிக்ஷாஓட்டி அவஸ்தையில் அரற்றினான்.

சாதிவெறியனின் காரிற்குப் பின்னால் வந்த வேறொரு கார் அவனுக்கு உதவியதை அவன் டாக்ஸி டிரைவர் மூலம் அறிந்தான்.

x x x

''இன்று நீ வீட்டை போகலாம். இன்னும் ஒரு கிழமைக்கு நீ ஒரு வேலையும் செய்யக்கூடாது'' என்று வைத்தியசாலை நர்ஸ் விபத்தில் காயமுற்று, மயிரிழையில் உயிர்தப்பிய றிக்ஷா ஓட்டியிடம் கூறி அவனை 'டிஸ்சார்ஜ்' செய்து அனுப்பினாள்.

'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டு மூன்றாம் நாள் அவன் றிக்ஷாவுடன் கிளம்பிவிட்டான். என்ன செய்வது; வயிறு என்று ஒன்று இருக்கிறதே! அவன் றிக்ஷா இழுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிட்டால் அவனதும், அவனின் மனைவியினதும், ஆறு பிள்ளைகளினதும் வயிறுகள் காற்றுப்போன பலூன்கள் போலாகி விடுமே! அவன் என்ன சும்மா இருந்து சாப்பிட்டு ஏப்பம் விடும் ஒரு முதலாளியா? இல்லையே! எங்கள் நாட்டில் இதே போல் பல கஷ்டங்களை அனுபவிக்கும் பல பிரஜைகளில் ஒருவன்தானே இவனும்.

யாராயினும் தன்னை அழைக்கமாட்டார்களா என்று பார்த்தபடி சென்ற அவனின் கண்களில் சிறு கும்பல் ஒன்று தெரிந்தது. அது என்னவென்று அறிய ஆவலுடன் எல்லோரையும் போல் அவனும் அங்கே சென்றான்.

கூட்டத்தின் நடுவில் ஒரு பையன் ஆறு, ஏழு வயதிருக்கும் விழுந்து கிடந்தான். உடையெல்லாம் இரத்தம். சற்று முன்புதான் அவனை ஒரு கார் அடித்து விழுத்திவிட்டு நிற்காமல் போய்விட்டதை அவன் கூட்டத்தினர் பேசியதிலிருந்து அறிந்தான்.

''அட! இது அன்று என்னை வைத்திய சாலைக்குத் தனது காரில் கொண்டுபோக மாட்டேன் என்று கூறிய வயிரமுத்துவின் மகனல்லவா! உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோக வேண்டுமே'' என்று கூறியவன் வேறுயாருமல்லன்; அதே றிக்ஷா ஓட்டிதான்.

அருகில் நின்றவர்களின் உதவியுடன் வயிரமுத்துவின் மகனைத் தூக்கி றிக்ஷாவில் போட்டுக்கொண்டு வேகமாக வைத்தியசாலையை நோக்கி ஓடினான், சாதியில் குறைந்தவன் என்று சிலரால் அழைக்கப்படும் மனத்தால் உயர்ந்த அவ்றிக்ஷா ஓட்டி.

மகனுக்கு ஆபத்து என்று கேள்விப்பட்டவுடன் வயிரமுத்து வைத்தியசாலைக்கு அலறித்துடித்துக் கொண்டு ஓடி வந்தான்.

மகனைச் சத்திரசிகிச்சை செய்யும் அறைக்கு அனுப்பிவிட்டார்கள் என்றதைக் கேட்டதும் அங்கே ஓடினான் அம் மகவைப் பெற்ற தகப்பன். அறைக்கதவு பூட்டப்பட்டிருந்தது. வெளியே வாங் கொன்று போடப்பட்டிருந்தது. அதில், தான் தனது காரில் ஏற்ற மறுத்த றிக்ஷா ஓட்டி இருப்பதைக் கண்டான். அறைக் கதவு திறக்குமட்டும்தான் அங்கே நிற்க வேண்டும் என்பது வயிரமுத்துவிற்குத் தெரியும். வாங்கில் உட்கார யோசித்த அவன், தான் தீண்டப்படாதவன் ஒருவனுடன் சரிசமமாக உட்காரலாமோ என்று எண்ணி அப்பாலே நின்றான். தன் மகனை அங்கேகொண்டு வந்து சேர்த்து, தனது இரத்தமும் அளித்தவன் அத் தீண்டப்படாதவன்தான் என்பது தெரிந்திருந்தால் ஒருவேளை அப்படி எண்ணியிருக்க மாட்டான்.

அறையிலிருந்து வெளியே வந்த நர்ஸ் றிக்ஷா ஓட்டியை நோக்கி, ''பிள்ளை பிழைத்து விட்டது. நல்ல காலம் உங்கள் இரத்தமும் பிள்ளையின் இரத்தமும் ஒரே இனமாயிருந்தபடியால் அப் பிள்ளையின் உயிரைக் காப்பாற்ற முடிந்தது. நீங்கள்தானே ......... என்று கேட்டாள். ''

''இல்லை'' என்று கூறிவிட்டு எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு, திறந்த வாய் மூடாமல் நின்ற வயிரமுத்துவைக் காட்டினான் அவ் றிக்ஷா ஓட்டி.

வயிரமுத்துவை நோக்கித் திரும்பிய நர்ஸ், இரக்கத்திற்குச் சாதி, மதம் போன்ற பேதங்கள் இல்லையென்ற உண்மையை உணர்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து, பிள்ளை பிழைத்த சந்தோஷத்தில் ஆனந்தக் கண்ணீர் உகுத்துகிறான் என்று நினைத்து அப்பாலே சென்றாள்.

**K. A.** மனோரஞ்சன்
க. பொ. த. ப.
விஞ்ஞானம் - 2-ம் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு வெளிக்கிறது!

இ. ஓங்காரமூர்த்தி
க. பொ. த. ப.
கலைப்பகுதி - 4-ம் பிரிவு

"சோதனையில் நீசித்தி எய்தல் வேண்டும்
தொடர்ந்துன்னைப் படிப்பிக்க வசதி யில்லை
ஆதலினால் கவனமாய்ப் படி" யென் றென்னை
அன்றாடம் எழுப்புகிறார் தந்தை நானோ
கூதலையும் பாராமல் விடியற் காலை
கொட்டாவி பலவிட்டுப் படிக்க வந்தால்
வேதனையொன் றென்நெஞ்சை வருத்திக் கொல்லும்
வேலைக்கு வழிதேடும் மார்க்கம் என்ன?

பல்கலைகள் பயில்கழகப் பட்டம் பெற்ற
பன்னிரண்டா யிரம்பேர்கள் அவர்க ளோடு
கல்வித்தரா தரப்பத்ரம் பெற்றார் கூட்டம்
கணக்கில்லை ஐந்தாறு லட்சம் தேறும்
சில்லறையாய்ப் படித்தோரும் படிக்கா தோரும்
சேர்ந்திந்தச் சிறுநாட்டில் இருபான் லட்சம்
அல்லல்மிகப் படுகின்றார் வேலை யின்றி
அவரணியில் நாளைநான் ஒருவன் அன்றோ?

"படிக்கின்ற மகனுக்கு வேலை வந்தால்
பட்டதுயர் மறைந்துவிடும் - மகனை நல்ல
இடத்தினிலே கொடுத்திடலாம் - வைத்த காணி
ஈட்டினையும் மீண்டிடலாம் - சீத னத்தில்
குடிமனையும் கட்டிடலாம்" என்றே தம்முள்
கோடிமனக் கோட்டைகட்டும் பெற்றோர் இன்று
கடன்பட்டுப் படிப்பிப்பார் - நாளை ரத்தக்
கண்ணீர்தான் வடித்திடுவார்! வேலை எங்கே?

உத்யோக மாயைதனை விட்டொ ழித்து
உடலுழைப்பை மேற்கொள்வீர்! கூலி வேலைக்(கு)
எத்தனையோ பேர்தேவை இளைஞர் கூட்டே!
இதில்வெட்கம் கொள்ளாதீர் என்றே நாளும்
கத்துகின்ற பெரியோர்கள் உண்டு அன்னார்
கருத்திற்கு என்நன்றி! எண்ணிப் பார்த்துச்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் கூலி வேலை
செய்வதற்கும் இன்றிங்கு வழியே யில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விவசாயி தான்நாட்டின் முதுகெ லும்பு"
விளாசுகிறார் மேடைகளில் ஏறி நின்று!
தவறாக எனையெண்ண வேண்டாம் அன்னார்
தரித்திரத்தை நானறிவேன்! இந்த நாட்டின்
சுவர்களிலே, வானொலியில், ஏட்டில், பேசும்
சொற்களிலே விவசாயி வாழ்க்கை சொர்க்கம்!
கவலைகளைச் சுமக்கின்ற உழவோர் அன்றிக்
களிக்கின்ற உழவனை நான் கண்டேன் அல்லேன்!

பிரித்தஇதழ் பிரித்தபடி இருக்கக் கையில்
பிடித்தகோல் பிடித்தபடி இருந்த என்னை
நெருப்புமிழும் தந்தைகுரல் வெருட்டும் வேளை
நினைவுவரப் பெற்றவனாய் மேசை மீதில்
தெரிந்தெடுத்த புத்தகத்தின் தாள்கள் தன்னைத்
திருப்புகிறேன், படிக்கின்றேன் - அடடா வானிற்
சிரித்தபடி சுதிராட்சி செய்வான் என்றே
சிவந்துவரும் கிழக்கேகடன் வண்ணம் வாழ்க!

---

பெண்கள் எப்போதும் நிறைகுடம் போன்றவர்கள்;
உணர்ச்சியைத் ததும்ப விடமாட்டார்கள்.
ஆண்கள் அப்படியல்லவே;
நிழலசைந்தாலும், அவள் அசைந்தாள் என்று எண்ணிக்கொண்டு அவதிப்படுவார்கள்;
இது இயற்கை.

— அண்ணாத்துரை

அன்பின் ஆற்றலை அளவிட முடியாது. அது அற்ப கூழை அமுதமாக்கும்.
சிறு குடிலைப் பெரு மாளிகையாக்கும். துன்பக்கணையைத் தடுக்கவல்லது
அன்புக்கணையே. இன்னல்களைப் போக்கி இடர் களைவது அன்பே.

— திருவள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயிலோ ரயில்

சிலரது வாழ்வில் ரெயிலில் பிரயாணம் செய்வது ஒரு சாதாரண நிகழ்ச்சிதான், ஆனால் அதே ரெயில் பிரயாணம் சிலரது வாழ்வில் ஒரு திருப்பத்தையே உண்டுபண்ணினாலும் பண்ணலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் ரயிலில் பிரயாணம் செய்வது ஒரு விரசச் செயல் மட்டுமன்றி எனக்குப் பலவித உதவிகளும் செய்துள்ளது என்றால் அது மிகையாகாது.

என்னை ஊரின் பிரமுகர்களின் வரிசையில் வைத்துக் கொள்வதற்கு உதவும் ரெயில் பிரயாணங்களை என்னால் மறக்கவே முடியாது. நண்பர்கள் புடைசூழ ரெயிலடிக்குச் செல்வேன். எல்லோரும் என்னைக் கையசைத்து என்னை ஒரு பெரிய மனிதர் வரிசையில் வைப்பர். அன்றொரு நாள் இப்படித்தான் நண்பர்கள் பலர் சுமார் இருபது பேர் என்னை வழியனுப்ப வந்திருந்தார்கள். — உண்மையில் நான்தான் அவர்களை அழைத்திருந்தேன் — அதிக தூரமல்ல, யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்குத்தான் ஒரு சிறு அலுவலாகச் சென்றேன். அன்று சுமார் இருபது பேருக்குப் 'பிளாட்போம்' டிக்கட்டுகளுக்கும், பிறவற்றிற்குமாச் சுமார் ஐந்து ரூபாய் துண்டு விழுந்து விட்டது. என்றாலும் இதனால் நான் பெரிய பிரமுகராகி விட்டேன். அவர்கள் எனக்குக் கூறிய "டட்டா, பைபை, குட்லக், செரியோ" போன்ற பலவற்றைப் பார்த்திருந்தவர்கள் மெய்ம்மறந்திருப்பார்கள். நான் பிரமுகன்தான் என்பதையும் அறிந்திருப்பார்கள்.

ரெயில் பிரயாணத்தில் நாம் பல நண்பர்களையும், ஏன் காதலர்களையும் பெற்றுக்கொள்ளலாம். ஒருமுறை எனது எதிர் ஆசனத்தில் ஒரு பெண் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் ஜன்னலை உயர்த்த முடியாது அவதிப்பட்டுக்கொண்டிருக்கையில், நான் 'கதா நாயகனாக' மாறினேன். — சிவாஜியோ, எம். ஜி ஆரோ என்ற எண்ணம் என் மனதில் — ஒரே அடிதான். மேலே போய்விட்டது அந்தப் (புண்ணிய) ஜன்னல். வெற்றிப் புன்னகையோடு எனது ஆசனத்தில் அமர்ந்தேன். பதிலுக்கு அவரும — அப்பெண்மணியும் — ஒரு புன்னகையை வீசினார். அதன் அர்த்தம் 'தாங்ஸ்' என்பது போலும். இந்த நிலையில் எனது நண்பன் இராமநாதன் தன்னுடைய 'காதலி'யைத் தேடிப் பிடித்த விதம்தான் என்னுடைய ஞாபகத்திற்கு வந்தது. அவனுக்குக் காதலி ரெயிலில்தான் கிடைத்தாளாம். ஏன் எனக்கும் கிடைக்கக்கூடாது என்ற எண்ணத்தில், எதிர்ப் பிரயாணியிடம் ஒரு புன்னகையொன்றைத் திரும்பவும் வீசினேன். என்னே ஏமாற்றம்! ஒரு பதிலையும் காணோம்.

அதே நேரத்தில் ஒரு ஆண் பிர(ய)ாணி எங்கோ சென்றிருந்தவர் — அப்பெண்ணின் அருகே அமர்ந்ததோடல்லாமல் பேசவும் செய்தார். அவர்தான் அப் பெண்ணின் கணவர்போலும். அப்போது பார்க்கவேண்டுமே என்முகத்தை!! எண்ணெய் வழிந்தது; அது மட்டுமா, வேறும் ஏதோ? அதைத்தான் 'அசடு வழிதல்' என்பார்களோ? எல்லாம் இந்த ரெயில் பிரயாணத்தால் வந்தவினைதான்.

ரெயிலில் ஏன் வகுப்பு வாரியாகப் பிரித்திருக்கிறார்கள் என்று ஒரு நாள் ஆராய்ச்சியில் இறங்கினேன். நான் செல்வந்தன், பெரிய பிரமுகன் என்பதைக் காட்டுவதற்குச் சிறந்தவழி மேல் வகுப்புகளில் பிரயாணம் செய்வதே என்ற முடிபுக்கு வந்தேன். இதுவே என் ஆராய்ச்சியின் முடிபு.

எங்களூரில் திடீரென ஒருவருக்கு "ஜே. பி" பட்டத்தை அரசாங்கத்தினர் வழங்கினர். ஊர் மக்கள் அவருக்கு ஒரு வரவேற்பு வைபவம் வைக்க விரும்பினார்கள். — உண்மையில் அப் பிரமுகர்தான் அப்படி விரும்பினர் — வரவேற்பு என்றால் எங்கிருந்தாவது வர வேண்டுமே? ஆகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவத்தன்று மத்தியானம் ''ஜே, பி.'' அவர்களைக் காரில் சாவகச்சேரிக்கு ஏற்றிச்சென்று, அன்றைக்கு வரும் கொழும்பு ரெயிலில் முதல் வகுப்பில் ஏற்றிவிட்டு வந்தார்கள். பின்பு யாழ்ப்பாணம் ஸ்டேசனில் பூமாலை சகிதம், ரெயிலிலிருந்து இறங்கும் பிரமுகரை வரவேற்றார்கள். என்னே ரெயில் பிரயாணத்தின் மகிமை!

உங்களில் பலருக்குத் ''திரிசங்கு சுவர்க்கம்'' என்றால் என்னவென்று தெரியாது. ஆனால் நான் அதை அனுபவித்து இருக்கிறேன். மூன்றாம் வகுப்பு 'டிக்கற்' ஒன்றை வாங்கிக்கொண்டு யாழ்ப்பாணம் செல்லும் ரெயிலில் ஒரு விடுமுறை நாளில் கொழும்பில் ஏறிக்கொள்ளுங்கள். உங்களால் ஏற முடியாது. இருந்தும் சாமானோடு சாமானாக, உள்ளே நீங்கள் தள்ளப்பட்டால் 'ஏதோ முற்பிறப்பில் நீங்கள் செய்த புண்ணியம்' என்று அர்த்தம். உள்ளே அசைய முடியாமல் பலர் இருக்கும்போது, இன்னும்பலர் நுழைவார்கள்— தவறு, மன்னிக்கவும்— தள்ளப்படுவார்கள். அந்த நேரத்தில் உங்களை அறியாமல் உங்கள் கால்கள் மேலெழும்புகின்றன. ஒரு கையால் ஜன்னலைப் பிடித்துக்கொண்டே மற்ற அங்கங்கள் கீழே முட்டாமலும், முகட்டிலும் முட்டாமலும் நிற்கின்றீர்கள். இதை நம்முடைய அருமையான ரெயிலில் அல்லாது வேறெங்கே காணலாம்?

நீங்கள் ''சர்க்கஸ்''வித்தைகள் பார்த்திருந்தாலும், பழகி இருந்தாலும், உங்களைப் பழக்குவிக்க வேண்டுமானால் நமது புகைவண்டிகளில் இருமுறை மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்து பாருங்கள். நீங்கள் நிச்சயம் கைதேர்ந்த ''சர்க்கஸ்'' காரராகி விடுவீர்கள்.

நான் ஒரு கோப்பிப் பிரியன். அதை அடிக்கடி அருந்துவேன் — மன்னிக்கவும்— விழுங்குவேன். ரெயிலில் பிரயாணம் செய்யும்போது ஜன்னலின் ஊடாக வாங்கிக் குடிக்கும் கோப்பியே ஒரு தனி ருசி. நீங்கள் வேண்டுமானால் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். கொழும்பிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும்போது, ஒரு கண் தூக்கம் தூங்கிய பின் நின்றபடியே தான் — மதவாச்சியில் ஒரு கிளாஸ் கோப்பி — கறுப்புக் கோப்பிதான் —குடித்துப் பாருங்கள். அதன் ருசியே தனி ருசி. இவற்றையெல்லாம் நீங்கள் ரெயிலில் பிரயாணம் செய்தால்தான் அனுபவிக்கலாம்.

பள்ளிக்கூட நாட்களில் 'களை பிடுங்குதல்' போன்ற பல சம்பவங்களுக்கு நாங்கள் ரெயிலில் போவதுண்டு. ஆசிரியர்களும், மாணவர்களும் ஒரே பெட்டியில் ஏறி அடைத்துக்கொள்வோம். அப்போது மாணவர்களாகிய நாங்கள் எல்லோரும், சங்கீத வித்துவான்களாகி விடுவோம். வாயில் வந்தபடி நாங்கள் பாடுவதை, நீங்கள் கேட்பீர்களாயின் நமது இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்புக் கோஷ்டிகானம் பிச்சை வாங்க வேண்டுமென அபிப்பிராயப்படுவீர்கள். பெட்டிகளின் கதவிலும், ஜன்னல்களிலும் நாம் அடித்து எழுப்பும் மேளக்கச்சேரியின் முன்னால் அளவெட்டி தவில் வித்துவான் தட்சிணாமூர்த்தி எந்த மூலை? இவற்றையெல்லாம் நீங்கள் ரெயில் பிரயாணத்தில்தான் அனுபவிக்கலாம்.

இவைமட்டுமல்ல, இன்னும் ரெயிலில் போகும்போது ஜன்னல் ஊடாக எட்டிப் பார்த்துக்கொண்டு, கீழே றோட்டிலும் வளவுகளிலும் நிற்பவர்களைப் பார்த்துச் சண்டித்தனமாகக் கையைக் காட்டுவதும், உறுக்குவதும், முகத்தை அஷ்ட கோணலாக்குவதும் எவ்வளவு பெரிய வீரத்தனம்? இப்படிப்பட்ட வீரத்தனங்களுக்கு இடம்கொடுக்கும் ரெயில் பிரயாணத்தைப்பற்றி இன்னமும் கூறிக்கொண்டு போனால், அதனுடைய மகிமையை இன்னும் தண்டவாளத்தில் ஏற்றி ஓட்டலாம். ஆனால் நீங்களோ, என்ன இவன் ''கடகடா, வளவளா'' என்று ரெயில் வண்டி போலப் போகிறான் என எண்ணி, எனது கௌரவத்தையும், வீரத் தன்மைகளையும் தண்டவாளத்தில் ஏற்றி, அதற்கு மேல் ரெயிலை விடுவீர்களே என நினைத்து இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

ச. சண்முகம்
க. பொ. த. ப.
ஆரம்ப வகுப்பு - B பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பிச்சைக்காரனின் சுயசரிதை

பாடசாலைகட்கெல்லாம் விடுமுறை விட்டிருந்த காலம். எங்கள் வகுப்பில் நானும் சில நண்பர்களுமாக விடுமுறையைக் கழிப்பதற்கு ஒரு உல்லாசப் பிரயாணம் செய்ய எண்ணியிருந்தோம். அதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. உல்லாசப் பிரயாணம் போவதற்கு ஒரு சிற்றூர்தியையும் (கார்) ஏற்பாடு செய்தோம்.

நாங்கள் போகவேண்டிய நாளும் வந்தது. அன்று எல்லோரும் குதூகலமாக இருந்தோம்; அனைவரும் பிரயாணத்தை ஆரம்பித்தோம். உல்லாசமாகச் சென்று கொண்டிருக்கையில் ஜன நடமாட்டம் இல்லாத ஒரு கிராமத்தின் அருகிலே இயந்திரக் கோளாறு காரணமாகச் சிற்றூர்தி நின்றுவிட்டது. சிற்றூர்திச் சாரதி அதைத் திருத்துவதற்காக அருகில் இருந்த ஊருக்கு ஆட்களைக் கூட்டிவரச் சென்று விட்டான்.

நாங்கள் எல்லோரும் வண்டியில் இருந்து இறங்கினோம். பின் அந்த சுற்றுடலைப் பார்த்தோம். அப்போது எங்கள் கண்ணுக்கு ஒரு பிச்சைக்காரன் தென்பட்டான். உடனே நாங்கள் அவனைச் சூழ்ந்துகொண்டோம். அவன் இந்தநிலைக்கு வரக் காரணம் என்ன என்று கேட்டோம்; அதற்கு அவன் ''சகோதரர்களே, அது ஒரு பெரிய கதை'' எனக் கூறிவிட்டுத் தன்கதையைச் சொல்லத் தொடங்கினான்.

என்னுடைய தந்தையின் பெயர் பரமசிவம்; நான் இருந்த ஊரிலேயே அவர் தான் பெரிய பணக்காரர். பெரியவீடு, நிறைய நிலம், நிறையப்பணம் எல்லாம் இருந்தன. எனது பெற்றோர் நான் விரும்பியதை எல்லாம் வாங்கிக் கொடுத்து என் இஷ்டப்படி நடத்தி வந்தனர். அதனால் எனக்குச் செல்வச் செருக்கு மிகுந்தது,

ஆனால் இலக்குமி உள்ள இடத்தில் சரஸ்வதி இருக்கமாட்டாள் என்பது போல, எனக்குப் படிப்பென்றால் பாகற்காயாகியது. நான் படிக்கவே விரும்பவில்லை. இதைப்பற்றி மற்றவர்கள் கேட்டபோது எனக்குப் பணம் இருக்கும்போது நான் ஏன் படிக்க வேண்டும் என வீறாப்புடன் பதில் சொன்னேன்.

பெற்றோருக்கு நான் ஒரே பிள்ளை என்றபடியால் அவர்கள் தந்த செல்லம் காரணமாக நான் அவர்களின் சொல்லைக் கேட்காமல் கெட்ட கூட்டத்தோடு சேர்ந்தேன். வீட்டில் இருந்து நிறையப் பணம் எடுத்துச் சென்று நண்பர்களுடன் செலவு செய்தேன்; ஆசிரியர்களை இகழ்ந்தேன்; அவர்கள் கண்டிப்பது நன்மைக்கே என உணரவில்லை. இதையெல்லாம் அறிந்த என் தந்தையார் என்னை அழைத்துப் பணம் சம்பாதிப்பது மிகக் கஷ்டம் என்றும் அதை வீணாகச் செலவு செய்யக் கூடாது என்றும் பல அறிவுரைகள் வழங்கினர். நான் அவற்றைக் கேளாமல் அவர்களை நிந்தித்தேன்.

என் தந்தையார் என்னைப்பற்றிக் கவலைகொண்டு வருந்தினர். அவரை விரைவில் கசநோய் பற்றிக்கொண்டது. சிறிது காலத்தில் அவர் காலம் சென்றார். அதையடுத்து தாயாரும் இறந்தார். நான் சொத்திற்கு அதிபதியானேன். நண்பர் தொகை கூடியது; நண்பர்களுடன் கூடிப் பணத்தை வீணாகச் செலவு செய்தேன். அந்நேரத்தில் யான் கடவுளைப் பற்றிச் சிறிதளவேனும் சிந்திக்கவில்லை. என் நண்பர்கள் கடனாக என்னிடம் பணம் வாங்கிப் பின்பு அதைக் கொடுக்காமல் ஏமாற்றினர். நான் பணத்தைச் செலவழித்தேனே யன்றி விருத்தியாக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே என் பணம் கரைந்தது. நான் வியாபாரம் செய்ய எண்ணி வீடு, நிலம் எல்லாம் விற்றுப் பணமாக்கிக்கொண்டுவந்தேன். ஆனால், அனுபவம் அறிவு முதலியவற்றின் குறைபாடுகளினால் நான் பணத்தை இழந்தேன். பேரிடி மேல் பேரிடி விழுந்து பாழாய்ப் போன என் வாழ்க்கையை நினைந்து மனம் நொந்தேன். அப்போது பட்ட காலே படும்; கெட்ட குடியே கெடும் என்ற முது மொழிப்படி யான் ஒரு மோட்டார் விபத்தில் சிக்கி இரு கால்களையும் இழந்தேன். நான் வைத்திய சாலையில் இருக்கும்போது ஒரு நண்பரும் என்னைக் கவனிக்கவில்லை. அப்போதுதான் என் அகக் கண்கள் திறந்தன. மனம் திருந்தியது.

உடல் சுகமான பின் உறவினரிடம் உதவி கேட்டேன், ஒருவரும் உதவவில்லை. வேறு வழியில்லாது பிச்சை எடுக்கத் தொடங்கினேன். சில வேளை பட்டினியாயும் இருப்பேன். இப்போதுதான் யான் எனது தவறை உணர்கின்றேன். இனி யோசித்து என்ன பலன்? நீங்களாவது என் கதையைக் கேட்டுத் திருந்தி நடவுங்கள் என்று கூறி முடித்தான். இதுவும் ஒருமனிதப் பண்பு என்பதை என் பிரயாண மூலம் அறிய முடிந்தது.

பொ. ரகுபதி
8-ம் வகுப்பு - F பிரிவு

# விஞ்ஞானத்தால் நாம் அடையும் பலன்

தற்கால மனிதன் தன் அறிவைப் பயன்படுத்தித் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவிய வழிகளே விஞ்ஞானத்தின் தோற்றம் ஆகும். தற்காலத்திலிருந்து விஞ்ஞானம் படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறது. இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞான சரித்திரத்திலே பொன் எழுத்துக்களால் பொறிக்கவேண்டிய காலமாகும். விஞ்ஞானத்தில் உச்ச நிலையை எய்திய காலமும் இந் நூற்றாண்டே.

மக்களின் உணவு, உடை, உறையுள் என்பனவற்றைப் பூர்த்தி செய்ய விஞ்ஞானம் பெரிதும் பயன் படுகிறது. இன்றும் பல வசதிகள் விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் ஏற்பட்டு இருக்கின்றன. மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவுற்பத்திக்கு இயந்திர சாதனங்களும், நீர்ப்பாசன வசதிகளும், செயற்கை மழையும், களை கொல்லி மருந்துகளும் உரங்களும் விஞ்ஞானத்தால் ஏற்பட்ட விளைவுகள் ஆகும்.

மனிதனுக்கு உடையும் அத்தியாவசியமாகும். பண்டைக்காலத்தில் பருத்திச் செடிகளை வளர்த்து நூல் நூற்று உடைகளைச் செய்தனர். ஆனால் இப்போது விஞ்ஞானத்தின் பயனாக டெரிலின், நைலோன், பட்டு உடைகளைச் செய்ய முடிகிறது. நாகரிகம் முன்னேறச் செலவு குறையும் எனக் காந்திஜீ கூறியுள்ளார். நாகரிகம் முன்னேறும் இக் காலத்தில் புதிய கண்டுபிடிப்புகள் ஏற்படுகின்றன. இதன் பயனாகச் செலாவணி மீதப்படுகிறது. ஓலையினால் வேய்ந்த வீடுகள் அலுமினியக் கலப்புத்தகட்டினால் வேயப்படுகின்றன. மண் சுவர்கள் சீமெந்துச் சுவர்களாக மாறுகின்றன.

அக்காலத்தில் நாளெல்லாம் நடந்து நாலு காததூரம் சென்ற மனிதன் இப்போது நாலு செக்கனில் நாற்பது காத தூரம் செல்கிறான் என்றால் விஞ்ஞானத்தின் புதுமையும் மகிமையும் என்னே! காடுகள் நாடுகளாகின்றன, பாலைவனம் சோலைவனம் ஆகின்றது. மோட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதம், புகைவண்டி, வானவூர்தி எனப் போக்கு வரவில் எத்தனை வசதிகள். சந்திரனை நோக்கிக்கூட மனிதன் படையெடுக்கிறான் என்றால் விஞ்ஞானத்தின் வளர்ச்சியைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. இருக்கும் இடத்தில் இருந்துபார்க்க தொலைக்காட்சி, தொலையிலுள்ளவர்களுடன் பேசத் தொலைபேசி, கேட்க வானொலி, பலநாட்கள் உணவையோ பானங்களையோ பழுதுபடாமல் பாதுகாக்க குளிர்சாதனப்பெட்டி, பல தரப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு மின்சாரம் இத்தனையும் விஞ்ஞானத்தால் நாம் அடைந்த நன்மைகளன்றோ!

விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் நன்மைமட்டுமன்றித் தீமையும் நிறைந்திருக்கிறது. சமாதானம் நிலவவேண்டிய உலகில் சச்சரவு ஏற்படுகிறது. அழிவுப் பொருள்களாகிய அணுகுண்டு, துப்பாக்கி முதலியன நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பனவாகும். ஆனால் விஞ்ஞானத்தினால் நாம் அடையும் பயன் சொல்லற்கரியது. இதனால் விஞ்ஞானத்தை மேலும் வளர்த்துப் பயன் பெறவேண்டும். அது அழிவு வேலைகட்கல்லாது ஆக்கவேலைகட்குப் பயன்பட நாம் அல்லும் பகலும் பிரார்த்திப்போமாக!

கு. செந்தில்மனோகரன்
8-ம் வகுப்பு - F பிரிவு

# சைவமும் தமிழும் வளர்த்த நாவலர்

இலங்கையின் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடமாகிய யாழ்ப்பாணத்து நல்லூரிலே நாவலர் அவதரித்தார். தந்தை யார் வேளாண் குலத்திலகர் கந்தப் பிள்ளை; தாயார் சிவகாமி அம்மையார்.

இளமையிலேயே கல்வி, கலாச்சாரங்களில் மேம்பட்டு விளங்கிய நாவலர் உரியகாலத்தில் இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்றார். பன்னிரண்டாம் வயதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆங்கிலம் கற்கத் தொடங்கினார். இவருடைய சீரிய பண்பையும் கெட்டித்தனத்தையும் கண்ட கல்லூரி அதிபர் பீற்றர் பார்சிவல் பாதிரியார் இவரை அங்கே ஆசிரியராக நியமித்தார். அக்காலத்தில்தான் விவிலியநூல் மொழி பெயர்க்கப்பட்டது. அக்காலத்தில் சைவமும் தமிழும் கஷ்டநிலையிலிருந்தன. கிறீஸ்தவ சமயம் ஓங்கி வளர்ந்தது. இதைக்கண்ட ஆறுமுகநாவலர் வருந்திப் பல இடங்களிலும் பிரசங்கங்களை நடாத்தினார். பல சமயப்புத்தகங்களை எழுதி வெளியிட்டார். யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் இவரது புகழ் பரவியது. சைவப்பாடசாலைகளை இலங்கையிலும் இந்தியாவிலும் ஸ்தாபித்தார். ஏட்டு வடிவிலிருந்த பல அரிய நூல்களைச் செந்தமிழில் தமது அச்சகத்தில் அச்சிடுவித்தார். சைவவினாவிடை, இலக்கணச் சுருக்கம், பாலபாடம், பெரிய புராண வசனம் முதலியன இவரது நூல்களுட் சில. இந்தியாவிலுள்ள பெரியார்கள் இவருக்கு ''நாவலர்'' என்ற பட்டத்தையும் சூட்டினர்.

இறுதி வரை பிரம்மச்சாரியாக சைவத்துக்கும் தமிழுக்கும் அயராது உழைத்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரை நாம் எப்பொழுதும் மறந்துவிட முடியாது.

செ. ஸ்கந்தராசா
7-ம் வகுப்பு - D பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

கடவுள் மனிதருக்கு மட்டும் கொடுத்துள்ள ஒரே அரும்பொருள் அன்பு. அது நெஞ்சுடன் நெஞ்சை, உயிருடன் உயிரை பிணைக்கும் ஒரு வெள்ளித்தளை.

— வால்டர் ஸ்கொட்

அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்.

— ட்றைடன்

அணுகுண்டுக்கு முன்பு ஒருவேளை மனிதன் அசையாது நிற்கவும் கூடும். ஆனால் அன்புகனிந்த சொற்களின் முன் அவன் பின்னடையத்தான் வேண்டும்.

— காண்டேகர்

அன்பு கடவுளின் வடிவம்.

— லூதர்

அன்பு செய்தால் அல்லல் தீரும்; அல்லல் தீர்ந்தால் அமைதி பெருகும்; அமைதி பெருகினால் அதுவே சொர்க்கம்.

— பெ. தூரன்

அன்பு நீடிய சாந்தமும், பொறுமையும் உடையது. அதற்கு பொறாமை இல்லை.

— விவிலியநூல்

அன்பான அக்கினியில் எவ்வளவு கடினமான உள்ளமும் இளகியே தீரும்.

— மகாத்மாகாந்தி

அன்பு சர்வலோக சஞ்சீவி.

— ராஜாஜி

# கல்வி

கல்வி என்பது ஆற்றைப் போன்றது; எவ்வளவுக்கு எவ்வளவு இது ஆழமாயிருக்கின்றதோ, அவ்வளவுக்கு அவ்வளவு இது சந்தடியின்றி அமைதியாக இருக்கும்.

— எவ். பேக்கன்

ஒருசெடி வளர்வதற்கு என்னென்ன தேவையோ, அதைப்போன்று மனிதன் பண்பாட்டைப் பெறுவதற்கு கல்வி அவசியம்.

— ரூஸோ

உலகிலே கல்வி முக்கியமானது மட்டுமல்ல; அதிசயமான மாற்றங்களையும் உண்டுபண்ணக் கூடியது ஆகும்.

— ஜே. ரஸ்கிஸன்

பல காலமாய்த் தன் மனதில் புதைந்திருக்கும்ஞானத்தை வெளிப்படுத்துவதே கல்வியாகும்.

— சுவாமி விவேகானந்தர்

கற்றல் என்பது வாசித்து, படித்து, சிந்தித்து, மனதில் புதுக்கருத்துக்களை உருவாக்குவதாகும்.

— செஸடர் மீல்டு

கல்விக்காக உயிரை தியாகஞ்செய்பவன் என்றும் இறப்பதில்லை.

— முகமதுநபி

தொகுத்தவர்:— ச. சிவச்செல்வம்
8-ம் வகுப்பு - C பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நன்றி

1958-ம் ஆண்டு எமக்கு தமது சஞ்சிகைகளையும் மலர்களையும் அனுப்பியோருக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இப் பட்டியலில் ஏதாவது பெயர்கள் தவறுதலாக விடப்பட்டிருந்தால் எம்மை மன்னிக்கும்வண்ணம் வேண்டுகின்றோம்.

றோயல் கல்லூரி, கொழும்பு
இந்துக் கல்லூரி, இரத்மலானை
சஹிராக் கல்லூரி, கொழும்பு
றினிற்றிக் கல்லூரி, கண்டி
நாலந்தாக் கல்லூரி, கொழும்பு
றிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி
பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்
மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை
வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி, மானிப்பாய்
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னுகம்
யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை (ஆரம்ப பாடசாலை மலர்)
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பலாலி விஞ்ஞான, கணித, கைப்பணி மாணவர் [மன்றம்
,, ,, ,, ,, (வணிகதீபம்)
,, ,, ,, ,, (கலாவதி)
,, ,, ,, ,, (இஸ்லாமிய சங்கம்)
,, ,, ,, பேராதனை (சுடர்)
சஹிராக் கல்லூரி, தாரஹா ரவுண்
இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை (இளம்கதிர்)
அரசினர் முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அட்டாளச் சேனை
பச்சையப்பன் கல்லூரி, சென்னை
இந்து மன்றம், கொழும்பு இந்துக்கல்லூரி
றோயல் கல்லூரி, இந்துமாணவர் மன்றம் (சிவசக்தி)
கணபதிவித்தியாலயம், பெ. ஆ. ச., பதுளை
பரந்தன் இரசாயனக் கூட்டுறவுத் தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ENGLISH SECTION

*Editor :* V. S. Sri Kantha
*Asst. Editor :* K. Anandakumar

# CONTENTS


| | Page |
|---|---|
| From the Editor's pen ... ... ... ... ... | 1 |
| The Marvels of the Modern Age ... ... ... | 3 |
| The Commonwealth To-day ... ... ... ... | 4 |
| The Importance of the opposition in a Democratic Country ... ... ... | 5 |
| Could You Guess...... ? ... ... ... | 5 |
| The Olympics ... ... ... ... | 6 |
| The Need for English ... ... ... | 7 |
| The poem I like most ... ... ... | 8 |
| A Thrilling Midnight ... ... ... | 9 |
| An Unforgettable Incident in my Life ... ... | 10 |
| Jaffna — the Dry-Zone in December ... ... | 10 |
| Pilgrimage to South India ... ... | 11 |
| An interesting day in my Life ... ... | 13 |
| My Dream ... ... ... | 14 |
| The Autobiography of a Pen ... ... | 15 |
| Nanthimithra ... ... ... | 16 |
| The Christmas Festival ... ... ... | 16 |
| The Greatest Man ... ... ... | 17 |
| My pet dog ... ... ... | 18 |
| My favourite Hobby ... ... ... | 18 |
| A Visit to the Zoo ... ... ... | 19 |
| The Coin ... ... ... | 19 |
| Acknowledgment ... ... ... | 20 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE JAFFNA MUTUAL BENEFIT FUND Co. Ltd

*( ESTABLISHED 1918 )*

10,000 Shares of Rs. 5/- each, 50,000/00

**Recurring Deposits :** Contributions at the rate of Rs. 10/- per month for 80 months will earn Rs. 1000/- at the rate of Rs. 100/00 per month for 80 months will earn Rs. 10,000/00.

**Savings Accounts :** opened and interest allowed at 1% per annum on the average monthly balance when it does not fall below Rs. 1500/-

**Fixed Deposits :** received for periods of 12, 24 & 36 months and interest allowed at 7, 8 & 9 per cent per annum respectively.

**Loans :** on the security of Jewels and Deposits are granted and part payments accepted.

*FOR FURTHER PARTICULARS APPLY TO :*

THE MANAGER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## COLLEGE PREFECTS 1968



*Standing*: (*L to R*) P. Yogendran, R. Rajalingam, S. Y. Arunasalam, K. Vishnumohan, S. Paramarajah, T. Bragatheeswaran, M. M. Shajahan, M. Thamotharan, T. Munnainathan, M. Sivarajah.

*Seated*: (*L to R*) T. Ganeshwaran (Senior Prefect from Oct. '68), K. Paskaradevan, P. Arumugam, Mr. N. Sabaratnam (Principal), S. Mahendra (Senior Prefect till Sept.'68) S. Senthilnathan, S. Sritharan, G. Sauchiyadevan.

## HOSTEL PREFECTS 1968



இவ்வாண்டு நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளுள் "தற்போதைய உலகில் உண்மையான ஜனநாயகம் நடைமுறையில் இல்லை" என்னும் பொருள் பற்றி யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவியருடன் நடைபெற்ற விவாதம் குறிப்பிடத்தக்க தொன்றுகும். வாதிகளாக இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவியரான செல்வி த. முத்தையா, செல்வி சா. சரவணமுத்து, செல்வி ம. கனகரத்தினம் என்போரும் பிரதிவாதிகளாக எமது மன்றத்தின் சார்பில் செல்வன் ந. சிறீகாந்தா, செல்வன் செ. சண்முகதாசன், செல்வன் மா. சின்னத்தம்பி, என்போரும் கலந்துகொண்டனர். அடுத்தபடியாக ஈண்டுக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஸ்ரீபாளிக்கல்லூரி ஸ்தாபகரும் தேசிய உயர் கல்விச்சபை அங்கத்தவருமான திரு. வில்மற் பெரேரா அவர்களது சொற்பொழிவாகும். இவற்றைவிடத் தோல்ப்புரை வைத்திய நிபுணர் டாக்டர் ப. சிவசோதி அவர்களது சொற்பொழிவும் எமது கல்லூரி ஆசிரியர் திரு. க. மகாலிங்கசிவம் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

து. கணேஸ்வரன்
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திர குடிமையியற் கழகம்

| | | | | |
|---|---|---|---|---|
| போஷகர் | : | | திரு. ந. சபாரத்தினம் (அதிபர்) | |
| தலைவர் | : | | திரு. தி. ஸ்ரீநிவாசன் | |
| | | முதற்பருவம் | இரண்டாம்பருவம் | மூன்றாம்பருவம் |
| மாணவத் தலைவர் | : | க. சேனாதிராசா | த. சர்வானந்தன் | இ. பத்மநாதன் |
| உப தலைவர் | : | ப. சிவானந்தன் | கெ. தனபாலன் | செ. செந்தில்நாதன் |
| செயலர் | : | ச. சத்தியசீலன் | சு. கலாதரன் | சே. ஜீவரத்தினம் |
| பொருளர் | : | க. சுந்தரேசன் | இ. ஸ்ரீதரன் | கு. தனராசா |
| பத்திராதிபர் | : | செ. செந்தில்நாதன் | வெ. எட்வேட் | கா. பத்மநாதன் |

இவ்வருடம் எமது கழக அறிக்கையை உங்கள் முன் பெருமையுடன் சமர்ப்பிக்கின்றேன். ஆண்டுதோறும் ஊக்கமும் ஆக்கமும் பெற்று மேன்மேலும் வளர்பிறை போல் வளர்ந்து வரும் இக் கழகத்தின் இவ்வாண்டு நடைபெற்ற நிகழ்ச்சிகள் கழக வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும். 1943 - ம் ஆண்டு யூலாய் மாதம் ஆரம்பிக்கப்பட்ட எமது கழகத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவை ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி குமாரசாமி மண்டபத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினோம்.

எமது கழகத்தின் ஆரம்ப போஷகராக விளங்கியவர் முன்னை நாள் சரித்திர ஆசிரியராயிருந்த திரு S. V. பாலசிங்கமாவர். ஆரம்ப வருட மாணவத் தலைவராக விளங்கியவர் திரு. யோகேந்திரா துரைசாமியாவர். தற்போது இவர் சீனாவில் இலங்கைத் தூதராலயத்தில் ஆலோசகராகக் கடமை புரிகின்ருர். ஆரம்ப வருட செயலராகக் கடமையாற்றியவர் திரு தி. ஸ்ரீஇராமநாதன் ஆவர். இவர் தற்பொழுது கொழும்பில் நியாயவாதியாகவும், இலங்கைச் சட்ட சங்கத்தின் தலைவராகவும், இலங்கை ஐ. நா. சங்கத்தின் தலைவராகவும், சட்டக் கல்லூரி விரிவுரையாளராகவும் பணிபுரிகின்ருர்.

இக் கழகம் மாணவர்கள் பேச்சு வன்மையும் சிறந்த அரசியல் அறிவும் பெற்று திகழ்வதற்கு வாரம் ஒருமுறை கூட்டங்களை நடாத்தி வருகின்றது. ஆசிரியரும் மாணவரும் பயன்படும் பேச்சுகளை நிகழ்த்துவார்கள். இவ்வாண்டு மகாஜனக் கல்லூரியுடன் விவாதம் ஒன்றை நடாத்தினோம். ''பல்கலைக் கழகங்கள் தம் குறிக்கோளினின்றும் தவறி விட்டன'' என்று மகாஜனக் கல்லூரித் தமிழ் மன்ற மாணவர்களும், தவறவில்லை என்று எமது கழக அங்கத்தவர்களும் வாதிட்டார்கள். இந்த விவாதம் தரத்தில் உயர்ந்ததாக இருந்ததுடன் எமது கழகத்திற்குப் பெருமையையும் தேடித் தந்தது. எமது கழகத்தின் வெள்ளி விழாவில் கலந்துகொண்ட கல்லூரி அதிபர்களுக்கும், ஆசிரியர்கட்கும் மாணவ மாணவியர்கட்கும் இவ் விழாவில் சிறந்த சொற்பொழிவுகளை நிகழ்த்திய ஆசிரியர்கள் திரு. மா. மகாதேவன், திரு. சி. வைரமுத்து, திரு. எஸ். மகாலிங்கம், திரு. சோ. கணேசரத்தினம், திரு. மு. கார்த்திகேசன் எமது அதிபர் திரு. ந. சபாரத்தினம், ஆகியோர்க்கும் எமது கழகத்தின் நன்றிகள் பல.

கழகத்தின் அறிக்கையை முடிக்குமுன் கழகத்தின் வெள்ளி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு முன்னின்று, உழைத்தவர்களுக்கு நன்றி கூருமல் விட்டால் எனது அறிக்கை பூர்த்தியாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Committee of the Historical and Civic Association 1968
(Silver Jubilee year)



*Standing:* (*L to R*) S. Ponnampalam, S. Senthilnathan, I. Mylvaganam, R. Sritharan, T. Ganeshwaran, T. Bragatheeswaran, V. Edward, K. Thanarajah, K. Pathmanathan, T. Krishnakumar.

*Seated:* (*L to R*) S. Kalatharan, T. Sarvananthan, S. Jeevaratnam (Secretary) Mr. N. Sabaratnam (Principal), Mr. T. Srinivasan, R. Pathmanathan (President), S. Sathiyaseelan.

## The Committee of the Geographical Society



*Standing* (*L. to R.*) K. Mahalingam, G. Gnanaratnam, R. Sritharan, K. Thanarajah

*Seated* (*L. to R.*) Mr. V. Mahadevan (Vice-Patron), M. Puvaneswaran (Secretary), T. Sarvananthan (President), Mr. N. Sabaratnam (Principal)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Advanced Level Physical Science Union Committee



*Standing* (*L. to R.*) A. Mahendrarajah, G. Nandakumar,
R. Devabalasundram, A. S. M. Sathar

*Seated* (*L. to R.*) Mr. K. Pathmanayagam (Vice-Patron). U. Nirmalanathan,
Mr.N.Sabaratnam Principal (Patron), Mr.A.Karunaharar (Vice-Patron)

## Advanced Level Biology Science Union Committee



*Standing* (*L. to R.*) V. E. Kumaran (Asst. Secretary), T. Nadesalingam (Editor),
S. Sivarajah (Vice-President)

*Seated* (*L. to R.*) Mr. N. Sabaratnam, Principal (Patron),
K. Kanapathipillai (President), M. M. Shajahan (Secretary),
Mr. M. C. Francis (Vice-Patron)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அதிபர் திரு. ந. சபாரத்தினம், தலைவர் திரு ஸ்ரீநிவாசன் அவர்கட்கும் வெள்ளி விழாவைச் சிறப்பாகக் கொண்டாட தகுந்த ஆலோசனை கூறிய திரு. வ. மகாதேவன் அவர்கட்கும், எமது கழக வரலாற்றைத் தொகுத்து ஒழுங்காக வெளியிடுவதற்கு உதவி புரிந்த ஆசிரியர்களான திரு. வி. சிவசுப்பிரமணியம், திரு. க. சொக்கலிங்கம் ஆகியோர்கட்கும் தேநீர் சிற்றுண்டி விருந்துகளுக்குப் போதிய ஒழுங்கு செய்துதந்த ஆசிரியர் பொ. மகேந்திரன் அவர்கட்கும் எமது கழகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

எமது கழக வரலாற்றைச் சிறப்பாக வெளியிட்ட தினகரன், ஈழநாடு பத்திரிகைகளுக்கும், எமது கழகத்தின் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்த அங்கத்தவர்களுக்கும் எமது கழகத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன்.

சே. ஜீவரத்தினம்
செயலர்

---

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
# சரித்திர குடியியற் கழக
# வெள்ளிவிழாச் சிறப்பிதழ்

## ஒரு தலைமுறைக் காலத்தில் எமது சாதனைகள்

[எமது ஆசிரியர் திரு வி. சிவசுப்பிரமணியம் அவர்களால் இப்பகுதி தொகுக்கப்பட்டு வெள்ளிவிழாத் தினமாகிய 30–10–68 அன்று தினகரன், ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் சிறப்பிதழாகப் பிரசுரிக்கப்பட்டது]

### ஆரம்பம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சரித்திர குடியியற்கழகம் இன்று தனது இருபத்தைந்தாவது நிறைவு விழாவை வெகு விமரிசையாகச் கல்லூரிக் குமாரசுவாமி மண்டபத்தில் கொண்டாடுகின்றது.

கல்லூரியில் வெவ்வேறு பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு வெவ்வேறு கழகங்களும், சங்கங்களும் அமைக்மப்பட்டுள்ளன. ஆனால் கலைப்பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட மாணவர்களுக்கு ஓர் தலையாய கழகமாக விளங்குவது சரித்திர குடியியற் கழகமேயாகும். இத்தினத்தில் இக் கழகத்தின் வரலாற்றையும் வளர்ச்சியையும் எடுத்துக் கூறுவது மிகப் பொருத்தமுடையதாகும்.

இக்கழகம் கல்லூரியின் கலைப்பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட மாணவர்களின் விடாமுயற்சியினாலும் ஊக்கத்தினாலுமே 1943 ஆம் ஆண்டு யூலாய் மாதம் 23 ஆம் திகதி உருவாயிற்று. இக்கழகத்தின் ஆரம்ப போஷகராக விளங்கியவர் எமது கல்லூரியின் முன்னைநாள் சரித்திர ஆசிரியராக இருந்த திரு. எஸ். வி. பாலசிங்கமவர்களாவர். ஆரம்ப வருட மாணவத் தலைவராகத் தற்போது சீனாவில் பீக்கிங் நகரிலுள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் ஆலோசகராகக் கடமைபுரியும் திரு. யோகேந்திரா துரைசாமி அவர்களும், செயலாளராக கொழும்பில் நியாயவாதியாகவும், சட்டக்கல்லூரி விரிவுரையாளராகவும், இலங்கைச் சட்டச் சங்கத்தின் தலைவராகவும், இலங்கை ஐக்கிய நாடுகள் சங்கத்தின் தலைவராகவும் பணிபுரியும் திரு. தி. ஸ்ரீஇராமநாதன் அவர்களும் கடமையாற்றினார்கள்.

இக்கழகத்தில் எஸ். எஸ். சி. பல்கலைக்கழக புகுமுக வகுப்பு ஆகியவற்றைச் சேர்ந்த கலைப்பிரிவு மாணவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புரிமை அளிக்கப்பட்டது. இக்கழகம் சிறப்பாக நாலு முக்கிய நோக்கங்களை உடையதாக ஆரம்பிக்கப்பட்டது.

அவையாவன :

1. மாணவரிடையே சரித்திரபாடம் கற்பதில் அவாவையும், அக்கறையையும் ஏற்படுத்தி வளரச் செய்தல்.

2. மாணவர்கள் மேடைப்பேச்சாளர்களாகத் திகழ்வதற்கு வேண்டிய பயிற்சியை அளித்தல்.

3. மாணவர்கள் சிறந்த பிரசைகளாக உருவாவதற்கு வேண்டிய வாய்ப்புகள், வசதிகளை ஏற்படுத்தல்.

4. சரித்திர சம்பந்தமான புராதன இடங்களுக்குச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல்.

### முதற் கூட்டம்

இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு நடந்த முதற் கூட்டத்தில் யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரியைச் சேர்ந்த திரு. கு. நேசையா அவர்கள் ''இலங்கைக்கு மந்திரிசபை ஆட்சிமுறை'' என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற்றினர் என்பது ஈண்டுக் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்.

### சங்கம் உருவாக்கிய செயல் வீரர்கள்

மிகச்சிறிய அளவில் அமைதியான முறையில் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் கடந்த இருபத்தைந்து வருடங்களாக ஆற்றிய சேவை அளப்பரியது. இக் கழகத்தின் வரலாறு கல்லூரியின் சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய தொன்றாகும். காலப்போக்கில் கலைப்பிரிவைச்சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் ஒன்று கூடி கழகத்தின் ஆரம்ப நோக்கங்களைப் பூரணமாக நிறைவேற்றி வருகின்றார்கள். இக்கழக அரங்கில் இளம் பேச்சாளர்களாகவும், விவாதங்களில் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் தோன்றிய எண்ணிலடங்கா மாணவர்கள் தற்போது எமது நாட்டில் ஆற்றல்மிக்க ஆசிரியர்களாகவும், தலைசிறந்த பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும், நியாயவாதிகளாகவும், நிர்வாகிகளாகவும், விரிவுரையாளர்களாகவும் பணியாற்றுகின்றார்கள். இவர்களை உருவாக்கியதில் இக்கழகத்துக்குப் பெரும் பங்குண்டு.

### தலைவர்கள்

இத்தனை காலமும் இக்கழகம் இத்துணைச் சிறப்புடன் பணியாற்றியமைக்கு இக்கழகத்தின் போஷகர்களாக இருந்து வழிகாட்டிய ஆசிரியப்பெருந்தகைகளுக்கே நிறையப்பங்குண்டு. அவர்களுடைய ஆர்வமும் முற்போக்கான எண்ணங்களும் எமக்குப் பேருதவியாயிருந்தன.

| | |
|---|---|
| 1943 | திரு. எஸ். வி. பாலசிங்கம் |
| 1944 | திரு. என். மயில்வாகனம் |
| 1945–1949 | திரு. ச. ஜெயவீரசிங்கம் |
| 1949 | திரு. வி. அற்புதரத்தினம் |
| 1950–1955 | திரு. ச. ஜெயவீரசிங்கம் |
| 1955–1957 | திரு. பி. எஸ். குமாரசுவாமி |
| 1957–1959 | திரு. சோ. கணேசரத்தினம் |
| 1959–1964 | திரு. பி. எஸ். குமாரசுவாமி |
| 1964– | திரு. தி. ஸ்ரீநிவாசன் |

திரு எஸ். வி. பாலசிங்கம் அவர்கள் இக்கழகத்தை உருவாக்குவதற்கு ஆற்றிய தொண்டு போற்றுதற்குரியது. இக்கழகம் ஆரம்பமாகிச் சில மாதங்களில் அவர் வேறு பாடசாலையில் பதவி ஏற்றபடியால் எம்மை விட்டுப்பிரிய நேரிட்டது. அவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அதிபராயிருந்து இவ்வாண்டு இறையடி எய்தினர். ஆனல் அவரது சேவை என்றும் எமது மனத்தை விட்டு நீங்காது.

ஏறக்குறையப் பத்து ஆண்டுகள் இக்கழகத்தின் போஷகராகச் சேவை செய்து ஆசிரியப்பதவியிலிருந்து இளைப்பாறியபின் இவ்வுலகவாழ்வினை ஒருவிய திரு ச. ஜெயவீரசிங்கம் அவர்கள் எம்மவர் மனதில் தமக்கென ஓர் தனியான இடத்தை ஒதுக்கியுள்ளார்கள்.

இக் கழகம் இயலுமான புத்தம் புதிய முறைகளில் கலைப் பிரிவு மாணவர்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பணி புரிய வேண்டுமென்பதே அவரது வேணவா. எத்தனையோ புதிய திட்டங்களை எல்லாம் எமது கழகத்தில் புகுத்திய பெருமை அவரையே சாரும். இக் கழகத்துடன் இரண்டறக் கலந்த நிலையிலேதான் அவர் வழி காட்டினர்.

இக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது இதற்கு வேண்டிய ஊக்கத்தினை நிறைய உதவிய சிறப்பு எமது முன்னைநாள் அதிபர் திரு. ஏ. குமாரசுவாமி அவர்களையே சாரும். மாணவரது வாழ்க்கை முறையை உருப்படுத்தி நிறைவுறச் செய்வதற்கு இத்தகைய கழகங்களே வேண்டுமென்பது அவரது உறுதியான நம்பிக்கையாகும். வெவ்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களை அழைத்து அவர்கள் பேசக் கேட்டு, அவர்களுடன் மாணவர் நெருங்கிப் பழகவேண்டுமென அடிக்கடி கூறியதுடன் நடைமுறையில் அதற்கு வேண்டிய சூழ்நிலைகளையும் உருவாக்கினர்.

### அறிவொளி ஊட்டிய ஆன்றோர்கள்

இக்கழகத்தின் வரலாற்றை நாம் புரட்டிப் பார்க்கும்போது கழக நிகழ்ச்சிகளில் மாணவர் மாத்திரம் பங்கு கொண்டதல்லாமல் அரிய பெரிய சொற்பொழிவுகளைச் சிறந்த பெரியார்களிடமிருந்து இக் கழகத்தில் நாம் கேட்கக் கூடியதாக இருந்தது. இக்கழக அரங்கில் தோன்றிய சில பெரியார்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| 1943 | சுவாமி விபுலானந்த அடிகள் |
| 1945, 1949 | திரு. பீற்றர் கெனமன் |
| 1945 | திரு. டபிள்யூ. தகநாயக்கா |
| 1948 | திரு. அ. வைத்தியலிங்கம் |
| 1948 | திரு. எஸ். யூ. சோமசேகரம் |
| 1951 | திரு. எஸ். சண்முகநாதன் (புதைபொருள் ஆராய்ச்சி உதவி ஆணையாளர்) |
| 1952 | திரு. எம். ஜி. மெண்டிஸ் |

இப் பெரியார்கள் வந்து சொற்பொழிவாற்றியமை எமக்கு ஊக்கத்தையும், ஆக்கத்தையும் பெருகச் செய்ததோடு எமது கல்லூரியைச் சேர்ந்தவர்களுக்கும் இவைகளைக் கேட்பதற்குப் பெரு வாய்ப்புக் கிடைத்தது.

### பேச்சுப் போட்டிகள்

பேச்சுவன்மையை வளர்க்கும் நோக்கமாகக் கனிஷ்ட பாடசாலைத் தராதர வகுப்பு முதல் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு வரையுள்ள மாணவரிடையே பேச்சுப் போட்டிகளை 1944 - ஆம் ஆண்டு ஆரம்பித்த பெருமை இக்கழகத்தையே சாரும். சரித்திரம், குடியியல், அரசியல் ஆகிய பாடங்களில் மாணவர்கள் தகுதி பெறும் நோக்கமாக ஒவ்வொரு பல்கலைக்கழகப் புகுமுகவகுப்பு மாணவனும் ஒவ்வொரு முக்கிய விடயம் சம்பந்தமாக விரிவான கட்டுரைகள் தயாரித்துக் கூட்டங்களில் வாசித்து ஆராயப்பட்டுத் திருத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளும் சிறந்த முறை 1945 - இல் ஆரம்பிக்கப்பட்டது.

இம்முறை, பரீட்சைக்குத் தோன்றும் மாணவர்களுக்கு மாத்திரமல்லாது பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பின்னும் பலருக்குப் பேருதவியாக இருந்ததென்பது மறுக்கமுடியாததாகும். இப்படியான விரிவான கட்டுரைகளை எழுதுவதற்கு மாணவர்களுக்கு உதவும் வகையில் எமது கழக அங்கத்தவரது பிரத்தியேக உபயோகத்திற்கென அங்கத்தவர்களது உதவிகொண்டு ஒரு பிரத்தியேக நூல்நிலையப் பிரிவு கழகத்தினல் நிறுவப்பட்டது.

### சுற்றுலாவும் கலை நிகழ்ச்சிகளும்

மேற்படி கழகத்தின் ஆதரவில் புராதன நகரங்களையும் சரித்திர சம்பந்தமான இடங்களையும் சென்று காண்பதற்கெனக் காலத்திற்குக் காலம் சுற்றுலாக்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இச்சுற்றுலாக்கள் சில வேளைகளில் வருடாந்த நிகழ்ச்சிகளாகவும் இடம்பெற்றுள்ளன. கழகத்தின் வழமையான நிகழ்ச்சிகட்குப் புறம்பாகச் சிற்சில வேளைகளில் பல்வேறு நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டன என்பதைப் பெருமிதத்துடன் கூற முடியும். 1957 இல் ''மலர்ந்த வாழ்வு'' என்னும் நாடகமும், 1959 -இல் ''கூடப் பிறந்த குற்றம்'' என்னும் நாடகமும், 1964-இல் ''ஆவது பெண்ணலே'' என்னும் நாடகமும் மேடை ஏற்றப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் யாவற்றையும் ஒழுங்குசெய்த பெருமை எமது ஆசிரியர் ''தேவன் - யாழ்ப்பாணம்'' அவர்களையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாய்மொழிக்குத் தலைமையிடம்

எமது நிகழ்ச்சிகள் யாவும் 1953 ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்திலேயே நடைபெற்றன. கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங் கட்கமைய அவற்றைத் தமிழில் நடாத்த 1953 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்தோம். எமது முதல் தமிழ்க்கூட்டத்தில் எமது ஆசிரியர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள் "தமிழர் பண்பாடு" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கழகக் கூட்டங்கள் யாவும் இன்று தமிழிலேயே நடாத்தப்படுகின்றன.

### விவாதங்கள்

சகபாடசாலைச் சரித்திர குடியியற் கழகங்களுடன் நாம் நடாத்தும் விவாதங்கள் எமது நிகழ்ச்சிகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். 1950, 1952 ஆம் வருடங்களில் கொக்குவில் இந்துக்கல்லூரி, 1965-இல் வேம்படி மகளிர் கல்லூரி, 1967-இல் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, 1968-இல் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகியனவற்றைச் சேர்ந்த கழகங்களுடன் இக்கழகம் நடாத்திய விவாதங்கள் சிறப்பு வாய்ந்தனவாகும்.

1950-இல் "இலங்கைக்குக் கூட்டாட்சிமுறை வேண்டுமா?" என்னும் விடயம்பற்றிப் பராளுமன்ற உறுப்பினர்கள் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், திரு. கு. வன்னியசிங்கம் ஆகியோரை அழைத்துக் கழக அங்கத்தவருடன் ஓர் சிறந்த விவாதம் நடைபெற்றது.

1963-இல் இக்கழகத்தின் ஆரம்ப போஷகராக இருந்தவரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபருமான திரு. எஸ். வி. பாலசிங்கம் அவர்களைப் பிரதம விருந்தினராக அழைத்து வெள்ளி விழாவை இருபத்தைந்து ஆண்டு நிறைவு தினமாகிய 23-7-68 இல் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தோம். ஆனல் 21-6-63 இல் ஏற்பட்ட அன்னாரின் அகால மறைவு காரணமாக இவ்விழாவைப் பின் போட்டு இன்று ஏற்பாடு செய்துள்ளோம்.

### வாழ்த்துக்கள்

இத்துணைச் சாதனைகளையும் சிறப்புற ஆற்றி வெள்ளிவிழாக் கொண்டாடும் எமது சரித்திர குடியியற் கழகம் மேன் மேலும் சிறப்புடன் பணியாற்றி அதன் பொன்விழாவையும் இதனிலும் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

———

நெருப்பை அணைப்பது நீரேயொழிய நெய்யன்று.
அதேபோன்று பாவத்தை அழிப்பது ............................

"எல்லாக் காரியங்களிலும் தூய்மை இருக்கவேண்டும். தன் உள்ளத்தைத் தானே சுத்தப்படுத்திக்கொண்டால் சூழ்நிலை தானகவே சுத்தப்படும்."

— காந்திஅடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியியற் சங்கம்

( ஆரம்பம் 8-2-1960 )

## 1968

| | | |
|---|---|---|
| சிரேஷ்ட தலைவர் | : | திரு. வ. மகாதேவன் B. A., Dip. in. Ed. (Ceylon) |
| கனிஷ்ட தலைவர் | : | த. சர்வானந்தன் |
| கனிஷ்ட உபதலைவர் | : | ஞா. ஞானரத்தினம் |
| செயலாளர் | : | மா. புவனேஸ்வரன் |
| உதவிச் செயலாளர் | : | க. மகாலிங்கம் |
| பொருளாளர் | : | இ. ஸ்ரீகாந்தன் |

வகுப்புப் பிரதிநிதிகள்

க. தனபாலன் — கு. தனராசா
இ. ஸ்ரீதரன் — ப. சிவானந்தன்

எமது சங்கக் கூட்டங்கள் வழமை போல் இவ்வாண்டும் நடைபெற்றன. பாடசாலை நேரத்திற்குப் பின்பு எங்கள் சங்கக் கூட்டங்கள் நடைபெறுவதால் பல முறை வேறு நிகழ்ச்சிகள் காரணமாக கூட்டங்களைப் பின்போட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. விசேட உரைகள் நிகழ்த்திய பின்வரும் ஆசிரியர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

திரு. த. சேனாதிராசா B. Sc.
''வானிலையும் ஆய்வு கருவிகளும்''

திரு. வ. மகாதேவன் B. A.
''இலங்கையில் காலநிலையில் ஆபத்தான அறிகுறிகள்''

சிரேஷ்ட தலைவருக்கும் நிருவாகசபை உறுப்பினருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மா. புவனேஸ்வரன்
செயலாளர்

---

தைரியம் என்பது அசட்டுத்தனமாக ஆபத்துக்கு உட்படுவது என்பதல்ல: ஆராய்ச்சிசெய்து காரியங்களை மேற்கொள்வதுதான் தைரியத்தின் முக்கிய இலட்சணம் ஆகும்.

— விவேகானந்த சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bio-Science Union

| | | |
|---|---|---|
| Patron | : | The Principal |
| Vice-Patrons | : | Mr. M. C. Francis |
| | | Mr. S. Ponnambalam |
| President | : | K. Kanapathippillai |
| Vice-President | : | S. Sivarajah |
| Secretary | : | M. M. Shajahan |
| Asst. Secretary | : | S. Sivagurunathan ( Term I ) |
| | | E. Kumaran |
| Treasurer | : | S. Nirmalanathan |
| Editor | : | S. Nadesalingam |

I take this opportunity to present the report of our Union for this year. To give opportunity to more students to train themselves in taking responsibility and leadership, our parent science union was divided to function as Maths and Bio-Science sections. But to emphasize the oneness of Science the two Unions assembled together when topics were of interest to both sections.

The first meeting of Bio-Science Union was held in March. Subsequent meetings were held in rotation with the Maths and the Advanced level unions. The following were the important topics on which talks were delivered:

1. மருத்துவத்துறையின் சாதனை —
   N. Srikantha

2. The nature and the origin of life
   —Mr. A. Sivaveerasingam B.Sc.

3. கதிரியக்க சாதனைகள்—
   J. Visvanathan

Our Union is grateful to Mr. A. Sivaveerasingam, our guest speaker, for his instructing and interesting lecture.

We also wish to thank our members for their co-operation and the Patron and Vice-Patrons for their guidance and encouragement.

**M. M. Shajahan**
*Secretary*

---

**You can't keep trouble from coming, but you need not give it a chair to sit on.**

**The oldest, shortest words — "yes" and "no" are those which require the most thought**

*— Pythagoras*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Physical Science Union

| | | |
|---|---|---|
| Patron | : | The Principal |
| Vice-Patrons | : | Mr. A. Karunaharar |
| | | Mr. K. Pathmanayagam |
| President | : | U. Nirmalanathan |
| Vice-President | : | K. Sivakumar |
| Secretary | : | G. Nandakumar |
| Asst. Secretary | : | S. Mahendrarajah |
| Treasurer | : | A. S. M. Saththar |

It is with great pleasure I submit the report of our activities for the year 1968. Three meetings were held during the year under review. We are very thankful to Mr. S. Sivanathan, of Palaly Training College and Mr. S. Mahendra for delivering speeches. The topics they dealt with are:—

1. Mr. S. Sivanathan — " Science Learning in the Western countries "
2. S. Mahendra — " Space "

Our thanks are due to Mr. Karunaharar and Mr. Pathmanayagam, our Vice Patrons, who were of good help to us at all times.

**G. Nandakumar**
*Secretary*

# The Radio Club

The Club has not been as active as it was in 1967. The students revealed that they were more interested in the transistor — a solid state affair — than in the traditional valve which is fast being replaced by the former. The members were taught to handle the A V O meter. Owing to lack of funds no new project were undertaken. We hope to construct a V. H. F. receiver in the near future to monitor signals from manned sattelites.

The Club notes with pleasure the success of some of its members in the Advanced Level Examination. We have been instrumental in training some of our members to undertake repairs of all sorts of electrical gadgets. One of our former members, Mr. A. T. Sampanthan, is preparing for the A. M. Brit. I. R. E. Examination. He reports from the Hardy Institute, Amparai, that he owes a lot to our club. Past members who are interested in the activities of the club may write to us. The communication channels of our club are more open than in the past.

**T. Sreenivasan**
*Patron*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர வகுப்பு விடுதி மாணவர் மன்றம்
## 1968

| | | |
|---|---|---|
| போஷகர் | : | திரு கே. எஸ். சுப்பிரமணியம் |
| உப - போஷகர் | : | திரு கே. பத்மநாயகம் |
| தலைவர் | : | செல்வன் சே. ஜீவரத்தினம் |
| உப - தலைவர் | : | செல்வன் க. யோகலிங்கம் |
| காரியதரிசி | : | செல்வன் செ. சண்முகதாசன் |
| தனாதிகாரி | : | செல்வன் பொ. இராமனுதன் |

சென்ற வருடம்வரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த எமது சங்கம் இவ்வருட அங்கத்தவர்களும் உப போஷகர், போஷகர் அவர்களும் காட்டிய அதிசிரத்தை காரணமாக முன்னேற்றப் படிகளில் விரைந்து ஏறி பெருமிதத்துடனும் புதுப் பொலிவுடனும் திகழ்கின்றது.

வருடத் தொடக்கத்தில் வந்திறங்கிய புதுமுகங்களின் அறிமுக நிகழ்ச்சி சிறப்பான அநுபவமாக, இன்பமான நிகழ்ச்சியாக முதலாந் தவணையில் தொடர்ந்து அமைந்து வந்தது. முதலாந்தவணை முடிவில் தரமான தேநீர் விருந்தை புதுமுகங்கள் சங்க அங்கத்தினர் எல்லோருக்கும் அளித்து மகிழ்வித்தனர். இவ்விருந்து சிறப்பாக நடைபெறச் சங்க அங்கத்தினர் எல்லோருக்கும் தம்மாலியன்ற உதவி புரிந்தனர். விருந்தில் திரு. அருளம்பலம் குமாரசூரியர் (நிர்வாகப்பொறியியலாளர்) அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு எம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர். எம்விருந்திற்கு அதிபரும் ஆசிரியர்களில் பெரும்பாலோரும் வருகை தந்தனர்.

தொடர்ந்த கூட்டங்களில் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் எமது சங்க உறுப்பினர்களாலேயே தயாரித்து நடாத்தப்பட்டன. சங்கம் இயன்றளவு விடுதி மாணவ சமுக முன்னேற்றத்திற்குப் பாடுபடுகின்றது.

சென்றவருடம் அமைக்கப்பட்ட விடுதிச்சாலை நூல் நிலையம் மேலும் வளர புது மாணவர்களும் தம்பங்கை யாற்றினர்கள்.

எடுத்துக் காட்டப்பட்ட அந்தச் சிறப்பு வழியில் நாம் தொடர்ந்தும் வெற்றியுடன் பீடுநடை போடுகின்றோம். எமது நூல்நிலையம் தொடர்ந்து சிறப்பாக இயங்க அங்கத்தினர் எல்லோரும் முழு மனதுடன் ஒத்துழைப்புத் தருகின்றனர். மேலும் மேலும் அது வளர்ந்து எம் பின்னையோர்க்கு நலம் பயக்கட்டும். நூல் நிலையத்துடன் இரண்டறக் கலந்து நிற்பவர் எம் உப போஷகர் திரு. பத்மநாயகம் அவர்கள். அவரே ஊன்றிய விந்து பார்த்தோர் பொறுமைப் படும்படி பச்சைப் பசேலென்ற நெடிய விருட்சமாக வளர்ந்தோங்கி நிற்பதன் காரணம் அவரது இடைவிடாத சேவையும் அங்கத்தினர்க்கு அளிக்கும் ஊக்கமுமேயாகும். இவரது சேவைக்கு என்றும் நமது மன்றம் கடமைப் பாடுடையது. இதைவிட நூல்நிலையப் பொறுப்பாளர்களாகத் தம் சிரமம் நோக்காது உழைத்த செல்வன்கள்: இராஜ் மோகன், கணபதிப்பிள்ளை, சுந்தரநாதன் முதலியோரதும் தற்போது கடமையாற்றி வரும் செல்வன் விவேகானந்தனதும் சேவை மனப்பான்மையை அங்கத்தவர்கள் நாமெல்லோரும் பாராட்டி வரவேற்கிறோம். எமது சங்கம் சிறப்புற இயங்கத் தம் உதவி நல்கிய ஒவ்வொருவருக்கும் எம் இதயபூர்வமான நன்றிகள்.

செ. சண்முகதாசன்
காரியதரிசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR CRICKETERS

## In The Jaffna Combined Schools Team (Under 20 ) 1968



**S. Uthayalingam**

Scored the highest (108 runs) against Skandavarodaya.

Represented the college team 1965 — 1968.

Awarded cricket colours and batting and fielding prize 1968.

**P. Tharmaratnam (Captain)**

Represented Jaffna combined schools team under 18 in 1966.

Represented the college team 1964 — 1968 and captained the first eleven in 1968.

Awarded cricket colours 1968.

**V. Sinnarasa**

Scored 58 runs for the Jaffna combined schools team in the first innings.

Represented the Jaffna combined schools team under 18 in 1966 and 1967.

Represented the college team 1965 — 1968.

Awarded cricket colours and batting prize 1967.

## INTER HOUSE ATHLETIC CHAMPIONS 1968



NAGALINGAM HOUSE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Committee of the Advanced Level Union



*Standing* (*L. to R.*) S. Jeevaratnam, T. Nadesalingam, T. Bragatheeswaran, V. S. Srikantha, N. Janakkumararajan, R. Rajalingam

*Seated* (*L. to R.*) Mr. M. Karthigesan, Mr. T. Senathirajah, S. Shanmugathasan (President), Mr. N. Sabaratnam (Principal) T. Ganeshwaran (Secretary), S. Nadesan, Mr. A. Saravanamuttu

## இந்து இளைஞர் கழகம் *1968*



**நிற்பவர்கள் : (இடமிருந்து வலம்)** நா. இரவீந்திரன், சு. இந்திரநாதன், இ. ஞானலிங்கம், த. சர்வானந்தன், க. குமரேசன், இ. பொன்னுச்சாமி, செ.சத்தியமூர்த்தி, ஐ.கயிலைநாதன், இ.கருணாநிதி, இ.மகேசலிங்கம் (செயற்குழு)

**இருப்பவர்கள் : (இடமிருந்து வலம்)** திரு. ந. சபாரத்தினம் (அதிபர்), க. கணபதிப்பிள்ளை (செயலர்), திரு. சி. செ. சோமசுந்தரம் (துணைப்புரவலர்), திரு. க. சிவராமலிங்கம் (புரவலர்), சே. ஜீவரத்தினம் (தலைவர்), திரு. கா. மாணிக்கவாசகர் (இசைப்புலவர்), திரு. இ. மகாதேவன் (துணைப்புரவலர்), திரு. க. சுப்பையா (துணை அதிபர்).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடுதிச்சாலை சிரேஷ்ட மாணவர் மன்றம்

## 1968

| | | |
|---|---|---|
| போஷகர் | : | திரு கே. எஸ். சுப்பிரமணியம் |
| உப - போஷகர் | : | திரு பொ. மகேந்திரன் B. A. |
| தலைவர் | : | செல்வன் இ. பொன்னுச்சாமி |
| உப - தலைவர் | : | செல்வன் ச. பாலசிங்கம் |
| செயலளார் | : | செல்வன் சி. சோழங்கச் சேனுதிராசா |
| உப - செயலாளர் | : | செல்வன் ந விக்கினேஸ்வரன் |
| பொருளாளர் | : | செல்வன் ச. விஜயகுமார் |

முன்னேற்றப் பாதையில் விரைந்து வந்த நம் மன்றம் இவ்வாண்டு வியக்கத் தகு முறையில் முன்னேற்றப் படிகளைத் தாவி ஏறியிருப்பதற்குக் காரணம் நம் அங்கத்தவர்களது இடைவிடாத செயல் திறனும் ஒத்துழைப்பினுலுமாகும்.

முதலாம் தவணையில் புதுமுகங்களின் அறிமுகம் நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடம் பெற்றது. முதலாம் தவணை முடிவில் அங்கத்தவர்கள் தம் பூரண ஒத்துழைப்புடன் சிறந்த தேநீர் விருந்தொன்றை நடாத்தினர். இவ்விருந்திற்கு எம் கல்லூரி பழைய மாணவரும் வைத்திய கலாநிதியுமான திரு. C. K. துரைரத்தினம் அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். எம் மன்ற அழைப்பை ஏற்று அதிபர் அவர்களும் ஆசிரியர்களில் பெருந் தொகையினரும் தேநீர் விருந்திற்கு வருகைதந்து எம்மை மகிழ்வித்தனர். தேநீர் விருந்திற்காகச் சேர்க்கப்பட்ட நிதியின் எஞ்சிய பாகம் கல்லூரி ஆலய கட்டட நிதிக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்த கூட்டநிரலில் எங்கள் உறுப்பினரிடத்தே காணப்படும் திறமைகளை வெளிக் கொணர சொற்பொழிவுகள், சம்பாஷணைகள், இசை நிகழ்ச்சிகள் முதலியன ஒழுங்கு செய்யப்பட்டன. குறிப்பாக ஆசிரியர் திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள் "கவிதை அனுபவம்" என்ற தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவு மாணவரிடையே பலத்த வரவேற்பைப் பெற்றது.

எமது சங்கத்தின் வளர்ச்சிக்காக முன்னின்றுழைத்த எம் உப போஷகர் திரு. பொ. மகேந்திரன் அவர்கட்கு எம்மன்றம் என்றும் கடப்பாடு உடையதாகும். அவர் வருகை தரமுடியாத சில கூட்டங்களுக்குப் பதில் உப போஷகராகக் கடமைபுரிந்த செல்வன் சே. ஜீவரத்தினம் அவர்கட்கு எம் இதயபூர்வமான நன்றிகள். எம்மன்றம் இற்றைவரை சிரேஷ்ட மாணவர்களின் நலத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டது. இவ்வாறு எம் மன்றம் சிறப்பாகக் கடமையாற்ற மன்ற அங்கத்தினர் எல்லோரும் தம்முதவியையும் ஊக்கத்தையும் தந்து உதவினர். இது பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

சி. சோழங்கச் சேனுதிராசா
செயலாளர்

---

*அறிவாளிகள் தங்கள் அறிவைப்பற்றிப் பெருமையிட்டுக் கொள்வதில்லை; தாங்கள் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தோடும் நடப்பதில்லை.*

— நேரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதிச்சாலை கனிஷ்ட மாணவர் மன்றம்

## 1968

| | | |
|---|---|---|
| போஷகர் | : | K. S. சுப்பிரமணியம் |
| உப போஷகர் | : | K. K. காசிப்பிள்ளை |
| தலைவர் | : | K. கனகராசா |
| உப தலைவர்கள் | : | K. அரசரட்ணம் |
| | | B. பாலச்சந்திரன் |
| காரியதரிசி | : | S. T. மகாலிங்கம் |
| உப காரியதரிசி | : | P. புவனேந்திரன் |
| தனாதிகாரி | : | T. ஸ்ரீராஜகருணா |

1968-ம் ஆண்டு எமது சங்கம் நல்ல முறையிலும் திறமையாகவும் கருமங்களை ஆற்றியது. வாரந்தோறும் கூட்டம் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தேவாரங்கள், சொற்பொழிவுகள், சம்பாஷணைகள், சிறு கதைகள், பாட்டுக்கள் முதலியன நடைபெற்றன. இவைகளை மாணவர்கள் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் நடத்தினர். எங்கள் யாவருக்கும் மிக்க மகிழ்ச்சியான புது மாணவர்களின் அறிமுகம் நடைபெற்றது.

இவ்வாண்டு எமது தேநீர் விருந்து வைபவம் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. இவ்வைபவத்திற்குப் பிரதம விருந்தினராக திருவாளர் ஆ. தனபாலசிங்கம் (நியாய துரந்தரர்) அவர்கள் கலந்து கொண்டார். இவ்விருந்திற்கு நாம் அதிபர், ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள் ஆகியோரை அழைத்திருந்தோம். அனைவரும் இவ்விருந்திற்குச் சமுகமளித்திருந்தனர். அவர்களுட் சிலர் பிரயோசனமான சொற்பொழிவுகளை ஆற்றினர்கள். நாங்களும் சில நிகழ்ச்சிகளை நடத்தினோம். இவ்வைபவத்தைச் சிறப்பாக நடத்த உதவிய அனைவருக்கும் எமது சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

T. மகாலிங்கம்
காரியதரிசி

# விடுதித் தோட்டப்பகுதி

| | | |
|---|---|---|
| காவலர் | : | திரு. K. S. சுப்பிரமணியம் |
| தலைவர் | : | I. கயிலைநாதன் |
| உப தலைவர் | : | R. ஞானலிங்கம் |
| செயலாளர் | : | R. மகேசலிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உறுப்பினர்கள்

R. கருணாநிதி
T. சிறிசேயோன்
C. S. இரவீந்திரன்
A. பரமேஸ்வரன்
S. சிவசேகரம்
P. இரவீந்திரன்
T. யோகீஸ்வரன்
S. விஞயகமூர்த்தி
M. குமாரவேல்
R. கருணமூர்த்தி
K. நந்தகுமார்
M. சிவகுமார்
S. சந்திரமோகன்
V. கணேசநாதன்

இவ்வாண்டு எங்கள் படை வழமை போல் செயலாற்றியது. கல்லூரியின் இயற்கை செயற்கை பேணிக் காக்கும் பொறுப்பையும் வைபவகாலங்களில் வேண்டப்படும் பொருட்களை உண்டாக்குவதிலும் அக்கறை காட்டியது.

வருங்காலங்களில் உணவு உற்பத்தியில் கூடிய கவனம் செலுத்த எண்ணியுள்ளது. அதேநேரத்தில் கட்டாக்காலி மாடுகளால் எங்களது தோட்டம் மிகவும் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து இந்நிலைமை நீடிக்குமானல் தோட்டம் முற்ருக அழிந்துவிடும் என்ற உண்மையையும் மறைப்பதற்கில்லை.

ஊக்கமும் ஆக்க ஆலோசனைகளும் தரும் காவலர் அவர்கட்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

R. மகேசலிங்கம்
செயலாளர்

---

உணர்ச்சியே இலக்கியத்தின் இன்றியமையாத உறுப்பாகும்.
சிறந்த இலக்கியத்தில் அதுவே பயனுகவும்,
ஏனையவற்றில் அது இடைப்பட்ட ஒன்ருகவும் இருக்கும்.

— வின்செஸ்ரர்

மனிதனிடம் அறிவு உறங்கினுல் மிருக இச்சைகள் கண்விழித்தெழுந்து களியாட்டம் போடுகின்றன.
அறிவும் சத்தியமும் நமக்கு நெருங்கிய உறவுடையவை.

— பிளாட்டோ

எந்த ஒருவனும் நன்நெறியின் ஞெழுகி நல்லின்பத்தோடு வாழச் சிந்தனையாலும் செயலாலும் கடமைகளைச் செய்யவேண்டும்.

— ரெய்லர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Congratulations

To our Acting Principal Mr. N. Sabaratnam on having been re-elected Editor of "The Guru" the journal of the National Union of Teachers, Vice-President of the All Ceylon Sekkilar Manram, and elected Vice-President of the Jaffna District Boy Scouts'. Association.

To Mr. K. Suppiah of our college staff on having been appointed Deputy Principal and re-elected Treasurer of the Northern Province Teachers' Provident Society.

To Messrs. V. Subramaniam A. Saravanamuttu, M. Karthigesan, and V. Mahadevan of our college staff on having been appointed Sectional Heads

To Mr. S. Muttucumaran of our college staff on having been appointed Assistant District Commissioner of Boy Scouts, Jaffna.

To Lt. S. Parameswaran of our college staff on having been promoted to the rank of Captain.

To Mr. V. Mahadevan of our College staff on having been elected Treasurer of the Northern Province Teachers' Association Benevolent Fund.

To Mr. V. Sivasupramaniam of our college staff on having been elected Vice-President of the Northern Province Teachers' Association and Secretary of the Northern Province Teachers' Association Benovolent Fund.

To Mr. T. Senathirajah of our college staff on having been elected President of the Jaffna Town Teachers' Association, Secretary of the N. P. T. A. Examination Council, and re-elected Asst. Secretary of the Northern Province Teachers' Association Benevolent Fund.

To Mr. S. Paramanantham of our college staff on having been elected Secretary of the Jaffna Town Teachers' Association and Asst. Secretary of the N. P. T. A. Examination Council.

To Mr. P. Mahendran of our college staff on having been elected Vice-President of the Jaffna Football Association.

To Mr. K. Sockalingam of our college staff on having been elected Secretary, Ceylon Kamban Kalagam and re-elected Asst. Secretary of the All Ceylon Sekkilar Manram.

To Mr. K. Kanapathipillai of our college staff on having been elected Asst. Secretary of the All-Ceylon Sekkilar Manram, Asst. Secretary and Examination Secretary of the Saiva Paripalana Sabbai.

To Mr. C. Muttucumaraswamy of our college staff on having been re-elected Asst. Treasurer of the All Ceylon Sekkilar Manram.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To Mr. K. Navaratnam of our college office on having been re-elected Secretary of the Northern Region Branch of the All Ceylon Vested Schools' non-teaching Staff Union.

To P. Sivanantham on having won the first place in the J. S. C. Examination conducted by the N. P. T. A. in November 1967.

To P. Tharmaratnan on his appointment as Captain of the Jaffna Schools' Cricket Team in 1968 & on having won the Cricket Colours for 1968.

To V. Sinnarasa and S. Uthayalingam on their being selected to play for the Jaffna Schools' Cricket Team in 1968 & and on having won the Cricket Colours for 1968.

To N. Sri Kantha on winning the first place in both the English & Tamil Elocution Contests (Post-Senior boys) at the Elocution and Singing Contests conducted by the N. P. T. A. in 1968.

To S. Velummylum on winning the second place in the English Elocution Contest (Junior Boys) at the Elocution and Singing Contests conducted by the N. P. T. A. in 1968.

To P. Ragupathy on winning the third place in the Tamil Elocution Contest (Junior Boys) at the Elocution and Singing Contests conducted by the N. P. T. A. in 1968.

To T. Nadesalingam on winning the first place in the Tamil Essay Contest for Boys conducted by the N. P. T. A. in 1968.

To A S. Pavalingam on having won the College Soccer Colours for 1968.

To our College Historical and Civic Association on their Silver Jubilee.

To Nagalingam House on winning the Inter-House Athletic Championship in 1968.

To Kokuvil Hindu College on winning the Jaffna Inter-Collegiate Second Eleven Cricket Championship and the Third Eleven Soccer Championship in 1968.

To Mahajana College, Tellipallai on winning the Jaffna Inter-Collegiate First Eleven 'A' Division and Second Eleven Soccer Championship in 1968.

To Nelliady M M V and Udupiddy A. M. College on winning the Jaffna Inter-Collegiate First Eleven 'B' Division Soccer Championship in 1968.

To those who received Prizes at our College Prize Giving in 1968.

To those who were successful in gaining admission to the University of Ceylon and to the Ceylon School of Technology, Katubedde, on the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

results of the G. C. E. (Advanced Level) Examination held in December 1967 and April 1968.

To those who were successful at the G. C. E. (Ordinary Level) Examinations, held in August and December 1967.

To those who were successful at the J. S. C. Examination (conducted by the N. P. T. A.) held in November 1967.

To those who were appointed prefects of our College and Hostel.

To those who were elected office-bearers of the various associations of our College and Hostel.

To our Old Boys who were successful at the various examinations.

---

**A politician should have three hats. One for throwing in the ring, one for talking through and one for pulling rabbits out of it if he's elected.**

**If you are patient in one moment of anger you will escape a hundred days of sorrow.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ALUMNI SECTION**

# The Old Boys' Association

JAFFNA HINDU COLLEGE

## CONTENTS


| | | | | Page |
|---|---|---|---|---|
| Office Bearers 1968 — 69 | ... | ... | ... | 79 |
| Secretary's Report 1967 | ... | ... | ... | 80 |
| Statement of Accounts 1967 | ... | ... | ... | 82 |
| Life Members | ... | ... | ... | |
| O. B. A. Colombo | ... | ... | .. | |
| Report and Office Bearers | | ... | ... | 83 |
| பெற்றோர் ஆசிரியர் சங்கம் அறிக்கை | ... | ... | ... | 84 |
| Farewell—Mr. A. S. Kanagaratnam | | ... | ... | 85 |
| Prof. P. Kanagasabapathy | ... | ... | ... | 87 |
| Old Boys News | ... | ... | ... | 88 |
| In Memoriam | ... | ... | ... | 98 |


★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR

QUALITY PRINTING | BOOKS AND STATIONERY

V

# VISIT

V

**Sri Sanmuganatha Press**
336, 340 Kankesanturai Road
JAFFNA

**Sanmuganathan Book Depot**
257, Kankesanturai Road
JAFFNA

P. O. Box 12 ESTABLISHED 1906 Phone 285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Jaffna Hindu College Old Boys' Association
# Jaffna

( Founded 9 - 1 - 1905 )

## Office — Bearers 1968 - 1969

| | | |
|---|---|---|
| President | : | Dr. K. Sivagnanaratnam |
| Vice-Presidents | : | Messrs N. Sabaratnam |
| | | A. Kanapathipillai |
| | | C. Sabaretnam |
| | | S. Balasubramaniam |
| | | Dr. V. T. Pasupati |
| | | Dr. S. Arunasalam |
| Hony. Secretary | : | Mr. C. Tyagarajah |
| Asst. Secretary | : | Mr. P. Mahendran |
| Hony. Treasurer | : | Mr. C. Gunapalasingam |
| Asst. Treasurer | : | Mr. V. Sivasupramaniam |
| Committee Members | : | Messrs. D. U. Samarakone, T. Packiarajah, A. Viswanathan, K. S. Subramaniam, A. Somascanta, V. Sriskandarajah, S. Selvarajah, T. Senathirajah, E. Sabalingam, S. Sivasubramaniam, M. Mahalingam, R. Viswanathan, P. Navaratnam, S. Srinivasan, K. T. Rajah, M. Karthigesan and Dr. T. Arulampalam. |
| Hony. Auditor | : | Mr. C. Retnasingam |

---

**Men are what their mothers make them.**

*R. W. Emerson*

**He who would climb a tree must grasp its branches, not blossoms.**

*E. W. Howe*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jaffna Hindu College Old Boys' Association

## Report for the Year 1967

We have great pleasure in submitting the Annual Report for the year 1967.

The last Annual General Meeting was held on 25-1-1967. The celebrations were as usual a full day programme. The celebrations commenced with the temple pooja at 9 a.m. We thank Mr. S. C. Somasunderam, an old boy and a member of the college staff, who kindly undertook to meet the expenses of the pooja ceremoney.

Six meetings of the managing committee were held during the past year and the attendance at these meetings were quite satisfactory. We have now one hundred life members. The new scheme adopted last year to enrol life members is still in force and we hope that more old boys will take this opportunity and join the Association as life members.

It is with deep sorrow that we record the death of Mr. S. Sabaratnam, a Vice-President of this Association. He took a lot of interest in the activities of the Association and the College. We also lost other loyal and devoted old boys in the course of the year. The greatest loss of all came recently with the death of one of our most distinguished old boys — Mr. C. Coomaraswamy, who in his time adorned the administrative, judicial and diplomatic services at their highest levels, was a member of the legislature and guided the destinies of the College as President of the Board of Directors. We also lost one of our former teachers, namely Mr. K. Ayadurai, Proctor S. C. and Mr. T. Ramasamy. It might be remembered that Mr. Ayadurai while studying at Madras Christian College formed an Association of Jaffna students resident in Madras and collected periodicals and books for the College during the time when Mr. G. Shiva Rao was Principal. Mr. Ramasamy served the College both as boarding master and teacher for many years. Mr. M. Rajadurai was at the beginning of a fruitful career when death intervened in December 1967.

The Managing Committee places on record its appreciation of the results of the 1966 Advanced Level examination and take this opportunity to congratulate the Principal, staff and students on their notable achievement.

Regarding the appointment of the Principal the Managing Committee adopted the following resolution which was submitted to the Director—General of Education. " The J. H. C; O. B. A. appreciates the very able and efficient service rendered by Mr. N. Sabaratnam, the Vice-Principal and acting Principal of the College, with effect from June 1964 and appeals to the Director-General and Permanent Secretary to the Minister of Education, The Hon'ble Minister of Education and the Chairman of the Public Service Com-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mision to confirm him early in the appointment and enable him to continue the good work he is doing to the College."

When a new appointment as Principal was made the Committee met and appealed to the authorities concerned to implement the request contained in our earlier resolution. The Managing Committee regrets very much that the Principal has still to continue in his acting capacity and hopes that the Education Department will expedite the permanent appointment of him as Principal in the interests of the College.

Mr. R. Nagaratnam submitted a proposal regarding the granting of scholarships to destitute children. The Committee considered it and adopted the following resolution: "We accept the principle of starting a scholarship fund for destitute and deserving students of this institution. We are prepared to accept with grateful thanks your initial donation of ten thousand rupees. We are already in touch with interested old boys of the J. H. C. in Malaysia with the purpose of forming an O. B. A. branch and for collecting funds." It is reliably understood that Mr. Nagaratnam is leaving for Malaysia in March 1968. May we suggest that the Managing Committee that succeeds us in office follow up the proposal and make this venture a success.

The Managing Committee also discussed the possibilities of completing the temple project, but since the verdict of the Board of Arbitration has yet to be announced it decided to defer it to a later date.

The Managing Committee thanks the P. T. A. for extending its co-operation to the O. B. A. in the proposed completion of the temple project. The Scout Master appealed for financial help to send three of our scouts to America to attend the World Scout Jamboree. The Committee decided to contribute a token amount of one hundred rupees to show its support for the cause. We congratulate the Scout Masters and the Scout Troop.

We record the retirement from service of Mr. K. Sivakolunthu, as the College clerk, who served the institution unassumingly but so efficiently for as long as 40 years

Finally we thank one and all who in the past year contributed in one way or other to the progress of our Association and our Alma Mater.

C. Tyagarajah
*Hony. Secretary*
J. H. C., O. B. A.

Jaffna Hindu College
25th January 1968



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Statement of Accounts — 1967

| INCOME | | EXPENDITURE | |
|---|---|---|---|
| Balance on 1-2-67 | 4014 47 | Dinner | 926 18 |
| Life subscriptions | 330 50 | Annual General Meeting | 130 20 |
| Annual subscription | 167 50 | Stationery and printing | 22 25 |
| Dinner | 487 50 | Scout Troop-Donation for Jamboree Scouts | 100 00 |
| Pooja donation Mr. S. C. Somasunderam 1966 & 1967 | 50 00 | Tea—Committee meetings | 9 00 |
| | | Postage | 12 60 |
| Bank Interest | 73 34 | Trunk Calls | 1 50 |
| | | In Bank | 3745 98 |
| | | In Hand | 175 60 |
| | 5123 31 | | 5123 31 |

Audited and found correct
C Retnasingam
16-1-68

C. Gunapalasingam
Treasurer
J. H. C., O. B. A.
15th January 1968

# Life Members

The following enrolled themselves as Life Members of the J. H. C. O. B. A. Jaffna in 1968.

| | |
|---|---|
| Mr. S. S. Coomaraswamy | 239, Navalar Road, Jaffna |
| Mr. V. Navaratnam | Overseer P. W. D., Muttur |
| Mr. S. Narendranathan | 46, Boswell Place, Colombo 6 |
| Dr. S. Paramanathan | Kalutura |
| Mr. A. Chitravadivel | 109, Arasady Road, Jaffna |
| Dr. K. Satkuru | Deputy S. H. S., Jaffna |
| Mr. N. S. Sritharan | Proctor S. C., Mallakam |
| Mr. T. Ambalavanar | S. D. A. Irrigation Office, Kilinochchi |
| Mr. K. Sachithananthan | Fisheries Research Station, Colombo 3 |
| Dr. A. Vaidialingam | Civil Hospital, Jaffna |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jaffna Hindu College Old Boys' Association

## ( Colombo Branch )

The Annual General Meeting of the Jaffna Hindu College Old Boys' Association (Colombo Branch) was held on the 2nd October 1967 at about 4-30 p. m. at the Saraswathy Hall Bambalapitiya in Colombo, with the Principal and President Mr. N. Sabaratnam as Chairman.

The Meeting commenced with the singing of Thevaram. The Principal detailed the achievements of the College and made special mention of the success of the students at the Engineering Examination of the University of Ceylon. He said that the old boys who are parents of the students at school are taking a keen interest and sought the active co-operation of all the old boys for the successful development of the school. He said whatever be the form of administration centralised or decentralised or a suitable mixture of both, a school is not a hot house but a social growth rooted in the life of the community. "It must therefore serve the needs and reflect the aspirations of the people whose children it is educating. This very important and difficult task cannot be fulfilled without the informed and enlightened support of the Old Boys and parents. This has become more necessary under the State system which is subject to several trials like provincial pressures, regional requirements and remote control. So much is said about what should be taught at school. As far as we at Jaffna Hindu are concerned it boils down to two main attitudes; one is that of respect for tradition and the other is that of admiration for progress. Either of these attitudes by itself or carried on to an extreme can be dangerous A balancing of the two is most desirable as well as most difficult." In conclusion he said "that we have been attempting this job with a fair measure of success." The following office bearers were elected for the ensuing year.

| | | |
|---|---|---|
| President | | Mr. N. Sabaratnam, Principal, ( Ex Officio ) |
| Vice-Presidents | 1. | Hon'ble Justice V. Siva Supramaniam |
| | 2. | Mr. M. Srikanta |
| | 3. | Mr. C. Balasingam |
| | 4. | Dr. S. Nadarajah |
| | 5. | Mr. K. C. Thangarajah |
| | 6. | Mr. V. Suppiah |
| Hony. Secretary | | Mr. S. Thuraisingam |
| Hony. Asst. Secretary | | Mr. C. Maheswaran |
| Hony. Treasurer | | Mr. P. Vettivelpillai |
| Hony. Asst. Treasurers | 1. | Mr. S. Kanagasabai |
| | 2. | Mr. S. Sellakanthan |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Committee
1. Mr. A. Nadarajah
2. Mr. M. Pasupati
3. Mr. Muthukumarasamy Pasupathy
4. Mr. E. V. Thalayasingam
5. Dr. V. Ganeshalingam
6. Mr. K. Kanagaratnam
7. Mr. A. Kandiah
8. Mr. S. Senathirajah
9. Mr. N. Shanmugaratnam
10 Mr. R. Swaminathan

---

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# பெற்றோர் ஆசிரியர் சங்கம்
# 1968-ஆம் ஆண்டறிக்கை

இவ்வாண்டு குறிப்பிடத் தக்க தொண்டுகளைச் செய்ய வாய்ப்புக் கிடைக்க வில்லையெனினும், அதிபர் நியமனம் சம்பந்தமாகப் பழைய மாணவர் சங்கத்து டன் இணைந்து கல்வி மந்திரி, வித்தியாதிபதி முதலியவர்களுடன் தொடர்பு கொண்டு ''தற்போதிருக்கும் அதிபர் மாற்றப்படமாட்டார்'' என்ற உறுதியைப் பெற்றுக் கொண்டோம். ஆசிரியர்கள் இட மாற்றம் பற்றி இச் சங்கம் ஆட்சே பித்து, கல்லூரி அதிபரை இவ் விடயத்தில் கலந்தாலோசியாது மாற்றுவது கல்லூரியின் கல்வித் தரத்தைப் பெரிதும் பாதிக்குமென ஒரு தீர்மானம் நிறை வேற்றி மகா வித்தியாதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

9—11—68 கல்லூரி மண்டபத்தில் நிகழ்ந்த வருடாந்தப் பொதுக்கூட்டத் தில் 1968—1969 ஆம் ஆண்டுக்குரிய நிர்வாகக் குழுவினர் பின் வருமாறு தெரிவு செய்யப்பெற்றனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. ந. சபாரத்தினம் (அதிபர்) |
| உப தலைவர்கள் | : | Dr. S. அருணாசலம் |
| ,, | : | திரு. A. S. கனகரெத்தினம் |
| காரியதரிசி | : | திரு. சி. முத்துக்குமாரன் |
| தனாதிகாரி | : | திரு. மு. மகாலிங்கம் |

நிருவாக சபை அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| திரு. V. சுப்பிரமணியம் | திரு. S. சிவகுருநாதன் |
| திரு. K. S. சுப்பிரமணியம் | திரு. A. K. பொன்னுச்சாமி |
| திரு. C. இரத்தினசிங்கம் | திரு. K. தியாகலிங்கம் |
| திரு. C. நடேசபிள்ளை | திரு. K. சிவராமலிங்கபிள்ளை |
| திரு. K. சுப்பையா | திரு. K. பத்மநாயகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## FAREWELL



**Mr. A. S. Kanagaratnam**

*Teacher — J. H. C.*

*1944 – 1949 and 1963 – 1968*

In the teaching profession there has never been a dearth of talented men. But only a few among them have harnessed their talents to the well-being of teacher and pupil alike. To this great galaxy belongs Mr. A. S. Kanagaratnam who left us on retirement early in 1968. He had been a teacher for thirty seven years. What struck one most in his long teaching career was his sustained effort towards the realisation of his noble object.

He betook himself to teaching at the comparatively young age of twenty. His father himself being a reputed teacher of his days, young Kanagaratnam seems to have been instinctively drawn to this profession. His choice benefited the profession more than the man himself. After all, what matters in life is one's service to society and not to oneself.

He started his professional life at Jaffna College, Vaddukkoddai, his Alma Mater, in 1930. His next teaching assignment was at Atchuveli Christian School but his stay there was rather brief. He moved on to Drieberg College and taught there for thirteen years. Then he came to Jaffna Hindu College to reinforce its English department. He continued his labours here until his retirement except for a brief spell outside at Karainagar Hindu College and later at Chavakachcheri Hindu College where he was Principal.

He made a tremendous impact on the teaching of English at Jaffna Hindu College. He was eminently equipped for teaching English. A gradu-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ate, a voracious reader, an elegant writer and a charming conversationalist, he had a wonderful knowledge of the English language. He was also a linguist by virtue of his educational qualification, having passed the London B. A. Examination in the second division with English, Latin and Tamil. Above all, he was a teacher born and not made.

